
www.tamilarangam.net

# புது உலகம் எமை நோக்கி



சக்தி வெளியீடு
நோர்வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# புது உலகம் எமை நோக்கி

சிறுகதைத் தொகுதி

●

சக்தி வெளியீடு
நோர்வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# PUTHU ULAGAM EMAI NOKKI

## COLLECTION OF SHORT STORIES

(C)SAKTHI

First Edition : 10 July 1999

Published by :
SAKTHI
Boks 99 Oppsal
0619 Oslo 6
NORWAY

Layout:
Ravi (Swiss)
Typesetting:
Thayanithi(Norway)
Ranji(Swiss)

Printed at:

LOBO

Contacts:
SAKTHI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY

Price: 80 NKr

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | |
|---|---|---|
| உமா | 06 | முகம் |
| தேவா | 13 | சுரண்டலின் கொடுக்குகள் |
| சுகந்தி | 21 | பொய்முகங்கள் |
| நிருபா | 44 | தஞ்சம் தாருங்கோ |
| சந்திரவதனா செல்வகுமாரன் | 66 | விலங்குடைப்போம் |
| சுகந்தி அமிர்தலிங்கம் | 73 | கல்யாண சீரழிவுகள் |
| விக்னா பாக்கியநாதன் | 81 | மாறியது நெஞ்சம் |
| உதயபானு | 88 | வேலைக்காரிகள் |
| சு. சுகந்தி | 95 | கானல் நீர் |
| மல்லிகா | 103 | கசப்பான பலாக்கனி |
| நந்தினி | 111 | மூளைக்குள் ஓர் சமையலறை |

ஜேர்மனி

| | | |
|---|---|---|
| காவேரி | 27 | நீயும் ஒரு சிமோன் தி போவோ போல |
| நந்தினி | 115 | சுபைதா ராத்தாவின் பொழுது |
| கருணா | 122 | கமலா காத்திருக்கிறாள் |
| ஆர்த்தி | 131 | ஒரு மானுடத்தின் குரல் |
| ராஜினி | 133 | அத்துமீறல்கள் |
| தயாநிதி | 142 | சதுரங்கம் |

நோர்வே

| | | |
|---|---|---|
| நளாயினி இந்திரன் | 37 | அடுத்த காலடிகள் |
| சந்திரா இரவீந்திரன் | 49 | வல்லை வெளி தாண்டி... |
| ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் | 56 | எய்தவர் யார்? |

லண்டன்

| | | |
|---|---|---|
| சுருதி | 126 | ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீள முடியும் |
| றஞ்சி | 146 | அக்கரைப் பச்சை |

சுவிஸ்

| | | |
|---|---|---|
| வசந்திராஜா | 136 | வடிகால் |

கனடா

www.tamilarangam.net

## எமது குறிப்பு

“எமது புலம்பெயர் வாழ்வில், ஒன்றுக்கும் நேரமில்லை என்ற வாழ்வியலை புறம்தள்ளி தோன்றிய சிறுகதைகளே இவை. அந்தவகையிலும் இத் தொகுதியின் முக்கியத்துவம் மேலும் விரிவடைகிறது. நோர்வேயிலிருந்து வெளிவரும் புலம்பெயர் பெண்கள் சஞ்சிகையான சக்தியின் முதலாவது வெளியீடு இச் சிறுகதைத் தொகுதி.

புலம்பெயர் பெண்களது சிந்தனைகள் கூடிய வரை வெளியே அறியப்பட வேண்டும். இந் நோக்கை எடுத்துச் செல்லும் கலை இலக்கிய ஊடகங்களில் இத் தொகுதி நனைந்துகொள்கிறது. எழுத்தாளர்களது ஆர்வத்தைப் பெருக்கி மேலும் அவர்களை எழுதத் தூண்டுவதும் இத் தொகுதியின் நோக்கம். இச்சிறுகதைத் தொகுதி வெளிவருவதற்கு இது உந்துதல்களாக அமைகின்றது. இச்சிறுகதைகள் ஊடாக புலம்பெயர் பெண்கள் தங்களது மன உணர்வுகள், கலாச்சார காவிகளாக சிக்கித் தவிப்பது, புலம்பெயர் நாடுகளில் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள், ஒடுக்குமுறைகள், சந்தேகங்கள், தனிமைகள்... என பயணப்படுகின்றனர். இதன் தாக்கங்களிலிருந்து விடுபட முயலும் துடிப்பும், பெண்விடுதலை பற்றிய உணர்வும் பெண்நிலைவாதச் சிந்தனைகளின் வெளிப்பாடுகளும்கூட இத் தொகுதியில் ஊடுருவிக் கொண்டுள்ளன.

பெண்களுடைய உணர்வுகளும், கருத்துகளும், எண்ணங்களும் இலக்கிய வடிவம் பெறுவதற்கும், இலக்கிய ஆக்கம் தொடர்பான அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதற்கும் பெண்களது ஆக்கங்களைத் தனியே தொகுத்து நோக்க வேண்டும். பெண்களுக்கான ஒரு கலை இலக்கிய நெறி இதனால் உருவாகும் என்ற கருத்து வலுப்பெறும்.

பெண்களுடைய உறுதிமிக்க இச்சிறுகதைகள் மறைந்து விடாதபடி பாதுகாப்பதும், அவர்களது இதயக் கனலை அணைந்து விடாதபடி பேணுவதும் பெண்களாகிய எமது கடமையாகும். அந்த வகையில் எம்மால் முடிந்த வரையில் இவை பெண்களின் சிறுகதைகள் தான் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. தவறுதலாக சிலருடைய படைப்புக்கள் விடுபட்டிருப்பின் எமது தாழ்மையான மன்னிப்புக்களை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலம்பெயர் இலக்கிய உலகில் வெளிவந்த / வெளிவருகின்ற சில சஞ்சிகைகளான சக்தி, தூண்டில், ஊதா, அ.ஆ.இ, தேனீ, பெண்கள் சந்திப்புமலர், இன்னொருகாலடி, புலம், எக்ஸில், உயிர்நிழல், தோற்றுத்தான் போவோமா போன்ற சஞ்சிகைகளிலிருந்து நாம் இச் சிறுகதைகளைத் தொகுத்துள்ளோம்.

இச் சிறுகதைகள் புலம்பெயர் இலக்கிய உலகில் பத்தோடு பதினைந்தாக மறைந்து விடாமல் ஒரு பதிவாக இருக்க வேண்டும் என்பதே எமது அவா.

விண்வெளியில் கோளை விலைக்கு வாங்கும் காலத்திற்கு மனிதசமூகம் வரும் காலம் வந்தபோதும் சமூகம் பெண்கள் மீது திணிக்கும் வன்முறைகள் மில்லிமீற்றரில் தன்னும் மாறுபடவில்லை.

ஈழத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் முடிவிலா யுத்தம் மக்களை உலகத்தின் நானா பக்கமும் ஓடவைத்துள்ளது. ஓடிவந்த இடத்தில் எம்மை ஒட்டவைத்துக் கொள்வதற்கு நாம் நிகழ்த்தும் போராட்ட சிக்கல், மனஉழைவுகள் என்ற சூழலிலும் புலப்பெயர்வு பல சிறப்புக்களைக் கொண்டதாக இருக்கின்றது என்று நாம் ஆழ்ந்து நோக்கும் போது புரிகிறது. புலப்பெயர்வு பல பெண் எழுத்தாளர்களை ஈழத்து இலக்கியத்திற்கும் பெண்கள் இலக்கியத்திற்கும் தந்துள்ளது.

ஐரோப்பிய சஞ்சிகைகளாக இத் தொகுப்பு குறுகிய போதும் அந்த நோக்கம் பூரணமாக நிறைவேறியது என்றும் எம்மால் உறுதியாகக் கூறமுடியாமலுள்ளது.

இச் சிறுகதைகளை தொகுப்பாக்குவதில் எம்முடன் பங்கெடுத்துக் கொண்ட லக்ஷ்மி (பிரான்ஸ்), பார்த்திபன் (ஜேர்மனி), பத்மநாப ஐயர் (லண்டன்) ஆகியோருக்கும், மற்றும் சிறுகதைகளை சிறப்புற கணணியில் அமைத்துத் தந்ததுடன், தனது ஓய்வு நேரத்தையும் உற்சாகத்தையும் வரையறையில்லாது எமக்காக வழங்கிய (சுவிஸ்) ரவிக்கும் எமது தோழமையுடனான நன்றிகள்! ”

தயாநிதி (நோர்வே), றஞ்சி (சுவிஸ்) ———— 1999யூலை10

www.tamilarangam.net

## முகம்

புதிதாகப் பயணங்களை மேற்கொள்ளப் போகிறவர்களும் தமது பயணங்களை முடித்துக் கொண்டவர்களுமாக அந்தப் புகையிரத நிலையத்திலுள்ள அதிகமான மேடைகள் நிறைந்திருந்தன. அதிகமான பொதிகளை வைத்திருந்தவர்கள் வண்டியில் வைத்து தள்ளிக் கொண்டு வந்தார்கள். புகையிரத நிலையத்திலுள்ள புத்தகக் கடைகளும் சிற்றுண்டிச் சாலைகளும் பயணிகளின் நடமாட்டத்தால் துரிதமாக இயங்கின.

மூலையிலுள்ள ஒரு 'நின்று குடிக்கும் கபே' இல் கோப்பி குடித்துக் கொண்டிருந்த வினோதினி தனது மணிக்கூட்டைப் பார்த்தாள்.
இன்னும் அரை மணித்தியாலம் இருக்கிறது. ரிக்கற் இருக்கிற படியால் பதினைந்து நிமிசம் இருக்க போனால் போதும். மிச்ச நேரத்துக்கு என்ன செய்யலாம்?
புத்தகம் வாசிக்கவும் இந்த இடம் சரியில்லை. ஒரே சத்தம். கொஞ்சம் சுற்றிப் பார்த்திட்டுப் போய் அங்கேயே நிற்பம். இப்பவே நிண்டால் குளிரும்.

அன்று வெள்ளிக்கிழமை ஆதலால் போக்குவரத்து நெரிசலில் அகப்பட்டு ரெயினை விட்டு விடலாம் என்ற அச்சத்தில் வினோதினி சீக்கிரமே வந்துவிட்டாள்.

தான் பார்த்து வைத்த மேடையை வினோதினி அண்மித்தபோது நகரைச் சுற்றியுள்ள சிறு நகரங்களுக்கு மட்டும் ஓடும் ரெயிலொன்று வந்து நின்று புறப்பட்டது. அதிலிருந்து இறங்கிய கொஞ்சப் பேர் மறைந்து போக, இவளது ரெயிலுக்காகக் காத்திருந்தவர்கள் மட்டும் நின்றார்கள். இவளும் போய் ஒரு ஆசனத்தில் ஆயாசமாய் இருந்து கொண்டாள். காலநிலைக்கு ஏற்ப உடையணிந்திருந்தாலும் கொஞ்சம் குளிரத்தான் செய்தது. இன்னும் பத்து நிமிடம் இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக மேடை நிறையத் தொடங்கியிருந்தது. ரெயில் வரப்போகும் திசையை எட்டிப் பார்த்தாள். எல்லாம் ஒரே பனிப் புகாராகத் தெரிந்தது.

இன்னும் பத்து நிமிடங்கள் தாமதாமாகவே புகையிரதம் வருமென அறிவிக்கப்பட்டது வினோதினிக்கு அருகே நின்றவன் 'சைஸ' என்று தனது ஒரு காலைத் தூக்கி நிலத்தில் அடித்தான்.
ஏனையோர் ரெயில் வரப் பிந்தியதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

'நான் வேளைக்கு வந்தபடியால் தான் இப்பிடி'
வினோதினி தனக்கு மேலேயே பழியைப் போட்டுக் கொண்டாள்.
ரெயில் வந்து நின்றதும் எல்லோரும் அவ்லோலகல்லோலப் பட்டு ஏறத் தொடங்கினர். வினோதினி ஒருவாறு நெரிபட்ட பின் தனக்கான ஒரு ஆசனத்தைத் தேடினாள். அதிகமாக எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தன. இரண்டு பெண்கள் இருந்த ஒரு அறைக்குள் இரண்டு இருக்கைகள் காலியாக இருந்தன. அதில் ஒன்றில்

www.tamilarangam.net

இவள் போய் அமர்ந்து கொண்டாள். வழமையாக தனிமையான இருக்கைகளை விரும்பும் அவள் அன்று மாலையாதலால் நாசிகளுக்குப் பயத்தால் ஆட்கள் இருந்த அறையையே தேர்ந்தெடுத்தாள்.
அவள் ஒரு மணித்தியாலம்தான் பிரயாணம் செய்ய வேண்டும்.
அதுவரைக்கும் வாசிப்போம் என நினைத்தவாறு ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள். இவளது ஒவ்வொரு அசைவையும் தோற்றத்தையும் முன்னிருந்த டொச் மனுசி உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். முகத்தையும் காலையும் மாறி மாறிப் பார்ப்பதாக இருந்தாள்.

'நாங்களும் சாதாரண மனிசர்கள் தானே. ஏன் இதுகள் எங்களை இப்பிடி பார்க்குதுகள் என்ன எக்ஸிபிசனா நடக்குது. காலைத்தான் பாக்குதுகள் நாங்கள் என்ன 'பேய்கள்' என்று நினைக்குதுகளோ' என வினோதினி தனது மனதுக்குள் பொருமிக் கொண்டே வாசிக்கத் தொடங்கினாள். முன்னிருக்கைக்காரியின் நடவடிக்கை தொடர்வதை ஊகித்தவள், புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்க அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இவளுக்குப் பக்கத்தில் இருந்தவள் பிரபல்யமாக ஓடிய 'ட்ரகுலா' படத்தின் கதைப் புத்தகத்தை சுவாரசியமாக வாசித்துக் கொண்டிருந்தாள்.

சுமதிக்கு சரியான நேரம் சொன்னால் வருவாள் என்று நினைக்கிறன். அவருக்கும் இன்றைக்கு வேலை இல்லையென்று சொன்னவள். ஆனபடியா காரில வருவினம்... சுமதி இங்கே வந்தது எவ்வளவு நல்லது. அங்கேயே பெண்கள் அமைப்புக்களோட வேலை செய்தவள், அவள் வந்த பிறகு எனக்கும் கதைக்க ஒரு ஆள் கிடைத்த மாதிரி. எவ்வளவு அக்கறையா எல்லா விசயத்தையும் பற்றிக் கதைப்பாள் நிறைய வாசிப்பாள்.
இங்கே இருக்கிற சில ஆட்களுக்கு புத்தகம் கொண்டு போய்க் குடுத்தாலும் வாசிக்காதுகள். ஒண்டு, ரெண்டு பேர்தான் ஏதோ அக்கறையா...

சுமதி வந்தாப்பிறகு புத்தக வேலையும் நல்லா நடக்குது. அவளுடைய அதிஷ்டத்துக்குத்தான் ஜெயகரன் கிடைச்சது. அவரும் இலக்கியத்தில ஈடுபாடு உடையவர் தானே. கட்டுரைகள், கதைகள், கவிதைகள் என எல்லாத் துறைகளிலும் இருக்கிறார். பெண்விடுதலை பற்றியும் மேடைகளில் வெளுத்து வாங்கிறவர். அவளுக்கேத்த ஒரு ஆள் தான். கனக்க பொம்பிளையள் தெரியாத



# முகம்

-உமா-
*ஜேர்மனி*

99

www.tamilarangam.net

ஆட்களோட வேற விருப்பு வெறுப்புக்களோட எவ்வளவு கஸ்டப்படுகுதுகள்.
வினோதினியின் மனம் சுமதியைச் சுற்றியேயிருந்தது.
ரெயிலிலிருந்து இறங்கியதும் வினோதினியின் கண்கள் சுமதியைத் தேடின.

'வணக்கம்'.
பின்னால் குரல் கேட்டுத் திரும்பினாள்.
'நான் அங்கே போய் நிண்டிட்டன்'
'ரெயின் கொஞ்சம் லேற்'
'ஓம். அறிவிச்சவங்கள் எல்லாம் வெதராலதான்'
'தனியவே வந்தனீர்?'
'கரனும் வந்தவர். பார்க் பண்ண இடம் கிடைக்கவில்லை. பின்ன பயத்தில அதிலயே நிற்கிறார்'
'வணக்கம். ஒரு மாதிரி வந்து சேர்ந்திட்டீங்கள்' என்றவாறு இவளது பையை வாங்கி டிக்கிக்குள் வைத்தான் ஜெயகரன்.
'இன்றைக்கு சரியான குளிர்' எனச் சொல்லிக் கொண்டே வினோதினி காரினுள் ஏறினாள்.
'கன தூரமே'
'இல்லை. பதினைந்து நிமிஷ ஓட்டம்தான்'

யன்னலினூடாக பார்வையை வெளியே ஓட விட்டாள் வினோதினி.
சற்று காலத்திற்கு முன் செழிப்பாக இருந்த மரங்கள் எல்லாம் இலையுதிர்ந்து சோகமாகக் காட்சியளித்தன.
'வந்து சேர்ந்திட்டம் .... பார்த்து நடவும். ஈரமான இலைகள் சறுக்கும்'
'நல்ல வடிவான இடத்தில தான் இருக்கிறியள்'

உம்மை எத்தினை தரம் கூப்பிட்டனான். இன்றைக்குத்தான் வாறீர். அதுவும் புத்தக வேலை என்றபடியால்தான். அடிக்கடி சந்திக்கிறனாங்கள் தானே. வீட்டை வந்தால் மட்டும்தான் அன்பென்றில்லைத் தானே.
மூவரும் சிரித்தனர்.

இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட பின் வினோதினியும் சுமதியும் மேசையில் அமர்ந்து அடுத்த சஞ்சிகைக்கான ஆக்கங்களைத் தெரிவு செய்து கொண்டிருந்தனர். ஜெயகரன் சற்றுத்தள்ளியிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த முறை இவ்வளவு ஆக்கங்களும் காணும்.
இனி ஆசிரியர் தலையங்கம் எழுதவேண்டியதுதான் மிச்சம். நான் கொஞ்சக் குறிப்பெடுத்து வைச்சிருக்கிறன். மற்றவையிட்ட கேட்டிட்டு நீரே இந்த முறை எழுதும். புகலிடத்திலுள்ள பெண்களுடைய பிரச்சனைகளைத்தானே எழுதிறது எண்டு கதைச்சனாங்கள். ஆ... நல்ல காலம். மறந்தே போனன் சுமதி. அன்றைக்குக்

www.tamilarangam.net

காட்டின உம்முடைய கதையைக் காணேல்ல. அதையும் போடுவதெண்டு தானே முடிவெடுத்தனாங்கள்.
'அது சரியில்லை என்று இவர் சொல்லிட்டார். கனக்க திருத்த வேணுமாம். அதை வாசிச்சால் ஆம்பிளையளுக்குக் கோபம் வருமாம். மற்றது இலக்கிய நடையும் சரியில்லையாம். அனுபவக் குறைவு தெரியுதாம். அடுத்த முறைக்குப் பார்ப்போம்'

'நீர் ஒண்டும் ஆம்பிளையளுக்கு எதிராக அதில எழுதவில்லைத்தானே. ஒரு பொம்பிளை படுற கஸ்டத்தையே எழுதியிருக்கிறீர். அதில கனக்க உம்முடைய சொந்த அனுபவங்களும் உம்முடைய அக்காவின்ர கதையும் என்று சொன்னீர். பிறகென்ன. அவரைவிட உம்முடைய பிரச்சனைகளில உமக்கு அனுபவம் இருக்குத்தானே...'

சுமதி திடீரென்று மௌனமானாள்.
'அதைக் கெதியாப் போய் கொண்டு வாரும்'. வினோதினி அவசரப்படுத்தினாள்.
தொலைக்காட்சியிலிருந்து பார்வையை இவர்கள் இருக்கும் திசைக்குத் திருப்பிக் கொண்ட ஜெயகரன்,
'அது ஒரு இலக்கியப் படைப்பேயில்லை. ஓர் ஆக்கம் படைக்கப்பட்டால் அதுக்கொரு இலக்கியப் பெறுமதி இருக்கவேணும். சும்மா எழுதினால் மட்டும் போதாது. சுமதியின்ர கதையும் அப்படித்தான். நான் திருத்தித் தாறன் எண்டனான். வேண்டாமெண்டிட்டா'

'வெளியிட்டாப் பிறகு வாசகர்கள் முடிவு செய்வினம், அது இலக்கியப் படைப்பா இல்லையா என்று. விமர்சனங்கள் மூலம்தானே ஆட்கள் திருந்திறது. நீங்கள் ஓராள் மட்டும் நிராகரித்தால் அது உங்கட கருத்து மட்டும்தானே. சுமதி தான் நினைச்சதை எழுதிறதுக்கு அவவுக்கு சுதந்திரம் இருக்குத்தானே...'
'நான் அவவின்ர சுதந்திரத்தைத் தடுக்கவில்லை. நான் சொல்லுற மாதிரி எழுதினால் தான் நல்லது என்றுதானே சொன்னனான்'

'அதிலையும் ஒருவித ஆதிக்கம் இருக்குதுதானே? அவவுடைய கருத்தில நீங்கள் ஆளுமை செய்ய யோசிக்கிறீங்கள்'
'இங்க வினோதினி, எனக்கு ஆணாதிக்கம் பெண் விடுதலை பற்றி சொல்ல வரவேண்டாம். உங்களுக்கு முதல்ல நான் இதுகளைப் பற்றி படிச்சு தெரிஞ்சு வைச்சிருக்கிறன்'
ஜெயகரனின் குரலில் கோபம் தெரிந்தது.

---

புது உலகம் எமை நோக்கி

---

**'இங்க வினோதினி, எனக்கு ஆணாதிக்கம், பெண்விடுதலை பற்றி சொல்ல வரவேண்டாம். உங்களுக்கு முதல்ல நான் இதுகளைப் பற்றி படிச்சு தெரிஞ்சு வைச்சிருக்கிறன்'**

**'ஜெயகரன், நீங்கள் படிச்சு வைச்சிருக்கிறியள். நாங்கள் அந்தப் பிரச்சினையை உணர்வு பூர்வமா அனுபவிக்கிறம். அது எங்கட வாழ்க்கைப் பிரச்சினை'**

❞

www.tamilarangam.net

‘நீங்கள் படிச்சு வைச்சிருக்கிறியள். நாங்கள் அந்தப் பிரச்சினையை உணர்வு பூர்வமா அனுபவிக்கிறம். அது எங்கட வாழ்க்கைப் பிரச்சனை’
‘சரி சரி. ரெண்டு பேரும் சண்டை பிடிக்காமல் இருங்கோ. இப்பிடியெண்டால் வினோ இனிமேல் இங்க வரமாட்டா’. சுமதி இடையில் குறுக்கிட்டாள்.
‘சீ சீ. இது சண்டையில்ல. இப்பிடிக் கதைச்சால் தான் மற்ற ஆட்களின்ர கருத்துக்களை அறிஞ்சு கொள்ளலாம்’. வினோதினி கதிரையில் சாய்ந்தபடி கூறினாள்.

‘சரி சரி. சிறுகதைய விட்டிட்டு ஏதாவது பிரயோசனமாக் கதைப்பம்’
‘அதுவும் பிரயோசனம்தானே’
‘உடனே சண்டைக்கேனப்பா வாறியள். நீங்கள் என்ன வேலைதிட்டத்தை வைச்சுச் செயற்படுறீங்கள்?’
‘பொம்பிளையள் ஒடுக்கப்படுகினம் எண்டது உண்மை. இதுக்கு புதிசா ஒரு வேலைத்திட்டமும் கோரிக்கையும் தேவையில்லை. எல்லாப் பெண்களும் முதல்ல தங்களின்ர பிரச்சினைகளை உணர வேண்டும். ஒவ்வொருத்தரும் தங்கட நிலையில இருந்துதான் செயற்படுவினம்.’

‘நீங்கள் கனக்கச் செய்து கிழிக்கிற மாதிரி காட்டிக் கொண்டாலும் நீங்கள் எல்லாரும் சரியான பின்னுக்குத்தான் நிக்கிறியள். உங்கள் ஒருத்தருக்கும் தத்துவார்த்த முதிர்ச்சியில்லை. உங்கள வழிப்படுத்தக் கூடிய சக்தி உங்களிடத்தில இல்லை’
‘எங்கள வழி நடத்த எங்களுக்குத் தெரியும். புத்தகங்கள் வாசிக்க வேண்டுமென்பதில எனக்குக் கருத்து வேறுபாடில்ல. ஆனால் தனிய புத்தகத்தில புரட்சி செய்யேலாது’
‘நெடுகவும் உமக்கு இதைச் சொல்லவேணும் என்று இருந்தனான், நீர் ஒரு பெண்ணிலைவாதியே இல்லை ஐசே’
‘நான் உம்மட்ட பெண்ணிலைவாதி எண்ட பட்டம் வேண்ட வேண்டிய அவசியமில்லை. நாங்கள் செய்யிற வேலை தான் முக்கியம்’.
வினோதினியின் குரலும் சூடேறியிருந்தது. இடையிடையே இவளது குரல் உச்சமாய்த் தொட்டது.
‘உங்களோட கதைக்கிறதை விட ஏதாவது பிரயோசனமாச் செய்யலாம்’ என்றவாறு எழுந்தான் ஜெயகரன்.

‘நாங்களும் இவ்வளவு நேரமும் கனக்கச் செய்திருக்கலாம், என்ன’ என்றபடி வினோதினி சுமதியைப் பார்த்தாள். அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.
‘நீங்கள் இப்பிடியே போனால்... உங்களுக்குத் தோல்விதான். நீங்கள் ஏன் உந்த வேலையள் எல்லாம் செய்யிறியள் எண்டு எனக்குத் தெரியும். இதுகளில ஈடுபடுகிற ஆம்பிளையளோட ‘படுக்கிறதுக்காகத்தான்’ எல்லாம்’ என்று சொல்லி மேசையில் ஓங்கிக் குத்தினான். மேசையிலிருந்த புத்தகங்கள் நிலத்தில் சிதறி விழுந்தன.
‘நீங்கள் இப்பிடி சொல்லுறதில இருந்து உங்களின்ர ‘வக்கிரம்’ தான் தெரியுது பொம்பிளையளைப் பற்றி எவ்வளவு மட்டமா யோசிக்கிறீங்க என்றது நல்லா விளங்குது’. வினோதினியின் குரல் இப்போது தளர்ந்திருந்தது.
‘சுமதி இதுகளையும் எடுத்து வையும்’

www.tamilarangam.net

ஜெயகரன் அவளுக்குப் பதிலேதும் கூறாது வசிப்பறையை விட்டு வெளியேறினான்.

சுமதி நிலத்தில் குந்தியிருந்து சிதறியிருந்த புத்தகங்களையும் தாள்களையும் ஒவ்வொன்றாக எடுத்து வைத்தாள். வினோதினியும் அவளுக்கு உதவி செய்தாள். வினோதினி சுமதியை மீண்டும் ஒருமுறை பார்த்தாள். அந்தப் பார்வை என்னென்று தான் இவரோடு இருக்கிறாய் எனக் கேட்பது போல இருந்தது.

வினோதினி மீண்டும் ரெயிலுக்குள். அவள் மனம் சுமதியின் வீட்டில் நடந்தவைகளை விட்டு விலக மறுத்தது. முன்னிருக்கையில் இருந்தவளைப் பற்றியோ பக்கத்தில் இருந்தவளைப் பற்றியோ இன்று அவள் பொருட்படுத்தவில்லை.
அவளது நினைவுகள் சுமதியைப் பற்றி மட்டும்தான்.

நாங்கள் வெளியில காணுறது எல்லாம் உண்மையில்லை. கொஞ்சம் பழகிப் பார்த்தால் தான் ஆக்களின்ர சுயரூபம் தெரியவரும். சுமதி அதிஷ்டசாலியென்று நினைச்சன். பரவாயில்லை. அவளென்ன இவரைத் தங்கியா வாழுறாள். அவள் என்ன செய்தாலும் இவருக்குப் பிழை. அவள் கறுப்பு எண்டு சொன்னால் இவர் வெள்ளையென்பார்.

ஏனோ தெரியாது சில ஆம்பிளையளுக்கு தாங்கள் புத்திசாலிகள், கெட்டிக்காரர்கள், பலசாலிகள் என்று பிதற்றுவதில் இவ்வளவு ஆர்வம். அவை சொல்லாட்டி கஸ்டமாக்கும் பாவங்கள்.

கரன் சுமதியை அடிக்கிறதில்லை என்றாலும் அவள் எவ்வளவு கஷ்டப் படுகிறாள். கருத்தாலே ஆதிக்கம் செய்யிறதை எதிர்த்துக் கதைச்ச உடனே பெண்ணிலைவாதி இல்லை எண்டிடுவினம்.

ஏதோ நினைவில் இருந்தவள் இன்னும் சில நிமிடங்களில் அவள் இறங்க வேண்டிய இடத்தில் புகையிரதம் நிற்பாட்டப்படும் என்ற அறிவித்தலைக் கேட்டு சுறுசுறுப்பானாள். ஒரு மணித்தியாலப் பிரயாணம் பத்து நிமிடத்தில் முடிந்து விட்ட மாதிரியிருந்தது.

அந்த தனது கைப்பையை எடுத்து இறங்குவதற்கு ஆயத்தமானாள்

**புது உலகம் எமை நோக்கி**

*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

**சுரண்டலின் கொடுக்குகள்**

அந்த வீடு தூரத்தில் இருந்து பார்க்கையில் மிக அழகாகத் தெரிந்தது. வீட்டை நெருங்குகையில்தான் அது பாழடைந்து கிடக்கிற மாதிரி அவளுக்குப் பட்டது. ஆள் நடமாட்டம் கூட அங்கிருக்கிறதா என்ற சந்தேகம் எழுந்தது. இந்த வீட்டில் வீட்டுவேலைக்கு ஆள் தேடுவதாய் விளம்பரம் வந்திருந்ததை வாசித்து, பக்கத்து றூம்காரி இந்த வீட்டின் விலாசத்தை எழுதித் தந்திருந்தாள்.

'என்னமோ ஒருமாதிரியாய் வீட்டைக் கண்டு புடிச்சாச்சி'
கேட்டின் கம்பியினூடாக தலையை நுழைத்துப் பார்த்தாள், எங்காவது பொல்லாத நாய் தெரிகிறதா என்று.

'இப்புடி பங்களாக்கள்ல இருக்கிறவுக எப்பிடியாச்சும் நாயி வச்சிருப்பாக. ஆமா இவுகளுக்கு எதுக்கு நாயி. இவுகளே நாய்மாதிரி. நம்மளப்போல மனிசரக் கண்டாலே பாய்வானுகளே. அந்த நாயி... இவுக வூட்டுக்குள்ள யாராச்சும் வந்திராம பாத்துகினு... குரைச்சுகினு... இவுகள கண்டா வால ஆட்டிக் கினு... போட்ட சாப்பாட்ட துன் னுகிட்டு... நாயேன்னு படுத்து கெடக்குது. ஆனா நாம்ப இடுப்பு ஒடிய ஒடிய வேல செய்யணும். செஞ்ச வேலைக்கும் ஏதாச்சும் சொல்லிகிட்டே இருப்பாக. நாம செய்யிற வேலய வேல மாதிரியே எடுத்துக்கிற மாட்டாக'

மீண்டும் எண்ணங்களுக்கு முடிச்சுப் போட்டாள்.

'யாராச்சும் இருக்கீகளா?'
நாய் குரைக்காத சத்தமே அவளுக்கு கொஞ்சம் தைரியம் தந்தது. கேட்டின் கதவுகளை பலமாக ஆட்டினாள்.
'அம்மாவ்... யம்மா... அம்மா...'
யாராவது கதவருகில் வருவார்களா என ஆர்வத்தோடு பார்த்தாள். சிறிது நேரத் தின் பின் ஒரு முதிய உருவம் வீட்டுள்ளிருந்து வெளிப்பட்டது. அறுபது வயதிருக்கும். அக்குளில் பத்திரிகை. விபூதிப்பட்டை அணிந்த நெற்றி. மேல்சட்டை ஒன்றுமில்லாமல் தேவாரம் ஒன்றைச் சத்தமாகப் பாடியபடி, கேட்டடிக்கு வந்தவரைக் கண்டபோது இவளுக்குச் சிரிப்பு வந்தது.
'நம்ம ஊரு கோயில்ல இருக்குமே முனிசாமி, அவரு மாதிரியே நெத்தில நல்லா வெள்ளயடிச்சிருக்காரு'

இவளைக் கண்டவுடன் எரிச்சல் முகம் காட்டினார் அவர்.
'என்ன வேணும்?'
அந்தப் பார்வையே இவளைத் துரத்தியது. இவள் முந்திக்கொண்டு கையில் வைத்திருந்த பத்திரிகை விளம்பரத்தைக் கேட்டின் கம்பிகளுக்கிடையால் நீட்டினாள். அதை வாங்கிப் பார்த்தவர் கேட்டைத் திறந்து விட்டார். அவள் எங்கே வீட்டுப்

www.tamilarangam.net

படியில் ஏறி உள்ளே வந்து விடுவாளோ என்ற எச்சரிக்கை உணர்வோடு கீழ்ப்படியி லேயே நின்றுகொண்டு அவளைப் பற்றிய விபரங்களைக் கேட்கத் தொடங்கினார்.
'உனது ஊர்?'
'டிக்கோயா'
'முந்தி எங்கை வேலை செய்திருந்தாய்?'
'நா எட்டு வயசில இருந்து எத்தினியோ பங்களாக்கள்ல வேல செஞ்சிருக்கேன். அத எல்லாத்தையும் யாரு கணக்குப் பாத்தா...'
'முந்தி வேல செஞ்ச இடத்தில என்ன பிரச்சினையாம்? ஏன் உனக்கு அங்க இருக்க ஏலாம போனதாம்?'

முந்தி வேலை செய்த இடத்தில் அவள் சம்பளத்தைக் கேட்டதற்காக அவர்கள் அவளுக்குக் கட்டிய திருடிப் பட்டம் பற்றி இந்த மனிதரிடம் சொல்ல முடியுமா என்ன.

'சம்பளத்தைக் கூட்டிக் கேட்டேனுங்க. போன்னு சொல்லிட்டாக. நம்மளுக்கா வேல கெடைக்காது. சம்பளந்தான் கெடைக்காது. ஆனா வேல தான் எனக்காக எங்கயுமே காத்துக்கிட்டிருக்கே.'
கசந்துபோன அவள் அனுப வங்கள் அவளையறியாமலே அங்கு குதித்தன.

'சரி சரி வீட்டுவேலை பொம்பிளயளுக்கு பெரிசே'
'இப்புடி சொல்லுறவுக தானுங்களே வேல வாங்குறதில குறியா இருக்கிறாக. நா சவுதிக்கு போக இருக்கிறேனுங்க. நெடுக நாம வூட்டுவேல செஞ்சுகிட்டு இருக்க ஏலுங்களா?'

புது உலகம் எமை நோக்கி

# சுரண்டலின் கொடுக்குகள்

-தேவா-
*ஜேர்மனி*

'நீ சவுதி போறதெண்டால் ஏஜண்டுக்கு குடுக்க காசு வேணுமே?'
'கடன கிடன பட்டுகிட்டு போனா காட்டியும் அங்கேருந்து ஒழச்சி அனுப்புற காசில சமாளிச்சுப்புடலாம். ஏஜண்டுகார னும் அந்தா அனுப்றேன் இந்தா அனுப் றேன் என்னு சொல்லி கிட்டிருக்கான். அவன் என்னய அனுப்புறவரைக்கும் நம்ம பாட்டுக்கு ஏதாவது தேடணுமே. இந்த டவுன்ல இல்லாத்துக்கும் காசி.'
'அப்பிடியெண்டால் சவுதியில வேல கெட ச்சிட்டா நீ உடன போயிருவ. உன்னை வேலைக்கு நான் எடுத்துப் போட்டு... நீ விட்டிட்டு போயிடுவ. நீ வர முன்னம் கனக்கப் பேர் வந்திட்டுப் போயிருக்கினம். நான் இன்னும் முடிவு செய்யேல்ல.'

99



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளும் பல வீடுகளில் வேலை செய்திருக்கின்றாள். வீட்டுவேலைக்காரிகள் கிடைப்பது எவ்வளவு கஷ்டம் என்ற விடயம் அவளுக்குத் தெரியாததல்ல. அவளுடைய உழைப்பின் மகத்துவம் அவளுக்கு மட்டுமல்ல அவளை வேலை வாங்கியோருக்கும் நன்கு புரிந்துதான் இருந்தது. அவளது சிறிய வயதில் விளக்குமாறால் அவள் ஆர்வத்தோடு லயத்தின் முன் வாசலைக் கூட்டிக்கொண்டிருந்ததை ஒருநாள் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த இவள் தகப்பன் அடுத்த நாளே ரயிலில் இவளை ஏற்றிக் கொழும்புக்குக் கூட்டி வந்து ஒரு பெரிய வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிட்டான். தன்னைப் போன்ற பல சிறுமிகள் குசினிகளில் வாழ்வது அவள் கேள்விப்பட்டதுதான். அவளுடைய சொந்தங்கள் சிநேகிதங்கள் எல்லாம் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்தெடுக்கிறவர்கள். நாளுக்கும் பொழுதுக்கும் உழைத்தும் வயிறு நிரம்ப சாப்பிடக்கூட முடியாத நிலை. மண்ணெண்ணை வாங்க பட்ஜெட் இடம் கொடுக்காத நிலையில் பாயை விரித்தோம். வேலையால் நொந்த உடலை அங்கே கிடத்தினோம் என்றாவது இருக்கும்.

'நாமளுவ மத்தவங்களுக்கு வேல செஞ்சு குடுக்கிறதுக்கே பொறந்தவங்களாயிட்டோம்'

இவள் படுக்கை, நடமாடுதல், உணவு எல்லாமே அவளிடம் வேலை வாங்குவோர்களின் கையில் இருக்கிறது. வாழ்வின் அடிப்படைத் தேவைகள் தீர்க்கப்படும்போது இனியென்ன இவளுக்கு வேண்டும் என்ற திட்ட வட்டமான கருத்துக் கொண்டோரிடம் இவள் தன் சம்பளத்தைக் கேட்டுவிட்டால்... பார்க்க வேண்டுமே அவர்களின் ஆர்ப்பாட்டங்களை. அதைக் காணவில்லை, இதைக் காணவில்லை என்று சத்தம் போடுவார்கள். குசுகுசுவெனக் கதைப்பார்கள். இவள்மேல் சந்தேகம் கொள்கிற பார்வை இருக்கும். ஆனால் இவளை வேலையிலிருந்து மட்டும் நீக்கமாட்டார்கள். இந்த நயவஞ்சகத்தனங்களை அவள் தன் சிறுவயதிலிருந்து பார்த்திருக்கின்றாள். ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும் இவளை விட்டால் வேறு வேலைக்காரி இவர்களுக்குக் கிடைக்க எவ்வளவு கஷ்டம் என்று. இதிலே தாங்கள் பெரிய தாராள மனதுக்காரர்கள் மாதிரியும் இவளுக்குத்தான் அவர்களின் அருமை தெரியவில்லை என்றும் புலம்புவார்கள். இவள் அனுபவத்தில் நிலைமை இப்படியிருக்க...

'ஆமா இவருக்கு மட்டும் வேல செய்ய எத்தினியோ பேரு பாத்துகிட்டிருக்காங்களாக்கும். சம்பளத்த இத்தினின்னு தெரிஞ்சுகிட்டா அந்த ஏஜெண்டு நம்மள அனுப்புறவரைக்கும் ஒரு மாதிரியா சமாளிச்சிடலாம். இந்த ஆளு பெரிய ராங்கிக்காரனாயிருக்கானே. நம்மளுக்கு உண்டு இல்லைன்னு சொல்லாம அதென்ன பேப்பரு வாசிக்கிறாரு. சரி கௌம்புவோம். வேற எடத்த பாப்போம்.'
யோசித்த அவள், 'அப்ப நா வரேனுங்க'
என்றவாறே கேட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

இப்போது பத்திரிகையில் புதைந்திருந்த முகம் வெளிக் கிளம்பியது.

www.tamilarangam.net

'சரி சரி. நீ மாதம் எவ்வளவு கேட்கிறாய். மற்றத பிறகு கதைப்பம். இஞ்சை பார். இந்த வீட்டில என்ன வேல கிடக்கு. பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டில. நான் ஒருத்தன்தான் தனிக் கட்டையா இந்தப் பெரிய வீட்டில கிடக்கிறன். உந்த வீட்டில என்ன வேல உனக்கு கொட்டிக் கிடக்கும் பார்.'
'நா முந்தி வேல பாத்த எடத்துல சாப்பாடு, வருசத்தில ரெண்டு தடவ உடுபொடவயும் தந்து மாசம் ஆயிரம் ரூவா தந்தாக.'

ஐந்நூறு ரூபாவைக் கூட வாங்கியதற்குக் காரணமும் இருந்தது. மாதமுடிவில் எப்படியும் தகப்பன் இவளைத் தேடி வந்து, உன் தம்பிக்கு சுகமில்லை, தங்கைக்கு ஆஸ்த்மா என்று முழுக் காசையும் பிடுங்கி விடுவான். அதற்கு முன்னர் இந்த ஆளையும் ஒருமாதிரி சமாளிக்கவேணும்.
'சம்பளக் காசி இல்லாத்தையும் எங்கையில தரணும்'

ஒரு அதிர்ச்சிப் பார்வை யொன்றை இவளை நோக்கி வீசியவர் மீண்டும் பத்திரிகைக் குள் மறைந்தார்.

முன்னர் வேலை செய்த வீட்டில் சம்பளக் காசை ஒவ்வொரு மாதமும் முதலாந்தேதிக்கு அவளைத் தேடிவரும் தகப்பனிடம் கொடுத்ததாய்ச் சொன்னார்கள். அவன் அங்கு வரும்பொழுதுதான் அவளுக்கே தெரியும் ஒரு மாதம் ஆகிவிட்ட தென்று. அந்தப் பாழாய்ப்போன தகப்பனிடம் எவ்வளவு காசு கிடைத்ததென்று கேட்டால் அரைவாசிச் சம்பளமே தன்னிடம் தந்ததாய்ச் சத்தியம் பண்ணுவான். அதையும் அடுத்தமுறை வரும்போதுதான் சொல்வான். அவன் பொய்யும் சொல்லுகிறவன் என்பதும் அவளுக்குத் தெரியும். இவன் வந்து காசு வேண்டும்வரை அங்குதான் நிற்பான். அதன் பின்னர் ஆள் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விடுவான். அவனிடம் சம்பளத்தைக் கொடுக்கும் போது இவளுக்கும் நிறைய வேலை கொடுக்கப் பட்டிருக்கும், இவளை அங்கு இங்கு நகரவிடாதபடி. இப்படி சில தடவைகள் நடந்ததன்பின், முழுச் சம்பளத்தையும் தனது கையில் தரும்படி அவள் சொன்னாள். அதற்கு அங்கு சொல்லப்பட்ட காரணம், அவளுக்குச் சரியாக கணக்குப் பார்க்கத் தெரியாதாம். அதனால் ஒரு புத்திமதி: அவளுக்கென்று ஒரு பாங்க் புத்தகம் திறந்து ஒவ்வொரு மாதமும் அவளின் அரைவாசிச் சம்பளத்தை அதில் போட்டு விடுவோம். எப்பவாவது நீ அதை உபயோகிக்கலாம்.

---

புது உலகம் எமை நோக்கி

---

**நாளுக்கும் பொழுதுக்கும் உழைத்தும் வயிறு நிரம்ப சாப்பிடக்கூட முடியாத நிலை. மண்ணெண்ணை வாங்க பட்ஜெட் இடம் கொடுக்காத நிலையில் பாயை விரித்தோம். வேலையால் நொந்த உடலை அங்கே கிடத்தினோம்**

www.tamilarangam.net

இவள் வேலை செய்துகொண்டே யிருந்தாள், இரவு நித்திரை கொள்ளும் நேரம் தவிர. முழுக் குடும்பமும் மாலை நேரங்களில் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்துக் கொண்டிருக்கும் சமயங்களே இவளுக்குக் கிடைத்த சிறிய விடுதலை நேரமாக இருந்தது. அப்படி அவளால் தொலைக்காட்சி பார்க்க முடிந்ததை, அந்த வீட்டுக்காரர்களின் தயாள குணத்தை, அவள் மெச்சி நன்றிகாட்ட வேண்டு மெனக் கருதப்பட்டது. ஒரு மூலையில் அவள் நிலத்தில் குந்தியிருந்து மிக அடக்கமாய்த் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்திலும் கூட கதிரையில் உட்கார்ந்து ரசிப்பவர்களுக்குத் தண்ணீர் கொணர்தல், தேநீர் தயாரித்தல், பிள்ளைகள் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் நித்திரையாகிவிட்டால் அவர்களைத் தூக்கிச் சென்று கட்டிலில் கிடத்துவது போன்ற வேலைகளையும் அவள் செய்ய வேண்டும்.

ஏனெனில் காலையில் அவர்கள் வேலைக்குப் போகிறவர்கள். பாடசாலைக்குப் போகிறவர்கள். நிறைய காசு சம்பாதிக்கிறவர்கள். நிறைய படிப்பு படித்தவர்கள், படிக்கிறவர்கள். நிறைய விடயங்கள் தெரிந்தவர்கள். அதனால் அவர்கள் இவளை வேலை வாங்குபவர்களாக இருந்தார்கள். தானும் என்றோ ஒரு நாளில் திருமணம் முடித்துப் பின்னர் பிள்ளைகள் பிறந்தால், தன்னுடைய பிள்ளைகளும் ஒரு காலத்தில் மேசையில் உட்கார்ந்து சொகுசாய் வேலை செய்யவேண்டுமென்ற தாகம் அவளுள் அடிக்கடி பெரிதாய் எழும். அதன் வெளிப்பாடாய்த்தான், அவள் அரபு நாடொன்றுக்குப் போய் முழுதாய்ப் பணம் திரட்டிவிட யோசித்தாள்.

அவள் வேலைசெய்த இத்தனை காலங்களில் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்? தகப்பன் வந்து பிடுங்கிக்கொண்டு போனதுபோக. இப்படிப் போட்ட கணக்கை ஒருநாள் கேட்கப்போன இடத்தில்தான்...
வந்தது வினை. திடீரென ஒரு தங்கச்செயின் காணாமல் போனது. இவள் அந்தச் செயினைப் பிடித்து ஒரு தடவை தடவிப் பார்த்து ஆசைப்பட்டது உண்மைதான். அதற்காக! அவளின் உடுப்புக்கள் அடங்கிய சின்னத் துணிமூட்டை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. தலைமயிர் பற்றி இழுக்கப்பட்டது. முதுகில் அடியும் விழுந்தது. பொலிசில் பிடித்துக் கொடுப்போம் என பயமுறுத்தப் பட்டது. அவளுடைய பாங்க் புத்தகத்திலிருந்து காசை எடுப்போம் எனப்பட்டது. அவள் அப்பிடியொரு புத்தகத்தையே இதுவரை காணவில்லை. காண்பிக்கப்பட வுமில்லை. இவள் அந்த வீட்டைவிட்டு ஓடிவிட்டாள்.

எப்படியோ இன்னொரு வீட்டில் சாப்பாட்டுக்கும் படுப்பதற்குமாக வேலை கிடைத்தது. சில வாரங்களின் பின்னால் வீதியில் நிற்கும்போது தற்செயலாக அவளைக் கண்டுகொண்ட முந்தைய (இவள் கடைசியாய் இருந்த) வீட்டுக்கார மனுசி நெருங்கி வந்து அவளிடம் குழைந்தாள்.
'எங்க வீட்டுக்கு மறுபடியும் வந்துடுறியா. நாங்க செயின் விசயத்த மறந்துட்டோம். இப்பிடித்தான் நாம உழைக்கிறது எங்கேயோ போயிடறது.'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் கேட்க நினைத்தாள், 'அப்படீன்னா நா உங்களுக்கு மாடா உழைச்சதெல்லாம் எங்க போச்சி?'
'நாங்க எல்லாத்தையும் மறந்துட்டோம். எங்க மாதிரி யார் உன்ன வச்சி பாப்பா'
'அதுதான் பாத்தீங்களே'. நாக்கு நுனிவரை அவள் வார்த்தை வந்தாலும் அடக்கிக் கொண்டாள்.
'ஏ சம்பளக் காசை முதல்ல தந்தீங்கன்னா அப்புறமா நா ஓங்ககிட்ட வாறத யோசிக்கறேன்'
'இங்க பாரு. நாங்க ஒருத்தருமே செயினப் பற்றிக் கதைக்க மாட்டம்'
'அப்படீன்னா என்ன எதுக்குத் திருட்டுப் பட்டம் கட்டினீங்க. ஓங்க வீட்டில நா வந்து வேல செய்யணுமா?'
அவள் தேம்பித் தேம்பி அழுதவாறே பெருகிவந்த கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாக ஓடினாள்.

இனிமேல் வீடுகளில் வேலைசெய்வதில்லை என்றுதான் அவள் உறுதிகொண்டிருந்தாள். ஆனால் இப்போதிருக்கும் வீட்டில் சில நாளைக்கு மேல் அவளைத் தங்க விடமாட்டார்கள். அவளை நெடுக நச்சரித்துக் கொண்டே இருக்கின்றனர், எப்போது இங்கிருந்து போவாய் என்று. கொழும்பில் தற்போது வாழும் எல்லாத் தமிழர்களும் பொலிசில் பதிந்திருக்க வேண்டுமாம். இவளை இப்படி வைத்திருந்தால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்று அடிக்கடி நினைவு படுத்தினார்கள்.

ஆனால் சிறுவயதில் இருந்தே அவள் கொழும்பில் பல வீடுகளில் வேலைசெய்திருக்கின்றாள். யாருமே அவளைக் கேட்டதில்லை, நீ இங்கு பதிந்திருக்கின்றாயா என்று.

அவளுக்கு சவூதி போகும் எண்ணம் வந்தபோதுதான் அடையாள அட்டை எடுப்பதற்கான செலவுக்கு அவள் பாங்க் புத்தகத்திலிருந்து பணம் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அவளுக்கு அடையாள அட்டை இருந்ததால்தான் இப்போதாவது தங்குவதற்கு ஒரு இடம் கிடைத்திருக்கின்றது.

அந்த வீட்டில் யாராவது ஒருவர் எப்பவும் தன்னைக் கண்காணித்துக் கொண்டிருப்பதும் அவர்களுடைய பாத்திரங்களை, சேலைகளை, நகைகளை இவள் களவு எடுத்துவிடுவாள் என்ற பயம் அந்தக் கண்களில் நிறைந்திருந்ததை அவள் அறியாமல் இல்லை. என்றாலும் இருக்க

புது உலகம் எமை நோக்கி

**அவள் பெண்ணாயிருப்பதால்**
**எங்கேயாவது வீதியின்**
**கரையில் துணியை விரித்தோம்,**
**படுத்தோம் என்று முடிகிற**
**காரியமா?**
**ஆணுக்கு அல்லவா அதுகூட**
**சாத்தியமாயிருக்கிறது!**

99

www.tamilarangam.net

இடம் தந்தார்களே என்ற நன்றியுணர்வில் அவள் முதுகு வலிக்க வலிக்கக் கழுவிய பாத்திரங்களும் கையுளையத் துவைத்த துணிகளும் அவள் வியர்வை யாலும் கண்ணீராலும் நனைந்திருக்கின்றன. அவள் பெண்ணாயிருப்பதால் எங்கே யாவது வீதியின் கரையில் துணியை விரித்தோம், படுத்தோம் என்று முடிகிற காரியமா? ஆணுக்கு அல்லவா அதுகூட சாத்தியமாயிருக்கிறது!

அவளது எட்டு வயதிலிருந்து பெரிய வீடுகளில் கொழும்பில் பங்களாக்களில் வேலை செய்திருக்கிறாள். அந்த சின்னஞ்சிறு வயதிலேயே அழுத அழாத குழந்தைகளையும் இடுப்பில் வைத்திருக்கப் பழக்கப்படுத்தப்பட்டாள். அவளை விடப் பாரமான பழுக்களைச் சுமந்திருக்கின்றாள். அழுக்கானதும், உலராத உடை களோடும் அவள் வாழவேண்டுமென்பது எழுதப்படாத சட்டம். தரையிலேயே குந்தி, வேலைசெய்து, படுத்து வாழ்ந்தது அவள் வாழ்வு. அவள் தலைவிதிக்கு அவள் இப்படி வேலை செய்யவேண்டி இருப்பதாயும் அவளுக்கு சோறு தரவும் படுக்க இடம் தரவும் எங்கேயோ புண்ணிய ஆத்துமாக்கள் இருக்கிற மாதிரியும் அவள் வேலைசெய்த எல்லா வீட்டிலுமே கூறப்பட்டது.

அவள் திறந்துகொண்டு வெளியேறுகையில்,
'இஞ்ச பார், நீ கேட்ட சம்பளம் கூட. சாப்பாடும் தந்து இருக்க இடமும் தந்து மாதத்துக்கு ஐநூறு ரூபாவுக்கு மேல் யாருமே உனக்குத் தரமாட்டினம். நானெண்ட படியால உனக்கு ஐம்பது ரூபா கூடப் போட்டுத் தாறன்.'

இவளை விட்டால் தனக்கு யாரும் கிடைக்க மாட்டார்கள் என்ற நிலையைக் காட்டிக் கொண்டால் எப்படி? அப்படிக் காட்டிக்கொண்டால் அவருடைய சுயகௌரவம் என்னாவது? அந்த ஆளைப் பொறுத்தவரை, பிள்ளைகள் அனுப்பும் மாதப் பணத்தில் பத்தில் ஒரு பங்கு கூட இவளுக்குத் தரப்போகும் சம்பளத்துக்குச் சமனாகாது. வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகள் பேரில் மாதத்துக்கு ஒரு தடவை பூசை செய்யவும் அவர்களுக்கு விபூதி அனுப்பவும் இந்தத் தொகையை விடக் கூடப் போகும் இவருக்கு. அவருடைய பிள்ளைகள் அங்கு நல்லாய் இருப்பதற்கு இவருடைய பக்தியும் பூசையும் உதவுகின்றன என்பதில் பிடிவாதம் கொண்டவர். இவள் நினைத்தாள்: இந்த ஒற்றை மனிசனோடு இந்த வீட்டில் என்ன வேலை இருக்கலாம்?

'நம்மளுக்கும் நல்ல காலமின்னு ஒண்ணு வராமயா போப் போவுது!'

இந்த மனிதனின் உறவுகள் எங்கேயோ வாழ்வதால் விருந்தினர் கஷ்டங்களும் இருக்காது. முன்னர் வேலைசெய்த இடங்களில் இருந்த வீட்டார் கொடுத்த வேலையை விட வீட்டுக்கு வந்திருந்த விருந்தினர்கள் இன்னும் சுமையை மேலும் தந்தார்கள். அவர்களும் இவளை ஏவி வேலை செய்விக்க வைத்தார்கள். இவளுடைய வியர்வை யில் சுகம் கண்டார்கள். இவள் வேலை செய்ய சம்மதித்தாள். ஆனால் முழுச்

www.tamilarangam.net

சம்பளமும் தன் கையில் தந்துவிட வேண்டும் என்ற இந்த உடன்படிக்கை அவளது வேலைக்காரி வாழ்வில் முதன்முதலாக வெற்றிகண்டது.

முன்னர் இருந்த வீடுகளில் மாதிரி, வேலையொன்றும் பிரமாதமாக இருக்காத மாதிரி ஒரு பிரமை ஆரம்பத்தில் ஏற்பட்டது. மார்க்கட் போவது, கிழவர் சொல்லும் சமையல் சமைப்பது, பாத்திரம் உடுப்பு கழுவுவது, வீடு முற்றம் கூட்டுவது, செடிகளுக்குத் தண்ணீர் விடுவது, ஒவ்வொரு வெள்ளியும் வீடு கழுவுவது, ஒட்டடை அடிப்பது, பாரமான சாமான்களைத் தூக்குவது...
அவள் வேலைகள் எப்படி எப்படியெல்லாமோ முளைத்துக் கொண்டே இருந்தன.

சாமான் வாங்க இவள் கையில் காசைக் கொடுத்துவிட்டு ஒவ்வொரு சதத்துக்கும் கணக்குப் பார்ப்பதும், சாப்பாட்டின் அளவு இவ்வளவுதான்; இதற்கு மேல் தரமுடியாது என்கிற மாதிரி சமைக்க வைப்பதும் இவளுக்குப் பழகிப்போன விடயங்களாயின. குசினியைத் தவிர மற்ற அறைகளில்- அவள் துப்பரவாக்கும் நேரம் தவிர்ந்த மற்ற நேரங்களில் அவளுக்கு அனுமதி மறுக்கப் பட்டிருந்ததை புரிந்து கொள்ளவும் முடிந்தது. அவள் வாழும் இடம், நித்திரை கொள்ளும் இடம் எல்லாமே குசினியாக இருந்தது. உயிர் வாழ்தலுக்கு அவசியமான உணவு படைக்கும் அவள் வாழ்நாட்கள் அங்கேயே அடைந்து போனது. இந்த மனிதனிடம் எவ்விதத் தேவைகளுக்கும் கேள்வி இருந்தால் குசினியின் பின்வாசலால் வெளியேறி வீட்டைச் சுற்றிக் கொண்டு முன்வராந்தா வாசலில் நின்று கொண்டு, மனிதர் அங்கு இல்லாவிட்டால் சத்தம் போட்டு வெளியில் வரப்பண்ணிக் கேட்க வேண்டும். முன்வாசலுக்குள்ளால் அவள் வீட்டுக்குள் போகக்கூடாது. அவர் படுக்கப்போகமுன் அவள் அவர் காலை அமுக்கி விட வேண்டும். இவள் வாசல்படிகளில் நிலத்தில் அமர்ந்துகொள்ள, அவர் வசதியாய் காலை படிகளில் தொங்கப் போட்டுக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந் திருப்பார். எந்த நேரமும் ஏதாவது தேவாரத்தைப் பாடிக்கொண்டே இருப்பார். இவருடைய பக்திதான் இவரை இப்படி யானதொரு நிலையில் வைத்திருக்கின் றதோ என அவள் நினைத்தாள். காலை யில் எழும்பிக் குளித்து முடித்தபின் சாமி அறைக்குள் மனிதன் புகுந்தார் என்றால் மிகுந்த சத்தமாக தேவாரங்கள் பாடுவார். இவளுக்குத் தேவாரங்கள் தெரியாத போதும் எந்தத் தேவாரத்தில் இவர் தொடங்குவார் எந்தத் தேவாரத்தில் இவர் முடிப்பார் என்பதும் கொஞ்ச நாட்க ளிலேயே விளங்கிக் கொண்டது. இவர் தேவாரங்கள் பாடி முடியவும் இவள்



வாசகர் குறிப்பு

www.tamilarangam.net

காலைப் பலகாரம் செய்து முடித்து அவைகளை மேசையில் கொண்டுவந்து வைத்து இலையான் மொய்க்காமல் மூடி வைக்கவும் சரியாக இருக்கும். இவருக்கு எந்த நாளும் சுடச்சுட ஒவ்வொரு உணவும் இருக்க வேண்டும். சுத்தமாய் இருக்க வேண்டும். புதிதாய்ச் செய்திருக்க வேண்டும். பிட்டு, இடியப்பம் செய்ய அவளே ஏற்கனவே அரிசி இடித்து மாவாக்கி வைத்திருக்க வேண்டும். மத்தியான உணவுக்கு அவளே மார்க்கட்டுக்குப் போய் புதிதான மரக்கறி வாங்கி வந்து சமைக்க வேண்டும். வெளிநாட்டில் உள்ள அவரது பிள்ளைகள் அவர் சுகமாய் இருக்க வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் சமைத்துச் சாப்பிடச் சொல்லி இருக்கிறார்களாம். எவ்வளவு பணம் போனாலும் பரவாயில்லை. அப்பா சுகமாக வாழவேண்டும் என்று பிள்ளைகள் விரும்புகிறார்களாம். இதை அந்த மனிதன் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார்.

மாலைநேரத் தேநீருக்கும் ஏதாவது சின்னப் பலகாரம் புதிதாயச் செய்யப்பட்டிருக்க வேண்டும். இரவுச் சாப்பாடு மீண்டும் வழமைபோல புதிதாய்... அவள் மீதியானவற்றை அடுத்த நாளும் சாப்பிடலாம். அது அவளுக்குப் பழக்கமானதாய் இருக்கும். அது அவளுக்கு ஒன்றும் செய்யாதாம். இந்தச் சாப்பாடு கிடைக்கவே அவளுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அவளுக்கு கொடுத்து வைத்திருக்கப்பட்டதோ அந்த மனிதன் அளவாகக் கொடுத்த மிஞ்சிய உணவுகளே.

பிள்ளைகள் அனுப்பும் பணத்தில் அந்த மனிதன் சுகமாக வாழவேண்டும். இந்த மனிதன் சுகமாக வாழ இவள் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டும். இவர் படுத்தபின் படுத்து இவர் எழும்பு முன் எழுந்து செய்த வேலைச் சுமைகள் இதுவரை பெரிதாகக் கஷ்டப்படுத்தவில்லை. எனினும் பகலில் குசினிப் பக்கமாக மறந்தும்கூட வராத இந்த மனிதன் அவள் அப்பாடா என்று காலை நீட்டிப் படுக்க ஆயத்தமாகும் சமயங்களில் தண்ணீர் வேண்டும் அல்லது வேறு ஏதோ தேடி வந்தேன் என்ற சாக்கில் வந்து போவது இவளைச் சுருங்கப் பண்ணியது. பகலில் இந்த ஆளின் நாலுமுழ வேட்டி நீளமாய்த் தொங்கும். இரவில் குசினிக்குள் வரும்போது அது இரண்டாய் மடித்துத் தூக்கிக் கட்டப்பட்டிருக்கும், தொடைகள் தெரிய. இதனைக் கவனித்த அவள்,
'ஏங்க நேர காலத்தோட சொல்லப்படாதுங்களா. நானே கொணாந்து வச்சிருப்பேனுங் களே'
பாயிலிருந்து எழுந்து காலை மடக்கி உட்கார்ந்து விடுவாள். முனங்குவாள்.
'லைட்டைப் போட்டு வந்தீங்கன்னா நல்லாய் இருக்குமே'
மின்விளக்கைத் தட்டாமல் வருவது வேறு எரிச்சலைக் கிளப்பியது.

'நீங்க வயசு போனவரு. எங்கியாவது விழுந்து கிழுந்து தொலைச்சீங்கன்னா. நம்மால ஒங்கள தூக்க முடியுங்களா'
இதற்கு கிழவர் பதில் சொல்லமாட்டார். போய்விடுவார்.

www.tamilarangam.net

ஆனால் இந்த மனிதர் ஒருநாள் அவள்மேல் உண்மையாகவே விழுந்தார். அவளை எழும்ப விடாமல் அந்த மனிதர் முரட்டுத்தனமாய் அவள் உடலை நிலத்தோடு அழுத்தியபோது தான் அவளுக்குப் புரிந்தது இந்தக் கிழவன் உண்மையில் தடுமாறி தன்மேல் விழவில்லை என்று. அவள் பெரிதாகக் கத்த முயன்றதைத் தடுக்க முயன்ற அந்தக் கைகளை தன் முழுப் பலத்தையும் திரட்டி உதறினாள். தன் இரண்டு கைகளையும் அந்த மிருகத்தின் நெஞ்சில் அமுக்கி, கீழே புரட்டிவிட்டு எழுந்தாள்.

'சீ! நீயும் ஒரு மனிசனா?'

முழு எச்சிலையும் கூட்டிக் காறித் துப்பினாள்.

கையில் கிடைத்த எதனாலும் இவன் தலையில் அடிக்க வேண்டும்.

ஆத்திரம் பொங்கியது.

அந்த உருவம் எழும்புவதற்கு முயன்று கொண்டிருந்தது. குசினிக் கதவைத் திறந்து கொண்டு ஓடுவது சரியென அந்த நிமிசம் அவளுக்குப் பட்டது. இந்த இருட்டு நேரத்தில் எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல் அவள் ஓடிக்கொண்டிருந் தாள். ஆத்திரம் தலை உடம்பு எல்லாவற்றிலும் புகுந்து கொதித்துக் கொண்டிருந்தது.

புது உலகம் எமை நோக்கி

# பொய் முகங்கள்

**-சுகந்தி-**

*ஜேர்மனி*

## பொய்முகங்கள்

உச்சி வெயில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. பலாமரம் தன்னால் இயன்ற நிழலைக் கொடுக்க...

கௌரி மீன்களைத் துப்பரவு செய்து கொண்டிருந்தாள். அவளுக்கருகே நாயும் பூனையும் அடிபட்டுக் கொண்டிருந்தன.

அடுப்பெரிப்பதற்காக விறகு கொத்திக் கொண்டிருந்த நாகம்மா ஏசிக் கொண்டே யிருந்தாள். ஒவ்வொரு கொத்தலுக்கும் ஏசிக் கொண்டிருப்பதை தாங்காமல்

'சரி அம்மா இப்ப சமையலுக்கு கொத்து ங்கோ நான் பின்னேரம் மிச்சத்தை கொத்துறன்' என்றாள் கௌரி.

99



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'நான் நேற்றெல்லோ சொன்னனான் விறகு கொத்திவையெண்டு'

'நான் என்ன சும்மாவே இருந்தனான். சந்திக் கடைக்குப் போயிட்டு வாறதுக்குள்ள மனுசருக்கு களைச்சிடும். பிறகு விறகு கொத்த ஏலுமே. சும்மா கத்திக் கொண்டிருக்கிறீங்க.'
தாங்க முடியாமல் கௌரியும் எரிந்து விழுந்தாள். பிறகு இருவரும் அமைதியாக இருந்தார்கள்.
'பிள்ளை! இவன் தம்பியின்ர கடிதம் சிலவேளை இண்டைக்கு வரும். கடிதக்காறனைப் பாத்தனியே?' நாகம்மா குரலை மாற்றிக் கொண்டு கேட்டாள்.

'பார்த்துக் கொண்டுதானிருக்கிறன். அவர் ஒவ்வொரு தெருவா புதினம் விசாரிச்சுக் கொண்டு வரவேண்டாமே'

அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போதே கடிதக்காரன் வந்து பெல் அடித்தான். கௌரி மீனையும் வடிவாகக் கழுவாமல் விழுந்தடித்து ஓடினாள்.
'இஞ்சபார் குமரிய. மீனை வடிவா மூடாமல் ஓடுறா' என்றபடி நாகம்மா மீனுக்குப் பக்கத்தில் காவலாக வந்து நின்றாள்.
'அண்ணையிட்ட இருந்து தான் வந்திருக்கு' என்றபடி கௌரி கடிதத்தை உடைத்துப் படிக்கத் தொடங்கினாள்.

நாகம்மாவுக்கு கௌரி, ஞானம் என்று இரண்டு பிள்ளைகள். அவர் கணவர் ஒரு சிறிய சலூான் போட்டு வருமானம் தேடினார். இரண்டு வருடத்திற்கு முன்பு இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டார். அன்றிலிருந்து நாகம்மாதான் பிள்ளைகளைக் கஸ்டப்பட்டு வளர்த்து வருகிறார். ஞானத்திற்கு தகப்பனின் தொழில் செய்ய சிறிதும் விருப்பமில்லை. தலைமயிர் வெட்டும் பரம்பரை என்று சனம் அவர்களை ஒதுக்கியே வைத்திருந்தது. எனினும் அன்றாடம் சீவியம் நடத்துவது கஸ்டமாக இருந்ததால் வேறு வழியில்லாமல் ஞானம் தகப்பனின் சலூானிலேயே தொழிலைத் தொடர்ந்தான்.

கடையில் முன்பு போல வருமானம் இல்லை. இராணுவமும் இயக்கங்களும் பொடியன்களைப் பிடித்துக் கொண்டு போய் தாங்களே மொட்டையடித்து விட்டார்கள். சலூானைத்தேடி வருபவர்கள் ஒன்றிரண்டு வயது போனதுகள்தான். சலூானை திறந்தாலும் 'இண்டைக்கு கர்த்தால். யார் உன்னை கடையைத் திறக்கச் சொன்னது' பூட்ட வைத்துவிடுவார்கள். கர்த்தால் இல்லாத நாட்களில் 'அந்தச் சந்தியால் ஆமியும் இந்தச் சந்தியால் பெடியளும் அடிபடுகினம். இந்தச் சந்தியில் பெடியளும் பெடியளும் அடிபடுகினம்' என்று சனம் அல்லோல கல்லோலப்பட்டு ஓட கடையைப் பூட்டிவிட்டு அவர்களோடு சேர்ந்து ஓட வேண்டியிருக்கும்.

பின்னைய நாட்களில் அவன் கொஞ்சம் வித்தியாசமாகக் கதைக்கத் தொடங்குகிறான் என்று பெடியள் அவனைப் பற்றி விசாரிக்கத் தொடங்க, நாகம்மா தனது சொந்தங்

www.tamilarangam.net

களின் கையிலும் காலிலும் விழுந்து கடன் வாங்கி அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டாள்.

கடிதத்தை கௌரி படித்து நாகம்மா கேட்டு முடித்தபோது, சிவாவும் கரனும் வந்தார்கள். இருவரும் ஞானத்தின் உயிர் நண்பர்கள். ஞானம் வெளிநாட்டுக்குப் போனபின்பு அந்த வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த ஊரில் வித்தியாசமானவர்கள்.

‘என்ன இண்டைக்குத்தான் இரண்டு பேருக்கும் இங்கால வழி தெரிஞ்சிருக்குப் போல’ என்று வரவேற்றாள் கௌரி.
‘வாசிகசாலைக்குப் போய் புத்தகங்கள் எடுத்துக் கொண்டு போனமெண்டால் வீடுதான் வெளிக்கிடமாட்டம். நாட்டு நிலைமையளும் தெரியும்தானே’ என்றான் கரன்.
இவர்கள் பேசிக் கொண்டிருக்க நாகம்மா தேநீர் போட்டுக் கொண்டு வந்தாள் ‘சீதக்கா தண்ட பிள்ளையளுக்கு ரியூசன் குடுக்க உம்மை வரச் சொன்னவவாம். நீர் மாட்டன் எண்டிட்டீராம். ஏன் கௌரி நீர் போனால் செலவுக்கு கொஞ்சம் காசு கிடைக்கும்தானே’ கரன் கேட்டான்.

‘அவையெல்லாம் சனத்த சனம் எண்டு மதிக்கத் தெரியாத ஆக்கள். நான் போனா என்னை எப்பிடி நடத்துவினம் எண்டு எனக்கெல்லோ தெரியும். அவையள் சாதித் தடிப்பு பிடிச்சவை. எங்களை வீட்டுக்குள்ளேயே சேர்க்க மாட்டினம். மாட்டுக் கொட்டில்லதான் படிப்புச் சொல்லிக் குடுக்கச் சொல்லுவினம். பிறகு அவையளுக்கு ஏதும் வேலையள் இருந்தால் அதையும் செய்யச் சொல்லி சொல்லுவினம். கூலியா போத்தல்ல தேத்தண்ணியும் தருவினம். இதுக்குள்ள படிப்புச் சொல்லிக் குடுக்க வேணுமே?’ கௌரி பொரிந்தாள்.

புது உலகம் எமை நோக்கி

**எங்களை வீட்டுக்குள்ளேயே சேர்க்க மாட்டினம். மாட்டுக் கொட்டில்லதான் படிப்புச் சொல்லிக் குடுக்கச் சொல்லுவினம். பிறகு அவையளுக்கு ஏதும் வேலையள் இருந்தால் அதையும் செய்யச் சொல்லி சொல்லுவினம். கூலியா போத்தல்ல தேத்தண்ணியும் தருவினம். இதுக்குள்ள படிப்புச் சொல்லிக் குடுக்க வேணுமே?**

**99**

‘உமக்கு இதுபோல முதலும் அனுபவம் நடந்திருக்குப் போல. இப்பிடி இடங்களுக்கு நீர் கடைசி வரைக்கும் போகக் கூடாது. நாங்களும் அவையளுக்கு எந்த விதத்திலும் குறைந்த ஆக்கள் இல்லையெண்டு காட்டினாத்தான் அவையளுக்கும் விளங்கும்.

‘கூப்பிட்ட குரலுக்கு நீங்களும் காலுக்கை போய்க் கிடக்கத்தான் அவையள் எழும்பியினம்’ என்று உணர்ச்சி வேகத்துடன் கதைத்துக் கொண்டு போன கரனைப் பார்த்து சிவா சிரித்தான். கரன் விடாமல் ‘இந்தக் காலத்திலையும் சாதி பாக்கிற சனத்தை நாங்கதான் ஒதுக்கி வைக்க

www.tamilarangam.net

வேணும். என்ன சிவா, நான் சொல்றது சரிதானே' என்றாள். சிவாவும் ஓம் என்பது போல தலையாட்டிவிட்டு இருந்தான்.
தன்னுடைய சனத்தைக் குறைத்துக் கதைப்பது பிடிக்கவில்லையாக்கும் என்று தன் மனதில் நினைத்துக் கொண்டாள் கௌரி.

தேநீர் குடித்து முடித்ததும் 'மேயப் போனவனை இவ்வளவு நேரமா காணேல்ல எண்டு அம்மா தேடப்போறா' என்று வெளிக்கிட்டான் சிவா.
'அம்மா தேடுறதும் சரிதானே. எப்ப ஆமி கொண்டு போகுதோ. எப்ப இயக்கம் அள்ளிக்கொண்டு போகுதோ. இப்ப எல்லா அம்மாமாரும் கவலைப்படுகிறது இதைப் பற்றித்தானே' என்றாள் நாகம்மா.

அவர்கள் இருவரும் புறப்பட்டுப் போனார்கள்.

அந்திநேரம். சூரியன் சாதுவாக மறைந்து கொண்டிருந்தது.

நாகம்மா பெட்டி இழைத்துக் கொண்டிருந்தாள். கௌரி படலணில் போய் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.
சனங்கள் வியர்வை மணங்களுடன் வீடு போய்க் கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் கரனும் சிவாவும் சைக்கிளில் வருவது தெரிந்தது.

'என்ன கௌரி றோட்டில நிண்டு பிராக்குப் பார்த்துக் கொண்டு நிக்கிறீர்?' என்று கேட்டான் கரன்
'உங்களைத்தான்' மூவரும் சிரித்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றார்கள்.

'வாருங்கோ தம்பிமாரே. ரவுனுக்கை ஆமிக்காறர் சுடுகினம் எண்டு சனம் அடிபட்டு ஓடிச்சிதுகள். இப்ப பார்த்தா சாதாரணமா திரியுதுகள். என்னவாம்' என்று விசாரித்தாள் நாகம்மா.

'தங்கடை அலுவலுகளைப் பாக்காம சனம் என்னெண்டு வீட்டுக்க இருக்கிறது? இதெல்லாம் பழகியிட்டுது' என்றான் கரன்.
'ஓம் தம்பியவை. அதுவும் சரிதான். நீங்க கதைச்சுக் கொண்டிருங்கோ'
நாகம்மா குசினிக்குள் போனாள்.
மூவரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். நாகம்மா எல்லோருக்கும் தேநீர் கொடுத்துவிட்டு தொடர்ந்து பெட்டி இழைக்கத் தொடங்கினாள்.

சிறிது நேரத்தின் பின் நாகம்மா கேட்டாள், 'தம்பி கரன், உமக்கு எத்தினை வயசிருக்கும். இவன் ஞானத்தின்ர வயசிருக்குமே?
'ஞானத்தைவிட ஒரு வயசு கூட' என்றான் கரன்.

www.tamilarangam.net

தாய் என்றைக்குமில்லாமல் இப்பிடி வயசு விசாரிக்கிறா என்று புரியாமல் முழித்தாள் கௌரி.

'இல்லை தம்பி. நீங்கள் இங்கை அடிக்கடி வந்து போக சனம் எல்லாம் வித்தியாசமாக் கதைக்குதுகள். அவையள் கதைக்கிறதால நான் சொல்லேல்ல. எனக்கும் கௌரிய உங்களுக்குச் செய்ய விருப்பம். உம்மடை விருப்பத்தை தெரிஞ்சா நல்லம்' என்று மனதில் உள்ளதை அப்படியே கூறினாள் நாகம்மா.

கரன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போய்விட்டான். பின் சுயநினைவு வந்தவனாய்...
'இல்ல நாகம்மாக்கா எனக்கு அப்படி ஒரு எண்ணமும் இல்லை. அதோட எனக்கு ஒரு மச்சாள் இருக்கிறா. அவவைத்தான் எனக்கு செய்து வைக்கப் போறதா அம்மாவும் அப்பாவும் சொல்லியிருக்கினம். எனக்குப் பிறகு தங்கச்சிமார் இருக்கிறது உங்களுக்குத் தெரியும். அவையின்ர பொறுப்பையும் மச்சாள் வீட்டுக்காறர் தான் கவனிக்கினம். நீங்கள் நினைக்கலாம் நான் சீதனம் வேண்டுறதுக்காகத்தான் அங்க முடிக்கிறன் எண்டு. ஆனா சத்தியமா நான் சீதனம் ஒண்டும் வேண்டயில்ல. என்னை வெளிநாட்டுக்கு அனுப்பிறதுக்கான செலவை மட்டும் தான் அவை பொறுப்பெடுத்திருக்கினம்' என்றான் கரன் தட்டுத்தடுமாறியபடி.

'பரவாயில்லை தம்பி. என்ர மனதிலை இருந்ததைத் தான் கேட்டனான். தப்பாய் நினைச்சுப் போடாதையும்' என்று நாகம்மா தளதளத்த குரலில் சொன்னாள்.
'சீ! நான் அப்பிடி நினைக்கமாட்டன். சரி நாங்க போகப்போறம்'
கரனும் சிவாவும் வெளிக்கிட்டனர்.

அவர்கள் போனதுதான் தாமதம் கௌரி தாயை ஏசத் தொடங்கினாள்.
'ஏன் அம்மா இப்ப எனக்கு கலியாணம் செய்துவை எண்டு கேட்டனானே? அவையள் எல்லாம் மேடைப் பேச்சுக்காறர். சாதி, மதம் இல்லையெண்டு கத்துவாங்க. ஆனா அதுகள் சொந்த வாழ்க்கையில அப்பிடி இல்ல. நீங்கள் இப்பிடிக் கேட்டீங்களெல்லே. இனி இந்தப் பக்கமே வரமாட்டாங்கள்.'
'சரிசரி இப்ப என்ன கேக்கக் கூடாததையே கேட்டுட்டன். சும்மா ஏன் கத்துறாய். எனக்குத்தானே என்ர கஸ்டம் தெரியும்' என்று நாகம்மா கண்ணீர் விட்டாள். கௌரி அதற்கு மேல் தாயிடம் எதுவும் கதைக்கவில்லை.

**புது உலகம் எமை நோக்கி**

*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

சிவாவும் கரனும் சைக்கிளில் போய் கொண்டிருந்தார்கள்.
'ஏன் கரன், உண்மையில உன்ரை மச்சாளையே செய்யப் போறாய்? இதைப் பற்றி என்னோட ஒரு நாளும் கதைக்கேலையே' என்று சிவா கேட்டான்.
'ஓம்' என்று சுருக்கமான முறையில் பதிலளித்தான் கரன்
'அப்ப உன்னை வித்தியாசமான ஆள் எண்டு காட்டினது எல்லாம் பொய்தானே?'

'உனக்கே தெரியும். நாங்கள் ஞானம் வீட்ட போய்வாறதை எல்லாரும் நக்கலடிச்சினம். ஏன் இவன் தங்கராசு கூட, இவ்வளவு கதைக்கிறியள் போறியள் வாறியள் ஞானத்தின்ர தங்கச்சியை உங்களில ஆராவது கட்டுவியளோ எண்டு நக்கலாய்க் கேட்டவன் தானே' என்றான் கரன்.
'நாங்க வித்தியாசமாய்க் எங்களைக் காட்டினா சனம் இப்பிடித்தான் கதைக்கும். சனம் சொல்லுது எண்டதுக்காக சாதி குறைந்ததையோ கஸ்டப்பட்டதையோ விரும்பமில்லாமல் கட்டிப்போட்டு பின் அவையள கஸ்டப்படுத்தவோ ஏமாத்தவோ கூடாது' என்றான் சிவா.

'அதோடை நான் ஒருத்தன் சாதி குறைவாக கட்டின உடனேயே சாதி இல்லாமல் போகப்போகுதே. எல்லாரும் அப்பிடித்தான் நினைக்கினம். ஆனால் அதுக்கு அடிப்படைக் காரணம் வேறு' என்றான் சிவா.

'ஏன் இவ்வளவு ஆவேசத்தோடை கதைக்கிறியே, நீ அவளைச் செய்யலாம்தானே? என்று திருப்பிக் கேட்டான் கரன்.

'உன்னால இப்பிடி மட்டும் தான் கதைக்க ஏலும்' என்று அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு போனான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் கரன்.

www.tamilarangam.net



ஆமா இதில சந்தேகமில்லை. நிச்சயம் ஒருநாள் நீ பிரஞ்சு எழுத்தாளர் சிமோன் தி போவுவா போல வளர்ந்து உருவாகுவாய்.

இதை ஐந்தாவது முறை கேட்க நேர்ந்த போது உமாவிற்கு ஆச்சரியத்தையும் மீறி, சலிப்பையும் மீறி களைப்புற்றுத் துவண்டது போல தோன்றியது. அதைச் சொல்லத் துணிந்தவனின் உதடுகளும் இதை நிறைய முறை ஒத்திகை செய்த பின் ஒப்பித்தது போலவும் இருந்தது.

'உமாவிற்கு வயதேறிண்டு வருது'. இருபத்தைந்து வயதில் 'மூப்பு' நம்மை ஒரு நாள் சடாரென்று தாக்கும் வியாதி என்று நினத்துக் கவலைப்படுவாள். ஆனால் அது இப்படி வேதனையைக் கிளப்பி விட்டபடி மெல்ல ஊர்ந்து வரும், மங்கலாக்கும் ஒரு நீண்ட அந்திவேளை என்பதை இப்போதுதான் உணர்ந்தாள். இப்போதும் இந்த வாக்கியத்தை 'ஏக்தாராவின்' ஒற்றைக் கம்பியை ஒரே மாதிரி மீட்டிக் கொண்டு போகும் இவர்களிடம் கேட்கும்போது அது வெவ்வேறு வருடங்களில் வெவ்வேறு பராயங்களில் வித்தியாசமான ஒலிகளை எழுப்புவது அவளுக்கு மட்டும் கேட்டது போலும். மற்றவர்களுக்குக் கேட்டதாகத் தெரியவில்லை.

அந்த இருபத்தைந்து வயதை நினைத்தபோது உமாவிற்கு முகம் வெட்கி சிவந்தது. ஏதோ இரண்டு ஆழமில்லாத கவிதைகளை, சில இலேசான கட்டுரைகளை எழுதிய பின் அவைகளைக் கூடைக்காரி போல தலையின் மீது சுமந்து கொண்டு பத்திரிகைச் சந்தைகளில் விற்பனை செய்யக் கூவிக் கொண்டு அலைந்து திரிந்தது நினைவிற்கு வந்தது.

புது உலகம் எமை நோக்கி

# நீயும் ஒரு சிமோன் தி போவுவா போல

**-காவேரி-**

*நோர்வே*

சே! என்ன விபச்சாரம்!

அதே சந்தையில் அடுத்தடுத்து மூன்று முறை புறக்கணிக்கப்பட்டு 'நான்' என்ற எளிதில் நொருக்கப்படும் ஒன்று நலிவுற்று போய் சோர்ந்து உட்கார்ந்திருந்த போது தான் அவன் சேகர் பன்னீர் தெளிக்க வந்தான்.

'உண்மையில உமா ஒருநாள் நீ சிமோன் தி போவுவா போல'

அதைத் தாகத்தடன் குடித்தாள். இன்னும் வேண்டும் போல அவனை முகம் மலர நிமிர்ந்து பார்த்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ஆமாம் என்னையே நம்பு. உன் எழுத்துக்கு அவசியமானது சரியான சீதோஷண நிலை. மற்றும் ஒரு பொருத்தமான கூட்டாளி. சூழ்நிலை என்பது ரொம்ப முக்கியம். பிறகு பார் எப்படிப் பூத்துக் குலுங்கும் உன் எழுத்து''

அவனுடைய முப்பத்தேழு வயதுப் பேச்சு திடமாக வெளிவந்தது. அது தூண் போல, அவள் இளம் முதுகைத் தாங்கிக் கொண்டது. மேசை மீதிருந்த அவள் கையை மெல்லப் பற்றிய அவன்,
'உன்னைப் போலவே உன் எழுத்தும் மிகமிக மென்மையானது. அதற்கு ஆதரவு தேவை'
அதையும் தாகத்துடன் குடித்தாள்.

'ஆமா சும்மா குடும்பம், பெற்றோர், வீடு, வாசல் மாமா, அத்தை, உறவு கல்யாண இரைச்சல்களின் நடுவே உன் எழுத்துப் பட்டுப் போய்விடும். உமா உன்னைக் காப்பாற்றிக் கொள். சரியான கூட்டாளியிடம் ஒப்படைத்துக் கொள், சிமோன் செய்தது போல'.

இரண்டு முழு நாவல்கள், ஒரு நாடகம், நிறைய சிறுகதைகள் எழுதி பிரபல்யமான சேகரா இவளை, இவள் எழுத்தை மதித்துப் பேசுகிறான்? மூளையின் ஓரிடத்திலிருந்து ஒரு சின்னக் குரல் அறிவுறுத்தியது.
சிமோன் எங்கே? நீ எங்கே? அவர் கால் தூசிக்கு சமமா? சிமோனைப் போல வளர்ச்சியடைய நீ இன்னும் நிறைய உழைக்கணும், படைக்கணும், வாழ்க்கையில் கரையணும். இன்னும் எத்தனையோ கசப்பான உண்மைகளைத் தோண்டி எடுத்துப் போடணும் தைரியமாக. நீயோ இன்னும் 'அழகிய கவிதைகள்' என்ற குறுகலான பரிமாணத்திற்குள் மாட்டிக் கொண்டு சிறைப்பட்டிருக்கிறாய். உனது அற்ப இலட்சியங்களை, குட்டிக் குறிக்கோள்களை நீயே சந்தேகப்பட கற்றுக் கொள். அவை உன்னைச் சுற்றிப் பாதுகாக்கும் குட்டிச் சுவர்கள். அவைகளைத் தகர்த்து எறிந்து துணிந்து கழுத்தை நீட்டி வெளியே போம்...

'என்ன? உமா நான் ரொம்பவும் மிகைப்படுத்திப் பேசுவதாக நினைக்கிறாயா? வா நாம் இருவரும் இணைந்து எழுத்தில் ஒரே மூச்சாக ஈடுபடுவோம். உனது பெற்றோர்களையும் எனது மனைவியையும் பெரிய தடைகளாக நினைக்காதே. அவர்கள் அவரவர் இடங்களில் இருந்திட்டுப் போகட்டும், பின்னணிப் பாட்டு இசைப்பது போல. சிருஷ்டிக்கும் சக்தி வாய்ந்தவர்களான நீயும் நானும் வித்தியாசமானவர்கள். நாம் சாதாரண சமூக கலாச்சாரங்களிலிருந்து விலகி தனியே சுதந்திரமாக இருக்கவேண்டியவர்கள்' என்றான் உறுதியாக.

'நான்தான் அப்பவே சொன்னேன். நம்ம சுந்தரம் மாமனார் வீட்டுப் பையன், அதான் அந்த நடராசன். நல்ல வரன், உயர்ந்த படிப்பு. நல்ல பதவியில் இருக்கான், பார்க்க நன்னா இருக்கான், அவாத்தில ஆர்வமா கேட்டா பெண்ணைக் கொடுங்கன்னு. 'நீங்க ஒண்ணு மசமசன்னு....'

www.tamilarangam.net

உமா பிஎச்டி பண்ணணும் பிறகு ஸ்காலர்சிப்பில வெளிநாடு போகணும்னு ஆசைப்படுறா மங்களம் அதுதான்'
'பி.எச்.டியை கலியாணம் பண்ணிக் கொண்ட பிறகு முடிச்சுக்கச் சொல்லுங்க. வெளிநாடும் ஒரு தலைச்சனைப் பெத்த பிறகுதான் போக விடுவோம்னு சொல்லுங்கோ'
'சேச்சே அப்புறம் எத்தனை சிக்கல் வரும், மங்களம்'
'எல்லாம் எனக்கு நன்னா தெரியும். நம்ப உமா ஒரு ஆயிரங்காலத்துப் பயிர். படித்து வேலை பார்க்கும் பெண்ணுக்கு இன்னும் பலமான்னா பாதுகாப்பு வேண்டும். அப்பனா இருந்து இது தெரியல்லையே. உங்களுக்கு துளியும் விவேகமில்லை'

வழக்கமான ஓசைகள் இப்போது தேய்வுடன் கேட்டன. இவன் சொல்வது போல எல்லாம் ஏற்கனவே பின்னணிப் பாட்டாகப் போய்விட்டதோ?
இனிமேல் இலக்கியத்திற்காக எழுதிறதுக்காக வாழவேணும்.

'உமா வாழ்க்கை மிக குறுகிய காலம் கொண்டது. நேரத்தை வீணடிக்காதே' என்றான் தாழ்ந்த குரலில். அவன் கைக்குள் பிடிபட்ட தன் கையை அவள் இழுத்துக் கொள்ளவில்லை தலையாட்டியபடி புன்னகைத்தாள்.

'வீணடிக்க மாட்டேன், சத்தியமாக!' என்றாள்.
கற்பனையில் பக்கம் பக்கமாக எழுதிய தாள்கள் பறந்தன. வெகுநேரம் வரை கண்விழித்து தீவிரமாக எழுதுவது, நாடெங்கும் டூர் போட்டுக் கொண்டு சுற்றி அனுபவம் பெறுவது, எல்லா பேப்பர் பத்திரிகைகளிலும் 'உமா' என்ற பெயர் பளிச்சென்று பிரகாசிப்பது, இந்த சேகர் போலவே தானும் ஒன்றன் பின் ஒன்றாக முழுப் புத்தகங்கள் படைப்பது...

வேலை முடித்து வீடு திரும்பும் போது உமாவிற்கு சாப்பிட்டு ஓய்வெடுக்க நேரமில்லை. நிம்மதியாக உட்கார்ந்து சிந்தித்து எழுத முடியவில்லை. வீடு வந்ததும் எப்போதும் விடாமல் ரெலிபோன் ஒலித்தது. மறுபக்கம் சேகரின் பொறுமை யிழந்த குரல்,
'எப்போது சந்திக்கலாம்? எங்கே, ஒளித்துக் கொண்டிருக்கிறாயா?

பிறகு வீடு திரும்பும்போது வழி மறுத்தபடி உதித்தான். பல்கலைக் கழகமும் அவளுக்கு அடைக்கலம் தரவில்லை.இங்கும் தோன்றி நச்சரிக்கத் தொடங்கினான்.
'நாம் சந்தித்து நாளாயிற்று. எப்போதும் அப்பா கோபிப்பார் என்று அவசரமாய்

---

புது உலகம் எமை நோக்கி

---

**எழுபதுகளை விழுங்கிய எண்பதுகள் தொளாயிரத்தைத் தொட்டன. பெண்ணியம் சீற்றம் கொண்ட இயக்கமாக மாறியது. உளவியல், பொருளியல், சமுதாயவியல் இலக்கியம், கலை என வெவ்வேறு திசைகளிலிருந்து புதிய உண்மைகள் எழும்பிச் சுடர் பொறிகள் போல தெறித்தன.**

www.tamilarangam.net

வீடு திரும்புகிறாய். சீ! இது என்ன வாழ்வு. வா! இந்த ஊரை விட்டே வெளியே போய்விடுவோம். நான் அடுத்த மாதம் வேலையாக யம்மு போகிறேன். மேலே காஸ்மீரில் பெகாமில் ஒரு காட்டேஜ் எடுத்து இருப்போம். வா! நான்கு நாட்கள்'
'என்ன சேகர், இப்படி போகாத வழியைத் தேடிண்டு. நான் இப்போ மும்முரமாய் ஒன்றை எழுதத் தொடங்கியிருக்கிறேன். நீங்களே அதைக் குலைப்பது...'
'கிடக்கட்டும். உன் எழுத்து பெரிய எழுத்து! என்னைவிட முக்கியமோ உனது அசட்டுக் கிறுக்கல்கள்?'

அதிர்ந்து போனவள் உடனே தன்னை நொந்து கொண்டாள். சிமோன் நார்திர ஜோடியைப் பற்றிக் கனவு காணும் தனது அரைவேக்காட்டு ஞானத்தைக் கடிந்து கொண்டாள். ஏதோ ஒரு உந்துதலில் அடுத்த சில நாட்கள் இந்தத் தம்பதியைப் பற்றிய நூல்கள், வாழ்க்கை வரலாறு, சுயசரிதம் மற்றும் அவர்கள் படைப்புக்களில் மூழ்கினாள்.

ரெலிபோன் ஒலித்தது . அதை எடுக்கவில்லை.

விடயம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அகோரப் பசியுடன் நூல்களினால் தெளிந்த விபரங்களை விழுங்கினாள்
'ஏண்டி உமா, இப்படி இராவெல்லாம் படிக்கிறே. நீ உடம்பைக் கெடுத்துண்டு ரிஸர்ச் பண்ண வேண்டாம், போ. முகமெல்லாம் வாடிப் போச்சு'
'உமா எங்கேயாவது சினேகிதிகளுடன் காற்றாட வெளியே போயேன். உன் அம்மா சொல்வது சரிதான் சின்ன வயதில் ஏன் இப்படி புத்தகத்தில மூக்கை புதைத்துக் கொண்டு அறைக்குள் அடைந்திருக்கிறாய்?'

ரெலிபோன் விடாமல் அடித்தது. பின்னணி ஓசைகள் நடுநடுவே.

1929 இல் பிரான்சின் சோர்போன் பல்கலைக் கழகத்தில் சார்திரேயுடன் சித்தாந்தம் படிக்கும் சிறப்பு மாணவி சிமோன் பூவா தோற்றமளித்தாள். இருவரும் பிரிவில் எப்போதும் நிலைத்து மற்றும் இரண்டாம் ஸ்தானம் பெறும் அறிவுஜீவிகள். அவர்களின் சந்திப்பு, அவர்களுக்கிடையே வளர்ந்த நட்பு, பிறகு 'திருமணம்' என்ற சடங்கில்லாமல் இலக்கியத் தம்பதிகாளாக பாரிசில் வாழ்ந்த வாழ்க்கை. அதனால் விளைந்த பிரச்சினைகள். சிமோன் ஒருபக்கம் இருக்க மற்றப் பக்கம் சார்திரே சேகரிக்கும் ஏராளமான கேர்ல் பிரண்டுகள். இந்தப் பெண்களை மனைவி போல பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு வாழ்ந்த சிமோன், நீயும் உனக்குப் பிடித்த யாருடனும் பழகலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லும் சார்திரே, அதை செய்முறையில் மெய்யாக்கப் போன சிமோனுக்கு ஏதோ எண்ணிக்கைப் போட்டிக்கு பொறுக்கிகளைத் தேடிக்கொள்வது போலப் பட்டது. சார்திரே சுலபமாக பெண்களை அடைந்தார். அவர்களில் சிலருடன் தொடர்பு கொண்டார். சலித்தவுடன் தயக்கமில்லாது சுலபமாக உதறித் தள்ளியபின் நிம்மதியாக எழுத்தில் ஈடுபட்டார்.

www.tamilarangam.net

வேண்டும்போது மீண்டும் வேட்டையாடினார்.

சிமோனுக்கு இளம் அமெரிக்க எழுத்தாளர் நெல்சன் ஆக்கரன் மட்டுமே ஒரு உன்னத உயிராகப் பட்டது. அவனுடன் ரொம்பவும் அன்பாகப் பழகினாள். அல்கிரனுடன் இருக்கும் போதெல்லாம் தனது உடலில் பெண்மையை தானே தனியாக விநோதமாக உணர்வதை ரசித்தாள். அவனது அணைப்பிற்குள் ஒரு சின்ன உலகமே உருவாகியது. இதமான அழகான சுத்தமான உலகம்!

ஒருநாள் ஆக்கிரேன், 'நீ இப்படி விடுமுறைக்கு வருவது போல பாரிசிலிருந்து அமெரிக்கா வந்து இரண்டு நாள் கழித்து திரும்பிப் போவது எனக்குப் பிடிக்கவில்லை' என்று கோபித்துக் கொண்டான்
'என்ன செய்வது நெல்சன். பாரிசில் வீடு இருக்கிறது, வேலை இருக்கிறதே'
'சார்திரே இருக்கிறான் என்று சொல். முதலில் நீ அவனுக்காகத்தான் திரும்பிப் போகிறாய்' என்று எனக்குத் தெரியும்'
'நெல்சன் தயவுசெய்து...'
'முடியாது. இனியும் என்னால் இந்தத் தவிப்பைப் பொறுத்துக் கொள்ள முடியாது. நீ சார்திரேக்கு முழுவதுமாய் உடைமையாகி விட்டாய். எனக்கு ஏதோ காய்ந்த ரொட்டித் துண்டங்களை கொறிக்கப் போடுவது போலப் போட்டு என்னை ரொம்பவும் சிறுமைப்படுத்துகிறாய்'
'நான் எப்படி சார்திரேயை விட்டுவிட்டு...'
'பார்த்தாயா, நான் சொன்னது சரிதானே. என்னமோ அவனைக் கட்டிய மனைவி போலப் பேசுகிறாயே? சிமோன் நீ சார்திரேயை மறந்துவிடு. இங்கு அமெரிக்கா வந்து என்னுடன் நிரந்தரமாக இரு. இது உனக்கு சம்மதமில்லையென்றால் மறுபடியும் இப்படி அரைகுறையாய் வந்து என்னை சித்திரவதை செய்யாதே. நாம் இனிமேல் சந்திக்கவேண்டாம். சிமோன், எனக்கு முக்தி கொடு பிளீஸ்...'

மனதை கல்லாக்கி கொண்டு இனிமேல் ஆல்கிரனை சந்திப்பதில்லை என்ற சங்கல்பத்துடன் பாரிஸ் திரும்பினாள் சிமோன். வழியெல்லாம் கேள்விகள் அவளை விரட்டின.
சார்திரேயுடன் இருப் பது ஒரு பிணைப்பா அல்லது... வெறும் பழக்கமாகிப் போன ஒன்றா? இது என்ன பந்தம்?
சிமோனுக்குக் கிடைத்த விடைகளை அவள் அறிவு ஏற்றுக் கொள்ளவில்லை. அதில் சமாதானம் செய்யும் யுக்திகள்

---

புது உலகம் எமை நோக்கி

---

**இது என்ன உறவு?**
**இப்படி 'சுதந்திரம்'**
**கொண்டாடுவதற்கும், மற்ற**
**எல்லோரும் 'கணவன்–மனைவி'**
**என்ற ஒப்பந்தத்துக்குள்**
**வாழ்வதற்கும் என்ன**
**வித்தியாசம்?**
**ஆண்–பெண் உறவே**
**ஆதிநாளிலிருந்து ஒரே**
**வடிவமெடுத்து வருகிறதோ?**

**99**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணைச் சிமிட்டின. உண்மையை இயற்கை வெளிப்பட வைத்தது, அவள் உடம்பில். அது 'தி மேண்டரின்ஸ்' என்ற நாவலில் பூடகமாக வெடித்தது.

அந்த நாவலில் நடுத்தர வயதை நெருங்கும் அந்தப் பெண்மணிக்கு வயது வந்த ஒரு மகள் இருக்கிறாள். அந்த அம்மா தனது காதலனிடம் கடைசியாக விடைபெற்றுக் கொண்டு, இனி என்றும் சந்திக்க மாட்டோம் என்று உறுதியுடன் வீடு திரும்பி வந்தவள், சில நாட்களுக்குள் ஏகாந்தமாக தன் அறையில் கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளுரப் புழுங்குகிறாள். இதைக் கவனித்த மகள் தனக்கு முடிந்தவரை அம்மாவுக்கு உணவளித்து, ரீ மற்றும் வயின் ஊற்றிக் கொடுத்து ஆறுதலாய்ப் பேசுகிறாள். ஒரு இடைவெளிக்குப் பிறகு ஒருநாள் கதவைத் திறந்து கொண்டு அறைக்கு வெளியே மீண்டும் தன் வேலைகளை எப்போதும் போல் கவனிக்க வந்த அம்மாவைப் பார்த்து அதிர்ச்சியடைகிறாள். நாற்பத்திரண்டு வயது வரை இளமை குன்றாமல் வசீகரமாக இருந்துகொண்டிருந்த அம்மா எப்படி நான்கு நாட்களில் பாழடைந்த கட்டடம் போல இப்படி மூப்படைந்து போனாள்.
'அய்யோ! என்ன நேர்ந்து விட்டது' என கலங்கிப் போனாள் இளம் மகள்.

நாவலுக்கு வெளியே சிமோனும் சார்திரேயும் இந்த மாற்றத்தைக் கவனிக்கத் தவறவில்லை. அவர் இன்னும் வேகத்துடன் நிறைய இளம் பெண்களை வேட்டையாடித் தேடினார். எக்சிஸ்டென்சலிசம் பற்றி பரவலாக எழுதினார். நோபல் பரிசை நிராகரித்த பின் இன்னும் பிரபல்யமானார். பிறகு நோய்வாய்ப் பட்டுக் கிடந்த சார்திரேயை சிமோன் ஒரு தாய் போல, சகோதரி போல, மனைவி போல, விசுவாசமுள்ள வேலைக்காரி போல பார்த்துக் கொண்டாள் .

கேள்விகள் எழும்பின. பிறகு அடங்கின.
இது என்ன உறவு?
இப்படி 'சுதந்திரம்' கொண்டாடுவதற்கும், மற்ற எல்லோரும் 'கணவன்-மனைவி' என்ற ஒப்பந்தத்துக்குள் வாழ்வதற்கும் என்ன வித்தியாசம்?
ஆண்-பெண் உறவே ஆதிநாளிலிருந்து ஒரே வடிவமெடுத்து வருகிறதோ?

கேள்விகளை, விடைகளை தனது பின்னைய தலைமுறைகளுக்கு அர்ப்பணித்து விட்டு, அத்துடன் தனது நூல்களையும் அளித்தபின் சிமோன் மறைந்தார்.
'தி செக்கண்ட் செக்ஸ்', 'தி ரைம் ஒவ் லைப் போர் ஒல் சர்கம்ஸ்ரென்ஸ்' போன்ற அருமையான படைப்புக்களை வருங்காலத்திற்கு இலக்கியக் களஞ்சியமாக அளித்த பின்னரே தூங்கினார் சிமோன்.

'ஏண்டி உமா, இப்பிடி குருவி போல கொறிக்கியே. இந்த வயசில நன்னா நெய் பால் தயிர் என்று சாப்பிட வேண்டாமா. உடம்பு இளைத்து கறுத்துப் போச்சு. சே இதென்ன ரிசேர்ச்'
'ஏன் உமா, என்னவோ போல் ஆகிவிட்டாய். லீவ் எடுத்துக் கோ. வா ஊருக்குப்

www.tamilarangam.net

போகலாம். கோவில் குளம் என்று சுற்றலாம் வா'
'எல்லாம் உங்களால் தான். சீக்கிரம் தை மாதத்தில் முடியுங்கோ; நல்ல படித்த பையன் என்றேன். நீங்க என்னமோ மெதுவா...'

பின்னணி ஓசைகள் நடுவே ரெலிபோன் விடாமல் ஒலித்தது.
'என்ன இன்னும் யோசனை?' என்று கத்தினான் சேகர்.
'என்னோட காஸ்மீர் வரல்லையா? டிக்கட், காட்டேஜ் எல்லாம் புக் பண்ணியாச்சு' என்றான் எரிச்சலுடன்.
'அது முடியாத காரியம்' என்றாள்.
'என்னது! நீ ஒரு பெரிய சிமோன் தி பூவா போல எழுத்தாளராகப் போகிறாய் என்று கோட்டை கட்டினேன். ஓ! நீ ஒரு சாதாரண பெண். எல்லோரும் போல ரொம்ப சாதரணம்'

அவன் குரலும், ரெலிபோன் அடிப்பதும் பின்னணி ஓசையாகத் தேய்ந்து பின்வாங்கியது.

எழுபதின் இறுதியில் பெண்ணியம் தலைகாட்டத் தொடங்கியது. பொருளியல் சமுதாயவியல், உளவியல் என்ற பிரிவுகளில் அரங்குகள் அமைக்கப்பட்டு விவாதங்கள், சர்ச்சைகள் நடைபெற்றன. இலக்கியப் பிரிவில் அடிக்கடி ஜேர்மன் க்ரியர், சிமோன் தி பூவா, கேட் மில்லட், கிளோரியா ஸ்டைனர் போன்ற பிரபல பெயர்கள் அடிபட்டன. இலக்கிய அறிஞர்கள் சிமோன் தி பூவாவை ஒரு உன்னத உதாரணமாக எடுத்துக் கொண்டு, அவர் எழுத்தை அவர் வாழ்ந்த வாழ்க்கையைப் புகழ்ந்தனர். பத்திரிகைகளிலும் எழுதினார்கள். இதில் சில ஆண்களும் சேர்ந்து கொண்டார்கள்.

புது உலகம் எமை நோக்கி

**ஒருத்தன் ஒரே மூச்சா ஒரு பெண்ணை துரத்தியடித்தபடி அவளைக் கெஞ்சி நச்சரிக்கிறான். ஆனால் அந்தப் பெண் நன்றாக யோசித்த பின் அவனது காதலியாக இருக்க சம்மதித்த மறுவிநாடியே அவன் கண்ணில் அந்தப் பெண் ரொம்ப மலிவான மதிப்புக் குறைந்த பெண்ணாகக் கருதப்படுகிறாள்**

**99**

சந்திகர் மற்றும் புனாவில் நடைபெற்ற மாநாட்டில் இப்படித்தான் மோகன் மேகதாவை சந்திக்க நேர்ந்தது. ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வரும் இவர் நறுக்கென்று நேர்த்தியான வார்த்தை களைப் பொறுக்கி எடுத்து, அதற்குப் பின்னால் சுலபமாக ஒளிந்து கொள்ளும் தந்திரத்தை நன்கு பயின்றவர்.

'உங்கள் கதைகளைப் படித்திருக்கிறேன். உமாஜி உங்கள் கவிதைகளையோ நான் மனப்பாடமாகக் கூட கற்றதுண்டு' என்ற மேகதா, சில வரிகளை பிழை யில்லாமல் சீராகச் சொல்ல ஆரம்பித்த போது உமாவிற்கு மயிர்க்கூச்சலெடுத் தது. சுற்றுமுற்றும் பார்த்தாள்.

www.tamilarangam.net

'உஷ்! போதும், வேண்டாம்' என்றாள். உடனே நிறுத்திக் கொண்ட மேகாதா, 'நீங்க சொல்வது சரி. இங்கு யாரேனும் கவனிக்கப் போகிறார்கள். நாம் சாவகாசமாய் உட்கார்ந்து பேசலாமே' என்றார். தேநீரை வரவழைத்த பின்...
'உங்களுக்கு இந்த மாநாடு பிடித்ததா? எழுந்து நின்று இப் பேச்சாளர்களை ஒரு விடயம் கேட்கணும்னு நினைத்தேன். சும்மா ஓயாமல் அயல்நாட்டு உதாரணங்களாக ஜெர்மன் க்ரியர், சிமோன் தி பூவா, கேட் மில்லட் போன்ற உதாரணங்களை சொல்வானேன். ஏன் நம்ம நாட்டுப் பெண்களுக்கு என்ன குறைச்சலாம்?' என்றார் ஆவேசமாக.
'நம்நாட்டில் இன்னும் சர்வதேசப் பரிமாணங்களை அடையும் அளவிற்கு யாரும் இதைப் பற்றி எழுதவில்லையே. சமுதாயவியல் துறையில் புள்ளிவிபரங்களைத் தவிர மக்கள் சிந்தனையைத் தூண்டும்படி யாரும் தைரியமாக எழுதக் காணோம்' என்றாள் உமா

'தப்பு உமாஜி. சமயம் காட்டும் பொறுத்திருங்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இப்ப உங்களைப் போன்றவர்களை எடுத்துக் கொள்ளலாமே. நீங்கள் முயற்சி செய்தால் முடியும். ஏனென்றால் நீங்களும் ஒரு சிமோன் திவா போல...'
கலீரென்று அவளுடைய சிரிப்பு ஒரு நிமிடம் மேகதாவை நிறுத்த வைத்தாலும் உடனே சமாளித்தபடி,
'ஏன் சிரிக்கிறீர்கள்? உங்களுக்கு ஒரு சார்திரே கிடைக்கவில்லையா?' என்றார். உமாவுக்கு இன்னும் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது.
'ஆச்சரியமா இருக்கு! நீங்களே இப்போ அயல்நாட்டு உதாரணங்கள் என்று ஆட்சேபித்து, பிறகு அதைப் பற்றிப் பேசுவது.'

'ஹி ஹி... என்ன சொல்ல வந்தேன் என்றால், நமது இலக்கியத்திற்கும் கலைக்கும் வாய்ப்புக் கொடுக்கணும் இல்லையா? சிமோன், சார்திரே வாழ்வைப் பார்த்துக் கற்றுக் கொள்ள நிறைய விடயங்கள் இருக்கு. ஏதோ விபத்து நேர்ந்தாற் போல நாம் இருவரும் இந்தியர்களாய்ப் பிறந்து விட்டோம். ஆனால் நம்மைச் சுற்றிக் கணவன், மனைவி, குழந்தைகள் என்று இருந்த பின்னும் நம் எழுத்திற்காக, கல்விக்காக நம் தனித்தன்மையை கொஞ்சம் காப்பாற்றிக் கொள்ளணும், இல்லையா. உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால்...'

இருபத்தைந்து வயதிற்குப் பிறகு எத்தனையோ பிறந்தநாட்கள் வந்து போயாச்சு. இந்த இடைவெளி அவளுக்குத் தேடலாக அமைந்து விட்டது. சந்தேகங்களைத் தூண்டும் விபரங்கள், நிறம் மாறும் பொய் மெய் விடயங்கள், கருத்தரங்குகளில் கைதட்டல் வாங்கும் பசப்பு வார்த்தைகள் பேசும் மேடைப்பேச்சாளர்கள், வேடதாரி அரசியல்வாதிகள், பிறகு வேலை உழைப்பு ஆய்வு என தன்னைச் சுற்றி சுழலும் விசைகளின் நடுவே தனித்து நிற்பது போல பிரமை, பிறகு எழுபது எண்பதுகளின் பத்தாண்டில் தேங்கிய குழப்பங்கள்...
அந்த மேகதாவிற்கும் அப்படித்தானே இருந்திருக்கணும்.

www.tamilarangam.net

'எனக்கு உங்கள் தயக்கம் புரிகிறது உமாஜி. காரணம் நீங்கள் நிறைய முறை இந்தப் பெயருடன் ஒப்பிடப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்'
'ஆ! நான் கனவிலும் சிமோனுக்கு ஈடாக முடியாது'
'நான் மட்டும் என்ன சார்திரேவா? இருந்தாலும் நாம் மனசு வைத்தால்...'

எழுபதுகளை விழுங்கிய எண்பதுகள் தொளாயிரத்தைத் தொட்டன. பெண்ணியம் சீற்றம் கொண்ட இயக்கமாக மாறியது. உளவியல், பொருளியல், சமுதாயவியல் இலக்கியம், கலை என வெவ்வேறு திசைகளிலிருந்து புதிய உண்மைகள் எழும்பிச் சுடர் பொறிகள் போல தெறித்தன. மூன்று பத்தாண்டுகள் மதிப்பீடுகள், கலாச்சார மரபுகள், ஸ்தாபனக் கொள்கைகள், கல்வித்துறையின் பாடத்திட்டங்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள், சினிமா எல்லாமே இரக்கமற்ற மறுபார்வைக்குள் அலசப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டன. இந்த மறுமதிப்புக்குத் தப்பிப் பிழைத்த அம்சங்கள் மிகக் குறைவு

'லெவி ஜீன்சுக்குள், கவுனிற்குள், சர்வார் சூட்டிற்குள், வெட்டி விடப்பட்ட தலைமுடிக்குள் இளம் பெண்மை விழித்துக் கொண்டது. இளம் மாணவிகள், ஆய்வாளர்கள், வெவ்வேறு உத்தியோகங்களுக்குப் பயிற்சி பெற்றவர்கள் பேசிக் கொண்டார்கள்

'கேட் மில்லட் எங்கள் கண்களைத் திறந்து விட்டார். இனிமேல் எங்களுக்கு டி எச் லாரன்ஸ், ஹென்றி மில்லரை, ஜான் கென்னட்டை வேறுவிதமாகத்தான் பார்க்க முடியும். அந்தப் பார்வையில் இந்த எழுத்தாளர்கள் பாதுகாப்பற்று நிர்வாணமாய் நிற்கிறார்கள் என்றார்கள். இளம் பெண்கள் இளம் ஆண் கூட்டாளிகளுடன் சேர்ந்து பொறியியல், மருத்துவம், எம்பிஏ, பிஎச்டி, ஐஏஎஸ் என்று முடித்துக் கொண்டு வேலை பார்த்தார்கள்.

இவர்கள் நடுவே சிமோன் தலைகாட்டிய போது...
'சிமோன் தி பூவா அப்படி சார்திரேக்கு தன்னை ஒப்படைத்துக் கொண்டது ரொம்ப தப்பு' என்றார்கள் உஷ்ணமாக.
'கலைக்கு எழுத்திற்கு வளர்ச்சிக்கு யாருடைய உதவியும் ஊன்றுகோல் போல் தேவைப்படுவதில்லை. சிமோன் தனியாக சுதந்திரமாக இருந்திருந்தால் இன்னும் நவீனமுறையில் வேறுவிதமாகப் படைத்திருப்பார்'
'ஆமாம் அவர் ஒரு சிறந்த அறிவுஜீவி

www.tamilarangam.net

சிறந்த படைப்பாளி. அவருக்கு ஊன்று கோல் அவசியமில்லை. சார்திரேயினால் சிமோனுக்கு கிரகணம் பிடித்தது போல ஒளிமங்கிப் போச்சு. அவரைவிட நெல்சன் ஆல்கிரேன் நேர்மையானவர். அவரை சிமோன் மணந்து விலகியிருக்கணும்; அப்போது தெரிந்திருக்கும் சார்திரேக்கு சிமோனின் அருமை'

'கரெக்ட் நாம் நாளாந்த வாழ்க்கையிலும் இந்த விசித்திரத்தைப் பார்க்கிறோம். ஒருத்தன் ஒரே மூச்சா ஒரு பெண்ணை துரத்தியடித்தபடி, அவள் பின்னால் கெஞ்சி நச்சரிக்கிறான். ஆனால் அந்தப் பெண் நன்றாக யோசித்த பின் அவனது காதலியாக இருக்க சம்மதித்த மறுவிநாடியே அவன் கண்ணில் அந்தப் பெண் ரொம்ப மலிவான மதிப்புக் குறைந்த பெண்ணாகக் கருதப்படுகிறாள். சே! ஆண்கள் தங்களுக்குள் போராடும் இந்த முரண்பாட்டை எப்படி சமாளிக்கிறார்கள்? பிளவுபட்டுப் போன அவர்களின் போக்கு அவர்களையே கஷ்டப்படுத்தாதா?'

'அப்பிடியிருந்தும் இப்பவும் கேட்டுப் பார்க்கிறார்கள். நான் மஸ்ஸரி அக்கடமிக்குப் பயிற்சிக்குப் போனபோது, ஒருத்தன் 'நீ ரொம்ப திறமை வாய்ந்தவள்; அது இது என்று சொன்ன பிறகு, நாம் இருவரும் இணைந்தால் சாத்திரே சிமோன் போல சமூகத்திற்கு வாழ்ந்து காட்ட முடியும் என்றான் வீராப்புடன். அவன் முன்னால் சாத்திரே சிமோன் சுற்றிப் போர்த்திருந்த அந்தப் புராணக் கட்டுக்கதையை உடைத்தெறிந்தேன். அதற்குப் பிறகு அவன் என்னைப் பார்த்தால், ஹலோ கூட சொல்வதில்லை' என்று சிரித்த இந்தப் பெண்ணுடன் மற்றப் பெண்களும் சேர்ந்து கலகலவெனச் சிரித்தார்கள்

இன்றுவரை சிமோன் இறக்குமதி செய்யப்பட்டு வெவ்வேறு கோணங்களில் அலசப்பட்டு ஆராயப்படுகிறாள். பெண்ணியம், இயக்கம், தேடல், ஈடுபாடு, உழைப்பு உத்தியோகம் என்று நானாவிதத்தில் அழுத்தங்களால் இழுக்கப்பட்டு திக்குமுக்காடும் பெண்கள் சிமோன் என்ற அறிவுக்கூர்மையுள்ள எழுத்தாளர் சார்திரேயுடன் ஒரு தர்ம பத்தினி போல, கண்மூடிய விசுவாசத்துடன் அவசியமில்லாத அளவிற்குப் பொறுமையுடன் வாழ்ந்ததைக் கவனித்து கோபமாக வெகுண்டெழுகிறார்கள்.

சமயம் மெல்ல மெல்ல உருட்டி விடும் பிண்டங்களில் நிறம் மாறியபடி வெகுதூரம் நகர்ந்து போன சிமோன் இன்னும் அந்தத் தொலைவிலிருந்து உருளும் பிண்டங்களின் நடுவே வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம் ஒரு சேகரையோ ஒரு மேகதாவையோ அல்லது மஸ்ஸரி அக்கடமியில் பயின்றுவரும் ஒரு வருங்கால அரசாங்க அதிகாரி யையோ சபலமூட்டுகிறாள். லெவி ஜீன்சுக்குள், சர்வார் சூட்டிற்குள், கவுனிற்குள் விழிப்புடன் வளர்ந்துவரும் பெண்புலிகளைப் பார்த்து 'நீயும் ஒரு சிமோன் தி பூவா போல' என்று வாயைத் திறக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலைப் பொழுதின் இதமான குளிர்மை தெரியவில்லை. யன்னலுக்கூடாகக் கலந்து வரும் மல்லிகை மணம் வரவில்லை. கீச் கீச் என்று கத்தும் பறவைகளின் கீதமும் இந்தக் காலத்தில் இல்லை.
கலகலவென்று தொட்டுத் துயிலெழுப்பும் காற்று எங்கே.
நித்திரையினின்று கண்விழித்து ஒருகண விழிப்பில் சில அங்கலாய்ப்புக்கள். சொந்த மண்ணைவிட்டு உறவுகளை விட்டு, வீட்டை விட்டு இத்தனை ஆயிரம் ஆயிரம் மைல்களுக்குப்பால் வெளிநாட்டிற்கு வந்து ஏழு, எட்டு வருடங்கள் முடிந்த போதும் சில காலைப்பொழுதுகள் இவ்வாறான அவசரத்திலும், இப்படியான அங்கலாய்ப்பு களுக்கும் மத்தியில் தான் முழித்துக்கொள்கிறது.

திரையை மெதுவாக விலக்கி அறைக்குள் வெளிச்சத்தைப் படரவிட்டு யன்னலுக்குப் பக்கத்தில் முகத்திற்குக் கைகொடுத்து வெறுமனே உட்கார்ந்தாள்.

பஞ்சு பஞ்சாய்ப் பறந்து பறந்து 'ஸ்நோ' கொட்டிக் கொண்டிருந்தது. ஒரு பச்சை இலையைக்கூட காணவில்லை. எல்லாம் காய்ந்து போய் வெறுமனே. இதில் ரசிக்கிறதுக்கு என்ன இருக்கிறது. ஒருகணம் மனம் நினைத்து முடிப்பதற்கிடையில் இல்லை, இதுவும் ஒரு வகையில் இயற்கையின் கோலம். ஒத்துப் பார்த்துக் கொண்டது மனம். பொதுவாகவே இந்தக் காலங்கள் மனத்தினை சோகமாகவே வைத்துக் கொள்கிறது, எல்லாமே விட்டெறிந்து விட்டாற்போன்று. நெருங்கிக் கொண்டிருக்கும் தனது கல்யாணவீட்டு நினைவுகளும் அடிக்கடி அடிமனத்திலிருந்து தலைகாட்டிக் கொண்டுதானிருந்தது.

புது உலகம் எமை நோக்கி

# அடுத்த காலடிகள்

**-நளாயினி இந்திரன்-**

*லண்டன்*

இங்கு வெளிநாட்டிற்கு எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு ஏஜென்சிமூலம் வந்து, அண்ணாவின் ஆதரவில் இருந்து தனக்கென ஒரு வேலை தேடிக்கொண்டு தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு தான்தான் என்ற வட்டங்களைப் போட்டுக் கொண்டு, இந்த வாழ்க்கையுடன் ஒட்டியும்...

வீட்டிலிருந்து... இல்லை எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டிலிருந்து, எங்கள் குடும்பத்திலிருந்து அப்பா, அம்மா, அக்கா அவர்கள் இப்போது எங்கே என்று கூடத் தெரியவில்லை. கடிதங்கள்கூட ஒழுங்காக வருவது

99

www.tamilarangam.net

நின்றுபோய்விட்டது. அடிக்கொரு தடவை கடிதம் வந்து கிடக்குமா என்று ஏக்கத்தில் பார்த்தே பல மாதங்கள் சென்றுவிட்டது. எதிலும் பதட்டம். அங்கிருந்து திக்குத் திக்காக வரும் செய்திகள் மட்டும் தலைக்குள் போர் நடத்திக்கொண்டிருக்கும் எப்போதும்.

இந்த வாழ்க்கையின் அவசரங்கள்.
அந்த வாழ்க்கையின் அல்லோலங்கள்.
இடையில் நாங்கள்...
இதற்கிடையில் கலியாணத்திற்கான சந்தோசங்கள் தலைகாட்டத்தான் இல்லை. என்றாலும் எதிர்காலத் திட்டங்களில் ஒருகண லயிப்பு. இப்படி இப்படிச் செய்யலாம். எப்படி எப்படியெல்லாம்... அதற்குக் கூட நிரந்தரங்கள் இருப்பதாகப் படவில்லை.

வாழ்க்கையை நினைப்பதற்கும், யன்னலுக்குள்ளால் ஓடிக்கொண்டிருக்கும் வானத்திற்கும் முகிலுக்கும் உள்ள இடைவெளியில் தொங்கிக்கொண்டு அலசுவதற்கும் நன்றாகத்தான் இருக்கிறது.

வெளியே கொட்டிக் கிடந்த ஸ்னோவிற்குள் கண்கள் உறைந்து போய்க்கிடந்தன. அங்குமிங்குமாகப் பல காலடிகள். ஓடிச்சென்று அதற்குள் கால்பதித்து சந்தோசமாய் ஓடவேண்டும் என்று இத்தனை வருடங்களாய்த்தான் நினைக்கின்றாள். ஆனால் நினைவில் நின்றாப்போல ஒருநாளும் ஆசைதீர நடந்ததில்லை. மனமும் விட்டதில்லை. அழகான வெள்ளைக்காரப் பெண்ணொருத்தி பிள்ளையை வண்டியில் வைத்துத் தள்ளியபடி அமிழ்ந்து போன காலடிகளுக்கு மேலால் தனது பாதச்சுவடுகளைப் பதித்துச் சென்று மறைகிறாள். ஆசையுடன் அதனைப் பார்க்கிறாள்.

மீண்டும் அந்த நேரத்திற்குரியபடி வழமையான பெண்களும், ஆண்களும் வேலைக்கு அவசர அவசரமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குச் சிறிது தள்ளியிருக்கும் வயது சென்ற கிழவன் நடக்க முடியாமல் மெதுமெதுவாக ஊாந்தபடி நாய்களைக் கையில் கொண்டு வெளிக்கிட்டுவிட்டார். காற்றாடவா அல்லது தனது உடல் ஆரோக்கியத்திற்கா, நாய்களின் உற்சாகத்திற்கா? இவரது பிள்ளைகள் மனைவி எங்கே, என இவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

கையில் கிடைத்ததைக் கொண்டு வீட்டிற்குக் கடிதம் எழுதினாள். மனத்திற்குள் இலேசான ஆற்றோட்டம். மீண்டும் கைகொடுத்து யன்னலுக்கு வெளியே பார்வையை விட்டு எதையோ தீவிரமாக ஆராய்ந்தாள்.

ஓ! இந்தக் கிழவிக்கு இன்னமும் நடக்க முடிகிறதா என்ன. வயதில் முதிர்ந்தவள். பலவீனமான உடல் போலப்பட்டது. முதுகில் வேறு கூன். ஒரு கையில் கடையில் பொருள்கள் வாங்கிய பை. மற்றைய கையில் பொருள்களுடன் கூடிய சிறுவண்டி.

www.tamilarangam.net

இழுத்துக் கொண்டு இத்தனை வேகமாக நடக்கமுடிகிறதா? முன்பு எப்போதோ ஒருமுறை அண்மையில் இருக்கும் வீடொன்றின் முற்றத்தில் குந்தியிருந்து உடலெல்லாம் வேர்வை ஓட புற்களைச் செதுக்கிக் கொண்டிருந்தாள். பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள். அருகே குவித்துக் கிடந்த குப்பைகள். திகைத்துத் தான் போனாள்.

அவளுக்கென்று உறவுகள் வீட்டில் இருந்ததாகத் தெரியவில்லை. யாருடனும் நிறைய நேரம் கதைப்பதில் பகிர்ந்து கொள்வதில் அவளுக்கு நிறைய விருப்பம். மனம்திறந்தும் பேசுவாள். மனித உறவுகளைப் பற்றியெல்லாம் பேசுவாள்.
இப்போதும் இத்தனை நேரமாய் யாரோடோ மிகவும் சத்தமாகச் கதைத்துக் கொண்டிருந்தாள்.

மீண்டும் வீட்டு நினைவு தொட்டுத் தொடருகிறது.

எத்தனை காலடிகளைப் பதித்து எங்கே நகர்ந்து கொண்டிருக்கின்றார்களோ? உலர்ந்து தோய்ந்து...
மனம் இவளுக்குக் களைத்தது.

இவள் யன்னலிலிருந்து விடைபெற்றுக் கொண்டாள். கலியாணத்திற்கு முன்பு வேலையிடத்தில் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் நிறையவே இருந்தன. அவசர அவசரமாகத் திரும்பினாள். வெளியே காய்ந்து போன வெறும் தடிகளோடு இருந்த மரங்களும் பார்வையில் பட்டது. மணி பாய்ந்து கொண்டிருப்பதாகப் பட்டது. மனம் வேலைக்குப் போகவேண்டும் என உந்தியது.

புது உலகம் எமை நோக்கி

**இந்த வாழ்க்கையின்**
**அவசரங்கள்.**
**அந்த வாழ்க்கையின்**
**அல்லோலங்கள்.**
**இடையில் நாங்கள்...**

சாப்பாட்டில் இரண்டு வாய் சாப்பிட முன்னரே வீட்டு நினைவு தொடர்ந்தது. அம்மா பின்னால் திரிந்து சாப்பாடு கொடுப்பது ஞாபகத்தில் வந்து குந்தியது. சாப்பிட வாருங்கள் என்று கூப்பிட இங்கு ஒருவருமில்லை.

அடிக்கடி இப்படி நினைவுகள் தோன்றி னாலும் வாழ்க்கையின் வேகத்தில் சமாளித்துக் கொள்ளப் பழகிவிட்டிருந் தாள். ஆனால் கல்யாணம் நிச்சயமாகிய நாளிலிருந்து அப்பிடி அந்த நினைவு களை இலகுவில் துரத்த முடியவில்லை. ஏன் இவ்வளவு நாளும் தோன்றவில்லை? ஓடிஓடி உழைத்துக் கொடுக்கிறேனே?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிதாக சிந்தனை ஓடியது. அவளது சிந்தனைகள் புதிதாகப் பட்டது. வாழ்க்கையைப் பற்றி ஒருநாளும் ஆழமாக அலசியதில்லை. இப்போதெல்லாம் ஆற அமர இருந்து சிந்திக்கிறாள்.

அவசர அவசரமாக கைப்பையில் வைக்க வேண்டியவற்றைத் திணித்துக் கொண்டு நடந்தாள். பார்த்து ரசித்த ஸ்நோவும் ஒருபக்கம் மறைந்து கொள்ள, வேலை மட்டும் மனதில் நிற்க காலில் வேகம் ஒட்டிக்கொண்டது. வழமையான பஸ் ஸ்ராண்ட் வழமையாக அந்நேரத்திற்கு உரியவர்கள் இன்றும் நிற்கிறார்கள். யாரும் அவளுக்கு மிகத் தெரிந்து நெருங்கி பழகுபவர்களாக இல்லை. சாதாரண ஒரு புன்சிரிப்பைத் தவிர.

வெறுமே நிலத்தில் குந்திக் கொண்டிருந்த வெள்ளைக்காரப் பையனை நோக்கி இன்றும் ஆச்சரியம் தலைதூக்கியது. இன்று எத்தனையாவது நாளாக இப்படி இருக்கிறான் என நினைவுபடுத்தினாள். இந்த விறைக்கும் குளிரில், உறையும் ஸ்நோவில் வெறுமனே ஒரு ரி-சேர்ட், கோட் மட்டும் அணிந்து கொண்டு எந்தவித காரணமுமே இல்லாமல் தொடர்ந்து ஒரு இளம் வயதுப் பையன் ஏன் இப்படி இருக்க வேண்டும் என காரணத்தினை அலசத் தொடங்கியது இவளின் மனம்.

அக்கம் பக்கத்தில் நின்றவர்களும் காரணங்களைத் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள் போலும். ஆளுக்கொன்றாய் விளக்கிக் கொண்டிருந்தார்கள். ஏன் எப்படி என்றெல்லாம் அருகில் நின்ற வயது சென்ற பெண்ணொருத்தி புன்சிரிப்பொன்றை உதிர்த்து அறிமுகமாகி, அவனைப் பற்றிக் கூறினாள்.

வீட்டை, குடும்பத்தை விட்டு ஓடி வந்திருக்கிறான், இந்தப் பையன். வீட்டில் கருத்து முரண்பாடுகளாம். வீட்டுச்சூழல் பிடிக்கவில்லையாம்; அன்பு செலுத்துவதற்கு யாருமில்லையாம். வந்துவிட்டானாம். நண்பன் ஒருவன் தான் வந்து அழைத்துப் போவதாகவும், இங்கே வந்து காத்திருக்கும்படியும் கூறியிருக்கிறான். வந்தபாடில்லை. காத்திருக்கிறான். அந்தப் பெண் கதையைக் கூறிக் கொண்டிருந்தாள்.

தவிர்க்கமுடியாதபடி மீண்டும் மனம் பறந்தது. தெருவெல்லாம் ஓடியது. வீட்டைச் சுற்றியது. கவலைப்பட்டது. ஒடுங்கிக்கொண்டது. அங்கே இப்போது ஓடிக்கொண்டிருக்கும் மக்களைப் பற்றியும், பசி தூக்கம் கெட்டு ஓடித்திரிவதையும் ஒருமுறை நினைத்தாள். மூச்சு ஒரு கணம் நின்றுவிடும் போல உணர்ந்தாள். பெரிதாக ஒரு பெருமூச்சினை எறிந்தாள்.

பக்கத்தில் நின்றவள் விமர்சனத்தை எதிர்பார்த்தவள் போல நின்று கொண்டிருக்கிறாள் போலும். பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இன்னமும் அவளது சிந்தனைகளுக்குள்ளும் காலடிகளுக்குள்ளும் நின்றாள். ஆனால் பார்வை மட்டும் வெறுமனே அந்தப் பையன் மீது.

www.tamilarangam.net

பஸ்ஸில் போகும்போதே தான் வேலைசெய்யும் சுப்பர் மார்க்கெட்டின் உதவி மனேஜரிடம் சொல்லப் போவதை ஒத்திகை பார்த்துக் கொண்டாள்.

அவன் ஏற்கனவே சிடுமூஞ்சி என்று பெயரெடுத்தவன். நின்று நிமிர்ந்து ஒருவருடனும் ஆறுதலாகக் கதைக்க மாட்டான் என்பது தெரியும். இத்தனைக்கும் அவன் இவளது நாட்டுக் காரானாக இருந்தும் கூட எந்தவித ஆலோசனை அறிவுரை கூறவும் மாட்டான். அவனது பேச்சுகளில் நீதி, நியாயம் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் தான் இத்தனை ஒத்திகைகளையும் பார்த்துக் கொள்கிறாள். இத்தனையும் இவளது கல்யாணத்தை ஒட்டி இரண்டு கிழமை லீவு கேட்கத்தான். இத்தனை நாளாக ஓடி, ஓடி உழைத்திருக்கின்றாள். இப்போது அவனிடம் சென்று தனக்குரிய லீவு எடுப்பதற்கு இத்தனை பயம். தனக்கு தன்னிலேயே ஆத்திரமாகக்கூட இருந்தது. இப்படிக் கேட்கலாமோ?
இந்த வசனத்தையும் சேர்த்துக் கொள்வோமா?

பஸ்ஸின் கண்ணாடிக்குள்ளால் ஓடிமறைந்த உயர்ந்த கட்டிட வரிசைகளைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. அதிலும் விட வேகமாக சென்றது மனம்.

இப்படி லீவு கேட்கப் போய் இவனிடமே வாங்கிக் கட்டிக்கொண்டதும் நினைவுக்கு வந்தது. எல்லாவற்றுக்கும் வசனங்களைத் தயார்படுத்திக் கொண்டாள். ஏன் இவன் இப்படி இருக்கவேண்டும்? இவளின் வெகுளி மனம் நினைத்துக் கொண்டது. அங்கு வேலை செய்யும் பெரும்பாலானவர்களுக்கு இவன் மீது எப்போதும் ஒரு ஆத்திரம் தம் உழைப்பிற்கு பங்கம் வந்துவிடக்கூடாதே எனக் கண்டும் காணாதவர்களாக இருந்தார்களே தவிர, அவனைப் பற்றி அடிக்கடி கதைத்துக் குமைந்து கொள் வார்கள்.

பஸ் ஹோல்ட்டில் இறங்கினாள். முன்னே வழமையான கலகலப்புடன் கடை. அதையொட்டி ரெஸ்ற்றோரண்ற். அதற்குப் பக்கத்தில் எங்கள் இனத்தவன் ஒருவனது கடை. அதில் விற்கும் பொருட்களும் வெளியே அடுக்கி வைத்திருக்கும் எம் நாட்டுப் பழங்கள், மரக்கறிகளை பார்வை யிலேயே ஒவ்வொருநாளும் விலக்குவாள். அதற்கு முன் நின்று தெருவைத் தாண்டி இந்தப் பக்கம் வந்தால் நீண்டுகொண்டு போகும் இவள் வேலை செய்யும் சுப்பர் மார்க்கெட். அதற்குள் இன்று உள்ளே போகவே பிடிக்கவில்லை.

புது உலகம் எமை நோக்கி

**'இப்போது கலியாணத்திற்கு லீவு, பின்பு இன்னும் சில மாதங்களில் பிள்ளை என்பீர்கள். இன்னும் சிறிது காலத்தில் அசதி, களைப்பு, வருத்தங்களோடு நிற்பீர்கள். பிறகு பிள்ளை பிறந்த பின் அதற்கும் உங்களுக்குச் சம்பளத்துடன் லீவு வழங்க வேண்டும். எத்தனை விதமான கஷ்டம் பார்த்தீர்களா?'**

www.tamilarangam.net

வழமையான கலகலப்பு இன்னும் தொடங்கியிருக்கவில்லை. காலைவேளை அமைதியாகக் கிடந்தது. ஷெல்புகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வழியில் எதிர்ப்படுபவர்களுக்கு ஹலோ- காலை வணக்கம் சொல்லிக் கொண்டே மனேஜரின் அறை நோக்கிப் போனாள்.

ஏளனமான சிரிப்புக்களுடன், குழந்தைத்தனமான ஒரு வெள்ளைக்கார சிறுவனுடன் கதைத்துக் கொண்டிருந்தான் அவன். இவள் ஒதுங்கி நின்று காத்திருந்தாள். அவர்களது உரையாடல் காதில் விழுந்து கொண்டிருந்தது. இப்போது விளங்கியது அந்தச் சின்னப் பையன் வேலைகேட்டு வந்திருந்தான். அவனது தாயாருக்கு இன்னும் சில தினங்களில் பிறந்தநாள். தன்னுடைய தாய்க்குப் பரிசொன்றினை அளிக்க விரும்புகிறான். அதற்கு அவனுக்கு பணம் தேவைப்படுகிறது. அதனாலேயே வேலை கேட்டு வந்திருந்தான். 'எந்த சின்ன வேலையையாவது கொடுங்கள்; செய்து முடித்து விடுவேன். நான் மிகவும் கெட்டிக்காரான்'. தன் ஆற்றலை, திறமையை மிகவும் கஷ்டப்பட்டு ஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டிருந்தான். வேலை கொடுக்கலாமா இல்லையா என்பது வேறு. ஆனால் இவனது முகத்திலோ எவ்வித இரக்கமோ, சலனமோ இல்லை. அவன் என்னதான் நினைக்கிறான். என்பது கூடப் புலப்படவில்லை. கடுமையாகவே கிடந்தது. இல்லவே இல்லை என்று மட்டும் பலமாகத் தலையாட்டி னான். ஆகக்கூடியது அவனது மனத்தினை, முயற்சியைப் புரிந்தவனாகத் தெரிய வில்லை. இவள் அவனை அளந்து கொண்டிருந்தாள். என்ன மனிதன்? புருவங்கள் இறுகிக் கிடந்தன. உதடுகள் பிதுங்கி மறுத்துக் கொண்டிருந்தன. சாவகாசமாக எதையோ எழுதவும் தொடங்கினான்.

அந்தச் சிறுவன் இவனை உதறியெறிந்து விலக, தன் முறைக்குக் காத்திருந்தவள் போலச் சென்றாள். ஏன் என்பது போல தலையைத் தூக்கினான். வாய் குமுறியது, அவன் முன்னே. திரும்பத் திரும்பப் பாடம் பண்ணி வைத்த வசனங்கள் வரவேயில்லை. ஏதோவொன்றை எங்கேயோ இருந்து தொடங்கினாள் இவள்.

'இரண்டு கிழமை லீவு வேண்டும்'
அதற்கு அவள் தகுதியற்றவள்போல ஏளனச் சிரிப்புடன் ஏன் என்பதுபோலப் பார்த்தான்.
'கலியாணம் பண்ணப் போகின்றேன்'
'ஓகோ!'
அவன் மனதுக்குள் வேலைசெய்கிறான் என்பது புரிந்தது, அவனது மௌனத்தில்.
இவள் சிறிது உயிர்பெற்றவள் போல சிறிது உசாரானாள்.
'ஓ...எடுக்கலாம்' என்றான் மெதுவாக.
நிறைய யோசிக்கின்றான் போலப் பட்டது.

"இப்போது கலியாணத்திற்கு லீவு, பின்பு இன்னும் சில மாதங்களில் பிள்ளை என்பீர்கள். இன்னும் சிறிது காலத்தில் அசதி, களைப்பு, வருத்தங்களோடு நிற்பீர்கள். பிறகு பிள்ளை பிறந்த பின் அதற்கும் உங்களுக்குச் சம்பளத்துடன் லீவு வழங்க

www.tamilarangam.net

வேண்டும். எத்தனை விதமான கஷ்டம் பார்த்தீர்களா?'
அவன் மிகவும் சாதாரணமாக சிரிப்பொன்றுடன் கூறிக் கொண்டிருந்தான்.
'எப்போது பிள்ளை பெறுவதாக யோசித்திருக்கிறீர்கள்?'
கூடவே இதனையும் சிரிப்புடன் கேட்டு வைத்தான்.

அவளின் உடலில் விஷம் பரவுவதைப்போல உணர்ந்தாள். முகம், உடலெல்லாம் சிலிர்த்து விறைத்திருக்க வேண்டும். அவனை ஒரு துச்சமான பார்வையில் தூக்கி அடித்துக் கொண்டிருந்தாள்.

இப்படியான கேள்விகளை ஏனைய பெண்களிடமும் கேட்டிருக்கிறான். தெரியும் கதைத்திருக்கிறார்கள், குமைந்து குமைந்து. ஆனால் அதே கேள்விகள் அவளுக்கு முன்பும் எறியப்பட்டபோது முகத்தில் தழைவாக நின்று கொண்டிருந்த புன்சிரிப்பு மறைந்திருக்க வேண்டும். வார்த்தைகளை இன்னமும் தேடிக்கொண்டே இருந்தாள்.

இவன் எந்த சமூகத்து, எந்த மனித இனத்தின் பிரதிநிதியாக இருப்பான் என்று ஒருகணம் கேள்வி கூட.

சமூகம், பெண் உரிமை... நிமிஷங்களுக்குள் அடுக்கடுக்காய் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் ஏறி இறங்கி அடம்பிடித்தன.

இவன் இப்படி கதைத்ததிற்கே சட்ட நடவடிக்கை எடுக்கலாம் இங்கே. நினைத்துக் கொண்டாள். துணிவும் தன்னம்பிக்கையும் கூடவே வர சொன்னாள்,
'கலியாணம் பண்ணுவதற்கும் பிள்ளை பெறுவதற்கும் அதற்குரிய லீவுகளை எடுப்பதற்கும், வேலை செய்வதற்கும் எனக்கு உரிமை இருக்கிறது. எப்போது நான் பிள்ளை பெறப்போகிறேன் என்பதை விண்ணப்பப் படிவத்திலேயே உமக்கு சொல்ல வேண்டியதில்லை'.

"மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பதற்கும், வாழ்க்கையின் உண்மையை புரிந்து கொள்ளும் முயற்சியும், மற்றையவரின் உரிமைகளை மிதிக்கவும் மாட்டேன். அதேநேரம் எனக்கிருக்கும் உரிமைகளை யாருக்காகவும் விட்டுக் கொடுக்கவும் மாட்டேன்". கூறிமுடித்ததில் மனம் களைத்தது. ஆனால் தெளிவாக இருந்தது. திரும்பி அடுத்த காலடிகளை உறுதியாகப் பதித்துச் சென்றாள்.

**புது உலகம் எமை நோக்கி**

*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

**தஞ்சம் தாருங்கோ**

எங்களப் பற்றி நீங்கள் நிறையக் கேள்விப்பட்டிருப்பியள். எங்களுக்கெண்டு ஒரு நாடு இல்ல. வீடுவாசலும் இல்ல. சில நேரங்களில சொந்தமா பெயர்கூட இருக்காது. நாங்கள் உள்நாட்டுக்குள்ள ஓடி ஓடி ஓய்ஞ்சு போனம். ஏலாத நிலயிலதான் உங்களத் தேடி வர வெளிக்கிட்டம்.

எங்களுக்கெண்டு இருக்கிறதெல்லாம் சின்னச் சின்ன ஆசையள்தான். ரண்டு அல்லது மூண்டு வேள சாப்பாடு. தண்ணி. இருக்க இடம். பாதுகாப்பு. ஏன் உங்கள் ஒவ்வொருத்தருக்கும் இந்த ஆசையள் இல்லையோ? நீங்கள் வெளிக்கிட்டு பத்துப் பதினைஞ்சு வரியங்கள். பயமெண்டா உங்களுக்கு என்னெண்டு தெரியுமோ? ஓமோம். எங்களப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருப்பியள். பெருங்கதையள். குட்டிக் கதையள். கொறில்லாக் கதையள். சோகக் கதையள்...

கொஞ்சம் பொறுங்கோ. இப்ப கதவத் திறக்கிறது ஆர்? அந்தத் தடியனாத்தான் இருக்கவேணும்.
நினைச்சு முடிக்கிறத்துக்குள்ள வந்து நிக்கிறான். அவன்ர சப்பாத்து, துடையள், முகம், கையள், அதில தொங்கிற விரல்கள் எல்லாம் மொத்தம் மொத்தமா பெரிசா இருக்குது. இவன்ர மூஞ்சிக்கு சிரிப்புக் கொஞ்சம் வாங்கி ஒட்டினாலும் நிற்காது. களண்டு விழுந்திடும்.

ஒரு சின்னச் சிறையெண்டாலும் அது இப்ப எங்களுக்குச் சொந்தமானதுதான். உள்ள வரேக்க கதவத் தட்டிற்று வரலாம்தானே. நாங்கள் அரைகுறையா படுத்திருப்பம். கக்கூசுக்குப் போவம். உடுப்பக் களட்டிவிட்டு முதுகு சொறிஞ்சுகொண்டிருப்பம். பேனெடுத்துக் குத்திக் கொண்டிருப்பம்.
அடிக்கடி வாறாங்கள். போறாங்கள். எங்கட கையைப் பிடிச்சுப் பாக்கிறாங்கள்.

கொழும்பில நாங்கள் லொட்சிலை தங்கியிருக்கேக்க அங்கயிருந்த அரவிந்தன் அண்ணா, கண்ணன் அண்ணை, ஜீவன் எல்லாரும் எவ்வளவு மரியாதயா எங்களோடை நடந்தவ. றூம் கதவில தட்டிற்றுத்தான் உள்ள வருவினம்.
பின்னேரத்தில வட அல்லது உறைப்பு றொட்டி. இரவுச் சாப்பாட்டுக்கு இடியப்பம், புட்டு. அவயள்தான் போய் வாங்கிக்கொண்டு வருவினம். பின்னேரங்களில் எல்லாரும் ஒண்டுகூடி முஸ்பாத்திதான். முன்வளவில இருக்கிற தென்னமரத்துக்குக் கீழ பெரிய கல்லொண்டு இருக்கு. அதிலதான் சந்திக்கிறது. ஒரே ஊர்க்கதையள்தான். அநேகமா பள்ளிக்கூடம். பிறகு இயக்கம். ஆர் ஆர் செத்துப்போனது. ஆற்ற வீடுகள் உடைஞ்சது. வங்கர் கதையள் நிறைய.

ஜீவன் மட்டும் நிறையக் கதைக்கமாட்டான். அவன்ர காதல் கடிதத்தப் பார்த்து எனக்குச் சிரிப்புத்தான் வந்துது.

www.tamilarangam.net

"உங்களிலும் எனக்கு வயசு குறையவெண்டு பாக்கிறியளோ?"
"இல்லை ஜீவன். எனக்கு ஜேர்மனில பேசித்தான், இப்ப அவரிட்ட போக நிக்கிறன் எண்டு உமக்குத் தெரியும்தானே."
கொஞ்சநாளா தென்ன மரத்த சந்திக்கவோ கல்லோட கதக்கவோ ஜீவன் வாறேல்ல.

மின்ஸ்க்கில இருந்த தமிழ்ப்பெடியள் தறுதலையள். எல்லோருக்கும் ஒரே ஒரு அறைதான். ஒழுங்கா நித்திரை கொள்ள ஏலாது. சட்ட மாத்தேலாது. முதுகு சொறியேலாது. இதுக்கெண்டே இலங்கயில இருந்து வெளிக்கிட்டு வந்தமாதிரி இன்னும் நிக்குதுகள் கொஞ்சப்பேர்.
ஒருநாள் நல்ல நித்திர. ஏதோ கனவிலதான் நடக்குது எண்டு முதல் நினைச்சன், எழும்பிப் பாத்தா தறுதல ஒண்டு தடவிக்கொண்டு இருக்குது.
"என்ன வேல செய்யிறீர். நீர் நினைக்கிற மாதிரிப் பொம்பிள இல்ல நான்"
"இங்க இதெல்லாம் சகயம் அக்கா. நீங்கள் கண்டும் காணாத மாதிரி இருக்கிறது நல்லது."
"கப்பல் ஏறி வந்தாப்பிறகு எங்களுக்கு கலாச்சாரம், மானம் ஒண்டும் இல்லையெண்டு நினைச்சிட்டியளோ?"
"கற்புக் கிற்பெல்லாத்தையும் அங்க இலங்கயோட வைச்சுக் கொள்ளுங்கோ. சும்மா நடிக்காதையுங்கோடி"

மிச்ச எல்லா ஆம்பிளையளும் பாத்துக்கொண்டிருக்கினம். ஒருத்தரும் வாய்திறந்து கதைக்கினம் இல்லை. இவனுக்கு இவள் ஓமெண்டா நாங்களும் தேச்சுப் பாக்கலாம் எண்ட மாதிரி ஆவெண்டு பாத்துக்கொண்டு நிக்கிறாங்கள்.
"உங்களுக்குத் தேவையெண்டா சுவரோட போய்த் தேயுங்கோடா"



# தஞ்சம் தாருங்கோ

-நிருபா-
*ஜேர்மனி*

என்ர பாஸ்போட் துலைஞ்சு போச்சுதாம். ஏன் பாஸ்போட் துலைஞ்சது எண்டு எனக்கெல்லோ தெரியும்.
அவனுக்குப் பெயர் குணசீலன். கோதாரில போவான். ஏஜென்சிகாரங்களெண்டா இவ்வளவு கெட்டவங்களெண்டு நானெண்டா நினைச்சே பாக்கேல்ல. பொம்பிள எண்டு பரிதாபம் பாத்துத்தான் இவ்வளவு ஆம்பிளயளோடையும் தனியத் தங்கவிடாமல் தன்ர வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போறான் எண்டு முதல்ல நினைச்சன். படுக்கிறதத் தவிர ஆம்பிளயளின்ர தலேக்குள்ள வேற ஒண்டும் இல்லையே? யோசிச்சுப் பாக்கவே அரியண்டமாக் கிடக்குது. இப்ப

www.tamilarangam.net

பாஸ்போட் துலைஞ்சு போச்சுதாம். அவன் பாஸ்போட்ட தேடி எடுக்கிறதுக்குள்ள நானே துலைஞ்சுபோவன் போல.

எங்கேயோ தொடங்கி எங்கேயோ வந்திட்டனாக்கும்.
பொலிஸ் தடியன் இன்னும் நிக்கிறான். அவன் ஜேர்மனில கதச்சா எங்களுக்கு விளங்குமே? இவன் அறுப்பானுக்கு இங்கிலீசும் ஒழுங்காத் தெரியாது. தடக்கித் தடக்கி நம்பருகளை மட்டும் சொல்றான்.
நம்பர் 75 நானில்ல.
சுமதி உள்ளங்கையைப் பிரட்டிக்காட்ட, தலய சூரன் ஆட்டிற மாதிரி ஆட்டிற்று. அவளின்ர கைய இழுத்துக்கொண்டு போறான்.

காலம எட்டுமணிக்கே வந்திட்டாங்கள். ஒரு தமிழரும் வந்தார். அவன் தடியன் சொன்னத அவர் தமிழில சொன்னார். ஒவ்வொருத்தரா கூப்பிட்டு விசாரிக்கப் போயினமாம். தமிழருக்கும் சிரிப்பு கொஞ்சம் வாங்கித்தான் ஒட்டவேணும்.
பொலிசுக்காரன் - எங்களில ஒருத்தி - மொழிபெயர்ப்பாளன்
“எந்த நாட்டுக்குள்ளால வந்தனியள்?”
“தெரியாது”
“உங்கட பாஸ்போட் எங்க?”
“ஏஜென்ஸி பறிச்சுப்போட்டார்”
நீங்கள் ஆறு பொம்பிளையள் ஒரேயடியா வந்திருக்கிறியள். ஏதேன் இயக்கத்தைச் சேர்ந்தனியளோ?”
“இல்ல. இயக்கம் எண்டால் எங்களுக்குப் பயம். ஆமிக்கும் பயம். வீடெல்லாம் உடைச்சுப் போட்டினம். நான் நிறையநாள் ஜெயிலுக்குள்ள இருந்தனான். அங்க பொம்பிளயளயும் பலாத்காரம் செய்யினம். எங்கட உயிருக்கு ஆபத்து. அதுதான் வந்தனாங்கள்”
“நான் கேக்கிற கேள்விக்கு மட்டும் பதில் சொன்னாக் காணும். இப்ப நான் ஐந்து படங்களைக் காட்டுவன். அதில உங்கட ஏஜன்ற் இருக்கிறாரோ எண்டு சொல்ல வேணும்”

எங்களப் பற்றி உங்களுக்கு என்னதான் தெரியும்? எங்களுக்குச் சொந்தமில்லாத நாடுகள் நிறைய. எங்கள நாடோடிகள் எண்டும் சொல்லலாமோ? நாங்கள் பண்டங்கள்மாதிரி. பண்டங்களையும், பணங்களையும் ஏஜென்ஸிட்ட குடுப்பினம். ஏஜென்ஸி பணத்த கொழும்பில வச்சுக்கொண்டு எங்கள அடியாக்களிட்ட மாத்தி மாத்தி குடுப்பினம். வெள்ளக்காரன்கள், கறுப்புக்காரன்கள், தமிழ்காரன்கள், சிங்களகாரன்கள், வங்காளகாரன்கள்....

அண்ணாக்களின்ர சிநேகிதர்மார் வீட்டுக்கு வந்திருந்தால் தேத்தண்ணி கொண்டு போய்க் குடுக்கவே கை நடுங்கும் எங்களுக்கு. சின்னச் சின்னக் கிராமங்களில இருந்து நகரமே தெரியாமல் வளந்தனாங்கள். இப்ப கொழும்பு லொஜ்சுகள்,

www.tamilarangam.net

பாங்கொக், மொஸ்கோ விமான நிலையங்கள், போலந்து காடுகள், நதிகள், ஐரோப்பாவின்ர சிறையள் எல்லாத்துக்கும் எங்கட கதயள் தெரியும். எங்களுக்கெண்டு ஒரு சொந்தவீடு இருக்கவேணுமெண்டு ஆசைப்பட்டம். எங்களுக்கெண்டு இருந்த ஒரே ஒரு சொத்தான சொந்தங்கள்கூட இப்ப இல்ல.

கொஞ்சம் பொறுங்கோ. எனக்கு சரியா தலைய சுத்துது. களைக்குது. ஒழுங்கா சாப்பிட்டு எத்தினை நாளாச்சு? மத்தியானம் ரண்டு துண்டு பாண். ஒரு சின்னப் பால்பெட்டி. தேத்தண்ணி தேத்தண்ணி எண்டு சொல்லிப் பாத்தம். பச்சதண்ணி கூட இல்ல. உடம்பெல்லாம் சரியாக் குளிருது. போர்வகூட இல்ல. நாங்கள் ராத்திரி பிடிபடேக்க வெளியால சரியான சினோ.

எங்களில ஒருத்தி - பொலிசுக்காரன் - மொழிபெயர்ப்பாளன்

“ஏன் நடுங்கிக் கொண்டு இருக்கிறியள். உண்மையைச் சொல்லீட்டிங்களெண்டா பிரச்சினை இல்ல”

“குளிருது. சப்பாத்து இல்ல. சொக்சுகள்கூட ஈரமாப் போச்சு”

“எங்க சப்பாத்து”

“ஏஜென்ஸி களட்டி எறியச் சொல்ல ஒரு காட்டுக்குள்ள எறிஞ்சிட்டம்”

“அது எந்த நாடு எண்டு தெரியுமோ?”

“தெரியாது”

“எங்கள விசரர் எண்டு மட்டும் நினைக்கவேண்டாம். ஏன் தெரியாது. பயணம் செய்யேக்கை எந்த நாட்டுக்குப் போறம். எதால போறம் எண்டு அறிஞ்சு வச்சிருக்கிறேல்லயா?”

“எங்கட ஏஜென்ஸியோட அப்பிடியெல்லாம் கதைக்கேலாது. பெடியள் கொஞ்சப்பேர் கேட்டதுக்கு அடிச்சுப் போட்டினம்.”

“நீங்கள் பிடிபடுறத்துக்கு முதல் ஒரு வாகனத்தில வந்துதான் இறங்கியிருக் கிறியள். அது என்ன வாகனம்? அதை ஓட்டி வந்தது ஆர்? எண்டு சொல்ல முடியுமோ”

“அது ஒரு கார். வெள்ளைக்காரர்தான் ஓட்டி வந்தவர்”

“அது ரக்ஸியோ? காரோ? என்ன நிறம்?”

“தெரியாது”

எங்களப் பற்றி நாளுக்கு நாள் கேள்விப் படுறியளெல்லே? நாங்கள் வாற வழியளிலயே செத்துப் போறம். வந்து சேர்ந்தாலும் திருப்பி அனுப்புறாங்கள். பொலிசுக்காரர் மட்டுமில்ல; எங்கட மாப் பிளமாரும்தான். ஏதோ வாற வழியளில

**புது உலகம் எமை நோக்கி**

*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

துலைஞ்சு போச்சுதாம். எனக்கு மறதி நிறைய. துலைஞ்சு போறதின்ர முதல் எழுத்து ஏதோ'க'விலை தொடங்குது. மாதக்கணக்கா காடுகளிலயும் சின்னச் சின்ன அறையளிலையும் கிடந்து வேதனைப்படுறம். இதுகள் எல்லாம் என்னத்துக்காக? நீங்கள் வந்து பதினைஞ்சு வரியங்கள். எங்களுக்காக என்ன செய்தியள்? ஒரு ஊர்வலம் வச்சியளோ? பொலிசுக்காரரோடை சண்டை போட்டனியளோ? உங்கட சோசல்காசு கிடைக்காமல் போனாலுமெண்டு அரசாங்கத்த எதிர்க்க மாட்டியள்.

தடியன் பொலிசுக்காரன் திரும்பவும் வந்திட்டான்.
இப்ப இவன் சொன்னது என்ர நம்பர். எட்டாம் நம்பர் எனக்குப் பொருத்தமே இல்ல. நான் கையக் காட்டினன். அவன் இறுக்கிப் பிடிச்சான். கைய இல்ல, தோள. இவன்ர பிடியில இருந்து தப்ப ஏலாது. இவனை நான் எதிர்க்கவும் ஏலாது. பிறகு தஞ்சம் தரமாட்டாங்களெல்லே. நாங்கள் பதினொரு மாதங்களா எத்தனை கஸ்டப்பட்டம். அதுக்கெல்லாம் இனி விடிவு கிடைக்குமே? அவன்ர சப்பாத்து தொப்தொப் எண்டு கேக்குது. நான் முன்னுக்கு ஒரு கோழிக்குஞ்சு மாதிரி நடக்கிறன்.

பொலிசுக்காரன் - எங்களிலை ஒருத்தியாகிய நான் - மொழிபெயர்ப்பாளன்
............
“எங்கட உயிருக்கு ஆபத்து. திருப்பி அனுப்பினா கொல்லிப் போடுவினம். என்ர அண்ணர் ஒருத்தர் இன்னும் ஜெயிலுக்க இருக்கிறார். தம்பி புலியள் பிடிச்சுக்கொண்டு போட்டினம். எனக்குத் தஞ்சம் தாருங்கோ. திருப்பி அனுப்பிப் போடாதயுங்கோ.”

“நாங்கள் கேட்கிற கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் சொல்லவேணும். நீங்கள் போலந்துக்குள்ளாலை தான் வந்தனியள் எண்டு எங்களுக்குத் தெரியும். அதனால அங்க எத்தன நாள் நிண்டனியள் எண்டு சொல்லுங்கோ”
“நாங்கள் மொஸ்கோவில இறங்கினதுதான் தெரியும். பிறகு எந்த நாடுகளில நிண்டனாங்கள் எண்டு தெரியாது.”
“நீங்கள் உண்மையைச் சொல்லிட்டால் எல்லாருக்கும் இலகுவாக இருக்கும்”
“எனக்கு ஒண்டும் தெரியாது. நான் இவ்வளவு நேரமும் சொன்னது உண்மைதான்.. எங்கட உயிருக்கு ஆபத்து. திருப்பி மட்டும் அனுப்பவேண்டாம்”

எங்களப் பற்றி உங்களுக்கு நிறையத் தெரியும் தானே. எனக்குத் தலையெல்லாம் சுத்துது. எந்தக் காடு எண்டு தெரியாது. நாங்கள் நடந்து கொண்டிருக்கிறம். சுமதிக்குப் பொக்கிளிப்பான். நேற்று அவள் திடீரெண்டு மயங்கி விழுந்திட்டாள். பிறகு எழும்பவேயில்லை. அவள விட்டிட்டுத்தான் போறம். ஏஜென்ஸிய நாங்கள் இனி எங்க கண்டு பிடிக்கிறது?

பி.கு.
நீங்கள் இதுவர காலமும் என்ன செய்தியள் எண்டு எனக்குத் தெரியாது. சிலநேரம் ஒரு கதை அல்லது ஒரு கவிதை எழுதியிருப்பியள். மிஞ்சி மிஞ்சிப் போனால்

www.tamilarangam.net

ஒரு கூட்டம் வச்சிருப்பியள். உங்களுக்குத் தான் நேரம் போறது தெரியாதே. கள்ளுக்குடிக்கிறவங்கதான் சில விசயங்கள கதைக்கலாமெண்டு அடிபட்டுக் கொண்டும், விமரிசனங்களுக்கெல்லாம் எப்பிடி சாட்டையடி போடலாம் எண்டு பக்கங்கள கிழிச்செறிஞ்சு கொண்டும், உங்கட கண்ண நீங்களே தோண்டி எடுத்திட்டு அதுக்குப் பிறகும் நவீனமா பாக்கலாம் எண்டு நம்பிக் கொண்டும் இன்னும் இன்னும்... ஒண்டு சொல்லுறன் கேளுங்கோ.

ஒவ்வொருத்தரும் உங்கட உங்கட வீடுகளில ஒவ்வொரு மெழுகுவர்த்தி கொழுத்தி வையுங்கோ (Rudies Reste Rampe எண்டு ஒரு கட இருக்கு. அங்க பெரிய அழகானதுகள் நல்ல மலிவில வேண்டலாம். இது ஜேர்மனியில இருக்கிற ஆக்களுக்கு மட்டும்தான். ஒவ்வொரு நாடுகளிலையும் உப்பிடி வேற பேரில இருக்கும்) மெழுகுவர்த்தி இந்த வின்ரர் நேரத்தில romantic ஆக இருக்கும். அதுக்குப் பிறகு அது கொஞ்சம் கொஞ்சமா உருகிறத பார்த்து ரசியுங்கோ. ஏலாட்டி அழுங்கோ. இது முதலக்கண்ணீர் இல்லையெண்டு விவாதிக்கலாம். எழுதலாம். கடைசியா மெழுகுவர்த்தி செத்துப் போச்சுது எண்டு கண்ணீர் அஞ்சலி அடிச்சு வெளியிடுங்கோ சிறப்பா இருக்கும்.

புது உலகம் எமை நோக்கி

# வல்லை வெளி தாண்டி

-சந்திரா இரவீந்திரன்-

*லண்டன்*

**வல்லை வெளி தாண்டி**

காற்று வெளியூடாய், கணவருடன் மோட்டார் சைக்கிளில் 'டபிள்' போவது எவ்வளவு சுகமான அனுபவம்? திருமண மான புதிதில், தொல்லைகள் ஏதுமற்ற சுதந்திர நினைவுகளோடு சோடியாய் சுற்றித்திரியும் சுகம் எத்தனை இனிமை யானது?.

அக் காற்றுவெளி வல்லை வெளியாய் இருக்க வேண்டும். அந்தநேரம் வானில் 'ஹெலி'களே இல்லாத, மழையும் தூறாத, கோடைகாலத்து மாலை நேரமாய் இருக்கவேண்டும். வீசிவரும்

www.tamilarangam.net

காற்று, காதோடு கதை சொன்னவாறே கூந்தலையும் சேலையையும் வருடித் தவிக்க வைக்க வேண்டும். சின்ன புள்ளினங்கள் மேலும் கீழுமாய் சிறகடித்துப் பறக்க வேண்டும். எல்லையற்ற வானில் ஏகாந்தமாய் வெண் முகில்கள் அலைந்து திரிய வேண்டும். வல்லைவெளிப் பிள்ளையாரை நெஞ்சுருக வணங்கி, விடைபெற வசதி அமைய வேண்டும!

அப்படியொரு அழகான வேளையில் தான் நாம் வல்லை வெளி தாண்டிப் போய்க் கொண்டிருந்தோம். மோட்டார் சைக்கிளின் இயந்திர ஓசை, காற்று வெளிக்கப்பாலுள்ள பனங் கூடலுக்குள் புகுந்து மோதிவிட்டு வருமோசை, எங்கோ தொலைவில் கேட்பதாய் எம்மை வியக்க வைக்கும்!

தொண்டமானாற்றின் திசை காட்டும் காற்றாடி தூரத்தில் நின்றவாறே சுற்றிச் சுழன்று சமிக்ஞை செய்யும். பாலத்தைத் தாண்டி, ஓரமாய் நிற்கும் முட்புதர்களிடை சின்ன சின்னக் குருவிகள் ஓடித்திரியும், பூவரசங் கிளைகளில் ஏராளம் அணில்கள் குறுக்கும் மறுக்குமாய் தாவித் திரியும்!

வல்லை வெளி தாண்டி வரும், வடமராட்சி முடக்கில், பிலாக்கொட்டைக் குருவிகள் நீர்க் குளத்தைச் சுற்றி நின்று, வாலைப் பிளந்து பிளந்து கத்தும்.

தூரத்தில் பனங் கூடலின் சலசலப்பு, எம்மருகே வந்து வந்து போகும். குடிமனைகள் தொடங்க, புகையிலைத் தோட்டங்களும் முந்திரிகைக் காடுகளும் விசுக் விசுக்கென்று கடந்து போகும்.

துன்னாலைச் சந்தியில் பச்சை ஹெல்மெட்கள் தெரிகிறபோது தான் நான் எப்பவும் நிஜத்திற்கு வருவேன். மோட்டார் சைக்கிளின் வேகம் குறையும். கால்கள் என்னை மீறி நடுக்கமெடுக்கும். தொண்டை வற்றிப்போகும். ‘செக்கப்’ என்ற பெயரில், சிங்களத்தில் தேவையற்ற பேச்சு வாங்கி, கணவர் கசக்கிப் பிழியப்படும் வேதனையில் கடவுளை மன்றாடி, அடையாள அட்டைகள் உருட்டியுருட்டிப் பரிசீலிக்கப்பட, வதைநேரம் மிகநீளமாய் வாட்டியெடுக்க, முடிவில் பயணம் தொடரும்.

இருவரும் ஒருவர்க்கொருவர் கதை பரிமாற முடியாமல் நாக்குளறும். முதுகு கூசும். கரவெட்டி கடந்து நெல்லியடிச் சந்தியில் மீளவும் இறங்கி, சிங்களக் கண்களால் துளைத் தெடுக்கப்பட்ட பின் மீண்டும் ஏற, புகையிலைக் கன்றுகள் கதை பேசியவாறே எம்மோடு சேர்ந்து நகரும்.

மாலுசந்தியில் இடிந்துபோன கட்டிடங்களெல்லாம் மனதைத் தொடாமல் மறைந்து போக, நினைவுகள் ஊர் மண்ணைத் தொட்டு நிற்கும்.

புலோலியை வேகமாய்க் கடந்து ஓராங்கட்டைச் சந்தியில் நிதானமாக வேகம் குறைந்து, தம்பசெட்டிப் பக்கமாய் திரும்பும்போது தான் ஒரு இயல்பான மூச்சு மீளும். புன்னகை அரும்பும். நமக்குள் பேச்சு எழும், புதிதாய் முகங்கள் மலரும். பிள்ளையார் கோவில் சந்தியில் திரும்பும் போதே அரசிலைகள் ஆரவாரத்துடன் வீதிக்கு வரவேற்கும்.

வீட்டு வாசலில் என் தங்கை ஓடிவந்து நிற்பாள். அவளுக்கு மூச்சிரைக்கும்!

www.tamilarangam.net

மோட்டார் சைக்கிளின் ஓசை, மூச்சு வேகத்தினிடை அவளின் முகம் மலரச் சிரிக்க வைக்கும்.
ஆரத்தழுவும் பார்வையில் நான் அப்படியே துவண்டு போய் விடுவேன். அவளுக்குக் கண்கள் கலங்கும்.
அப்படித் தான் நின்றாள். முகம் மலர, கண்கள் கலங்க, புன்னகைத்து நின்றாள்.

“வாங்கோக்கா... வாங்கோ...” என்று உள்ளே இழுத்துக் கொண்டு போனாள். கையைப் பற்றிய பிடியில் அன்பும் உரிமையும் கவ்வும். வட்ட நிலவென அவள் நெற்றியில் கிடக்கும் குங்குமம். அவளின் கணவர் எங்கே என்று கேட்கத் தூண்டும்.
“அவர் வேலையால வர அஞ்சரை மணியாகும். அதுவரைக்கும் உங்களை போகவிடக் கூடாது எண்டு சொல்லிப் போட்டுத்தான் போனவர்...”

சின்ன விறாந்தைக்கு என்னை இழுத்துக் கொண்டு போய், ஒரு கதிரையில் இருத்திவிட்டாள். என் கால்களிற்கருகாக அவளிருந்தாள். பேச்சு வாக்கிலெல்லாம் என் புதுச்சேலையிலும் ஆசையாக அவள் கண்கள் மொய்த்து மீளும்.
“அக்கா, நீங்கள் அத்தான் வாங்கித் தந்த சேலையில நல்ல வடிவாயிருக்கிறீங்களே...” என்கிற போது அரும்பும் அழகான புன்னகையினுள்ளே இலேசான ஏக்கமும் தொக்கி நிற்கும்.

உதடுகளை வளைத்து நெளித்து வண்ணக் கதை கதையாய்ச் சொன்னாள். முற்றத்து வேப்பங்காற்று முகத்தில் வந்தறைந்தது. முன் முடியை அலைக்கழிக்க கைகளால் ஒதுக்கியொதுக்கி நிறையவே கதை சொன்னாள். ஆறு மாதங்களிற்கு முன், ஆசைத்தம்பி வந்து, தன் கையால் ரசித்துச் சாப்பிட்டுப் போன கதை சொன்னாள். போர்க்களத்தில் பொறுப்பான பதவியில் நிற்கும் பரத் இன் கெட்டித்தனங்களை யெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து சொன்னாள். தம்பி பரத் இன் உடுப்புகளை தான் கழுவிக் கொடுத்ததை பெரிய பாக்கியமாய் பெருமையுடன் சொன்னாள்.
“பரத்தை நாங்கள் பார்க்க முடியாதா?” நான் அவளைத் தான் கேட்டேன்.

“அவன் அடுத்த மாவட்டத்திற்கு அலுவலாகப் போய் ஆறு மாசமாச்சு, வர நாளாகுமெண்டு அரசியல் கூட்டம் நடத்துகிற அம்பி தான் சொன்னான்.
அதுக்கப்புறம் Base க்கும் போனனான்... அங்கேயும் அதைத்தான் பாபு மாஸ்ரர் சொன்னார்.

---

புது உலகம் எமை நோக்கி

---

**அந்தநேரம் வானில்**
**‘ஹெலி’களே இல்லாத,**
**மழையும் தூறாத,**
**கோடைகாலத்து மாலை**
**நேரமாய் இருக்கவேண்டும்.**
**சின்ன புள்ளினங்கள் மேலும்**
**கீழுமாய் சிறகடித்துப் பறக்க**
**வேண்டும். எல்லையற்ற**
**வானில் ஏகாந்தமாய் வெண்**
**முகில்கள் அலைந்து திரிய**
**வேண்டும்**
**.....**

www.tamilarangam.net

பின்னால் அரவம் கேட்க, பட்டென்று கதையை வெட்டி அப்பாவியாய்ச் சிரித்தாள். “அத்தான் நல்லாய் கொழுத்திட்டார்” என்றவாறே எழுந்தாள்.
“கட்டின புதிசில் உங்கட மனுசனும் இப்படித்தான் கொழுத்தவராம். ஆறுமாசம் கழிய அடையாளம் தெரியாமல் அரைவாசியாய்ப் போனாராம். உங்கட அப்பாதான் இந்த இரகசியம் சொன்னவர்...”
அவர் சொல்லியவாறு கதிரையில் அமர்ந்தார்.

சட்டென்று சிரிக்கத் தொடங்கியவள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டேயிருந்தாள். எட்டு வருடங்களுக்கு முன் என்னையும் பார்க்காமல், காதல் கொண்டு செய்த கல்யாணமும், அந்தப் புதுமண நாட்களும், அவள் மனதினுள் நாட்டியமாடத் தொடங்கிவிட்டது போலும்! அப்படித்தான் நான் நினைத்தேன். எனக்கும் சிரிப்பு வந்தது. இந்திரகுமார் இளைஞனாக இருந்தபோது ஒரு பாட்டுக் கசெற்றைக் கொடுத்து இவளை கேட்கச் சொல்லியிருக்கிறார். அவ்வளவு தான். அவளுக்குப் பித்துப் பிடித்து, காதல் நோயில் அஷ்டாங்கமாய் விழுந்து விட்டாள். தூக்கி நிறுத்த எவராலும் முடியவில்லை. அம்மாவின் அடி, குத்து நுள்ளு... எல்லாம் அவளுக்கு அமுதாய் இருந்திருக்க வேண்டும். மஞ்சள் கயிற்றில் மூன்று முடிச்சுப் போட்டுத்தான் மனைவியாக்குவேன் என்று சூளுரைத்து, ஊருக்குள் மகா புரட்சிக் கணவனாய் அவர் பெயர் எடுத்து விட்டார். ஆனால் ஒரு குழந்தைக்கு அவர் அப்பாவாகிற அதிர்ஷ்டம் இன்னும் இல்லையே என்ற சோகம், இவளின் கண்களிற்குள் தான் எப்பவும் தெரியும்!.

“பரத் ஐக் கண்டால் பவானிக்கு பத்தும் பறந்துவிடும்” என்று இந்திரகுமார் அவளை அடிக்கடி கேலி செய்வார்.

“அவன் எனக்குத் தம்பியில்லை, பிள்ளையெல்லோ? நான் கைமுறிஞ்சு கிடக்கேக்க... எனக்குக் குளிக்க வார்த்த பிள்ளை, கால் கடுக்க நடக்கேக்க சைக்கிளிலை வைத்துச் சுமந்து திரிஞ்ச பிள்ளை. கஞ்சி வடிக்க வழியில்லாமல் கஷ்டப்பட்ட நேரத்திலையும் கடுதாசிகள் அடுக்கிக் குடுத்து என்ரை கைநிறைச்ச பிள்ளை, எல்லாரும் என்னை விட்டிட்டுப் போக அவன்தானே வந்து அப்பப்போ என்னை எட்டிப் பார்த்திட்டுப் போனான்...”
அவள் சொல்லிக் கொண்டே போவாள். அந்த நேரம் கண்ணீர் பொங்கிப் பெருகும், ஆனால் அவள் கண்களுக்குள் சோகமிருக்காது. பெருமைதான் பெரிதாய் பிரவகிக்கும்.

நாங்கள் கை கால் முகம் கழுவி விட்டுச் சாப்பிடக் குந்தினோம். சடைத்து நின்ற பிச்சிப் பூ மரத்தில் அண்டங்காக்கா ஒன்று வந்து குந்திக் கொண்டது. அலறிய அலறல் பவானிக்குள் ஏதோ பரபரப்பை ஏற்படுத்துவதாய், அவளின் வளைந்து நெளியும் புருவங்கள் எனக்கு உணர்த்தியது!
வளவிற்குள் நின்ற, நல்ல கழிப்பிடிப்பான முருங்கைக் காயில் பிரட்டல் கறியும், சண்டிலையில் ஒரு சுண்டலும், நெய் ஊற்றிய பருப்பும், சுட்டக்கத்தரிக்காய் சம்பலும்,

www.tamilarangam.net

கருவாட்டுப் பொரியலும், சொல்லி வைத்தெடுத்த சட்டித் தயிரும் போட்டுச் சுடச் சுடக் குத்தரிசிச் சோறும் பரிமாறினாள்.
"அத்தான்... இந்த முருங்கைக்காய் எங்கையும் கிடையாது. பிறகு நினைச்சு நினைச்சு ஏங்காமல் நல்லாய்ச் சாப்பிடுங்கோ" என்று அள்ளியள்ளிப் போட்டாள்.
"தெரியும். ஆடு அதிலைதானே கட்டிவிட்டிருக்கிறீங்கள் . நல்லாய்த்தான் இருக்கும்"

அவளை முந்திக் கொண்டு எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. தயிர்ச்சோறு தொண்டைக்குள் திசைமாறி, புரைக்கேறி அடித்தது! ஓடிவந்து உச்சியில் தட்டினாள். தண்ணீரை நீட்டினாள்.

சாப்பிட்டு முடிந்தபின், கைகளைக் கழுவிவிட்டு முற்றத்து மல்லிகைப் பந்தலின் கீழிருந்த வாங்கில் அமர்ந்து கொண்டோம். அவள் அடுப்படியுள் ஏதோ அடுக்கிக் கொண்டே குரல் கொடுத்தாள்.
"வெத்திலையைப் போட்டுடாதேங்கோ, பப்பாப்பழம் வெட்டிக்கொண்டு வாறன்"
இவர் மேலே அண்ணார்ந்து, கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கும் மல்லிகைப் பூக்களை ரசித்துக் கொண்டிருந்தார். நான் பிச்சி மரத்தருகே பிஞ்சு பிடித்திருந்த நெல்லி மரத்தைக் கண்களால் துளாவிக் கொண்டிருந்தேன். நாக்கில் எச்சில் ஊறியது. ஐந்தாறு நாட்களாய் இந்தப் புளிக்காயெல்லாம் பார்க்க ஆசையாகத் தான் இருக்குது!

வாசலில் ஏதோ அரவம்! எட்டிப் பார்த்தேன். மின்னலடித்தது போல் அவன் முகம்! அ...அது அவனா..? சட்டென்று எல்லாவற்றையும் உதறிவிட்டு எழுந்து ஓடினேன். தலைவாசற் படியை அண்டினாற்போல் வீதிக்கரையில் அவன்!

"பரத்..! டேய்! பரத்"
பரவசத்தால் என் கால்கள் நடுங்கின. அருகில் சென்று அவன் கைகளைப் பற்றினேன்.
"எப்பிடி இருக்கிறாயடா...?
அவன் பதில் சொல்லாமல் புன்னகைத்து நின்றான். கண்கள் சின்னக் குழந்தையெனப் பெரிதாய்ச் சிரித்தன. நான் அவனை கட்டிப் பிடித்து முத்தமிட முனைந்தேன். அவன் முகம் உயரமாய் இருந்தது.

"கிட்டன் உங்களை ஓராங்கட்டையடியிலை கண்டவனாம், அதுதான் போற வழியிலை பார்த்திட்டுப் போகவெண்டு ஓடி வந்தன்"



**ஒரு விநாடியில் அவன் வந்து, சிறு கனவாய்ச் சிரித்துப் போனது... எனக்கும் மின்னலடித்த அதிர்ச்சி தான் என்று அவர்களுக்கு விளங்கப்படுத்தவே முடியவில்லை. பேசட்டும், நன்றாக என்னைப் பேசட்டும் என்று பேசாமலே இருந்தேன். பேசாமலிருந்து அவனுடன் பேசியதை நினைக்கப் பேரின்பமாய் இருந்தது.**

www.tamilarangam.net

கறுப்பு சேர்ட்டும் கறுப்பு ரவுசரும் அணிந்திருந்தான். இடுப்பில் தடித்த ஹோல்சர்பட்டி, ஒற்றைக் கையில் ஒரு புதிய ரகத் துப்பாக்கி! கண்களில் தெரிந்த களைப்பை, போர்த்தன மிடுக்கும் புன்னகையும் கலக்கி வைத்திருந்தது கம்பீரம்!

"ம்.. அத்தான் எங்கே? சின்னக்கா குசினிக்குள்ளை யாக்கும்?" அவன் உள்ளே எட்டிப் பார்த்தவாறே சிரித்தான். கன்னத்தில் இப்பவும் அதே குழிகள், அரும்பு மீசையோடு அழகாயிருந்தான்.
எப்பிடி இருக்கிறீங்களக்கா? மீண்டும் கேட்டான்.
அவனின் குழந்தைச் சிரிப்பு பசுமையாய் என்னுள் பதிந்து போனது!

சின்னப் பையனை இடுப்பில் தூக்கி இருத்திக் கொண்டு பிச்சி மரத்தைச் சுற்றி சுற்றி ஓடி விளையாடினதும், ஆழக் கிணற்றில் தொங்கித் தொங்கி துலா இழுத்து நீர் கோலிக் குளிக்க வார்த்து விட்டதும், அம்மா குழைத்துத் தரும் சோற்றை பாட்டுப் பாடி ஆசையாய் ஊட்டிவிட்டதுவும்... இனிய கனவுகள்போல் வந்து போயின.

"அம்மாவைப் பார்க்க வேணுமெண்டு ஆசையாருக்கு, ஆனால் யாழ்ப்பாணப் பக்கம் போறதுக்கு எனக்கிப்ப சந்தர்ப்பமேயில்லை. அம்மாவைக் கேட்டதாய் சொல்லுங்கோ"
அவனின் கண்களுக்குள் ஒரு குழந்தையின் ஏக்கம் குறுநகையோடு கலந்து நின்றது.
"உள்ளை வா... முதல்ல, ஒரு பிடி சாப்பிட்டுப் போட்டு நிறையக் கதைக்கலாம். வா பரத்... வாவன்"
நான் அவனின் கைகளைப் பற்றிய பிடியை தளர்த்தாமல் இழுத்தேன். அவன் படியில் ஏறுவதற்கு காலை வைத்துவிட்டு, ஒருகணம் வீதியைத் திரும்பிப் பார்த்தான்.

சந்தியிலிருந்து இரு இளைஞர்கள் இவனை நோக்கிக் கையசைத்தவாறே ஓடிவந்து கொண்டிருந்தார்கள்.
"பொக்குனி... என்னடா?"
இவன் புருவத்தை உயர்த்தி மெதுவாகக் கேட்டான். அவர்களின் சேர்ட் வியர்வையில் ஒட்டியிருந்தது. மூச்சிரைக்க வந்து நின்றார்கள்.
"பரத், நாங்கள் உடன் இடத்தை மாத்தோணும்"என்றவாறே ஏதோ மெதுவாய்ச் சொன்னார்கள். பரத் உடனே பரபரப்பானான்!
"அக்கா, நாங்கள் போட்டு வாறம். சின்னக்காட்டையும் சொல்லுங்கோ. நாலைஞ்சு கிழமைக்கு நான் இந்தப் பக்கம் வரமாட்டன் எண்டு."

அவன் கைகளை விடுவித்துக் கொண்டு மெதுவாய்ச் சிரித்தான். அப்பவும் கன்னங்களில் குழி விழுந்தன. கனிவான பார்வையினால் மட்டும் ஒரு தடவை என்னைக் கொஞ்சிவிட்டு, நெஞ்சிற்குள் நிறைந்தவாறே அழகாக மறைந்து விட்டான்.
பவானி மூசி மூசி அழுதாள். மூக்குத் துடைத்தாள்.
"என்னையேன் ஒரு சொல்லும் கூப்பிடேல்லை. பரத் என்னைப் பார்க்காமல் போயிருக்க மாட்டானே! எனக்கென்ன கேடுகாலம் வந்திச்சு...? என்று நீண்ட நேரமாய் பொருமிப்

www.tamilarangam.net

பொருமிக் கண்ணீர் சிந்திக் கொண்டேயிருந்தாள்.
அவர் எதுவுமே கதைக்க முடியாத ஒரு வகை வேதனையில் மௌனித்துப் போயிருந்தார்!
ஒரு விநாடியில் அவன் வந்து, சிறு கனவாய்ச் சிரித்துப் போனது... எனக்கும் மின்னலடித்த அதிர்ச்சி தான் என்று அவர்களுக்கு விளங்கப்படுத்தவே முடியவில்லை. பேசட்டும், நன்றாக என்னைப் பேசட்டும் என்று பேசாமலே இருந்தேன். பேசாமலிருந்து அவனுடன் பேசியதை நினைக்கப் பேரின்பமாய் இருந்தது.

பவானி வெட்டித் தந்த பப்பாப் பழம் இனிமையானதா என்பதை நான் கவனிக்க வில்லை. பரத்தின் நினைவுகள் அதைவிட இனிமையாய் இருந்தன. அஞ்சரை மணிக்கு இந்திரகுமார் வந்து விட்டார். ஆனால் அப்பவும் பவானி தன் அழுகையை முற்றாக முடித்துக் கொள்ளவில்லை.
'பரத்தைக் காணாத பவானியோட... இனி என் பாடு திண்டாட்டம் தான்''
இந்திரகுமார் கிணற்றடியில் நின்றவாறே கதைத்துக் கதைத்து குளித்துக் கொண்டிருந்தார். குரல் மட்டும் கேட்டது. சோப் வாசனையும் சேர்ந்து வந்தது.
இரவு எங்களைத் தங்கிப் போகும்படி இரந்து கேட்டார்.
“ஏகப்பட்ட வீட்டு வேலைகளிருக்கு. இனி என்ரை பயண அடுக்குகளும் பார்க்க வேணும். வாசுகி வரவேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிண்டதிலை தான் எல்லாத்தையும் போட்டது போட்டபடி விட்டிட்டு வெளிக்கிட்டனாங்கள். குறை நினைச்சிடாதேங்கோ.”
என் கணவர் 'வெளிக்கிடுவோமா' என்ற ஜாடையில் என்னைப் பார்த்து கண் அசைத்தார்.
நாங்கள் புறப்படலாமென முடிவான போதே, பவானி அழுகையை மறந்து, எம்மோடு கோபிக்கத் தொடங்கி விட்டாள்.
“எல்லாரும் என்னை இங்கை தனியாய் விட்டுட்டு அங்கங்கு போயிடுங்கோ...''
ஏதேதோ முணுமுணுத்தவாறே இடித்து வறுத்த அரிசிமாவையும் வடகப் பொதி யையும் சேர்த்துக் கட்டிக் கொண்டு போய் மோட்டார் சைக்கிள் பையினுள் வைத்தாள்.
நான் மேசையில் எடுத்து வைத்த ஆனை வாழைப்பழச் சீப்புகளையும், தோடம் பழங்களையும், அம்மா கட்டித் தந்த பொரிவிளாங்காய்ப் பொதியையும் காட்டி “அழுதழுது அதுகளை அழுக விடாமல் சாப்பிடுங்கோ'' என்றேன்.
பவானி கவலையினூடு இலேசாகச் சிரித்தாள். இவர் பொக்கற்றினுள்ளிருந்த

---

**புது உலகம் எமை நோக்கி**

---

*வாசகர் குறிப்பு*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய துபாய்க் கைக்கடிகாரத்தை எடுத்து இந்திரகுமாரிடம் கொடுத்தார். மகிழ்ச்சியில் பூரித்துப்போன இந்திரகுமாரின் முகம், நாம் மோட்டார் சைக்கிளில் ஏறும்வரை மாறாமலே இருந்தது.
பவானிக்கு மீண்டும் கண்களிற்குள் நீர் முட்டி மின்னியது.
இ...இதென்ன எ..எனக்குமா...?
இரு துளிகள் பொட்டென்று என் சேலையில் விழுந்தன.
'அவர் பழிக்கப் போகிறார்' நான் அவசரமாக கண்களைத் துடைத்தேன்.

இந்திரகுமாரின் முகமலர்ச்சியெல்லாம் ஓடிஒளிந்து விட்ட பின்னும் ஏனோ சிரித்துக் கொண்டு நின்றார்.
மோட்டார் சைக்கிள் புறப்பட்டது!
பவானி கையசைத்துக் கொண்டு வாசலிலேயே நின்றிருந்தாள். தூரத்திலும் அவள் கண்கள் மின்னிக் கொண்டிருப்பதாய் தெரிந்தன.!

மாலை வெயிற்சாரல் தேகம் முழுவதும் விழுந்து குழைந்தது!
நான் நன்றாக அவரோடு ஒட்டிக் கொண்டிருந்தேன்.
மோட்டார் சைக்கிளின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க ஊர், மனைகள் யாவும் கண்ணசைப்பினுள் கடந்து போயின!
வல்லைவெளிக் காற்று மெல்ல வரும் ஓசை எல்லையைத் தாண்டிக் கேட்கத் தொடங்கியது.

## எய்தவர் யார்?

ஜனட் மிக ஒய்யாரமாக அமர்ந்திருந்து கண்ணாடியில் தன் அழகை ரசித்தபடி சிவப்பு லிப்ஸ்டிக்கை தன் உதடுகளுக்குப் பூசிக் கொண்டிருந்தாள். அவளின் செய்கை அவளின் காதலன் பீட்டருக்கு எரிச்சலைத் தந்தது. கொஞ்சக் காலமாக அவள் அளவுக்கு மீறி தன்னை அலங்கரிப்பதாகப் பட்டது.

இவன் தன்னைப் பார்க்கிறான் என்பதை அவள் கடைக்கண்ணால் கண்படி, தன் வேலையைத் தொடர்ந்தாள். அவளுக்கு வயது இருபது. பதினெட்டு வயசிலேயே ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். இருந்தாலும் பதினெட்டு வயசில் அவள் இருந்த கவர்ச்சியை விட இப்போது பார்த்தவர்கள் வாயூறும்படி எடுப்பாக இருக்கிறாள்.

'பக்கத்து ரோட்டில் உள்ள பட்டேல் கடையில் ஏன் அடிக்கடி ஜனட் காணப்படுகிறாள்?' பீட்டரின் நண்பன் டாரன் என்பவன் சுவிங்கத்தைச் சப்பியபடி பீட்டரைக் கேட்டான் ஒருநாள்.

www.tamilarangam.net

பீட்டருக்குத் தெரியாத ரகசியமில்லை. பீட்டரில் உயிரையே வைத்திருந்தவள் இப்போது அவனை ஏனோதானோ என்று நடத்துகிறாள். பட்டேல் கடையில் உள்ள முதலாளிகளில் ஒருத்தன் வாட்டசாட்டமானவன்.

வாடிக்கைக்காரர்களோடு சுமுகமாகப் பழகும் சாட்டில் வாயூறக் கதைப்பான். ''எப்படி உனது சுகம் டார்லிங்'' என்று இளித்தபடி எல்லாப் பெண்களையும் கேட்பான். பீட்டர் ஒருநாள் ஜனட்டுடன் பட்டேல் கடைக்குப் போனபோது, கடைக்காரன் ஜனட்டை 'டார்லிங்' என்று சொன்னது கோபத்தை உண்டாக்கியது.

''ஏய் பாக்கி! கடைக்கு வர்ற பெண்க ளெல்லாம் உனக்கு டார்லிங்கா'' பீட்டர் பொருமினான்.
''ஐயாம் சொறி சேர். அந்த மேடத்தின் பெயர் தெரியாது'' கடைக்காரன் குத்தலாகச் சொன்னான்.
"இந்தக் கோபக்காரனின் வார்த்தையைச் சட்டை செய்யாதே'' ஜனட் ஓய்யாரமாகக் கடைக்காரனிடம் பீட்டரைப் பற்றிச் சொன்னாள்.

பீட்டருக்கு இன்னும் ஆத்திரம் வந்தது. அவனுக்கு இருபத்திரண்டு வயது. உழைப்பில்லை. சோசியல் செக்கியூரிட்டிக் காசில் ஜனட் சிகரெட் பிடித்தும், லிப்ஸ்டிக் போட்டும் உல்லாசம் காண்பாள்.

காசு பற்றி சண்டை வந்தால் ''உதவாத உன்னிடம் என்னத்தைக் கண்டேன். ஒரு பிள்ளை மட்டும் தந்தாய். ஒரு பெண்ணுக்கு எந்த முட்டாளும் பிள்ளை தரலாம். ஆனால் உருப்படியான தகப்பனாக இருக்கக் கொஞ்சம் அறிவு தேவை. அறிவைப் பாவித்து வாழும், உழைக்கும் வாழ்க்கை தேவை''. ஜனட் பிரசங்கம் செய்யத் தொடங்கி விடுவாள்

**புது உலகம் எமை நோக்கி**

# எய்தவர் யார்?

**- ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்-**

*லண்டன்*

பீட்டர் அவள் செய்யும் அலங்காரத்தைப் பார்க்கச் சகிக்காமல் ரோட்டில் இறங்கி னான். அவன் இருப்பது எட்டாம் மாடி பிளாட். லிப்டுக்குக் காத்திராமல் இறங்கி நடந்தான். எப்படி ரோட்டில் ஏறினோம் என்ற யோசனையின்றி கோபத்துடன் நடந்தான்.

* * *

டொக்டர் கதிர்காமரின் மனைவிக்கு கொஞ்சநாளாக தன் கணவனில் சரியான கோபம். 'உழைக்கத் தெரியாத மனிதன்' என்று கண்ட பாட்டுக்கு பேசுகிறாள்.

www.tamilarangam.net

டொக்டர் கதிர்காமர் ஒரு ஜெனரல் பிரக்டிஷனர் (GP) . காலை எட்டு மணியிலிருந்து பின்னேரம் ஆறுமணி வரை எத்தனையோ விதமான நோயாளிகளைப் பார்த்து, மருந்தெழுதிக் கொடுத்து, அவர்களின் இருதயத் துடிப்பை அளவிட்டு, வயிற்றுப் பிரச்சினைகளை ஆராய்ந்து, இருமலுக்குக் காரணம் தேடி, வலிக்கு ஊசிபோட்டு, அரசாங்கம் கேட்கும் றிப்போர்ட்ஸ் எல்லாம் எழுதி முடித்து வீட்டுக்கு வந்தால் அவர் மனைவி ராதிகா ஏதோ ஒன்றில் அவரில் பிழைபிடிப்பாள்.

அவரைப் போல எத்தனையோ டொக்டர்கள் 'லோக்கம்' செய்து (ஏஜென்சி டொக்டர்) எத்தனையோ ஆயிரம் உழைக்கிறார்களாம். அவள் மைத்துனர் அப்படி உழைத்து மெட்ராசில் இரண்டு பிளாட் வாங்கிப் போட்டிருக்கிறாராம். தங்கச்சி கணவர் லண்டனில் 3 வது வீட்டை வாங்கப் போகிறாராம். திருமதி கதிர்காமர் பட்டியல் போடுவார்.

டொக்டர் கதிர்காமருக்கு அப்படி எல்லாம் ஓடி உழைத்துக் கஷ்டப்பட உடம்பு சரியில்லை. மிகவும் கஸ்டப்பட்டு டொக்டராக வந்தவர்.

யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்த தகப்பனின் மகன். ரியூசனுக்குப் போகமுதல் தகப்பனுக்கு தோட்டத்துக்குத் தண்ணீரிறைக்க உதவி செய்ததை நினைத்தால் இன்னும் கண்ணீர் வருகிறது. அவருக்கு இரண்டு குழந்தைகள். பதினாலு வயதும் பன்னிரண்டு வயதும். அழகான இளம் பெண்கள். பரத நாட்டியம் பழகுகிறார்கள். வீணை பழகுகிறார்கள். லண்டனில் மத்தியதரக் குடும்பம் செய்யப்பண்ணும் எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

"இந்தப் பெண்களுக்கு அரங்கேற்றம் செய்ய பதினைந்து, இருபது ஆயிரம் பவுண்ஸ் வரப்போகுது" திருமதி கதிர்காமர் ஏதோ இவருக்கு தெரியாததைச் சொல்வதுபோல் பெருமூச்சு விடுவாள்.

அவளின் தொணதொணப்புத் தாங்காமல் தனக்குள்ள ஓய்வுநாட்களில் 'லோக்கம்' செய்ய முடிவு செய்தார். 'எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே' என்று பாடவேண்டும் போல் வந்தது. தனது இரண்டு பெண்களையும் சரஸ்வதி லட்சுமியாகக் காண்கிறார் அவர். அவர்களின் எதிர்காலம் பயங்கரமாகத் தெரிகிறது. அவர்களின் அரங்கேற்றம் அவர்களின் சொந்தக்காரர்களின் அரங்கேற்ற த்தை விடத் திறமையாக நடக்கவேண்டும் என்று திருமதி கதிர்காமர் கட்டளை போட்டு விட்டார்.

அவரின் இளம் வயதில் தெல்லிப்பளையை அண்டிய கிராமத்தில் வளர்ந்தபோது பரத நாட்டிய அரங்கேற்றமெல்லாம் ஏதோ பணக்கார விடயமாகத் தெரியும். கலைக்கும் காசுக்கும் எத்தனை தொடர்பு என்பது லண்டனுக்கு வந்ததும்தான் விசுவருபமாகத் தெரிந்தது. கலையின் தெய்வீகத் தன்மை காசின் காலடியில் சதிராடுகிறது. பரதத்தின் முத்திரைகள் பணத்தின் பிரதிபலிப்பாகின்றன. தாளமும் லயமும் லண்டன் வாழ் பணக்கார தமிழர்களுக்குப் பிடித்தபடி ஒலிக்கின்றன.

www.tamilarangam.net

டொக்டர் கதிர்காமர் பெருமூச்சுடன் நடந்தார். பின்னேரம் ஆறுமணியாகப் போகிறது. கடந்த இரண்டு நாட்களாக லோக்கம் செய்து எத்தனையோ நூறு பவுண்ஸ் உழைத்து விட்டார். நாற்பத்தைந்து வயசிலேயே அவருக்கு டையபிற்றிசும் (நீரிழிவு), பிளட் பிரஷரும் வந்து விட்டது. ஊருக்கு உபதேசம் உனக்கல்ல என்பது போல், அந்த டொக்டர் வாழ்க்கையுடன் மாரடிக்கிறார்.

வசந்தகாலம் முடிந்து குளிர் காற்றடிக்கத் தொடங்கி விட்டது. இலையுதிர்ந்து ரோட்டை அலங்காரம் செய்கிறது. மொட்டை மரங்கள் பரிதாபமாகத் தெரிகின்றன.

காரில் ஏறியவர் ஒரு கொஞ்ச நேரம் ஆசுவாசமாகச் சுவாசித்தார். நெஞ்சு கனத்தது. எப்போதோ பயின்ற யோகாசன த்தை ஞாபகப்படுத்தி தனது மூச்சை நிதானப் படுத்தினார். இருந்தாலும் தலை ஏதோ கனப்பது போலவும், நெஞ்சு பாரமாக இருப்பது போலவும் பட்டது.

லண்டனில் வாழும் ஆசிய மக்களுக்கு மிகவும் கூடுதலாக இருதய வருத்தங்கள் வருகின்றன என்று அவருக்குத் தெரியும்.
“எனக்கு நாற்பத்தைந்து வயதுதானே”. அவர் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டார். ஐம்பது வயதுக்கிடையில் அவர் மனைவி கேட்பது போல் மெட்ராசில் ஒரு பிளாட் வாங்கிப் போடவேண்டும். பெண்களின் அரங்கேற்றத்தையும் ஆடம்பரமாகச் செய்ய வேண்டும். அவர் திடசங்கற்பம் செய்தபடி காரை ஓட்டினார்.

* * *

ஜனட்டுக்கு அவள் காதலனின் செய்கை எரிச்சலைத் தந்தது.
'எனக்காக என்ன செய்து விட்டான் பீட்டர்?' தனது பொன்னிறத் தலையை வாரிக் கொண்டு யோசித்தாள்.
அவனிடமுள்ள காதலில் பதினாறு வயசிலேயே அவனுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்து விட்டவள் அவள்.

குழந்தையின் படிப்பில் பெரிய அக்கறை யில்லாமல், ஒன்றிரண்டு தலைமுறை யினராக அரசின் உதவிப் பணத்திலும் அவர்கள் தந்த வீட்டிலும் வாழ்பவர்கள் ஜனட்டின் தாய் தகப்பன். இவள் தன் வழியைப் பார்த்துக் கொண்டு பீட்டருடன் போனது அவர்களுக்கு சந்தோசமே. ஜனட்டின் தமயன் ஒருத்தன் போதை மருந்துக்காளாகி அதனால் இறந்து விட்டான். தங்கை ஒருத்தி கிளப், பார் என்று பதினான்கு வயதிலேயே சுற்றத்

---

புது உலகம் எமை நோக்கி

---

**“உதவாத உன்னிடம் என்னத்தைக் கண்டேன். ஒரு பிள்ளை மட்டும் தந்தாய். ஒரு பெண்ணுக்கு எந்த முட்டாளும் பிள்ளை தரலாம். ஆனால் உருப்படியான தகப்பனாக இருக்கக் கொஞ்சம் அறிவு தேவை. அறிவைப் பாவித்து வாழும், உழைக்கும் வாழ்க்கை தேவை”**

www.tamilarangam.net

தொடங்கிவிட்டாள். ஜனட்டுக்கு மட்டும் ஏதோ குழந்தைகள் என்றால் ஒரே ஆசை. நிறையப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று காதல் போதையில் அலட்டியதை பீட்டர் நம்பி அவளைத் தாயாக்கிவிட்டான்.

அவள் குழந்தையுடன் சிறைப் பறவையாகிவிட்டாள். குழந்தையுடன் வெளியில் சுற்றித் திரியமுடியாத ஆத்திரம் பீட்டரில் திரும்பியது.

அவன் நல்ல சம்பளமான உத்தியோகத்திலிருந்தால் தன் குழந்தையைப் பார்க்க யாரையும் சம்பளம் கொடுத்துக் கேட்கலாம் என்று யோசித்தபோது, ஜனட்டுக்கு தன் வாழ்க்கையில் எரிச்சல் வந்தது.

"இந்த வயதில் எனக்குச் சிறை வாழ்க்கையா"
தாய்மை என்பதை சுமையாய் நினைக்கும் அறியாமையுடன் பெருமூச்சுவிட்டாள். அவளது ஏக்கத்தை தன்னை அழகாக அலங்கரிப்பதிலும், பக்கத்துக் கடைக்கார பட்டேலுடன் கும்மாளம் போடுவதிலும் மறந்தாள்.
பீட்டருக்கோ அவள் அவனைத் தவிர யாருடனும் பேசுவது பிடிக்காது.

பீட்டர் கொஞ்சம் படித்த குடும்பத்திலிருந்து வந்தவன். இளமைத் துடிப்பின் அகோரத்தில் அப்பாவித்தனமாக அப்பாவாகிவிட்டது அவனுக்குத் துயர்தான். ஆனாலும் ஜனட் ஒரு அழகான பெண் என்பதிலும், அவன் மகள் இரண்டு வயது மெலனி ஒரு தங்கச் சிற்பம் போலிருப்பதிலும் அவனுக்குப் பெருமை என்று ஜனட்டுக்குத் தெரியும்.

தனது எட்டாவது மாடியிலிருந்து வெளியுலகத்தைப் பார்த்தாள். தான் தனிமைப் பட்டிருப்பது போலவும் உலகமே தன்னைப் பார்த்து நகைப்பது போலவும் பேதைத் தனமாக யோசித்தபோது... குழந்தையின் அழுகை அவளை உலுக்கியது.

குழந்தை மெலனி தத்தித் தத்தித் தாயிடம் வந்தாள். ஜனட் குழந்தையைத் தூக்கியதும் திடுக்கிட்டுப் போனாள். உடம்பு நெருப்பாய்க் கனத்தது. நேரமோ பின்னேரம் ஏழு மணியாகப் போகிறது. எந்த டொக்டரின் சேர்ஜரியும் அந்தப் பக்கத்தில் திறந்திருக்காது. ஹொஸ்பிட்டலுக்குக் கொண்டுபோய் 'கசுவல்டியில்' மணிக்கணக்காக நிற்க அவளால் முடியாது.

"பீட்டர் எங்கே தொலைந்துவிட்டான்?"
முணுமுணுத்தபடி கடமையாயிருக்கும் டொக்டருக்கு (On Call GP) போன் பண்ணினாள் ஜனட்.

* * *

டாரன் அங்குமிங்கும் பார்த்தபடி பீட்டரின் கையில் அந்தப் போதைப் பொருளை அமர்த்தினான். பீட்டர் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டான்.

www.tamilarangam.net

"உன்னைப் பார்த்தால் உலகத்தைப் பறிகொடுத்தவன் மாதிரி இருக்கிறியே". டாரன் தன் மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டான். அவன் மிகவும் உயர்ந்து வளர்ந்த மொட்டையன். தடிமாடு மாதிரி உவமிக்கலாம்.

பீட்டரின் மென்மையான சுபாவத்திற்கும் டாரனின் முரட்டுச் சுபாவத்திற்கும் எத்தனையோ வித்தியாசம். ஆனாலும் இருவருக்கும் சினேகிதமாக போதைப் பொருட்கள் இருந்தன.
"சொல்கிறேன் என்று கோபிக்காதே..." டாரன் பீட்டரின் கண்களை ஊடுருவிப் பார்த்தபடி சொன்னான்.
"உனது காதலி அந்த டேட்டீ பாக்கியின் கடையில் இளித்தபடி திரிகிறாள்"
டாரன் பியர்க் கானை முடித்துவிட்டுச் சொன்னான். இன்னொரு போதைக் குளிசையை வாயிற் போட்டுக்கொண்டான்.

"ஐ கேற் த பாக்கிஸ்"
பீட்டர் தானும் ஒரு போதைப் பொருளை வாயில் போட்டபடி சொன்னான்.
"ஏன் எங்கள் பெண்கள் இந்த டேட்டி நாய்களுக்குப் பின்னால் போகிறார்கள்"
முட்டாள் டாரன் ஏதோ விரிவுரையாளரிடம் கேட்பதுபோல் பீட்டரைக் கேட்டான்.

பீட்டர் தன் பொன்னிறத் தலையைத் தடவிக் கொண்டான். அவர்கள் இருந்த 'பப்' இல் நிறையப் பேர் தங்களை மறந்து சந்தோசமாகக் குடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் ஒரு அரை நிர்வாண ஆட்டக்காரி அந்த மேடைக்கு வந்து எல்லோரையும் சந்தோசிப்பாள் என்று ஒரு அறிவிப்பாளன் மிகவும் உற்சாகத்துடன் சொன்னான்.

புது உலகம் எமை நோக்கி

**"இளவரசி டயானாவைப் பார்த்தாயா? அவளுக்குப் பிடித்த ஒரு இங்கிலிஸ்காரன் கிடைக்கவில்லையா? போயும் போயும் ஒரு எகிப்தியனையா பார்க்க வேண்டும்?" டாரன் முழங்கினான்.
"அவர்களிடம் காசு இருக்கிறது. அவர்கள் அதை வைத்துக் கொண்டு பெண்களை தங்கள் பக்கம் இழுக்கிறார்கள்"**

அப்போது ஒன்றிரண்டு ஆசிய இளைஞர்கள் அந்த 'பப்' க்குள் வந்தார்கள்.

"இளவரசி டயானாவைப் பார்த்தாயா? அவளுக்குப் பிடித்த ஒரு இங்கிலிஸ்காரன் கிடைக்கவில்லையா? போயும் போயும் ஒரு எகிப்தியனையா பார்க்க வேண்டும்?" டாரன் முழங்கினான்.
"அவர்களிடம் காசு இருக்கிறது. அவர்கள் அதை வைத்துக் கொண்டு பெண்களை தங்கள் பக்கம் இழுக்கிறார்கள்"
"பட்டேல் கடைக்காரன் ஜனட்டைச் சுரண்டுவது போலா?"
டாரன் இன்னொரு தரம் ஒரு போதைப் பொருளை வாயிற் போட்டான்.

www.tamilarangam.net

“எங்கள் நாட்டுக்குக் கூலி வேலைசெய்த நாய்கள் எங்கள் வேலைகளைப் பறித்தார்கள். வீடுகளை எடுத்தார்கள். இப்போது எங்கள் பெண்களுடன் படுக்கிறார்கள்” டாரன் கசப்புடன் சொன்னான்.
பீட்டர் மௌனமாக இருந்தான். டாரன் எப்போதாவது உடல் குனிந்து வேலை செய்வான் என்பதை பீட்டரால் கற்பனை செய்ய முடியாமலிருந்தது. சிறுசிறு கைப்பறிகள் செய்தும், வீடுகளுக்குள் புகுந்து களவாடியும் காசு சேர்த்து தன் போதைப் பழக்கத்தைப் பூர்த்தி செய்பவன் டாரன். அவன் யாருக்கும் தலைகுனிந்து வேலை செய்வானா என்று பீட்டரால் அந்த நிமிடத்தில் யோசிக்க முடியாமலிருந்தது.

வந்திருந்த ஆசிய இளைஞர்கள் மிகவும் எடுப்பாக உடுத்திருந்தார்கள். டாரன் அவர்களை பொறாமையுடன் பார்த்தான்.
“இவர்களுக்கு இப்படியெல்லாம் வாழ எப்படி காசு கிடைக்கிறது”. டாரன் ஆத்திரத் துடன் சத்தம் போட்டான்.
இரவு பகலாகக் கடையில் உழைக்கும் பட்டேல் குடும்பம் பீட்டருக்கு ஞாபகத்தில் வந்தார்கள்.

“நாய்கள்! நாய்கள்! எச்சில் பொறுக்க வந்த நாய்கள்! இப்போ எங்கட கடைகளை வாங்கி, வீடுகளை வாங்கி, எங்கட பெண்களுடனும் படுக்கிறார்கள்” டாரன் திட்டினான்.

பீட்டருக்கு ஜனட்டின் ஞாபகம் வந்தது. கொஞ்ச நாட்களாக இவனைத் தொடவே விடமாட்டாளாம். இவனை அவள் வெறுப்பதற்கு அவளை டார்லிங் என்று கூப்பிடும் பட்டேல் ஒரு காரணமா?

பீட்டர் இன்னொரு பியர்க் கானை முடித்துக் கொண்டான். இன்னொரு போதைக் குளிசையையும் வாயிற் போட்டுக் கொண்டான். மனம் ஆத்திரத்தில் தடுமாறியது.

தூரத்திலிருந்து குடித்துக் கொண்டிருந்த ஆசிய இளைஞர்களிற்கு கோபம் வந்தது.

டாரன் அந்த வட்டாரத்திலுள்ள நாஷனல் Fப்ரண்டுடன் தொடர்புடையவன். அவன் சேர்ந்திருக்கும் கூட்டம் இங்குள்ள கறுப்பர்களை யெல்லாம் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது.
“நல்லது தானே” பீட்டர் கனவில் சொல்வது போல் சொன்னான்.
"என்ன நல்லது? " டாரனின் குரலிலும் தடுமாற்றம்.
"இந்த நாய்களை எல்லாம் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். இவர்களுக்கு எங்கள் வேலை, வீடு, பெண்கள் பின்னர் இந்த நாட்டையும் சொந்தமாக்கிப் போடுவார்கள்.
"அப்படிச் சொல்லு பீட்டர். இவர்கள் ஒவ்வொருத்தரையும் எனது கையால் அடித்து நொருக்கி அவர்களின் தசையைப் பிழிந்து..."
டாரன் சொல்வதைக் கேட்கக் கேட்க பீட்டரின் உதிரம் துடித்தது.

www.tamilarangam.net

ஏதோ 'ஓ லெவலில்' ஒண்றிரண்டு பாடங்கள் பாஸ் பண்ணியவன். இங்கிலிசுக்காரனுக்கு என்ன 'ஓ லெவலும் ஏ லெவலும்?' நிறமும் மொழியும்தானே தகுதியானது. அப்படியிரு ந்தும் அவனுக்கொரு வேலையில்லை.
பீட்டர் ஏதோ வேலையிலிருந்தால், அதோ இருக்கும் ஆசியர்களைப்போல் ஆடம்பர மாய் இருக்கலாமே. ஜனட்டை கூட்டிக் கொண்டு வெளியே போய் சந்தோசமாகத் திரியலாமே!

''பீட்டர் வில்லியம், நான் சொல்வதைக் கேள். எங்கள் அரசாங்கம் உருப்படியில் லாதது. அரசாங்க மந்திரிகளைப் பார். எத்தனை பேர் ஹோமோ செக்சுவல்ஸ், எத்தனை பேர் லெஸ்பியன் என்று தெரி யும். இவர்களுக்கு நாட்டுப் பற்றிருந்திருந் தால் குடும்ப உறவுகளில் அக்கறையிருந் தால் இப்படி வாழ்வார்களா?'' டாரன் தன் மொட்டைத் தலையை தட்டிக் கேட்டான்.

பீட்டர் வில்லியத்திற்குத் தெரிந்த அளவில் டாரனுக்கு அவன் தகப்பன் பெயர் தெரியாது. தாயின் பெயரில்தான் அவனுக்குப் பதிவிருக்கிறது. ஆனாலும் அவன் குடும்ப உறவுகள் பற்றி கொஞ்சம் சூடாகத்தான் சொல்கிறான். தகப்பன் தெரியாமல் பிறந்தவன். குடும்பத் தகுதி பற்றிப் பேசுகிறான்.

''இன்னும் ஐம்பது வருடத்தில் இங்கிலாந்தில் வெள்ளைக்காரனுக்கு இருக்க இடமில்லாமல் போகப்போகுது. இவர்கள் பன்றிக் குட்டிகள் மாதிரி பத்தும் பதினை ந்தும் பெத்துப் போட்டு, அவர்களை வளர்க்க வீடும் காசும் கொடுக்க வேண்டும்'' டாரன் இப்போது அரசாங்கத்தோடு தன்னையும் சேர்த்து 'நாங்கள்' என்று பேசினான். பீட்டர் தன்னைச் சுற்றிப் பார்த்தான். அரை நிர்வாண நடனம் பார்த்து ரசிக்கும் எல்லோரிலும் கோபம் வந்தது.
"எல்லோரும் எங்கள் நாட்டை கறுப்பர் களுக்கு தானம் பண்ணப் போறம்". பீட்டர் முணுமுணுத்தான்.
''நாங்கள் முட்டாள்கள். எங்கள் அரசா ங்கம் முட்டாள்தனமானது''.
டாரன் தள்ளாடியபடி எழுந்தான்.

இருவரும் வெளியே வந்தார்கள். தன் இயலாமையில் கோபம் வந்தது பீட்டரு க்கு. இருபத்திரண்டு வயதில் தன் இனியவளை இழப்பதைவிட யாரையும் அடித்து நொருக்கிவிட்டு சிறைவாசத்தை எடுக்கலாம். அவளில்லாமல் வாழும் தனியான வாழ்க்கையை விட வேறு எந்தவிதமான வாழ்க்கையும் வாழலாம்.

---

புது உலகம் எமை நோக்கி

---

**''இந்த நாய்களை எல்லாம் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். இவர்களுக்கு எங்கள் வேலை, வீடு, பெண்கள் பின்னர் இந்த நாட்டையும் சொந்தமாக்கிப் போடுவார்கள்.**
**''அப்படிச் சொல்லு பீட்டர். இவர்கள் ஒவ்வொருத்தரையும் எனது கையால் அடித்து நொருக்கி அவர்களின் தசையைப் பிழிந்து...''**

www.tamilarangam.net

கடந்த ஐந்து வருடமாக அவர்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் தெரியும். வாழ்க்கை முழுக்க ஒன்றாய் இருந்துவிட்டு முதுமையைப் பகிர்ந்து கொள்ளலாம் என்றெல்லாம் கற்பனை செய்திருந்தான்.
அவன் உள்ளம் கொதித்தது.
அவன் நடை வேகமாகியது. இன்று ஜனட்டிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். ஏன் அந்தப் பட்டேல் கடைக்காரனுடன் தேனொழுக இளிக்கிறாய் என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கேட்க வேண்டும்.

அவன் நடை துரிதமாகியது.

“இவர்களுக்கெல்லாம் நாங்கள் சோணையர்கள் என்ற நினைவு. இவர்கள் நாட்டில் நாங்கள் போய் எவ்வளவு முன்னேற்றம் செய்து கொடுத்தோம். இப்ப அவர்கள் எங்கட நாட்டுக்கு வந்து எல்லாத்தையும் குப்பையாக்கி விட்டார்கள்''.
டாரன் ஒரு ஆசியக் கடையைக் காட்டினான்.
''இவர்களைக் கண்ட இடத்தில் காலால் மிதிக்க வேண்டும்''.
டாரன் தொடர்ந்து உறுமினான்.

டொக்டர் கதிர்காமநாதன் எட்டாவது மாடியிலிருந்து மெலனி வில்லியத்தைப் பார்க்க காரால் இறங்கி வந்தார். தனக்கு முன்னால் நிமிர்ந்து நிற்கும் அந்தப் பிரமாண்டமான கட்டிடத்தைப் பார்த்தார். இந்த இடங்களில் லிப்ட் வேலைசெய்யாவிட்டால் அதோ கெதிதான்.

பார்வைக்குப் பிடிக்காதவர்களைச் சந்திக்க அவர் விரும்பவில்லை. நெஞ்சு இன்னும் கூட கனத்தது. இன்னும் சில நாட்களில் ஒரு ECG (எலக்ரோகார்டியாக்கிராம்) செய்து பார்க்க வேண்டும் என்று யோசித்தபடி நடந்தார்.
அவரது அருமைப் பெண்களுக்கு தகப்பன் சுகமில்லாதவர் என்று தெரிந்தால் மிகவும் துக்கப்படுவார்கள். அதனால் அவரது நீரிழிவு வியாதியைப் பற்றிக்கூட அவரும் அவர் மனைவியும் யாருக்கும் மூச்சுவிடவில்லை.

இந்தக் கண்டறியாத ‘ஏஜென்சி டொக்டரிங்’ கைச் செய்யாமல் ஏதோ உழைக்கிற காசை வைத்து சமாளிக்கப் பழகிக் கொண்டால் போதும்.
அவர் திட்டமாக முடிவு செய்துகொண்டார். எப்படித்தான் அவர் மனைவி தலைகீழாகக் குதித்தாலும், இனி இப்படி இரவு பகல் இல்லாமல் பேயாட்டம் போடக்கூடாது என்று நினைத்துக் கொண்டார்.

நேரம் சரியான இருட்டானதென்றபடியால் அவர் கையிலிருந்த விலாசத்தைக் கவனமாகப் பார்த்தார். அவர் பார்க்கப் போகும் பெண்குழந்தை மெலனிக்கு இரண்டு வயதாம். காய்ச்சல் நூற்றி இரண்டைத் தாண்டிவிட்டதென்று அந்தக் குழந்தையின் தாய் அழுதாள்.

www.tamilarangam.net

"ஏய் டேட்டி பாக்கி" டாரன் டொக்டர் கதிர்காமநாதனைப் பார்த்துத் துப்பினான். அவர் இதை எதிர்பார்க்கவில்லை. ஏஜென்சி டொக்டராகி இரண்டொரு கிழமைதான். தனியாகப் போகும் டொக்டர்களுக்கு என்னவெல்லாமோ நடக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் தனக்கு இப்படி நடக்குமென்று...

"என்ன இந்தப் பக்கம் யாரும் பெண் பிள்ளை தேடுறாயா நாயே" டாரன் டொக்டர் கதிர்காமநாதர் வாய் திறக்க முதல் பளீரென்று ஒரு அறை போட்டான்.
பார்த்துக் கொண்டிருந்த பீட்டர் வில்லியத் திற்கு வீரம் செறிந்தது. இரண்டு போதை வஸ்து போட்ட ஆங்கிலேயர் உலகத்திற்கு உதவிசெய்யும் ஒரு அப்பாவித் தமிழ் டொக்டரை காலாலும் கையாலும் அடித்தனர்.

தங்களுக்கு வேலையில்லாமல் போனதற்கு ஒரு உதை, கையில் காசில்லாததற்கு ஒரு அடி, தங்கள் பெண்கள் அடுத்த இனத்தானோடு குலவுவதற்கு ஒரு குத்து. இரு இளைஞர்களும் ஒரு முதியவரைப் போட்டு உதைத்துத் தள்ளினார்கள். அந்த நேரம் டாரனின் 'மோபைல் டெலிபொன்' கிணுகிணுத்தது.

அடிப்பதை நிறுத்திவிட்டு, டாரன் 'ஹலோ' சொன்னான்.
இந்த நேரத்தில் போதைவஸ்து வியாபாரிகள் போன் பண்ணுவதுண்டு.
"எங்கே உனது சொம்பேறிச் சினேகிதன்? ". ஜனட்டின் கோபக் குரல் டாரனின் காதைப் பிளந்தது.
டாரன் பீட்டரிடம் டெலிபோனைக் கொடுத்தான்.

"எங்கே தொலைந்துவிட்டாய்? மெலனிக்குச் சுகமில்லை. டொக்டர் உடனடியாக வருவதாகச் சொன்னார். இன்னும் காண வில்லை. மெலனிக்கு காய்ச்சல் கூடி வலி வரும் போலிருக்கிறது"
ஜனட் அழுதாள்.

மயங்கிக்கிடக்கும் டொக்டரின் பெட்டியை ஆவேசமாக உடைத்தான் டாரன். ஸ்டெதஸ்கோப், அவசர மருந்துகள் போன்ற சாமான்களோடு அடுத்ததாக அவர் பார்க்கப் போகும் மெலனி வில்லி யத்தின் விலாசமும் டாரனின் கையில் சிக்கின.
பீட்டர் அவசரமாக டொக்டரைப் புரட்டி னான். அவர் குற்றுயிராய்க் கிடந்தார். அவரைப் பார்க்க ஒரு டொக்டர் தேவை இப்போது.



*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

**விலங்குடைப்போம்**

சங்கவி
மெலிதாக திரைச்சீலையை விலக்கிப் பார்த்தாள்.
ஓ... கண்ணுக்குத் தெரிந்த தூரம் வரை நிலம், மரங்கள், வீட்டுக் கூரைகள் என்று எல்லாவற்றையும் வெண்பஞ்சு போன்ற வெள்ளைப் பனி போர்த்தியிருந்தது.

ஆர்ப்பரிக்கும் கடல் அலையின் மெலிதான ஓசையாலும் அசுரமாய் குடை விரித்திருக்க அலரிகளால் எல்லைபோட்டு அழகாய் அமைந்திருக்கும் ஆத்தியடிப் பிள்ளையார் கோவில்.... என்று எமது மண்ணுக்குரிய வாசனைகளும் அழகுகளும் கடந்த சில வருடங்களாக ஆமிகளும் ஷெல்களும் கிபீர்களும் அக் கிராமங்களும் தமிழர்கள் மீது தூவப்படும், பொழியப்படும் அநியாயங்களும் என்று பழக்கப்பட்டு விட்ட சங்கவிக்கு ஜேர்மனியின் மார்கழி மாதப் பனி கூட அழகாகத்தான் தெரிந்தது. அந்த அழகில் மனம் ஒருகணம் லயித்தது.

இதுவே இரண்டு கிழமைக்கு முன்னதாக இருந்திருந்தால் அவள் சேகரையும் இழுத்துக் கொண்டு ஓடிப்போய் இந்தப் பனியில் துள்ளியிருப்பாள். அப்படியொரு அழகு அந்தப் பனிக்கு.

இவளின் வீட்டு பல்கனி வரை, கிளை பரப்பியிருக்கும் இந்தக் காசல் நட்ஸ் மரம். அவள் இங்கு ஆவணியில் சேகரிடம் வந்தபோது காசல் நட்ஸ் காய்த்துக் குலுங்க பச்சைப் பசேலென்று இலைகளுடன் குளிர்ச்சியாக அழகாக இருந்தது. பின்னர் இலைகள் மஞ்சளாகி... இலைகளே இல்லாமல் மொட்டையாகி... அதுகூட அழகாகத் தான் இருந்தது. இன்று அது பனியால் மூடப்பட்டு ஒவ்வொரு கொப்பிலும் பனித்துளிகள் குவிந்து பரந்து அழகே அழகாய்...
மனசுக்குள் சுமையாக அழுத்தும் சோகத்தையும் மறந்து சங்கவி சில நிமிட நேரங்கள் அந்த அற்புத அழகில் லயித்துப் போயிருந்தாள்.
அந்த லயிப்பில் ஏற்பட்ட சந்தோசம் அதைப் பகிர்ந்து கொள்ள யாருமில் லாமல் தனித்துப்போய்விட்ட உணர்வு மனதில் தோன்ற மீண்டும் அவள் சோகமானாள்.

சங்கவிக்கும் சேகருக்கும் இடையில் மௌனப் போராட்டம் தொடங்கி இரண்டு வாரங்களாயிற்று. சங்கவிக்கு சேகரைப் பார்க்கப் பிடிக்கவேயில்லை. சேகரின் அருகில் படுக்கக்கூடப் பிடிக்கவில்லை. படுக்கையறைப் பக்கமே போகாமல் விருந்தினருக்கான அறையிலேயே படுக்கத் தொடங்கியும் இரண்டு வாரங்களாகி விட்டது.
இந்த இரண்டு கிழமையும் தூக்கம் அவளை விட்டு தூரவிலகிப் போயிருந்தாலும் சேகர் காலை எழுந்து போகும் வரை அந்த அறையை விட்டு வெளியே வராமல் அவன் முகத்தைக் கூடப் பார்க்கக் கூடாது, அவன் விழிகளில் விழிக்கக் கூடாது என்ற வைராக்கியத்துடன் அடைபட்டுக் கிடந்தாள்.

www.tamilarangam.net

ஆனால் மீண்டும் திங்கட்கிழமை சேகர் வேலைக்குப் போனதும் வழமைபோல் வெளியில் வந்து, சமைத்து தானும் அரைகுறையாகச் சாப்பிட்டு சேகருக்கும் வைத்துவிட்டு அழுதாள். வானொலி கேட்டாள். நகரமறுக்கும் நேரத்தைச் சபித்தாள். சேகர் வீடுதிரும்பும் நேரத்திற்கு அரைமணி நேரம் முன்பே அறைக் கதவைத் தாளிட்டு முடங்கிக் கொண்டாள்.

இப்படியே நாட்கள் நத்தையாய் சோகமாய் தொடர்ந்தன. எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு ஓடுமளவுக்கு சங்கவி ஒன்றும் புதுமைப் பெண்ணல்ல.. மிகமிகச் சாதராரண பெண். எல்லாப் பெண்களைப் போலவும் சின்னச் சின்னக் கனவுகளும் ஆசைகளும் இவளிடமும் இருந்தன. அந்தக் கனவுகளுடனேயே ஜேர்மனிவரை சேகரிடம் வந்து சேர்ந்தாள்.

தாலியைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் மூடத்தனம் அவளிடம் இல்லாவிட்டாலும், தாலி பெண்ணுக்கு அவசியம் என்பதில் அசையாத நம்பிக்கை இருந்தது. நாற்குணம் என்றும், நற்பண்பு என்றும் வேலிகள் போட்டு பெண்ணை வீட்டுக்குள் அடைத்தோர் நாணும் படியாக போர்க்கொடி ஏந்தி நாட்டினைக் காக்கின்ற வீரப் பெண்கள் வாழ்கின்ற ஈழத்திலிருந்து வந்த சங்கவி தனக்குத்தானே சிறைபோட்டுக் கொண்ட பேதைத்தனம் வித்தியாசமாகத்தான் இருந்தது.

அதனால் தானோ என்னவோ விட்டுப் பிடிப்போம் பாணியில் வழிக்கு வருவாள் என்ற நம்பிக்கையுடன் சேகர் அமைதியாகக் காத்திருந்ததுடன் நாட்களைக் கழிக்கிறான். அத்தோடு இவளின் இந்தச் சிறைவாசம் எந்த விதத்திலும் எந்த விதமான அவமானத்தையும் அவனுக்கு ஏற்படுத்தாது என்பதிலும் நிம்மதியாக இருந்தான்.

ஆனாலும் பல தடவைகள் அறைக் கதவைத் தட்டி,

'சங்கவி வெளியே வாரும் நான் எல்லாம் விளங்கப் படுத்துகிறேன்' என்று சேகர் கேட்டுப் பார்த்துவிட்டான்.

பதிலாக சங்கவியின் விசும்பலைத் தவிர வேறெதுவும் அவனுக்குக் கேட்பதில்லை. பூட்டிய அறைச் சுவரில் அழகாக நேர்த்தியாக மாட்டப்பட்டிருக்கும் மகாபாரதக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து சங்கவிக்கு அலுத்துப் போயிருந்தது. தேர்ச் சில்லுகளைப் பார்த்து எண்ணிப் போதும் என்றாகிவிட்டது.

கதவுக்கு நேரே மேலே சுவரில் கண்ணனின் மடியில் ஒய்யாரமாய் சாய்ந்

புது உலகம் எமை நோக்கி

# விலங்கு உடைப்போம்

-சந்திரவதனா செல்வகுமாரன்-
*ஜேர்மனி*

99

www.tamilarangam.net

திருக்கும் ராதையையும் கண்ணனையும் பார்த்து அதை அத்தனை அழகிய வர்ணத்தில் தீட்டியிருந்த ஓவியனையும் நினைத்து நினைத்து வியந்தாயிற்று. அம்மாவிற்கும் அக்காவிற்கும் கடிதம் எழுதத் தொடங்கி கிழித்துக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டாயிற்று. இன்னும் என்ன செய்வது இந்த அறையினுள். மீண்டும் திரைச் சீலையை விலக்கிப் பார்த்தாள்.
வெண்பனியில் கால்கள் புதைய சிலர் வேலைக்கு விரைந்து கொண்டிருந்தார்கள்.

கதவு அடித்துச் சாத்தப்படும் சத்தம் கேட்டது. சேகர் வேலைக்குப் போகிறார் என்பது தெரிந்தது. சேகர் காரை எடுத்துக் கொண்டு கிளம்பும் வரை யன்னலில் காத்திருந்தாள். சேகரின் கார் இன்னும் தெரியவில்லை. காரில் படிந்து விட்ட பனியைச் சுரண்டுகிறானோ...
சில நிமிடக் காத்திருத்தலில் கார்ச்சில்லு பனியுள் புதைந்து மோட்டார் உறுமி சில்லுகள் சுழன்று புகார் படிந்த கண்ணாடிகளுடன் பனிகள் சிதறிப் பறக்க சங்கவியின் கண்களிலிருந்து கார் மறைந்தது.

கூண்டுக்குள்ளிருந்து வெளியே பறக்கும் பறவையின் துடிப்புடன் கதவைத் திறந்து வெளியே வந்தாள் சங்கவி. சிறு குழந்தையைப் போல் வீட்டுக்குள் ஓடித்திரிந்தாள். ரேடியோவைப் போட்டாள். குளியலறைக்குள் சென்று பல் துலக்க முற்பட்டவள் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். அழுது அழுது சிவந்திருந்த கண்களைச் சுற்றி இலேசான கருவளையம் தெரிந்தது. கன்னங்கள் சற்று உள்ளே போயிருந்தன. சங்கவிக்கு மீண்டும் அழுகை வந்தது.
'வந்திருக்கக் கூடாது, இங்கு வந்திருக்கக் கூடாது. யாரையும் நம்பி வந்திருக்கக் கூடாது' மனம் நொந்து முனகினாள்.

எப்பிடி ஏமாந்தன்.
அன்றைய நாள் அவளை இந்தச் சிறைவரை இழுத்து வந்த நாள்.
நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் முன்றலில் பூத்திருந்த கொன்றைப் பூக்களைவிட அழகாகச் சிரித்தது சந்தோச வெள்ளத்தில் மிதந்த சங்கவியின் மனம்.
சில நிமிடங்களுக்கு முன்புதான் இப்போ நெல்லண்டையில் புதிதாகத் திறக்கப்பட் டிருக்கும் தொலைத் தொடர்பு நிலையத் திலிருந்து ஜேர்மனியில் இருக்கும் சேகருடன் முதன் முதலாக ரெலிபோனில் கதைத்து விட்டு வந்திருந்தாள். சங்கவியின் மனதிற்குள் வண்ண வண்ணமாய் கவிதைகள் பூத்தன.

நிறந்தெரியா
உன்முகம் காண
மனம் ஏங்குதே!
உன்குரல் தந்த ஸ்பரிசத்தில்
சிலிர்த்தேங்குதே!

www.tamilarangam.net

சேகரின் குறும்பான பேச்சும் சிரிப்பும் அவளை எங்கோ அழைத்துச் சென்றிருந்தன. போன மாதமே அக்கா பார்கவி கொழும்பிலிருந்து அம்மாவுக்கு கடிதம் போட்டிருந்தா.

அம்மா ஜேர்மனியில் சங்கவிக்கு ஏற்றதாக ஒரு மாப்பிளை இருக்கிறார். நல்ல பையனா... குடிகிடி சிகரெட் இல்லையாம்... பெயர் சேகர் விபரமாக எல்லாம் அறிந்து விட்டேன். என்னுடன் சில தடவைகள் கதைத்தார். சங்கவியின் போட்டோவை அனுப்பினேன். அவருக்கு சங்கவியை நன்றாகப் பிடித்து விட்டதாம். அவரது போட்டோ என்னிடம் இருக்கிறது. அழகாகத்தான் இருக்கிறார். நீங்கள் சங்கவியைக் கூட்டிக்கொண்டு கொழும்புக்கு வாங்கோ. ஏஜென்சி சரிவந்தவுடனே சங்கவி ஜேர்மனிக்குப் பயணமாகலாம். செலவுகளை எல்லாம் அவரே பார்த்துக் கொள்கிறாராம்.

மிகுதி நேரில்.
பார்கவி

கடிதம் கண்ட உடனே அம்மா பரபரப்பாக, போட்டது போட்டபடி விட்டுவிட்டு கொழும்புக்கு பயணம் செய்ய முடியாவிட்டாலும் பயணத்துக்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கி விட்டாள். ஆனால் பார்கவியின் கடிதமோ அம்மாவின் பரபரப்போ சங்கவியிடம் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. அவளிடம் கலியாணக் கனவுகள் இருக்கவில்லை. நாட்டின் நிலைமைகளினால் மனம் அழுத்தப்பட்டிருந்தது. அதைவிட கொழும்புக்குப் போவது பற்றி இலேசான பயம் கூட இருந்தது. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் போவதற்கிடையில் எத்தனை சோதனைச் சாவடிகள். ஒரு நம்பிக்கையற்ற எதிர்பார்ப்பற்ற நிலையில் சங்கவி இருந்த போதுதான் அன்று காலை நெல்லியடித் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து ஒருவர் வந்து சேகரிடம் இருந்து கோல் வந்தது பற்றியும் இன்னும் இரண்டு மணித்தியாலங்களில் மீண்டும் கோல் வரும் என்றும் 'சங்கவி குமாரசாமி, ஆத்தியடி' என்று எழுதப்பட்ட துண்டையும் கொடுத்து விட்டுச் சென்றார்.

சலனமற்ற சங்கவியின் மனம்கூட படபடத்தது. மகிழ்ச்சியுடன் காணப்பட்ட அம்மாவிடம் வீடைபெற்றுக் கொண்டு சைக்கிளை உருட்டியபடி ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வரை நடந்தே போனவள் பிள்ளையாரை வணங்கி விட்டு மீண்டும் வெள்ள வாய்க்காலுக்குள் இறங்கி ஏறினாள். திரும்பி பிள்ளையாரைப் பார்த்து நெற்றியில் தொட்டுக் கும்பிட்டு விட்டு சைக்கிளில் ஏறி உழக்கத் தொடங்கினாள்.

புது உலகம் எமை நோக்கி

**'என்னை மிருகமாக்காதை. உனக்கு ஜேர்மனியில் இப்பிடி ஒரு வாழ்வு கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கோணும். ஊர் உலகத்தில இல்லாததையே நான் செய்திட்டன்'**

99

www.tamilarangam.net

சேகரின் கோலுக்காக அரை மணித்தியாலம் காத்திருந்தபோது சேகரைப் பற்றிய கனவுகள் எதுவும் இல்லாவிட்டாலும் என்ன கதைப்பது என்ற பயம் அவளுக்குள் இருந்தது. எதிர்பார்த்த அழைப்பு வந்தபோது ஒரே படபடப்பாக இருந்தாள். ஆனால் சேகரோ மிகவும் இயல்பாக குறும்பாக, பொறுப்பாகக் கதைத்தபோது அவளும் இயல்பாகி விட்டாள். சேகருடன் கதைத்த பின் சங்கவியின் மனம் சேகரைக் கணவனாக்கிக் கொள்ள முழுமையாக சம்மதம் கொண்டிருந்தது. அந்த சந்தோசம் மனத்தை நிறைக்க தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து நேரே நெல்லண்டைப் பத்ரகாளியம்மன் கோவிலுக்குச் சென்று நன்றியுடன் வழிபட்டாள். நெஞ்சு நிறைந்த சந்தோசத்துடன் வீடு திரும்பியவள் அம்மா, தங்கையை தனியே விட்டுப் போவதை நினைத்துக் கவலைப்பட்டாள். தடுமாறினாள். ஆனால் தொடர்ந்த நாட்களில் அடிக்கடி சேகர் ரெலிபோனில் அழைத்துக் கதைத்தான். பருவமும் சேகரின் குறும்பான இதமான கதைகளும் சேர இனிய கனவுகளில் மிதக்க ஆரம்பித்தாள் சங்கவி.

சேகர் பணம் அனுப்பி சங்கவி விமானத்தில் கொழும்பு போவது தீர்மானமானபோது அம்மா மிகவும் சந்தோசப்பட்டாள். எல்லோரும் விமானத்தில் செல்ல நிதிநிலைமை சரிவராது என்பதால் சங்கவி மட்டும் தனியாக அம்மா தங்கையிடம் விடைபெற்றுக் கொண்டு கொழும்புக்குப் பயணமானாள். கொழும்பில் அக்கா பார்கவியிடம் வந்து சேர்ந்தபோது, அம்மா தங்கையின் பிரிவில் மனம் கலங்கினாலும் சேகரின் போட்டோவைப் பார்த்ததிலும் அவன் அடிக்கடி போன் தொடர்பு கொள்வதாலும் மகிழ்ச்சியுடன் இருந்தாள். மூன்று மாதங்களில் எல்லாம் சரி வந்தது. அக்காவிடம் விடைபெற்றுக் கொண்டு விமானத்தில் பறந்தபோது சங்கவியின் மனத்தில் சேகரின் நினைவு ஒருவித சந்தோசத்தை யும் எதிர்பார்ப்பையும் தந்தாலும் அம்மா சகோதரர்களின் நினைவு பொங்கிப் பொங்கி வந்தது.

பாரிஸ் விமான நிலையத்தில் இறங்கி தன் முகத்தையொத்த வேறொருவரின் பாஸ்போட் காட்டி பிரஞ்ச் பாஷையில் பாடமாக்கி வந்தபடி அவர்கள் கேள்விக ளுக்கு ஒரு சொல் விடைகளாக அளித்து வெளியில் வந்தபோது, இருவர் தாம் சேகரின் நண்பர்கள் என்று சொல்லி முதலில் திர்மானித்தபடி ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். கணங்கள் யுகங்களாக ஒரு பகலும் இரவும் கழிய சேகர் வந்து சேர்ந்தான். சேகரைப் பார்த்ததும் சங்கவிக்கு அதிர்ச்சியாக இருந்தது. போட்ட போட்டோவிலும் நேரிலும் நிறைய வித்தியாசம் இருந்தது. முன்பக்கம் தலையில் வழுக்கை தெரிந்தது. ஆனாலும் அழகாகச் சிரித்தான். குறும்பாகக் கதைத்தான். இதமாக அணைத்தான்.

அன்றே காரில் பயணமாகி சேகரின் வீட்டுக்குள் நுழைந்தபோது நேர்த்தியாக அடுக்கப்பட்டு இருந்த சேகரின் வீடு சங்கவியை வரவேற்றது, அதுவே சங்கவிக்கு சேகரின்மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியது. சேகர் சீடி ஸ்ராண்டில் உள்ள சீடியைப் போட்டபோது இனிய பாடலொன்று ஒலித்தது. இனிமையான பாடலும் சேகருடனான நெருக்கமும் என அன்றைய பொழுது இனிமையாகக் கழிந்தது.

www.tamilarangam.net

இப்படியே தொடர்ந்த சந்தோசங்களுக்கு மத்தியில் சேகர் அங்கோடி இங்கோடி எல்லா விடயங்களையும் பார்த்து சங்கவிக்கு ஜேர்மனியில் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அலுவல்களையும் செய்து கொண்டிருந்தான். ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து, கோல் எடுத்து, நண்பர்களை எல்லாம் அழைத்து, சங்கவியின் கழுத்தில் தாலியும் கட்டினான். நண்பர்கள் எல்லாம் குடித்துக் கும்மாளம்மிட்டபோதும் சேகர் மட்டும் மதுவிலிருந்து ஒதுங்கி நின்றபோது சங்கவி பெருமையின் உச்சத்தில் நின்றாள். சேகரின் புகழ்பாடி அம்மாவுக்கும் அக்காவிற்கும் கடிதங்களாக எழுதித் தள்ளினாள்.

இனித்த அவள் வாழ்க்கையில் கிணற்றில் விழுந்த கல்லாய் ஒரு செய்தி காதில் வீழ்ந்து சலசலப்பை ஏற்படுத்தியது. அன்று சேகரின் நண்பன் ஒருவனின் கல்யாண விழாவில் எல்லோரும் கலகலப்பாக இருந்தபோது,
இரு பெண்கள் 'சேகரின் பிள்ளைகளைப் பற்றி சங்கவிக்கு ஏதாவது தெரியுமோ? என்னெண்டாலும் அவன் பயங்கர ஆள்தான். இரண்டு பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு ஒரு இளம் பிள்ளையையும் கூப்பிட்டு, கட்டிப் போட்டான்' என்று குசுகுசுத்தது சங்கவியின் காதில் நாராசமாய் விழுந்தது.

சங்கவிக்கு மேற்கொண்டு கலியாண வீட்டில் நிற்கவே பிடிக்கவில்லை. சேகரிடம் சென்று எனக்கு ஒரே தலைவலியாக இருக்கிறது. வீட்டுக்குப் போவோமா என்றாள். புரிந்துணர்வு உள்ளவனாய் சேகர் நண்பர்களிடம் விடைபெற்றான்.

'இவன் ஏதும் தப்புகள் செய்வானா?'
எடைபோட முடியாமல் தடுமாறினாள் சங்கவி. தனக்குள்ளேயே மேலும் போராட முடியாமல் காருக்குள்ளேயே வெடித்தாள். அதிர்ந்த சேகர் ஆரம்பத்தில் மறுத்தாலும் வீட்டுக்கு வந்ததும் மெது மெதுவாக உண்மைகளைச் சொல்லத் தொடங்கினான்.
'சங்கவி நான் உமக்குச் சொல்ல எத்தனையோ முறை எத்தனிச்சனான். நீர் எந்தளவு தாங்குவீர் என்றுதான் எனக்கு தயக்கமாக இருந்தது. எனக்கும் ஜேர்மனியப் பெண்ணுக்கும் ஏற்பட்பட்ட உறவில் எனக்கு இரண்டு பிள்ளைகள் ஆறு வயதிலும் நாலு வயதிலும். இப்ப எனக்கு அவளோடை ஒரு தொடர்பும் இல்லை. என்ன இருந்தாலும் எங்கட சிறீலங்காப் பொம்பிளையள் போல இவர்கள் இருப்பார்களோ... அதுதான்

**புது உலகம் எமை நோக்கி**

வாசகர் குறிப்பு

www.tamilarangam.net

மாதத்தில ஒரு நாளைக்குப் போய் பிள்ளைகளைப் பார்த்திட்டு வருவன். இரண்டு பிள்ளைகளுக்குமாய் 900 டீஎம் மாதாமாதம் கட்டுறன். இவ்வளவுதான்'

அப்படியெதுவும் இல்லையென்றுதான் சேகர் சொல்லுவான் என எதிர்பார்த்த சங்கவிக்கு சேகரின் வார்த்தைகளால் கொதிப்படைந்து சீறினாள்.
'நீங்கள் முதலே சொல்லியிருக்கலாம் தானே. நான் அங்கை அம்மாவோடை நிம்மதியாக இருந்திருப்பன். நீங்கள் என்னை ஏமாத்தீட்டீங்கள் உங்களோடை என்னாலை வாழ ஏலாது'
தாங்க முடியாத ஆத்திரமும் வேதனையும் சங்கவியிடமிருந்து வெளியேறி நெருப்பு வார்த்தைகளால் சேகரைச் சுட்டன.

சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பதை அன்று தான் சேகர் கண்டான். அதிர்ந்து கூடப் பேசத் தெரியாத சங்கவி உருத்திரத் தாண்டவம் ஆடினாள்.
அவளின் தாண்டவத்தை தாங்கமுடியாத சேகர் வேறு வழியின்றி அவளை பளாரென்று அறைந்தான்.
'என்னை மிருகமாக்காதை. உனக்கு ஜேர்மனியில் இப்பிடி ஒரு வாழ்வு கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கோணும். ஊர் உலகத்தில இல்லாததையே நான் செய்திட்டன்'
சேகரின் வார்த்தையில் சங்கவி விக்கித்துப் போய்விட்டாள். அவன் செய்த தப்பைவிட அவன் அதை நியாயப்படுத்தியது அவளை இன்னும் வெகுண்டெழச் செய்தது. கோபமாக அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விருந்தினர் தங்குவதற்கான அறையில் புகுந்து தாழிட்டுக் கொண்டாள். ஏதாவது ஏடகூடமாக நடந்து விடுமோ என்று பயந்த சேகர்,
'சங்கவி வெளியில வாரும். கதவைத் திறவும்...' என்று எத்தனையோ தரம் முயன்றான். சங்கவியின் விசும்பலைத் தவிர வேறெதுவும் வெளியில் கேட்க வில்லை.
சேகர் என்ன நினைத்தானோ... இவளை விட்டுத்தான் பிடிக்கவேண்டும் என்று நினைத்தானோ. அதிகமாக சங்கவியை வெளியே வரும்படி வற்புறுத்தாமல் திரிகிறான்.

கழுத்தில் தொங்கும் தாலிக்கயிற்றைக் கைகளால் பிசைந்தபடி நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த சங்கவி நினைவுகளிலிருந்து விடுபட்டவளாய் சமையலைறைக்குள் நுழைந்தாள்.
அவள் வீட்டு வானொலியினுடாக ஒலிபரப்பிக் கொண்டிருந்த ஐரோப்பிய வானொலி யொன்றின் செய்திச் சுருக்கம் ஆரம்பமாகியிருந்தது. அந்தச் செய்திகளிலும் மனம் நாட்டம் கொள்ளாமலிருக்க, அவள் தேநீர் தயாரித்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

செய்திச்சுருக்கம் முடிந்து விளம்பரங்கள் ஒலித்து அடுத்து 'புதுமைப் பெண்' என்ற நிகழ்ச்சி ஆரம்பமாகப் போவதாக அறிவித்தது. அதுபற்றி எதுவுமே அலட்டிக் கொள்ளாமல் சங்கவி தேநீரை உறிஞ்சினாள். இனிய பெண் குரல் ஒன்று பெண்களு க்குத் துணிவு தரும் வகையில் பல நல்ல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டி

ருந்தது. தேநீரையும் மறந்து சங்கவி அந்தக் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டிருந்தாள்.

தொடர்ந்த நாட்களில் அவள் சிந்தனைகள் மாறியிருந்தன. ஒருவித தன்நம்பிக்கையான எண்ணங்கள் அவளுள் ஓடின.
எனக்கு நானே இந்த அறையைச் சிறையாக்கிக் கொண்டிருக்கிறேனே. என்ன பேதைத்தனம். எனக்கு நான் என்ன தப்புச் செய்தேன். சிறை வைக்கப்பட வேண்டியவன் என் கணவன் சேகர். இல்லையில்லை சேகர் என் கணவன் இல்லை. தாலி கட்டினால் உடனே கணவன். அப்படியானால் அவள் அந்த ஜேர்மனியப் பெண். அவளுக்கு இவன் யார். தாலிகட்டாத கணவனா?
பலமாக சிரிக்க வேண்டும் போல இருந்தது சங்கவிக்கு. கழுத்தில் தொங்கிய தாலி ஆண்கள் பெண்களை அடிமைபடுத்த எழுதிய சாசனத்தில் கையெழுத்திடப்பட்ட முத்திரைபோல் தெரிந்தது.

ஏதோ யோசித்துக் கொண்டவள் தாலியை நிதானமாகக் கழற்றி மேசையில் வைத்தாள் கூடவே சேகர் என்ற உறவையும்...

புது உலகம் எமை நோக்கி

# கல்யாணச் சீரழிவுகள்

-சுகந்தி அமிர்தலிங்கம்-
*ஜேர்மனி*

**கல்யாணச் சீரழிவுகள்**

சுவர்க்கடிகாரம் ஒன்பது முறை அடித்து ஓய்ந்தது. திடுக்குற்று கண்விழித்த சியாமளா ஒன்பது மணிவரை தூங்கி விட்டேனே! என்ற கவலையுடன் எழுந்து பல் துலக்குவதற்காக பாத்ரூம் சென்றாள்.

இன்றைக்குத் தைப்பொங்கலும் அதுவு மாக இவ்வளவு நேர நித்திரை. நினைத்துப் பார்த்தாள் சியாமளா.
ஜெர்மனிக்கு வந்து அவளுக்கு சோம்பேறித்தனம் கூடி இருந்தது. அதுவும் இந்த வின்ரர் காலத்தில் எவ்வ ளவு நேரம் சென்றாலும் படுக்கையை விட்டு எழ மனம் வராது.

யன்னலினுடாக வெளியே பார்க்கிறாள்.
வெண்பஞ்சுப் பொதிபோல பனிக்குவியல். வீட்டு முகடு, மரம், தடி,றோட்டெல்லாம் பனி குவிந்திருந்தது. ஒன்பது மணியாகியும் றோட்டில் சன நடமாட்டமில்லாது ஒரே அமைதியாக இருந்தது. ஊரில் என்றால்...
தைப்பொங்கல் நாளன்று எவ்வளவு கொண்டாட்டம்! நான்கு வருடங்களுக்கு முன்பு ஊரில் எப்படியெல்லாம் பொங்கல் கொண்டாடினோம்... மகிழ்ந்திருந்தோம்...
அம்மா, ஐயா, தம்பி, தங்கைகள், மாமி, சின்னம்மா...
சியாமளாவின் வெறுமையை உணர்ந்து நினைவுகள் எங்கோ அலைய அப்படியே சோபாவில் அமர்ந்து விட்டாள்.

முற்றத்தில் நின்ற பூவரச மரத்திலிருந்த 'காகம்' வாள், வாள் என்று கத்தியது. குசினிக் கொட்டிலில் இருந்து வெளியே வந்த செல்லம்மாவின் வாய் முணுமுணுத்தது. 'இந்த பாழ்பட்ட காகம் எந்த நேரமும் கத்தியபடி. காலமை தேத்தண்ணியோட போன மனிசனை இன்னும் காணேல்ல. மணி பன்னிரெண்டரையாகுது. பிள்ளை சியாமளா இன்னும் என்ன தைத்துக் கொண்டிருக்கிறாய்? பள்ளிக்கூடம் போன பிள்ளைகள் வரப்போகுதுகள். சாப்பாட்டை ஆயத்தப்படுத்து' என வாய் ஓயாது சொல்லிக் கொண்டே போனாள்.

வருகிற மாசம் தைப்பொங்கல் வருவதால் சியாமளாவிற்கு தையல் வேலை நிறைய இருந்தது. ஊரில் உள்ள சின்னன் சிறிசு க்கெல்லாம் அழகாக சட்டை தைத்துக் கொடுப்பாள். அன்பும் பண்பும் நிறைந்த சியாமளா செல்லம்மா சிவப்பிரகாசத்தின் மூத்தமகள். வயது 28 ஆகியும் கல்யாணம் என்னும் சடங்கு இன்னமும் அவள் வாழ்விற்கு எட்டவில்லை.

சியாமளாவைத் தொடர்ந்து தம்பி இளங்கோ 'ஓஎல்' முடித்து விட்டு 'ஏஎல்' முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தான். தங்கை மஞ்சுளா எட்டாம் வகுப்பிலும், கடைக்குட்டி ராசாத்தி மூன்றாம் வகுப்பிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். சியாமளாவும் ஊரிலுள்ள பாடசாலையில் ஏஎல் பாஸ் பண்ணிவிட்டு வேலைகளுக்கெல்லாம் விண்ணப்பம் செய்து எதுவும் கிடைக்காத நிலையில் தையல் தைப்பதில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தாள். சியாமளாவின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் அவளை எந்தத் துறையிலாவது படிப்பிக்க வேண்டும் என்றுதான் சிவப்பிரகாசத்தாருக்கு ஆசை. ஆனால் பணத்திற்கு என்ன செய்வது? வெறும் தோட்டக்காரனான அவரால் கெட்டிக்காரப் பிள்ளைகளைக் கூட படிப்பிக்க முடியவில்லையே என்று கவலைப்படுவார்.
'ஐயா நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதைங்கோ. தம்பியை எப்பிடியும் யூனிவேசிற்றி வரை படிப்பிப்பம்' என சியாமளா ஆறுதல் சொல்வாள்.

வேலிப் படலை திறந்த சத்தம் கேட்டு செல்லம்மா நிமிர்ந்து பார்க்க சிவப்பிரகாசத்தார் சால்வையைத் தலையில் போட்டபடி வெய்யில் தாங்காது வேகமாக நடந்து வருவது தெரிந்தது.

www.tamilarangam.net

'என்ன பாருங்கோ ஏதும் நல்ல செய்தியே' என்றபடி செல்லம்மா எழுந்து வந்து அவருடன் விறாந்தைக் குந்தில் அமர்ந்து கொண்டாள்.
முற்றத்து வேப்பக்காற்று வெய்யிலுக்கும் வியர்வைக்கும் இதமாக இருந்தது.
'ஓம் செல்லம், பிள்ளை சியாமளா எங்கை? நல்ல கல்யாணம் ஒன்று பொருந்தியிருக்கு. பெடியன் ஜெர்மனியிலையாம்! தாய், தகப்பன் இல்லை. தங்கைக்காரியோடதான் வளர்ந்ததாம். இப்ப ஜேர்மனிக்குப் போய் 9 வருடமாம். நல்ல இடம், நல்ல குடும்பம்' எனக் குசுகுசுத்தார்.
'எப்பிடியாவது இந்தக் கலியாணத்தை முடிச்சுப் போடவேணும்' என்றார் மிக மகிழ்ச்சியாக.

'மெய்யே பாருங்கோ, சீதனப் பிரச்சினை என்ன மாதிரியாம்' என ஆவல் அடக்க மாட்டாது செல்லம்மா புருசனிடம் கேட்டாள்.
'சீதனம் என்ன? வீடு, வளவு, நகை 15 பவுண் அதோடை பிள்ளையை அனுப்புற செலவு ரெண்டு லட்சமும் நாம் பொறுக்கவேணும்...'
'வீடு வளவு, நகை, குடுக்க வேணும் தானே. ஆனால் இரண்டு இலட்சத்திற்கு எங்கு போவது?' என்று உள்ளுக்குள் ஏங்கத் தொடங்கினார்.

'இருக்கிற தோட்டக் காணியையும், பனை வளவுத் துண்டையும் விற்றால் ஒரு ஒண்டரை தேறும். மிகுதிக்கு உங்கட தங்கச்சியிட்ட கேட்டுப் பார்ப்பம். பிள்ளைய முதல் அனுப்புவம். அவளின் வாழ்க்கைக்கு இன்னும் எவ்வளவோ செய்யவேணும் எண்டு இருந்தனான். பிள்ளை வெளிநாட்டுக்குப் போனால் பிறகு எங்களுக்கு என்ன குறை வரப்போகுது' என்று செல்லம்மா தாய் மனத்தோடு சொன்னாள்.

புது உலகம் எமை நோக்கி

**ஆண்களுக்கு படிப்பு, நிறம், அழகு எதுவுமே தேவையில்லை. ஆனால் பெண்களுக்கு மட்டும்...**

தோட்டக்காணி விற்கப்பட்டு, பணம் கைமாற்றுப் பெற்று, ஊரில் கச்சேரியில் வேலை பார்க்கும் சிவராஜாவுடன் சிவப் பிரகாசத்தார் மகளையும் கூட்டிக் கொண்டு கொழும்பு சென்று பாஸ்போட் அலுவல், ரிக்கெற் எல்லாவற்றையும் ஒருவாறு முடித்துக் கொண்டார். தைப் பொங்கலுக்கு அடுத்த நாள் விமானப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டது.

பூட்டிக் கிடந்த சியாமளாவின் மனதிலும் பலவிதமான வண்ண வண்ணக் கனவுகள் வந்து போயின. அறியாத கணவன், தெரியாத முகம், வெளிநாட்டு வாழ்க்கை, சகல செல்வங்களுடனும் அன்பான கணவனுடனும் எப்படி எப்படியெல்லாம்

www.tamilarangam.net

குடும்பம் நடத்த வேண்டும் என்று கற்பனை உலகில் மிதந்தாள்.
பெற்றோர், உற்றோர், தம்பி, தங்கைகள் விமான நிலையம் வரை வந்து அழுத கண்களுடன் சோகம் தாங்காது வழியனுப்பி வைத்தனர்.

சியாமளாவும் விமானத்தினுள் இருக்கும்போதும் பெற்றோர், சகோதரர் பிரிவு தாங்காது அழுத வண்ணமே இருந்தாள். அவர்களின் பிரிவை அவளால் தாங்கமுடியவில்லை.

அந்த விமானம் பிராங்போட் எயார்ப் போட்டில் தரையிறங்கி ஓடி நின்றது. மற்றப் பிரயாணிகளுடன் சியாமளாவும் பையை எடுத்துக் கொண்டு இறங்கி வரவும், அங்கு 'மாப்பிள்ளை செல்வசந்திரன்' அவளை வரவேற்க தன் நண்பனுடன் நிற்பது தெரிந்தது.
அறிமுகங்கள், சுகசெய்திகள்...முடிந்ததும் சியாமளாவை தன் காருக்குள் அழைத் துச் சென்றான் அவன்.

ஜெர்மனியில் பரந்து விரிந்த சாலையில் வாகனங்கள் வேகமாகச் செல்வதையும் நாட்டின் கோபுரங்கள் போல வானளாவ வளர்ந்து நிற்கும் கட்டிடங்களையும் இத்தனை துப்பரவாக இருக்கும் சுற்றாட லையும் பார்த்து வியந்த வண்ணம் காரில் அமர்ந்திருந்தாள் சியாமளா.
செல்வச்சந்திரன் பெரும்பாலும் மௌனமா கவே காரை ஓட்டிக் கொண்டிருந்தான். வீடு வந்ததும் உள்ளே அழைத்துச் சென்றான். அது ஒரு சின்ன அப்பாட்மென் ஒரு வரவேற்பறை, ஒரு படுக்கையறை, சிறிய சமையற் கூடம், பாத்ரூம், ரொயிலற் என அழகாக அடக்கமாக இருந்தது. ஆனால் அறைகள் துப்பரவு இல்லாது, பொருட்கள் அங்கும் இங்கும் சிதறி அலங்கோலமாக இருந்தது. இனி இவற்றையெல்லாம் துப்பரவு செய்து கவனிப்பது தன்னுடைய பொறுப்பு என எண்ணிக் கொண்டாள் சியாமளா.

'பிரயாணத்தால் வந்தது, நல்லா களைச்சுப் போயிருப்பீர். போய் குளிச்சிட்டு உடுப்பை மாத்திக் கொண்டு வாரும்; சாப்பிடலாம் என்று அவன் பாத்ரூமைக் காட்டினான்.
பாத்ரூம் சென்ற அவள் அங்கு கண்ணாடியில் தன் முகத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டாள். ஏற்கனவே நிறம் சந்றுக் குறைவு. பிரயாணக் களைப்பாலும் பெற்றோரின் பிரிவுத் துயரத்தாலும் முகம் நன்கு கறுத்து களைத்து இருந்தது. ஆனாலும் அவளின் பெரிய கண்களும் சுருண்ட தலைமுடியும் முகத்திற்கு சற்று அழகைக் கொடுத்தன.

'அவரும் சரியா கறுப்புத்தானே. கறுப்பாய் இருந்தாலும் களையாய் இருக்கிறார். எனக்குப் பொருத்தமானவர்தான்' என்று மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொண்டு, குளியலை முடித்துக் கொண்டு வெளியில் வந்தாள்.
மேசையில் சாப்பாடு ஆயத்தமாகி இருந்தது.
சாப்பிட்டதும் உடல் அயற்சியில் படுக்கையறை சென்று அயர்ந்து தூங்கி விட்டாள்.

www.tamilarangam.net

வெளியில் சிரிப்பும், சத்தமும் பலமாகக் கேட்டு கண்விழித்த சியாமளா, செல்வசந்திரன் தன் நண்பர்களுடன் பேசுவதும் சிரிப்பதும் கேட்டு எழுந்து கதவருகில் வந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை உற்றுக் கேட்டாள் .

'ஏன்ரா செல்வா, பொம்பிள வந்தால் காட்டாமல் அறையில் பூட்டி வைத்திருக்கிறாய்' என்று ஒருவர்...
'இல்லையடா பொம்பிளை சரியான கறுப்பு. அதுதான் அவன் காட்ட விரும்பவில்லை' என்று இன்னொருவர் தொடர,
'என்ன செல்வா வெள்ளைப் பொம்பிள ஜேர்மன்காரிகள்போல வேணுமெண்டு சொல்லிக் கொண்டிருந்தாய். இப்ப எப்பிடி பொம்பிளை வந்தது?'
நண்பர்களின் பகிடிக்கும், கேலிக்கும் செல்வசந்திரன் மௌனம் சாதிப்பது தெரிந்தது.

சியாமளாவின் நெஞ்சில் வேதனை படர்ந்தது. வெளிநாட்டில் இருக்கும் சனம் அன்பாகவும் பண்பாகவும் இருப்பார்கள் என்று நினைத்து வந்தாள். இது என்ன?? அவர்களின் பேச்சு அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. பண்பற்றவர்கள் பேசும் பேச்சாகவே அவர்களின் சிரிப்பும் கேலியும் அவளுக்குத் தெரிந்தது.

சியாமளா செல்வனின் றூமிற்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டிருந்தது. ஆனால் செல்வன் அவளை எங்கும் அழைத்துச் செல்வதில்லை. ஏன் அன்பாக ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை. ஏதோ கடமைக்குச் செய்வது போல அவனின் செய்கைகள் அவளுக்குப் பட்டது. எவ்வளவு கற்பனைகளை மனதில் கட்டிக் கொண்டு வெளிநாட்டில் வாழ ஆசையுடன் வந்த அவள், மனவேதனை தாங்காது யாருக்கும் சொல்ல முடியாத நிலையில் மௌனமாகக் கண்ணீர் சிந்தினாள்.

காலம் யாருக்கும் காத்திராமல் உருண் டோடிக் கொண்டிருந்தது. மாதங்கள் பல சென்றும் செல்வச்சந்திரன் கல்யாண த்தைப் பற்றி எந்தவித பேச்சோ எண் ணமோ இன்றி இருப்பது சியாமளாவின் மணதிற்கு அச்சத்தையும் வேதனையை யும் உண்டு பண்ணியது. பெற்றோரின் கடிதம் கண்டு அவர்களின் கேள்விகளுக் குப் பதில் எழுதமுடியாத நிலையில் மனம் நொந்து அழுதாள்.

அன்று வழமைபோல் சியாமளா இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கை அறைக்கு வர... செல்வச்சந்திரனும் வழமைபோல வரவேற்பறையில் படுப் பதற்கு ஆயத்தமானான். இன்றைக்கு

---

புது உலகம் எமை நோக்கி

---

**வின்ரர் காலம்.**
**சாலையோரம் எல்லாம்**
**பனிக்குவியல்கள் வெண்பஞ்சு**
**போல குவிந்து கிடந்தது.**
**கால்கள் பனியுள் புதைய**
**கடுங்குளிரையும்**
**பொருட்படுத்தாது மனதைத்**
**திடப்படுத்திக் கொண்டு**
**கால்போன போக்கில் நடக்கத்**
**தொடங்கினாள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவரிடம் கதைத்து ஒரு முடிவு எடுத்துவிட வேண்டியதுதான். இப்படி எத்தனை நாளைக்குத்தான் சீவிப்பது. நம் கலாச்சாரம் என்ன, பண்பாடு என்ன! வாழ்க்கை என்றாலே பண்பாடு, கலாச்சாரத்தை மறந்து விட வேண்டியதுதானோ. என் கல்யாண விடயம் பற்றி இவர் என்னதான் நினைக் கிறார் என்பதைக் கேட்டுவிட வேண்டியதுதான் என்று முடிவெடுத்தாள் சியாமளா.

செல்வச்சந்திரனிடம் துணிவாக 'உங்களிடம் கொஞ்சம் கதைக்க வேணும்' என்று சொல்லிவிட்டாள். இதை எதிர்பார்த்துக் காத்திருந்தவன் போல அவன்,
'என்ன கதைக்கப் போறீர்? கலியாண விசயம்தானே. அது நடக்காத விசயம். நீர் வேணுமெண்டால் சிலோனுக்குத் திரும்பிப் போகலாம். அதற்கு நான் எந்தத் தடையும் சொல்லேல்ல' என துணிவாகக் கூறிய தைக் கேட்ட சியாமளாவுக்கு நெஞ்சமே வெடித்துவிடும் போல அதிர்ச்சிக்கு உள்ளானாள். இந்தப் பதிலை சற்றும் எதிர்பாராத அவள் மீண்டும் துணிச்ச லுடன் மேலே பேசத் தொடங்கினாள்.
'உங்களை நம்பித்தானே என் ஐயா, அம்மா இங்கு அனுப்பினவை. உங்கட அக்கா குடும்பம்தானே இந்தக் கலியாணத்தை எப்பிடியும் செய்திட வேணும் எண்டு 'டொனேசனும்' வாங்கி னவை. இனி நான் எப்பிடி ஊருக்குத் திரும்பிப் போவன்...' என்று சொல்லி அழத் தொடங்கி விட்டாள்.
'இந்தா பாரும்! அழுது குழறி இஞ்ச ஒண்டும் நடக்காது. அக்கா அவைதான் இந்தக் கலியாணம் பேசினவை. பொம்பிளை நல்ல வடிவு எண்டு எழுதினவை. ஆனால் உம்முடைய நிறத்தைப் பற்றி ஒண்டும் எழுதேல்ல. நானும் நினைச்சன் மெல்லிய வடிவான பிள்ளையாத்தான் வருவீர் எண்டு. எயார்ப்போட்டில உம்மைக் கண்டவுடனே ஏங்கிப் போனன். வேறு பொம்பிளை வந்திட்டுதோ எண்டு பிறகு ஊர் பெயர் கேட்ட பிறகுதான் நம்பினனான்' என்று நீண்ட லெக்சர் அடித்து முடித்தான்.

சியாமளாவிற்குப் புரியவில்லை இந்த ஆண்கள் ஏன் இப்படி 'நிறத்துக்கும் உடலு க்கும்' அலைகிறார்கள் என்று. ஒரு பெண் படித்த புத்திசாலியாக இருந்தால் ஒரு குடும்பம் நடத்த இதைவிட வேறு என்ன தகுதி வேணும். நிறம், உடலமைப்பு குடும்பம் நடத்துவதில் என்ன பங்கு வகிக்கப் போகிறது. இவ்வளவு பேசும் இவர் ஓஎல் கூட பாஸ் பண்ணவில்லை என்பது அவள் அறிந்த ஒன்று.

ஆண்களுக்கு படிப்பு, நிறம், அழகு எதுவுமே தேவையில்லை; ஆனால் பெண்களுக்கு மட்டும் ஏன் இந்தப் பாகுபாடு என மனம் வேதனையடைந்தாள்.

எவ்வளவு ஆண்டுகள் தான் போகட்டும்; காலம் எவ்வளவு தான் மாறட்டும். இந்தவகைப் பிரச்சினை ஒருபோதும் ஓயாது.

அடுத்தநாள் காலை செல்வச்சந்திரன் நேரத்தோட வேலைக்குச் சென்றதும், தானும் எழுந்து ஊரிலிருந்து கொண்டு வந்த உடமைகளை தன் பையில் எடுத்துக் கொண்டு அவளும் வீட்டை விட்டு வெளியேறி விட்டாள். இனி இந்த வீட்டில்

www.tamilarangam.net

ஒரு நிமிடமும் இருக்கக் கூடாது என்பது அவளின் எண்ணம். வெளியில் வந்த பின்புதான் அவளுக்கு வேதனையாக இருந்தது. அந்த ஊரில் யாரையும் தெரியாது; பாஷையும் புரியாது.
வின்ரர் காலம் என்பதால் பனி பெய்து கொண்டிருந்தது. சாலையோரம் எல்லாம் பனிக்குவியல்கள் வெண்பஞ்சு போல குவிந்து கிடந்தது. கால்கள் பனியுள் புதைய கடுங்குளிரையும் பொருட்படுத்தாது மனதைத் திடப்படுத்திக் கொண்டு கால்போன போக்கில் நடக்கத் தொடங்கினாள்.

வெகுதூரம் சென்றபின் சாலையைக் கடப்பதற்கு பச்சை விளக்கிற்காக காத்து நின்ற கும்பலுடன் அவளும் சேர்ந்து நின்றாள். அப்பொழுதுதான் பார்த்தாள், அந்தப் பெண்மணியை. 'பொட்டு வைத்த தமிழ் முகம்' புன்சிரிப்புடன் அவளை நோக்கி வருவது தெரிந்தது. அருகே வந்த அந்தப் பெண்மணி சியாமளாவை நோக்கி,
'நீர் தமிழா, யாழ்ப்பாணமா?' என சுத்த யாழ்ப்பாணத் தமிழில் கேட்டதும் அடக்கி வைத்த துன்பமெல்லாம் அணைகடந்து ஓவென அவளைக் கட்டிக் கொண்டு அழத் தொடங்கி விட்டாள்.
'இதிலை நிண்டு அழாதையும். என்னுடைய வீடு பக்கத்திலை தான். வாரும் வீட்டை போய்க் கதைப்பம்' என அன்பாக அவளை அழைத்துச் சென்றாள்.

'நான் மிஸிஸ் நந்தகோபால். இங்க ஜேர்மனியில 9 வருசங்களா இதே ஸ்ரட்டில தான் இருக்கிறன். உம்மைக் கண்டதில்ல. நீர் அவுட் ஒவ் சிற்றியில இருந்து வந்தனீரோ?' என அன்பாக விசாரித்தாள்.
சியாமளா தான் செல்வச்சந்திரனைத் திருமணம் செய்ய வந்த சோகக் கதையை கண்ணீருடன் சொல்லி முடித்தாள்.

'நீர் ஒன்றுக்கும் கவலைப்படாதையும். இங்கு எனக்கு மூண்டு ரூம் இருக்கு. என் கணவர் இங்கு வேலை பார்க்கிறார். இரண்டு பிள்ளைகள். நீர் இப்போதைக்கு எங்களோட தங்கலாம். நாளைக்கு சோசலில போய்க் கதைத்து உம்மைப் பதிந்து செய்ய வேண்டியவற்றைக் கவனிப்பம்' எனக் கூறினாள்.
சியாமளாவிற்கு அந்த ஆறுதல் வார்த்தைகள் அருமருந்தாக இருந்தன.

நான்கு, ஐந்து மாதங்கள் அவர்களுடன் ஒன்றாக வசித்த சியாமளா ஜேர்மன் பாசையைப் படித்து தனியாக வெளியில்

**புது உலகம் எமை நோக்கி**

*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

சென்று எந்த வேலையையும் செய்யும் ஆற்றலைப் பெற்று, தனித்து இந்த உலகில் வாழும் துணிச்சலையும் பெற்று விட்டாள். சோசல் ஒவ்விஸில் தானே சென்று கதைத்து தனக்கென ஒரு அப்பாட்மென்ட கிடைக்கவும் வழிசெய்து, எந்தவித பிரச்சினையும் இல்லாது இப்போது நிம்மதியாக வாழ்கிறாள்.
தன் பெற்றோருக்கு தன் நிலைமையை அறிவிக்கத்த தவறவில்லை சியாமளா. அவர்கள் எப்டியெல்லாம் கதறியிருப்பார்கள் என்பதை மனக்கண் முன் கூடப் பார்க்க விரும்பவில்லை.
தம்பி இளங்கோ இப்போது கண்டி யூனிவேசிற்றியில் படித்துக் கொண்டிருக்கிறான். ஐயா விற்ற தோட்டங்காணிகளை அவர்கள் இன்னும் கூடுதலான பணம் கொடுத்து வாங்கியது மல்லாமல், சிவப்பிரகாசத் தாரின் வீடு அந்த ஒழுங்கையிலேயே பெரிய கல்வீடாக உயர்ந்து நிமிர்ந்து நிற்கிறது.

தனது குடும்பத்திற்கென்றே உழைப்பது என்று தீர்மானித்த அவளின் மனதில் இப்போது எந்தவித சலனமும் இல்லை. கல்யாணம் செய்வதில் ஒரு பெண்ணுக்கு இன்பம் என்பது பொய்யென உணர்ந்தாள் சியாமளா. இப்படியான தியாகத்திலும் கூட நிறைவுண்டு.

இப்போதெல்லாம் சோசல் ஒவ்வீஸிற்கு பல தழிழர்களுக்கு அவள்தான் மொழி பெயர்ப்பாளராகப் போகிறாள்.
சிந்தனையை எங்கோ பறக்கவிட்டு கடந்தகால நினைவில் மூழ்கி இருந்தவளை அழைப்பு மணி நிகழ்காலத்திற்குத் திருப்பியது. எழுந்து கதவைத் திறந்தவள், அங்கு திருமதி நந்தகோபாலுடன் வயது வந்த ஒரு ஜேர்மன் பெண்மணியும் வந்து நிற்பதைக் கண்டாள்.

'சியாமளா இவர்தான் நான் சொன்ன அந்த ஜேர்மன் லேடி. இவவுக்கு புருசனும் இல்லை பிள்ளைகளும் இல்லை. அவர் யாராவது தமிழர் ஒருவரை 'தத்து' எடுக்க விரும்புகிறார். நான் உமது நிலைமையைச் சொல்ல, அவவிற்கு நல்லா பிடித்துப் போய்விட்டது. உமக்குச் சம்மதம் என்றால் ஆகவேண்டிய மற்றக் காரியங் களைப் பார்ப்பதாக அவர் சொல்கிறார்' என சொல்லி முடித்தார் திருமதி நந்தகோபால்.

இன்று தைப்பொங்கலும் அதுவுமாக என் பெற்றோரை நினைத்து நான் கவலைப் படுகையில், இப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கு. என் பெற்றோரின் கடமையை இப்படி ஒரு வயதுபோன மூதாட்டிக்கு செய்ய வழிவகுத்த ஆண்டவனுக்கு நன்றி சொல்லி, தன் பூரண சம்மதத்தைத் தெரிவிக்கிறாள் சியாமளா.

www.tamilarangam.net



அதிகாலை ஆறு மணிக்கு கிறிங், கிறிங் என்ற பெரிய சத்தத்துடன் மணிக்கூடு தனது வேலையைக் கிரமமாகச் செய்தது. அலாரத்தின் சத்தத்தால் திடுக்கிட்டு விழித்த கோகிலா அதற்குள் விடிந்து விட்டதே என்று நினைத்தவாறு கண்களைக் கசக்கி சோம்பலை முறித்துக் கொண்டு எழுந்தாள்.

அருகில் துயின்று கொண்டிருந்த கணவன் மாதவனை 'இஞ்சாருங்கோ அப்பா நேரமாச்சு. எழும்புங்கோ' என எழுப்பிவிட்டு தனது கடமைகளைச் செய்ய ஆயத்த மானாள். மாதவனோ மனைவியின் குரலைக் கேட்டவுடன் பத்து நிமிசம் இருக்குத் தானே, ஆறுதலாக எழும்புவம் என மறுபக்கம் புரண்டு படுத்தான்.

கோகிலா கணவன் வழமையாக வேலைக்குக் கொண்டு போகும் பாக்கிற்குள் காலைச் சாப்பாடு, மதியச் சாப்பாடு என இரண்டாக பிரித்து பார்சல் கட்டி வைத்தாள். சுடுதண்ணீர் போத்தலில் நிறைய தேநீர் வார்த்து வைத்தாள். இன்னும் இடை நேரங்களில் சாப்பிடுவதற்கென அப்பிள், ஒரேஞ் என்று போட்டு வைத்தாள். பின்னர் சுடச்சுட பால் கோப்பி போட்டுக் கொண்டு போய் 'இந்தாங்கோ' என்று கணவனிடம் கொடுக்க, அவனும் வாங்கி அருந்தி விட்டு 'ஆ, அப்பாடா!' என்று கொட்டாவி விட்டு எழுந்தான்.

'என் கண்மணி' என்று கூறி அவளின் கன்னத்தில் கிள்ளி விட்டு விறுவிறு என போய் பல் துலக்கி முகம் கழுவி விட்டு எங்கே லோங்ஸ், எங்கே சப்பாத்து சொக்ஸ்?' என இருந்த இடத்திலேயே கேட்க, கோகிலாவும் ஓடியாடி எடுத்துக் கொடுத்து அவனை வேலைக்கு அனுப்பி விட்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.



# மாறியது நெஞ்சம்

**-விக்னா பாக்கியநாதன்-**
*ஜேர்மனி*

மாதவன் தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இரண்டு வருடங்களாக வேலைசெய்து வருகிறான். ஓரளவுக்கு சரளமாக டொச்சில் கதைப்பான்.

நல்ல இனிதான இல்லற வாழ்க்கையின் ஆரம்பப் படியில் வாழ்ந்து வந்தான். ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன் என்றபடியால் வீட்டுப் பிரச்சனைகள் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. அத்தி பூத்தது போல் கடிதம், பணம் என்பன வீட்டுக்கு அனுப்புவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோகிலாவும் அவனுடைய எந்தச் செயலுக்கும் மறுப்புத் தெரிவிப்பதில்லை. தன் 'இலட்சியக் கணவன்' அவன் என்று அவனைச் சந்தோசமாக வைத்திருப்பதே தனது வேலையென நினைத்து வாழ்ந்து வந்தாள்.

இளஞ் சோடிகள் திருமணமாகி மூன்று வருடங்கள் தான். கடவுள் ஏதோ வகையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலையைக் கொடுப்பவர்தானே. அதேமாதிரி இவர்களுக்குக் குழந்தையில்லாத கவலையைக் கொடுத்திருந்தான். ஆனாலும் அது பெரிதாக அவர்களுக்குத் தோன்றவில்லை. இளம் தம்பதிகள் என்றபடியால் திடீரென குடும்பச் சுமையை ஏற்றுக் கொள்ளவும் விரும்பவில்லை எனவும் சொல்லலாம்.
கோகிலாவுக்கு இது கவலைதான். ஆனால் காட்டிக் கொள்வதில்லை.

கணவன் வேலைக்குப் போய்விட வீட்டிலே கோகிலா தனிமையில் காலத்தைப் போக்கி, மாலையானதும் அவனை எதிர்பார்த்து மகிழ்ந்து உரையாடுவதுமாக வாழ்ந்தாள். தனியே இருக்கும்போது டொச் புத்தகங்களை வாசிப்பதில் அக்கறை காட்டினாள். மிகுதி நேரங்களில் ரீவி பார்ப்பதும், இங்கு உருவாகும் சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுவதுமாக பொழுது போக்கினாள்.

மாதவன் தொழிற்சாலையில் மற்றவர்களைக் கவரக் கூடிய முறையில் வேலை செய்தான். தக்க ஊதியமும் அவனுக்குக் கிடைத்தது. அவன் 'ஆசியன்' என்ற காரணத்தினால் தொழிற்சாலை முதலாளி அவன் மீது தனிப் பற்று வைத்திருந்தார். சில நேரங்களில் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று உரையாடுவதுமுண்டு. ஒரு முறை முதலாளி அவனிடம் மனைவியையும் அழைத்து வரும்படி சொன்னார். 'அவவுக்கு டொச் மொழி தெரியாது. சிலகாலம் செல்ல கூட்டி வருவேன்' என்று அவன் கூறியிருந்தான்.

முதலாளியின் மனைவி மக்கள் கூட மாதவனில் அன்புடனும் அவனுக்கு உதவி செய்ய வேண்டும். என்ற ஆர்வத்துடனும் பழகி வந்தனர். மாதவன் தன் முதலாளி குடும்பம் பற்றியும் அவர்கள் காட்டும் பரிவு பற்றியும் கோகிலாவுக்கு அடிக்கடி சொல்லுவான். கணவனுக்குக் கிடைக்கும் மரியாதையை எண்ணி அவள் சந்தோசப் படுவாள்.

ஒரு நாள் மாதவன் வேலை முடிந்து முதலாளியின் அழைப்பின் பேரில் அவருடைய வீட்டுக்குச் சென்றான். இதை முன்கூட்டியே கோகிலாவுக்கு தெரிவித்திருந்தான். முதலாளியின் வீட்டுக்குப் போனபின்பு தான் அவருடைய கடைசி மகனின் பிறந்தநாள் என அறிந்தான். அங்கு முதலாளியின் உறவினர் பலர் வந்திருந்தனர். கொண்டாட்டத் திற்கு முதலாளியினுடைய மனைவியினுடைய சகோதரியும் வந்திருந்தாள். பார்ப்பதற்கு அழகான தோற்றம் அவளுக்கு. அவளுக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை. வங்கி ஒன்றில் காசாளராக வேலை பார்க்கிறாள்.

www.tamilarangam.net

பேர்த்டே பார்ட்டி ஆரம்பமாகி சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. உணவுகள், குடிவகைகள் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன. மாதவனுக்கு ஒரு புது அனுபவம்தான் அவன் குடிவகைகளை அறிந்திருக்கிறானே தவிர, குடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாக இதுவரை காலமும் வாழ்ந்தது கிடையாது. மேலால் ருசி பார்த்த நாட்களும் உண்டு. அந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குடிக்க வேண்டிய நிலையில் குடித்து விட்டான். முதலாளி, அவரின் மனைவி, மனைவியின் சகோதரி மிலாணி எல்லோரும் நகைச் சுவையாகப் பேசி கிளாஸ் வைப்பதும் தூக்குவதுமாக குடித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.
நேரம் போக வந்தவர்கள் மெல்ல விடைபெற்றுப் போனார்கள்.

இறுதியில் மாதவன் மட்டும் தான் இருந்தான். சிறிது நேரத்தின் பின் அவனும் போவதற்கு எழுந்தான். அதிகம் குடித்திருந்த படியாலும், பழக்கம் குறைவு என்ற படியாலும் அவன் தள்ளாடினான். எப்பிடித்தான் குடித்தாலும் ஜேர்மன்காரர்கள் நிதானம் இழப்பது அருமை என தனக்குள் நினைத்துக் கொண்டான். அவன் தள்ளாட்டத்தைப் பார்த்த முதலாளி அவனுடைய நிலைமையைப் புரிந்து கொண்டார். மாதவனை வீட்டில் கொண்டு போய் விடும்படி மிலாணியை கேட்டுக் கொண்டார். மிலாணி மாதவனின் கையைப் பிடித்து, கூட்டிக் கொண்டு போய் காரின் முன் இருக்கையில் அமர வைத்தாள். சாரதி இருக்கையில் அமர்ந்து காரைச் செலுத்தினாள். அவளுக்கு பாதை தெரியாத படியால் தூங்கிக் கொண்டிருந்த மாதவனைத் தட்டித் தட்டி பாதையைக் கேட்டுக் கொண்டிருப்பது அவளுக்கு சிரமமாக இருந்தது.

தற்செயலாக மிலாணியின் கண்களில் மாதவனின் சேட் பொக்கற்றிலிருந்த கடித உறை தென்பட்டது. அதை அவள் எடுக்கும்போது அவளுடைய கை மாதவனின் மார்பில் உராய்ந்தது. அப்போது அவன் 'கோகிலா' எனக் கூப்பிட்டு அவளை அணைத்தான்.
அவனிலிருந்து சிரமப்பட்டு தன்னை விடுவித்துக் கொண்ட மிலாணி உறையில் எழுதப்பட்ட முகவரியைப் படித்து அவனுடைய முகவரியைத் தெரிந்து கொண்டு வீட்டில் கொண்டு போய் இறக்கி விட்டாள்.

கோகிலா மாதவனை எதிர்பார்த்த வண்ணம் நித்திரை கொள்ளாதிருந்தாள். 'நேரம் சென்றுவிட்டது. மன்னிக்கவும்' என்றுவிட்டு, மிலாணி காரில் ஏறிச் செல்ல மாதவன் விட்டிற்குள் வந்தான். அவன் நடக்கும் போது விழப் போவதைக் கண்ட கோகிலா அவனைத் தாங்கிப் பிடித்துக்

---

புது உலகம் எமை நோக்கி

---

**தான் எந்தப் பெண்ணுடனும் பழகலாம். அவள் கையைப் பிடிக்கலாம். அதை மனைவி பொறுக்க வேண்டும் வெறும் நட்புத்தான் என்று மனைவி நினைக்க வேண்டும். சந்தேகம் கொள்ளக் கூடாது. ஆனால் ஒரு பெண் வேலை செய்யும் இடத்தில் ஆண்களுடன் பழக்கம் ஏற்பட்டால் சந்தேகத்துடன் நேரடியாக விசாரிக்கிறார்கள்.**

www.tamilarangam.net

கொண்டாள். கூட்டிக் கொண்டுபோய் படுக்க வைத்தாள். அவனது சப்பாத்துக்களை கழற்றிவிட்டு தானும் சரிந்து கொண்டாள். அன்றுதான் அவள் கண்களில் நீர்முட்டி வழிய ஆரம்பித்தது.
சிந்தனைகள் கற்பனைகள் எல்லாம் சிதறிப் போயின.

மறுநாள் மாதவன் வேலைக்குப் போவதற்கு முன், முதல்நாள் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் நடந்தவற்றைக் கூறினான்.
'என்ன செய்வது? அவர்கள் தருவதைக் குடிக்க வேண்டிய கட்டாயம். நான் குடிக்க மறுத்தால் நாகரீகமற்றவர்கள் என்று நினைப்பார்கள். அவர்கள் உண்டு குடித்து மகிழும்போது நான் அதில் பங்குபற்றாமல் விடுவது சரியோ? சேர்ந்து ஒத்துழைப்பது தானே நாகரீகம். உமக்குத் தெரியும்தானே. அதனால்தான் குடித்தேன். இனிமேல் இப்படிக் குடிக்கமாட்டேன். உமது முகமே வாடிவிட்டது. உமக்கு விருப்பம் இல்லாதவற்றை இனி நான் செய்ய மாட்டேன். சும்மா தானே குடிச்சனான். குடியில ஆசைப்பட்டா? நீர் கவலைப்படக் கூடாது' என்று மாதவன் அவளைத் தேற்றினான். கோகிலாவும் திருப்தி அடைந்தாள். முதலாளி இனிமேல் கேட்டால் தனக்கு ஒத்து வரவில்லை என்று சொல்லி விடுவதாகவும் மாதவன் அவளுக்குக் கூறினான்.

சொன்னது போலவே மாதவன் குடிக்காமல் இருந்தான். தன்மீது அவன் காட்டும் அன்பு மரியாதையை எண்ணி கோகிலா உருகிப் போனாள். மாலை நேரங்களில் மாதவனுடன் கதைப்பதற்காக மிலாணி தொழிற்சாலைக்கு வரத் தொடங்கினாள். மாதவனும் வீட்டிற்குப் போவதற்கு முன் கதைத்து மகிழுவான்.

ஒருநாள் மாலை மாதவன் மிலாணியை தனது வீடிற்குக் கூட்டிப் போனான். தனது தொழிற்சாலையில் வேலை செய்பவள் என்று மனைவிக்கு அறிமுகப் படுத்தினான். கணவனுடன் வேலை செய்பவள் என்ற மரியாதையுடன் கோகிலா மிலாணியை உபசரித்தாள். டொச்சில் அவளுடன் உரையாடினாள். மாதவனின் கதிரைக்குப் பக்கத்திலேயே மிலாணி அமர்ந்து கொண்டு அவனது முதுகில் தட்டுவதும், கையில் பிடிப்பதுமாக குறும்புகளுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். மாதவனுக்கு சங்கடமாக இருந்தது. கோகிலாவுக்கு ஏதோ மாதிரி இருந்தது.

ஜேர்மனியப் பெண்கள் இப்படித்தான் சரிசமமாகப் பழகுவார்கள். ஆண்கள் என்று வெட்கப்பட மாட்டார்கள் என்று மிலாணி போனபின் மாதவன் கோகிலாவை சமாதானப்படுத்தினான். கணவன் மேல் வைத்திருக்கும் அன்பு, நம்பிக்கை என்பவற்றால் கோகிலா அவனைத் தவறாக எடைபோடவில்லை.

அதன்பின் தொடர்ந்து அவர்கள் வீட்டுக்கு வந்து உரையாடி இலங்கைச் சாப்பாடு என்று சாப்பிடத் தொடங்கினாள். கோகிலா அதைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகப் படவில்லை. சில நாட்களில் அவள் மிலாணியின் சிநேகிதமாகி விட்டாள்.
ஒருநாள் கோகிலா மிலாணியிடம் தனக்கு ஒரு வேலை எடுத்துத் தர முடியுமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கேட்டாள். 'வீட்டில் தனிய இருக்க பொழுது போகுதில்ல. குழந்தைகளும் இல்லை. வேலை செய்தால் நல்லது என்று நினைக்கிறேன்' என்று காரணம் சொன்னாள். தன்னுடைய சகோதரன் வைத்திருக்கும் ரெஸ்ரொரண்டில் வேலை வாங்கித் தருவதாக மிலாணி உறுதியளித்தாள்.

வேலைக்குப் போக விரும்பும் தனது எண்ணத்தை மாதவனுக்குத் தெரிவித்தாள். 'கோகிலா, நல்லது உமது பொழுதுபோக்குக்காவது நல்லது' என்று அவன் சம்மதித்தான்.

இரண்டு மாதங்களின் இறுதியில் கோகிலா ரெஸ்ரொரண்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டாள். காலையில் மாதவனும் கோகிலாவும் ஒன்றாகவே வேலைக்குக் கிளம்புவார்கள். வேலைக்குப் போவது கோகிலாவுக்கு திருப்தியாக இருந்தது. இருவரும் உழைத்ததினால் பணமும் சேர்ந்தது. எதிர்கால வாழ்க்கையை சந்தோசமாக அமைக்கலாம் என்று அவள் கற்பனை பண்ணினாள்.

கோகிலா வேலை செய்யும் ரெஸ்ரொரண்டின் ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு ஒரு கொண்டாட்டம் நடைபெறும் என ஒரு மாதத்திற்கு முன்பே அறிவிக்கப்பட்டு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. கொண்டாட்டத்திற்கு ஒரு கிழமைக்கு முன் அங்கே வேலை செய்வோருக்கு மேலதிக வேலை நேரம் இரவு பத்து மணிவரை கொடுக்கப் பட்டது.

அந்த ரெஸ்ரொரன்டில் கோகிலாவுடன் வேறு பெண்களும் வேலை செய்தார்கள். அவர்கள் களைத்துப் போயிருக்கும் போது பியர், வைன் என்பன இலவசமாகக் கொடுக்கப்பட்டன. அவளுடன் வேலை செய்யும் பெண்ணொருத்தி அவளிடம் வைனை நீட்டினாள். 'குடித்தால் களைப்பெல்லாம் போய்விடும்' என்று ஆலோசனை கூறினாள். கோகிலா முதலில் மறுத்து விட்டாள். அப்போது அவள் கணவன் நாகரீக மில்லை என்று நினைப்பார்கள். தரும் போது மறுக்காமல் குடிக்க வேண்டும். அதுதான் நான் குடித்தேன். அவர்களுடன் சேர்ந்து நடக்க வேண்டும்' என்று ஒருநாள் அவளுக்குச் சொன்னதை நினைத்துக் கொண்டாள். அதன்படி மறுக்காது வைனை வாங்கிக் குடித்தாள்.

புதுப் பழக்கமாதலால் அவளால் தொடர்ந்து வேலைசெய்ய முடியவில்லை. அவளு டைய நிலைமையைப் பார்த்த சக வேலையாள் பிலிப் தன்னுடைய காரில் ஏற்றி அவளை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனார்.

புது உலகம் எமை நோக்கி

**தனக்கு பெண்களின் நட்பு ஏற்படுவது போல மனைவிக்கும் வேலை செய்யும் இடத்தில் ஆண்களின் பழக்கம், நட்பு ஏற்படும் தானே என சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம், புரிந்துணர்வு, பொது அறிவு ஆண்களுக்கு இல்லையா?**

99

www.tamilarangam.net

மனைவியை எதிர்பார்த்துக் காத்திருந்த மாதவன் அவளைக் கொண்டு வந்து இறக்கி விட்ட பிலிப்புக்கு நன்றி கூறி அனுப்பி வைத்தான்.
'நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா? எனக்குக் களைப்பாய் இருக்கிறது' என்று கோகிலா போய்ப் படுத்து விட்டாள்.
சாப்பிட்ட பின் படுக்கைக்கு வந்த மாதவன் கோகிலாவிடமிருந்து மதுவாடை அடிப்பதை உணர்ந்து அதிர்ச்சியடைந்தான். உடனே அவளை உலுப்பி விசாரித்தான். கோகிலா நடந்ததைச் சொன்னாள் . மாதவனுக்கு கோபமும் வெறுப்புமாக இருந்தது. என்றாலும் பேசாமல் படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் இருவரும் கதைக்காமலேயே வேலைக்குப் போனார்கள். இரவு வேலையால் வந்ததும் மாதவன் துள்ளிக் குதித்தான்.
'இரவு என்ன களைப்பு?'
'நீங்கள் தானே சொன்னீர்கள், நாகரீகமில்லை யெண்டு. அதனால்தான் மருந்து போல் குடித்தேன்' என்றாள் கோகிலா.
மாதவனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வர காலால் உதைத்தான்.
கோகிலா தடுமாறி விழுந்தாள்.
'உன்னை யார் குடிக்கச் சொன்னது?' மாதவன்
'நீங்கள் தான் சொன்னீர்கள்' கோகிலா
'தருவதை மறுக்கப்படாது என்று...'
கோகிலா சொல்லி முடிப்பதற்குள் அவள் கன்னத்தில் பளாரென்று ஒரு அடி.
'நீ இனி வேலைக்குப் போக வேண்டாம், போகக் கூடாது' என்று மாதவன் கத்தினான்.
'அதெப்பிடி உடனே நிற்பது? முதலாளிக்குச் சொல்லிப் போட்டுத்தான் நிக்கலாம்' கோகிலா கன்னத்தைத் தடவியபடி 'ஏன் வேலைக்குப் போகக் கூடாது' என்று கேட்டாள்
'குடிக்கவா?' மாதவன் கோபத்தில் வெடித்தான்.
'நீங்கள் குடிக்கேக்க பிழையில்லை. எனக்கு அந்த நிலைமை வந்து நான் குடிச்சா பிழை. வேலைக்குப் போகக் கூடாது; சரி இப்ப வாற ஆண்டு விழாவோட நான் வேலைக்குப் போவதை நிறுத்துறேன்'.

ஆண்டு விழா வந்தது. கோகிலா மாதவனையும் கூட்டிக் கொண்டு ரெஸ்ரொரண்டுக்குப் போனாள். இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. கோகிலா உள்ளே சாப்பாடு தயாரிக்கும் இடத்தில் ஓய்வில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தாள். முன் பகுதியிலிருந்து இசையை ரசித்துக் கொண்டிருந்த மாதவன் தாகம் எடுக்க கோகிலாவைத் தேடிக் கொண்டு உள்ளே போனான்.
அங்கே பிலிப் கோகிலாவின் முதுகில் தட்டி, தோளில் தட்டி, அதை எடு இதைச் செய் என்று சுறுசுறுப்பாக வேலைவாங்கிக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் அப்படியே நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த மாதவனால் பொறுக்க முடியவில்லை. தன்னை மறந்து 'கோகிலா' என்று உரத்துக் கத்தினான்.
கோகிலா ஆச்சரியத்துடன் திரும்பினாள்.

www.tamilarangam.net

அவளை நெருங்கிய மாதவன் 'சரசமாடவா இங்கு வந்தாய்?' என்று கேட்டான் கோகிலா வாயடைத்துப் போனாள்.
என்னையா? என் கணவரா இப்படிக் கேட்பது? அவள் உள்ளம் நொருங்கியது. மாதவன் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டான்

கோகிலா வேதனையுடன் தனது வேலையை முடித்துக் கொண்டு மாதவனைத் தேடினாள். அவன் அப்போதே போய்விட்டதாக சக வேலையாள் ஒருவர் தெரிவித்தார். கோகிலா வீட்டுக்கு வந்தாள். மாதவன் அங்கில்லை. சிறிது நேரம் கழித்து வந்தான். 'உனக்கு வெட்கம் இல்லையே, அவனோட முட்டிக் கொண்டு வேலை செய்ய? நீயும் அதுக்கு ஒப்புக் கொண்டாயா? என்னைவிட அவன் அழகு உனக்குப் பிடித்துவிட்டதா?' என்று பொரிந்தான்.
கோகிலா என்ன சொல்வதென்று தெரியாமல் தலையில் கை வைத்தாள்.

'சீ இந்த ஆண்களே சுயநலவாதிகள். சந்தேகக்காரர்கள். தான் எந்தப் பெண்ணுடனும் பழகலாம்; அவள் கையைப் பிடிக்கலாம். அதை மனைவி பொறுக்க வேண்டும் வெறும் நட்புத்தான் என்று மனைவி நினைக்க வேண்டும். சந்தேகம் கொள்ளக் கூடாது. விசாரிக்கக் கூடாது. அவன் கூட்டி வரும் பெண்ணுக்கு மரியாதை கொடுத்து மனைவி வரவேற்க வேண்டும். இதுதான் ஆண்களின் நோக்கம். ஆனால் ஒரு பெண் வேலைக்குப் போய் வேலை செய்யும் இடத்தில் ஆண்களுடன் பழக்கம் ஏற்பட்டால் அவள் அவனைக் கணவனாக அடைய ஆசைப்படுகிறாள் என்று அர்த்தம் கொள்கிறார்கள். சந்தேகத்துடன் நேரடியாக விசாரிக்கிறார்கள். ஆணின் கை தெரியாமல் பட்டாலும் பெண் அதை வலிந்து செய்ததாகவே கணவன் நினைக்கிறான் தனக்கு பெண்களின் நட்பு ஏற்படுவது போல மனைவிக்கும் வேலை செய்யும் இடத்தில் ஆண்களின் பழக்கம், நட்பு ஏற்படும் தானே என சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம், புரிந்துணர்வு, பொது அறிவு ஆண்களுக்கு இல்லையா என கோகிலா தனக்குள்ளேயே குமுறினாள்

எவ்வளவோ நம்பிய என்னை இவர் இப்படி சந்தேகப்பட்டார் என்றால் இனி அவரோடு வாழ்வது போலிதான். கணவன் மனைவிக்குள் சச்சரவு இருக்கலாம் ஆனால் சந்தேகம் இருக்கக் கூடாது. குடும்பம் எனும் இலையை அரித்துத் தின்னும் புழுப் போன்றது சந்தேகம் என்று மன வேதனைப்பட்டாள். தனது வாழ்க்கையை இந்த அத்திவாரத்தில் அமைக்க முடியாது என்று எண்ணினாள்.

புது உலகம் எமை நோக்கி

*வாசகர் குறிப்பு*

99



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிலாணி என்ற பெண்ணுடன் என் மனசுக்குப் பிடிக்காத மாதிரி அவர் நடந்து கொண்டார். அதை நான் தப்பாக எல்லைவில்லையே. அவரில் எனக்கு அசையாத நம்பிக்கை இருந்தபோது நான் சந்தேகப்பட அவசியமே இல்லை. இப்படியிருக்க என்னில் நம்பிக்கையுள்ள கணவன் எப்படி என்னில் சந்தேகப்பட முடியும்?
பணம் தொழில் குடும்பம் என்று வேலைக்குப் போனேன். இப்பிடி உருவாகும் என்று நினைக்கவில்லையே. பணம் இனி எதற்கு? இப்பிடி வரும் என்று முன் கூட்டியே அறிந்துதான் கடவுள் எமக்குப் பிள்ளைப் பாக்கியத்தைக் கொடுக்க வில்லை என்று பலவாறு சிந்தித்த பின் வீட்டைவிட்டு வெளியேறினாள் கோகிலா

இந்த உலகத்தில் ஒரு பெண்ணுக்கு தன்னம்பிக்கை துணிவு இருக்குமேயானால் தனித்து வாழலாம் என்ற எண்ணமுடைய புரட்சிப் பெண் இவள்!

**வேலைக்காரிகள்**

கிர். கிர்.. கிர்...
காதுகளில் ஒலித்த அலாரத்தின் சத்தம் யனாவை தூக்கத்திலிருந்து எழும்ப வைத்தது.
'அதுக்கிடையில ஆறு மணியாச்சே'
உடம்பு இன்னும் கொஞ்சம் தூக்கத்தை வேண்டியது.

'இது என்ன வீடே? வீட்டையெண்டால் எப்பவும் எழுந்து கொள்ளலாமே'
என நினைக்கையில் ஓர் ஆற்றாமை தோன்றியது. இன்றும் ஏச்சுக்கள் விழுமோ என்று மனசு தேம்பியது.
'ஏன் இந்த இரவுகள் விடியாமல் இருக்கக் கூடாது?'
எல்லோரும் பொழுதுகள் புலராதா என ஏக்கப்பட, நான் மட்டும் ஏன் இப்படி நினைக்கிறேன் என எண்ணுகையில் அவளுக்கு தன்மீதே வெறுப்புத் தோன்றியது.

எப்படியோ எழுந்து வழமைபோல் வேலைகளில் கவனமானாள். விட்டிலிருந்தவர்கள் ஒவ்வொருவராய் நேஸரி, கொலிஜ், ஓபிஸ் என்று கிளம்பிப் போக சில மணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் தனிமை கிடைத்தது.
'என்ன இது, சுற்றிச் சுற்றி ஒரே வேலையைச் செய்து கொண்டு ஒரே ரீதியில் ஏச்சுக்களை வாங்கிக் கொண்டு ஏன் இப்பிடி வேலைசெய்ய வேண்டும்? ஏன் இங்கே நான் இருக்கிறன்? என்னைப் போல் இன்னும் எத்தனை பேர் வறுமைத் துன்பத்தால் பிழைப்புத் தேடி வந்து இந்தமாதிரி சிறையில் அடைபட்டு, தினமும் அடிவாங்கிக் கொண்டு...'
யனாவால் மேலே நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்தது. யாருடனாவது மனம் விட்டுக் கதைக்க வேண்டும் போலிருந்தது.
'இண்டைக்கு போனைக் கூட உள்ளுக்க வைச்சுப் பூட்டிப் போட்டு போட்டாள்'.

நேரம் நகர்ந்து கொண்டிருக்க... மாலை நேரத்திற்காய் மனசு தவம் செய்தது. மணிக்கூடு அறிவித்து ஓய்ந்ததும் வினோவையும், நிஸாவையும் அழைத்துக் கொண்டு யனா வீதிக்கு வந்தாள். இங்கு ஏற்கனவே மொனிக்கா, சூரியா, சந்தியா, கிளாறா... என்று தோழிகள் குழுமியிருந்தார்கள்.
'சீக்கிரம் வாங்கோடி இதில நிண்டால் அவள் வந்து கதைக்கவிடாள்'
யனா அவசரப்படுத்தினாள்.
எல்லோரும் அந்த அவெனியூவை விட்டு கணப் பொழுதில் வெளியேறிருந்தனர். யனா பூக்களை ரசித்துக் கொண்டு வந்தாள். மாலைப் பொழுதும் மலர்களும் அவளுக்கு நிறைய கலர் கனவுகளைத் தோற்றுவித்தன.
'அக்கா ஐ வோன்ட் ஏ பிளவர்'. கேட்ட மொனிக்கு கிளாரா ஒரு அறை வைத்தாள்.
'ஏனடி குழந்தைக்கு அடிக்கிறாய்?' சந்தியா கேட்டாள்.
'பின்ன என்ன, மற்றதுகளுக்கு அடிக்க முடியுமே?'

**புது உலகம் எமை நோக்கி**

# வேலைக்காரிகள்

**-உதயபானு-**
*ஜேர்மனி*

'பெட்டை தாயிட்டச் சொன்னால் என்ன செய்வாய்?'
'நல்லாய்ச் சொல்லட்டும். இனி இந்த விட்டில என்னால ஒரு நிமிசம் கூடி வேலைசெய்ய முடியாது. குழந்தையே இது சரியான பிசாசு. நாள் முழுக்கப் படுத்திற பாடு போதாதெண்டு றோட்டிலை யும் கரைச்சல் தருகுதுகள்'

'ஏன் சீனத்தி என்னவாம்?'
'கஸ்டமாக் கிடக்கு வீட்டை போகப் போறன் எண்டுறன்,
இடையில போறதெண்டால் உன்ர காசில தான் அனுப்புவன் எண்டு அவள் பாவி சொல்லுறாள். எனக்கு இங்க வேலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்ய முடியாது. ஏஜென்சிக்காரன் மாத்திவிடுறன் எண்டாலும் அவள் விடுறாளில்லை. நினைச்சால் வெறுப்பாக் கிடக்கு'
கிளாறா சலித்துக் கொண்டாள்.
அவளின் ஆற்றாமைக்கு பதில் சொல்லும் நிலைமையிலோ அல்லது ஆறுதல் வழங்கக் கூடிய நிலையிலோ யாரும் அங்கில்லை. எல்லோரும் கைதிக் கூண்டுகளில் அடைபட்டவர்கள் போல. சூழ்நிலை பாதகமாய் இருந்தது.
சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன.

சிங்கப்பூரின் ஆரவாரங்களிலிருந்து அந்த வீதி நிறைய வேறுபட்டிருந்தது. வாகனங் களின் எண்ணிக்கையை கணக்கிடக் கூடியதாய் ஒருவகை நிதானம் இருந்தது.

'இதில இருப்பம்'
நித்தியகல்யாணி மரநிழலில் எல்லோரும் அமர்ந்து கொண்டனர். குழந்தைகள் சொக்லேற், சுவிங்கம் என்று ரப்பர்களைப் பிரித்து வாய்க்குள் போட்டுக் கொண்டனர்.
'அங்க பாருங்கோ, கொஞ்சம் அல்சேசன்கள் வருகுது'
சூரியா சுட்டிய திசையிலிருந்து தாய்லாந்து நாட்டு இளைஞர்கள் சிலர் தங்கள் மொழியில் கேலி பேசியபடி வந்துகொண்டிருந்தனர். இவர்களை அண்மித்ததும் அவர்களின் நடை தடைப்பட்டது. மொழி புரியாவிட்டாலும் அவர்களின் கேலியை உணர்ந்ததில் ஆத்திரம் அடைந்தார்கள்.
'சனியன் பிடிப்பான்கள்'
அந்த இளைஞர்கள் எதையும் சட்டைசெய்யாது சிரிப்புடன் நடந்தார்கள்.
'அல்சேசனுகளுக்கு விசர் பிடிச்சிட்டுது போல கிடக்கு. அதுதான் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு போகுதுகள்'

'அதுகள விடு. உனக்கு லெற்றர் வந்ததே?'
கேட்ட சூரியாவை யனா வெறித்துப் பார்த்தாள்.
'இல்லையடி, எல்லாம் மறந்திட்டுதுகள் போல. அல்லாட்டி நாங்கள் வேலைக்காரிகள் தானே, எங்களுக்குப் பதில் போட்டால் தங்கட கௌரவம் குறைஞ்சு போம் எண்டு எங்கட தொடர்புகள துண்டிச்சிட்டினம் போல. நீங்கள் இஞ்ச இருந்து கொண்டு இப்பிடிச் சொல்லுங்கோ. ஊரில இருக்கிறதுகளுக்கு இருக்கிற கஷ்டத்த பாராதை யுங்கோ. ஒரு லெற்றர் அனுப்ப பதின்மூண்டுக்கு மேல முடியும்...'
சூரியா சொன்னதில் நியாயம் இருந்தது. எப்போதும் அவள் சொல்வதற்கு மறுப்புத் தெரிவிக்கும் காரணங்கள் மற்றவர்களிடம் இருப்பதில்லை. அவளுக்கு இருக்கும் ஆற்றலுக்கு அந்தச் சூழல் மட்டும் முரணாக இல்லையென்றால்...

'டோன்ற் றன் ஒன் த றோட்!'
'அதுகளை ஏன் பேசுறாய். இதில இருந்தா அதுகள் றோட்டுக்குத் தான் ஓடுங்கள். என்னவேன் அதுகளுக்கு நடந்தால் துலைஞ்சம். வாங்கோ, பார்க் ற்குப் போவம். கெதியில வீட்ட திரும்பிப் போகவேணும். எங்கயோ பார்ட்டிக்குப் போகவேணும்

www.tamilarangam.net

எண்டு சொன்னதுகள்'
எல்லோரும் புறப்பட ஆயத்தமாக எழுந்தனர். குழந்தைகள் கிழித்து வீசிய கடுதாசித் துண்டுகளை மொனிக்கா குனிந்து பொறுக்கிக் கொண்டிருந்தாள்.
'பொலிஸ்காரன் பிடிச்சால் இவையே பைன் கட்டப் போகினம்? அதுக்கும் எங்கட சம்பளத்தில தான் வெட்டுங்கள். திருப்பிக் கேட்டால் ஏன் வீச விட்டனி என்பாளவை எல்லாம் திமிர் பிடிச்சதுகள்'.

மொனிக்காவும், சந்தியாவும் பிறப்பால் சிங்கள மொழி பேசுபவர்கள். ஒரே நாட்டிலிருந்து வந்து ஒரே வேலை செய்கிறோம் என்ற உணர்வுதான் எல்லோர் மனதிலும் இருந்ததே தவிர எந்தவித காழ்ப்புணர்ச்சிகளுக்கும் இடமிருக்கவில்லை.

'ஏன் யனா ஒரு மாதிரி இருக்கிறாய்?'
மொனிக்காவின் குரலில் அன்பும் பரிவும் இழையோடியது.
'ஒண்டுமில்லை, எங்கட சீமாட்டியளை நினைக்க ஆத்திரமாக இருக்கு. நாங்களும் மனிசர்தானே. ஏன் இப்பிடி ஒவ்வொரு நாளும் வார்த்தைகளால கொல்லுறாளவை. ஒரு காரணமும் இல்லாமல் ஏசுறாள். நில வீடுகளில நாலு வருசம், ஆறு வருசமாய் சனம் நிண்டு வேலை செய்யுது. இவளின்ர வீட்டில மட்டும் இரண்டு கிழமை, நாலு நாலு மாசம் எண்டு அதுக்கு மேல நிக்கேலாம எல்லாம் ஓடுதுகள். காலையில ஆறுமணியில இருந்து இரவு பத்து பதினொன்று மட்டும் மிசின் மாதிரி வேலை செய்யிறம். ஒரு அஞ்சு நிமிசம் றெஸ்ற் பண்ண விடுங்களே?'

'இப்பிடி ஒரு அரைமணி நேரமோ முக்கால் மணி நேரமோ மனிசரோட பேசுறதுக்கு சுதந்திரம் கிடைச்சிருக்கே. இதுவும் இல்லாட்டி பைத்தியம் தான் பிடிக்கும்.

'எங்க சுதந்திரம் கிடைச்சிருக்கு? பிள்ளையளையும் சேர்த்துத்தானே விட்டிருக்கு. எங்களுக்கெண்டு என்ன சுதந்திரம் இருக்கு? பசிச்சா சாப்பிடேலாது; ஒரு வருத்தம் வந்தா றெஸ்ற் எடுக்க ஏலாது...'
யனா முடிக்க,
சூரியா தொடர்ந்தாள்...
'தாங்கள் சிரிக்கிறாளவை; கதைக்கிறாளவை. எங்களை மட்டும் ஒருத்தரோடையும் கதைக்க விடுறாளவையில்லை. ஒரு நாளைக்கெண்டாலும் லீவு தாறாளவையே?. அதுவும் இல்லை மாதத்தில இரண்டு நாள் கட்டாய லீவு எண்டு கவன்மெண்ட் அறிவித்தாலும் இவளவையின்ர வீட்டில அது இன்னமும் அமுலுக்கு வரவேயில்லை.

---

**புது உலகம் எமை நோக்கி**

---

**'ஊருக்குப் போனால் முதல் ஏஜென்சிக் காறனுக்குத்தான் முறையா குடுக்கவேணும். சும்மா பொய் சொல்லி காசை வாங்கிக் கொண்டு இங்க அனுப்புறது. நாங்களும் சிங்கப்பூருக்கு போனால் நிறைய உழைக்கலாம் என கனவு கண்டு கொண்டு வாறது. இங்க வந்து பார்த்தால் அல்லோ தெரியுது!'**

”

www.tamilarangam.net

'நூற்றைம்பது வெள்ளி முதல் சம்பளம். பிறகு கூட்டித் தருவினம் எண்டான் ஏஜென்சிக்காறன்; இஞ்ச வந்தா ஒண்டுமில்லை. எல்லாச் செலவும் அவளோடை தான் எண்டான். ஆனா ருத்பேஸ்ற்றில இருந்து கோட்டெக்ஸ் வரை நாங்கள் தான் வாங்க வேணும்'
சூரியாவின் குரலில் விரக்தி வெளிப்பட்டது.
'என்னடி எமியோட புதுசா ஒரு பிள்ளை வந்திருக்கு. அங்க நிண்ட சிங்களப் பிள்ளை போட்டுதே. இவளவை அந்தப் பிள்ளையின்ர பெட்டிக்குள்ள ஒரு செயினை போட்டிட்டு திருட்டுப் பட்டம் சுமத்தி, அதின்ர காசில ரிக்கற் எடுத்து அனுப்பிப் போட்டாளவை. அது சரி, எங்கட றூமுக்கு பூட்டும் இல்லை; திறப்பையும் தாறாளவையாம். அவளவை நினைச்சா என்னவும் செய்யலாம், இப்பிடித்தானே. அநேகமாக கன வீட்டுக்காரர் கொண்ட்றாக்ற் முடியிற நேரத்தில தங்களுக்கு செலவில்லாம, இப்பிடி ஏதேன் பொய்யளச் சொல்லி, இந்த வேலையள் செய்து நாங்கள் கஸ்ரப்பட்டு உழைச்ச காசில எங்களுக்கு ரிக்கற் எடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறாளவை. இதை எங்க போய்ச் சொல்லுறது!'
'அக்கா, ஐ வோன்ட் சம் வோட்டர்'
குழந்தையொன்று கேட்க, சந்தியா பேச்சை முறித்து அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு போனாள். ஏனையோர் தங்கள் மனச்சுமைகளைத் தொடர்ந்து ஒருவருக் கொருவர் பகிர்ந்து கொண்டிருந்தனர்.

'இங்க அந்த அசோக்காவோட திரியும் ஒரு கட்டைப்பிள்ளை... அது நஞ்சு சாப்பிட்டு செத்துப் போச்சு'
'ஐயோ எப்பவடி?'
நீ பேப்பர் பார்க்கேல்லையே?'
பேப்பர் பார்க்க விடுவாளவையே! நீ விசயத்தைச் சொல்லு'
அந்தப் பிள்ளை ஒரு இந்தியன்ர வீட்டை வேலை செய்தது. அந்த வீட்டுக்கார மனிசியன்ர தம்பி அவளை பாலியல் பலாத்காரப்படுத்திப் போட்டான். பெட்டைய சாகும் மட்டும் பலாத்காரம் பண்ணியிருக்கிறான். இது அசோகா சொன்னது. பேப்பரில மெயிட் தற்கொலையெண்டு போட்டிருக்கு'
'அவங்கள் காசைக் காட்டி தப்பிப் போடுவாங்கள். பாவம் அந்தப் பிள்ளை! அது உழைச்சுத்தான் வீட்டைப் பாக்கிறது. இனி அதின்ர குடும்பத்திற்கு இந்த ராஸ்கலுகளே காசு குடுக்கப் போகுதுகள்.
ஊருக்குப் போனால் முதல் ஏஸென்சிக் காறனுக்குத்தான் முறையா குடுக்கவேணும். சும்மா பொய் சொல்லி காசை வாங்கிக் கொண்டு இங்க அனுப்புறது. நாங்களும் சிங்கப்பூருக்கு போனால் நிறைய உழைக்கலாம் என கனவு கண்டு கொண்டு வாறது. இங்க வந்து பார்த்தால் அல்லோ தெரியுது, பேர்தான் சிங்கப்பூர், இதைவிட ஊர் எவ்வளவு திறம் எண்டு. அங்க சிறிலங்கா கவென்மென்றின்ர படையள் எங்கட மூமென்ற்ஸ் எண்டு எல்லாருமா ஆயுதத்தைக் காட்டி கொலை கொள்ளை யெண்டு கொடுமைப்படுத்தியினம். இங்க இவளவை என்னெண்டா சித்திரவதை செய்யிறாளவை.'

www.tamilarangam.net

எங்க பாத்தாலும் கொடுமைக்காரர்கள் தான் தென்படுகினம்! மனிதத்தன்மையே இல்லாத ஜென்மங்கள். இதுகளோட எப்பிடியடி உயிர் வாழுறது? ஒண்டில் தற்கொலை செய்ய வேணும் இல்லாட்டி இவளவைய கொலைசெய்ய வேணும் போல வெறியாக் கிடக்கு.

இவளவையின்ரை ஏச்சுக்களுக்குப் பயந்து ஏன் தற்கொலை செய்ய வேணும்? இதை இப்பிடியே விடக் கூடாது. இப்பிடியே விட்டால் எங்கள கொடுமைப்படுத்திற மாதிரித்தான் இனிவாற பிள்ளையளையும் கொடுமைப்படுத்துங்கள். எங்களுக்கு நேர்ந்தது மற்றப் பிள்ளையளுக்காவது நேராமல் இருக்கவேணும்'

சூரியா நிறையவே சூடாக இருந்தாள்.

'இங்க பார் சூரியா, நீயும் நானும் இப்பிடி ஆத்திரப்பட்டுப் பிரயோசனம் இல்லை. நாங்கள் இருக்கிற வீட்டுக்காரற்றை கொட்டத்தை முடிந்தவரை அடக்கிப் பாப்பம். முடியாட்டி கைவைக்க வேண்டியதுதான்'

'ஏய் அப்பிடி ஒண்டும் செய்து போடாதைங்கோ. உடன பாஸ் போட்டில றெட் மாக் போட்டு ஊருக்கு அனுப்பிப் போடுவினம்.

ஐயோ! இண்டைக்கு கனநேரம் கதைச்சுப் போட்டன். எங்கயோ பார்ட்டிக்குப் போகப்போறன் எண்டதுகள்' கிளாறா பரபரத்தாள்.

'கொஞ்சம் பொறடி! எங்கட சனம் ரண்டு வருகுது'

வந்தவர்களில் ஒருவன் பெண்களைப் போல் தலைமுடி நீளமாக வளர்த்து ஒற்றைப் பின்னல் இட்டு நெற்றியில் பொட்டுடன் தோற்றமளித்தான்.

'நீங்கள் சிறீலங்காவே?' அவர்களில் ஒருவன் கேட்டான்.

'ஓம், ஏன் கேக்கிறியள்?' சூரியா கேட்டாள்.

'இல்லை பாக்கத் தெரிஞ்சுது. நானும் சிறீலங்காதான். நீங்கள் ஊரில எவடம்?'

'அரியாலை'

'என்ன, வெளியில போக வந்து நிக்கிறியளே?'

'ஓம், கனடாவுக்குப் போவம் எண்டு...'

சிறிது நேரம் பலதையும் அலசினார்கள்.

பின் வார்த்தைகள் பாதை மாறத் தொடங்க...

'செருப்பு வேணுமே?'

சூரியாவின் கேள்வியில் அவர்கள் விலகிப் போனார்கள்.

'இனியும் நிக்கேலாது. நான் போறன்' கிளாறா பொறுமையிழந்தாள்.

'சரி, நாளைக்குச் சந்திப்பம்!'

எல்லோரும் ஏதோ நம்பிக்கைகளுடன் பிரிந்து சென்றார்கள்.



வாசகர் குறிப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூரியாவும் யனாவும் பிளவர் றோட்டைத் தாண்டி, றிச்சாட் பிளாசால் நடந்தார்கள்.
'ஏன் சூரியா, கொண்ணை லெற்றர் போட்டிருக்கிறார் எண்டாய், என்னவாம்?'
'காசைச் சேர்த்துக் கொண்டு வரட்டாம். தன்னையும் எங்கேன் வித்து எனக்கும் ஒரு மாப்பிளை வாங்கித் தாறாராம்'. வேதனையுடன் சொன்ன சூரியாவின் கைகளை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள் யனா.
'அப்ப என்ர குஞ்சுக்கு கலியாணம் நடக்கப் போகுது. இனி அவர் வந்தால் எங்கள எல்லாம் மறந்து போடுவாய் என்ன!'
'சும்மா இரு. இப்பிடி ஒரு கலியாணம் செய்ய வேணுமே? நான் இங்க இவ்வளவு காசைக் கொண்டு போய் ஆரோ ஒரு சோம்பேறிட்ட குடுத்து ஒரு பிள்ளை பெற வேணுமே?'
'பின்ன என்ன இப்பிடியே இருக்கப் போறியே?'
'ஏன், இருந்தால் இருபடாதே?'
'இங்க பார் சூரியா, உன்னோட உணர்வுகளப் பாராட்டுறன். உன்ர மனசு விரும்புற மாதிரி பணத்தை நேசிக்காமல் உன்னை நேசிக்கிறவனாய் இருந்தால் கலியாணம் செய்யிறதில தப்பில்லைத் தானே?'
'ஓ.கே! உந்தக் கலியாணக் கதைய நிப்பாட்டுவம்'

'நீ எதையோ மனசுக்க வைச்சுக் கொண்டு கவலைப்படுற மாதிரிக் கிடக்கு. ஏன் எனக்குச் சொல்லக் கூடாதே'
'மற்றவர் துன்பத்தைத் தெரிந்து கொள்; உன் துன்பத்தைச் சொல்லி விடாதே என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார்'
'அவர் சொன்னால் சொல்லட்டும்! நீ எனக்குச் சொல்லு. இல்லாட்டி நாளைக்கு உன்னை பாக்கிறவரைக்கும் சாப்பிட மாட்டன்'
'சரி, சொல்லுறன்'

றிச்சாட் பிளேசை விட்டு இப்போது கிறாங்கோ வீதிக்கு வந்தனர்.
'வீட்டை நினைச்சால் தான் கவலையாக் கிடக்கு. காசைத் தாருங்கோ எண்டு கடன்காரர் ஏசுகினமாம். கடன் குடுக்க வேண்டியது, ஆம்பிளைப் பிள்ளையள் தான்; நீ ஏன் இப்பிடி கிடந்து கஸ்டப்படுகிறாய்? வீட்டுக்கு வா!' எண்டு அம்மா எழுதுறா.
'எங்கட பெற்றோர் இப்பிடிச் சிந்திக்கிறத எப்ப நிறுத்தப் போகினமோ தெரியேல்ல. ஏன் ஆம்பிளப்பிள்ளையளிட்ட மட்டும் பொறுப்புகள ஒப்படைக்கினம். இப்பிடி ஆம்பிளப் பிள்ளையளிட்ட மட்டும் பொறுப்புகள குடுக்கிறதால தான் சீதனம் எண்ட பிசாசு எங்கள ஆட்டிப் படைக்குது. எல்லா வீட்டு ஆம்பிளையளும் நாங்கதான் தங்கச்சிக்கு வீடு கட்டிக் குடுத்து, நகை போட்டு, காசைக் குடுத்து கலியாணம் கட்டி வைக்க வேணும் எண்ட உணர்வோடயே வாழுகினம். அக்கா தங்கச்சிய சுயமா வாழ வழி செய்து குடுப்பம் எண்ட யோசனை ஆருக்கும் இல்ல. அதைப்போல அண்ணை தம்பி எங்களுக்கு இருக்கினம்தானே எண்ட சகோதரிகள் கன பேர் இன்னும் சோம்பேறிகளாய்...'

www.tamilarangam.net

'நல்லாய்தான் சிந்திக்கிறாய். ஏன் இப்பிடியொரு நிலைமை, எங்கட நாட்டில? ஏன் எங்களுக்கு வேலை இல்லை? நாங்கள் சிந்திக்கிறத ஏன் செயற்படுத்த ஏலாம இருக்கு? எங்கட நாட்டில இருக்கிற தர்பாரும் பீடங்களும் தான் இதற்கு பிரதான காரணிகள்...' என்றபோது சூரியாவுக்குள் ஆவேசம் கனன்றது.

நேரம் போகவே... விடைபெற்றுக் கொண்டு யனா கேற்றைத் திறந்து வீட்டுக்குள் வரும்போதே, வீட்டுக்காரியின் குரைப்புச் சத்தம் வரவேற்றது.
'வேலைக்காரிக்கு மகாராணி எண்ட நினைப்பு. சுத்திப் போட்டு வாறா'
யனா ஒன்றும் பேசாமல் தனது வேலைகளை ஆரம்பித்தாலும் மனது துன்பப்பட்டுக் கொண்டிருந்தது.
'ஏன் இவள் இப்பிடி துள்ளுறாள். இவளின்ர பெற்றோரும் அன்று கப்பலேறி இங்க வந்திராட்டில் இன்றைக்கு இவர்களின் நிலைமையும் இலங்கையில கேள்விக்குறி தானே? இதுகளும் தமிழர்கள்தானே ஏன் இப்பிடி புரிந்துணர்வு இல்லாமல் கொடுமைப் படுத்துதுகள்? இதுகளிடம் எல்லாம் ஏச்சு வாங்கவேண்டிய நிலைமை ஏன் வந்தது?

மனசுக்குள் நிறைய விடை தெரியாத கேள்விகளும் விளக்கமில்லாத பதில்களும் போல் துன்பங்கள் எழுந்துநின்று தொல்லை கொடுத்தன. நாளைக்கும் பெட்டைய ளோட கதைக்கலாம் தானே என்ற நம்பிக்கையுடன் வேலையில் கவனமானாள்.

இன்று கிடைத்த சுதந்திரம் நாளை பறிபோகப் போகிறது என்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை.

புது உலகம் எமை நோக்கி

# கானல் நீர்

**-சு. சுகந்தி-**

*ஜேர்மனி*

**கானல் நீர்**

கனகம் றோட்டைப் பார்த்தவாறு நின்றாள்.
'என்னம்மா இவ்வளவு நேரமாய் அப்பாவைக் காணேல?' என்று கேட்டபடி தாயிடம் வந்தாள்.
'மாலதி, அதுதான் பார்த்துக் கொண்டு நிக்கிறன். சிலவேளை நல்லையர் வீட்ட போவன் எண்டு சொன்னவர். பள்ளிக்கூடம் விட்டு ஒரு மணித்தியாலத்துக்கு மேலயாச்சு. அங்கதான் போயிருப்பாரெண்டு நினைக்கிறன்'.
'ஏன் இருந்தாப்போல நல்லையர் அண்ணயிட்ட?'
'உன்ரை குறிப்பை அவரிட்டக் குடுத்தனாங்கள். முடிவுகேக்கப் போயிருப்பார்'

www.tamilarangam.net

போயிருப்பார்'
'எனக்கேன் இப்ப கலியாணம்' என்று மாலதி சிணுங்கினாள்.
'என்ன செய்யவேணும், என்ன செய்யக் கூடாது எண்டு எங்களுக்குத் தெரியும். நீ உள்ளுக்க போய் அலுவல்களைக் கவனி, போ!' என்று கனகம் அவளை உள்ளே விரட்டினாள்.
மாலதி முணுமுணுத்தபடி உள்ளே போனாள்.
'நாட்டு நிலைமையளும் அப்பிடி இப்பிடியிருக்குது. போன விசயத்தை முடிச்சுக் கொண்டு வராமல் இந்த மனிசன் இவ்வளவு நேரம் என்ன செய்யிறார்' என்று கனகம் புறுபுறுத்துக் கொண்டிருந்த போது... கேற் திறபட்டது.

'இவ்வளவு நேரம் எங்க போனனியள்? போன அலுவலை முடிச்சுக் கொண்டு கெதியில வரத் தெரியாதே'. கனகம் குரலை உயர்த்தினாள்.
'நான் என்ன செய்ய? புறோக்கர் வீட்ட போவன் எண்டு சொல்லிப் போட்டுத்தானே போனனான். நான் அங்க போனா அந்த மனிசன் வீட்டில இல்லை. இப்ப வந்திடுவர் எண்டு மனுசி சொல்லிச்சுது. இவ்வளவு நேரமும் இருந்து பாத்தன்; ஆள் வரேல. வந்தா என்னைப் பாக்கச் சொல்லி மனுசியிட்ட சொல்லிப் போட்டு வந்திட்டன்' என்று மணியத்தார் மனைவிக்கு மேலால் கத்தினார்.

'அதுக்கேனப்பா கத்திறியள்' என்றாள் கனகம்.
'நான் எங்க கத்தினான்... பசிக்குது சாப்பாட்டை போட்டுத்தா. பசிக்குது' என்றபடி சமையலறைக்கு விரைந்தார் மணியத்தார்.
'மணியத்தார்.. மணியத்தார்' என்று கூப்பிட்டவாறு நல்லையர் வரவும், மணியத்தார் சாப்பிட்டு முடித்துக் கை துடைக்கவும் சரியாக இருந்தது.
'வீட்ட இப்பதான் போனனான். நீங்கள் வந்திட்டுப் போனதாக மனுசி சொன்னா. நானே வரவேணுமெண்டுதான் இருந்தனான். அதுக்குள்ள நீங்களே தேடி வந்திட்டியள்' நல்லையர் மூச்சு விடாமல் சொல்லி முடித்தார்.

'நான் சொன்ன விசயம் என்ன மாதிரி?' என்று மணியத்தார் மெல்ல விசயத்துக்கு வந்தார்.
'அதுதான் வந்தனான். அருமையான இடம். பெடியன் ஜேர்மனியில. பெரிய கோட்டலில வேல செய்யிறான். மூத்தபெடி. அவனுக்குக் கீழ இன்னும் இரண்டு பெடியள்தான். பொறுப்பெண்டு ஒண்டுமில்லை. சகோதரங்களும் வெளிநாட்டிலதான். நல்லபெடி குடி கிடி ஒண்டுமில்லை...' என்று நல்லையர் அடுக்கிக் கொண்டு போக,
'பொறும்.. பொறும்' மணியத்தார் குறுக்கிட்டார்.
'தபால் கந்தோரில வேலை செய்யிற சூரியற்றை மகனே?'
'அவனேதான்! உங்களுக்கு ஆளைத் தெரியுமே?' நல்லையர் கவலையுடன் கேட்டார். தெரிந்தவர்களாயிருந்து விட்டால் தனக்கு நட்டமாகிவிடுமே என்பது அவர் பயம்.
'தெரியுமோவோ? அவன் என்னட்டைப் படிச்ச பெடியன்' என்றார் மணியத்தார்.
'பேந்தென்ன, நீங்களே பெடியனைத் தெரிஞ்சு வைச்சிருக்கிறியள். அப்ப என்ன?

www.tamilarangam.net

தாய் தகப்பனை நாளைக்கே வரச் சொல்லட்டே? பொம்பிளையைப் பாத்துப் பிடிச்சால், மிச்சத்தை பேசி முடிக்கலாம்'.
மணியத்தார் சம்மதமாக தலையசைத்தார்.
'சரி, எனக்கும் நேரமாகுது. வீட்ட மனுசி பாத்துக் கொண்டிருக்கும்' என்றபடி நல்லையர் எழுந்தபோது,
'தண்ணி போட்டிட்டன்!'. உள்ளிருந்தபடியே குரல் கொடுத்தாள் கனகம்.
'இருந்து, தண்ணி குடிச்சிட்டுப் போங்கோ நல்லையர். பிள்ளை கெதியாக் கொண்டா! ஆள் அவசரப்படுகிறார்' மணியத்தார் கத்தினார்.
மாலதி தேநீர் கொண்டுவந்தாள்.
குடித்து முடித்ததும், 'நாளைக்கு மூண்டு மணிக்கு ஆக்களைக் கூட்டி வாறன். ஆயத்தமாய் இருங்கோ' கூறிவிட்டு நல்லையர் போய்விட்டார்.

'வெளிநாடெண்டால் சீதனம் கேப்பினமே?' என்றபடி கனகம் உள்ளேயிருந்து வந்தாள்.
'அவனுக்குக் கீழ பெடியளெண்ட படியால் கனக்கக் கேளாயினம் எண்டு நினைக்கிறன். அப்பிடிக் கேட்டாலும் என்ன செய்யிறது. குடுத்துச் செய்யத்தானே வேணும். நல்ல பெடியன். விட்டால் பிறகு இப்பிடி ஆளைப் பிடிக்கேலாது' என்றார் மணியத்தார்.
'எல்லாத்தையும் மூத்தவளுக்குக் கொடுத்தா, அவளுக்குக் கீழ இருக்கிற மற்ற ரெண்டுக்கும் என்ன செய்யிறதெண்டையும் யோசியுங்கோ!' கனகம் எச்சரித்தாள்.

'அவளின்ரை கையிலதான்' என்றார் நம்பிக்கையுடன்.
'அவசரப்பட்டு கனவு காணாதையுங்கோ. நாளைக்கு அவையள் வந்து பொம்பிளையப் பிடிச்சிருக்கு எண்டு சொன்னாப் பிறகுதான் மிச்சம்' கனகம் மறுபடி எச்சரித்தாள்
அவர்கள் இருவரும் கதைப்பதை மாலதி கேட்டுக் கொண்டிருந்தாள்.

புது உலகம் எமை நோக்கி

***மாப்பிள்ளை வாழப்போற பொம்பிளையை பாக்கத் தேவையில்லை. பொம்பிளையும் தனக்குப் புருசனாகப் போறவரை அறியத் தேவையில்லை. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சரியெண்டால் சரி...***

மாப்பிள்ளை வாழப்போற பொம்பிளையை பாக்கத் தேவையில்லை; பொம்பிளையும் தனக்குப் புருசனாகப் போறவரை அறியத் தேவையில்லை. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சரியெண்டால் சரி என்பதையும் நினைக்க மாலதிக்கு சிரிப்பாகவும் இருந்தது. தனது கருத்தைக் கேட்கிறார்களில்லையே என்று ஆத்திரமாகவும் இருந்தது.
அடுத்தநாள் மணியத்தார் பள்ளிக்கூடம் விட்டவுடனேயே வீட்டுக்கு வந்து ஆக வேண்டிய அலுவல்களைப் பார்த்தார் கனகம் இரண்டு மணிக்கே வடை சுடத் தொடங்கிவிட்டாள் அம்மா தந்த புது சேலையை அணிந்துகொண்டிருந்தாள் மாலதி.

www.tamilarangam.net

மாப்பிள்ளை வீட்டார் சரியாக மூன்று மணிக்கே வந்து விட்டார்கள். அவர்களுடன் நல்லையரும் வந்திருந்தார். மாலதி அவர்களுக்கு உணவு வகைகள் தேநீரைப் பரிமாறி விட்டு, கதவருகே நின்றாள். மாப்பிள்ளையின் அப்பாவும் அம்மாவும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். பிறகு மாலதியைத் தங்களுக்குப் பிடித்திருப்பதாகச் சொன்னார்கள்.
மணியத்தார் ஏற்கனவே சொல்லி வைத்த ஐயர் தாமதமாக வந்து சேர்ந்தார். அவரிடம் குறிப்பு சாதகங்களைக் கொடுத்தார்.
'இப்பிடி நான் ஒரு குறிப்பும் பாக்கேல்ல; நல்ல பொருத்தம். நூற்றுக்கு நூறுவீதம் சொல்லி வைச்ச மாதிரியே இருக்குது. நீங்கள் கண்ணை மூடிக்கொண்டு பெண்ணைக் குடுக்கலாம். சந்தோசமாய் வாழும். நல்ல ராசியான பிள்ளை' என்று ஐயர் தனது வாய்ப்பாட்டை ஒப்பித்தார்.

பிறகு பேரம் ஆரம்பமாகியது.
'பொம்பிளைக்கு எல்லா நகையளும் செய்து போட வேணும்; ஒரு பரப்புக் காணி இரண்டு லட்சம் காசாய்... பொம்பிளையை உங்கட செலவிலதான் ஜேர்மனிக்கு அனுப்ப வேணும்'.
கனகத்திற்கு தலை சுற்றியது. மணியத்தார் எல்லாவற்றிற்கும் தலையாட்டிக் கொண்டிருந்தார்.
இவர் என்னத்தை வைத்துக் கொண்டு எல்லாத்துக்கும் ஓம்படுகிறார் என்று கனகத்திற்குப் புரியவில்லை.
'அப்ப எல்லாம் சரியெண்டால், வாற மூண்டாந் திகதி நல்ல நாள். அண்டைக்குப் பொம்பிளையை அனுப்புவம். அதுக்கிடையில மற்றச் சம்பிரதாயங்களைச் செய்து முடிப்பம்' என்று சொல்லிவிட்டு, மாப்பிள்ளை வீட்டார் புறப்பட்டார்கள்.
வெளியேறுவதற்கு முன் மாப்பிள்ளையின் தகப்பன் மகனுடைய படத்தை அவர்களிடம் கொடுத்தார். மணியத்தாரும் கனகமும் பார்த்துவிட்டு மாலதிக்கும் பார்க்கக் கொடுத்தார்கள். பின்னர் தம்பி, தங்கை என்று அது கைமாறிக் கொண்டிருந்தது.

'என்னப்பா எல்லாத்துக்கும் ஓமெண்டிட்டியள் என்ன செய்யப் போறியள்?' என்று கனகம் கவலைப்பட்டாள்.
'கடன்தான்' என்று இலேசாக முடித்துவிட்டுப் போய்விட்டார் மணியத்தார்.
'சகோதரங்களும் பெடியள்தானே; அதுகும் வெளிநாட்டில. இவ்வளவு காசை வாங்கி அந்தக் கிழடுகள் போகேக்க கொண்டு போகப் போகுதுகளோ...' என்று அவர் சொல்லிக் கொண்டு போனது கனகத்திற்கும் கேட்டது.

மணியத்தார் ஒருமாதிரி மாறிச்சாறி அலுவல்களை முடித்துவிட்டார்.
மகளை அனுப்பிவைக்க வேண்டியதுதான் மிச்சமாக இருந்தது.

முதல் முதல் பிளேனில் பிரயாணம் செய்யப் போகும் சந்தோசத்துடனும் அறிமுகமில்லாத ஒருவரைச் சந்திக்கப் போகும் பயத்துடனும் மாலதியிருந்தாள்.

www.tamilarangam.net

மணியத்தாரும் கனகமும் கலங்கிய விழிகளுடன் அவளை வழியனுப்பி வைத்தார்கள். மாலதி இரண்டு நாடுகளில் ஏறி இறங்கி ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தாள். அவளை அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்தார்கள்.

மாப்பிள்ளையின் முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் குறித்துக் கொடுத்திருந்தார் மணியத்தார். வந்த அன்று மாலையே மாலதி படத்தில் குறிக்கப்பட்டிருந்த நம்பருக்கு போன் பண்ணினாள்.

மறுமுனையில் யாரோ எடுத்து 'ஹலோ' என்றார்கள்

'ஜீவாவோட கதைக்கலாமே' மாலதி தயக்கத்துடன் கேட்டாள்.

'நான் ஜீவாதான் கதைக்கிறன்' என்றது மறுமுனை.

மாலதி தன்னை சுருக்கமாக அறிமுகப்படுத்தினாள்.

அவளைக் கூட்டிக் கொண்டு போக இரவே வருவதாக ஜீவா கூறினான்.

சொன்னது போல் ஜீவா அவளைக் கூட்டிக் கொண்டு போக காருடன் வந்தான். வீட்டை நோக்கி போகும் போது இருவரும் எதுவும் கதைக்கவில்லை. வீட்டுக்கு வந்தவுடன் குளித்து விட்டு வரும்படியும், தான் தேநீர் போட்டுத் தருவதாகவும் ஜீவா சொன்னான்.

'நான் குளிச்சிட்டு வந்து போட்டுத் தாறன்' என்றாள் மாலதி வெட்கத்துடன்.

'நீர் போட வேண்டாம். நான் போட்டுத் தாறன் எண்டிறன்; பேந்தென்ன கதைச்சுக் கொண்டு நிக்கிறீர். தமிழிலதானே சொன்னான்; விளங்கேல்லயா!' என ஜீவா கறாராகப் பேசியதும் மாலதிக்கு திக்கென்று போய்விட்டது.

முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் போய், குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்து மாமியார் சொன்னது மாதிரியே கொடியைக் கழற்றி ஜீவாவிடம் கொடுத்தாள்.

'எத்தினை பவுண்?' என்று விசாரித்தான்.

'தெரியாது. உங்கட அம்மாவையள் தான் செய்து தந்தது' மாலதி பதிலளித்தாள். பின் இருவரும் தேநீர் பருகிக் கொண்டார்கள். முகம் கழுவி விட்டு வருவதாக பாத்ரூமுக்குள் போன ஜீவா உடனே திரும்பி வந்தான்.

'பாத்ரூம் முழுக்க வெள்ளமாய் தண்ணி. உள்ளுக்கயோ வெளியில நிண்டோ குளிச்சனீர்?'

அவன் பகிடிக்குக் கேட்கிறான் என்று நினைத்த மாலதி,

சிரித்தவாறே 'உள்ளுக்குள்ள' என்றாள்.

'பல்லைக் காட்டாதையும்! வெளியில நிக்கிற தண்ணியை குளிச்சு முடிச்சாப் பிறகு துடைச்சிருக்கலாம் தானே?

---

புது உலகம் எமை நோக்கி

---

**'அங்க பார்த்தனீரே? எல்லாரும் எவ்வளவு நகை போட்டிருந்தினம்? நீர் இரண்டு சோடிதான் செய்து கொண்டு வந்திருக்கிறீர். என்ன உன்ர மனுசிக்கு கழுத்தில ஒண்டும் இல்லை எண்டு எல்லாரும் நக்கலடிக்கினம்'**

www.tamilarangam.net

இதுகளை உம்மட கொப்பரே வந்து செய்யப் போறார்?' ஜீவா ஏசினான்.
இதென்ன செய்வதற்கெல்லாம் வந்தவுடனேயே ஏறி விழுகிறார் என்று எண்ணிய மாலதி, அம்மா வழிக்கு வழி சொன்னது ஞாபகத்தில் வர பேசாமலிருந்தாள். ஜீவா கத்தியையும் கரண்டியையும் தந்ததும், அவற்றை வைத்துக் கொண்டு மாலதி தயங்கினாள்.
'இனி இங்க கையால சாப்பிடக் கூடாது. கரண்டி கத்தி பாவிச்சு சாப்பிடுறதுதான் 'டீசன்ற்' என்று ஜீவா விளங்கப் படுத்தினான்.
மாலதி தலையாட்டினாள். எவ்வளவு முயன்றும் அவளால் கொட்டிச் சிந்தாமல் சாப்பிட முடியவில்லை.
'சுத்தப் பட்டிக்காடாய் இருக்கிறீர்...'

மாலதிக்கு என்று ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்தான்.
'உம்மட சாமான்கள் படுக்கை எல்லாம் இதுக்குள்ளதான். ஐயரைப் பாத்து நாள் குறிச்சாப் பிறகு கலியாணத்தை வைப்பம்'
ஜீவா சொன்ன எல்லாவற்றிற்கும் மாலதி மௌனமாகத் தலையாட்டிக் கொண்டிருந்தாள். எங்கே அவன் ஏசுவானோ என்று பயமாகவிருந்தது.

அடுத்தநாள் ஜீவாவின் வீட்டுக்குக் கீழே குடியிருக்கும் பானு அக்கா மாலதியைப் பார்க்க வந்திருந்தாள். ஜீவா வெளியே போயிருந்தான். இருவரும் ஊர்ப் புதினங்களை கதைத்துச் சிரித்தார்கள். நாட்டுநடப்புகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.
பானு அக்கா அவளுக்கு சமையல் முறைகளைக் கற்றுக் கொடுத்தாள். மூன்றாம் நாளே மாலதி சமைக்கத் தொடங்கி விட்டாள். ஜீவாவும் மறுபடியும் வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டான்.
அவர்களின் திருமணத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களின் பின்பே நல்ல நாள் கிடைக்கும் என்று ஐயர் குறித்துக் கொடுத்திருந்தார்.

ஜீவாவும் வேலைக்குப் போன பின் மாலதி தனிமையிலேயே இருக்க வேண்டியிருந்தது. உடுப்புக்களைத் தோய்ப்பது, சமைத்து வைப்பது போன்றவை அன்றாட வேலைகளாயிருந்தன. இடையிடையே பானு அக்காவுடன் கதைத்துக் கொண்டிருப்பதுதான் அவளுக்கு சந்தோசமான நேரங்கள்.

ஒருநாள் தனது அறையிலிருந்து அவள் வீட்டுக்கு கடிதம் எழுதிக் கொண்டிருந்தபோது ஜீவா அங்கே வந்தான்.
'என்ன செய்யிறீர்?'
'வீட்ட கடிதம் எழுதிறன்'
'எப்ப பார்த்தாலும் வீட்ட கடிதம் எழுதிறதுதான் வேலையே? ஊரில இருந்து நீர் இங்க வந்திட்டீர்; இனிமேல் நீர் கடிதம் போடத் தேவையில்லை'
ஜீவா அந்த அறையை விட்டுப் போனபின்தான் மாலதியால் கண்ணீர் விட முடிந்தது. அதன் பின் அவள் தனியாக இருக்கும் போது அவள் தன்னுடைய வாழ்க்கையை

நினைத்து அழ ஆரம்பித்தாள்.
ஒருநாள் தன்னுடைய நண்பனின் கலியாண வீட்டுக்கு ஜீவா மாலதியையும் அழைத்துப் போனான். மண்டபத்தில் ஜேர்மன் ஆக்களும் இருந்தார்கள். ஜீவா அவர்களுடன் சிரித்துக் கதைத்து மாலதியை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினான். அவர்கள் மாலதியுடன் கைகுலுக்கி பெயரை விசாரித்தார்கள். பாசை புரியாமல் மாலதி விழிக்க ஜீவா பதிலளித்துச் சமாளித்தான். பிறகு அவளை ஓரிடத்தில் இருக்க வைத்துவிட்டு அவன் போய்விட்டான். மாலதி இருந்த இடத்திலேயே இருந்து அங்கு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சில பெண்கள் அவளைக் காட்டி தங்களுக்குள் ஏதோ குசுகுசுத்துக் கொண்டார்கள். எல்லாம் முடிவடைந்த பின் ஜீவா வந்து அவளை வீட்டுக்குக் கூட்டி வந்தான்.
வந்ததும் வராததுமாய் தாறுமாறாய் குதிக்கத் தொடங்கினான்.

'அங்க பார்த்தனீரே? எல்லாரும் எவ்வளவு நகை போட்டிருந்தினம்? நீர் இரண்டு சோடிதான் செய்து கொண்டு வந்திருக்கிறீர். என்ன உன்ர மனுசிக்கு கழுத்தில ஒண்டும் இல்லை எண்டு எல்லாரும் நக்கலடிக்கினம்.
டொச்காரர் உம்மை பேர் கேக்கினம் நீர் பேயைப் பாத்தமாதிரி முழுசுறீர். என்ரை மானம் போகுது. எங்கயோ இருந்த பட்டிக்காட்டை எனக்குக் கட்டி வைச்சிருக்கினம்'
அவளை திட்டி முடித்த ஜீவா பிறகு தனது பெற்றோரை ஏசினான்.
'கலியாண வீட்டை எத்தினை பொம்பிளையள். அவையோடை ஏன் கதைக்கேல்லை. வாய்க்கை பவுண் வைச்சிருந்தனீரே?'
மாலதி தாங்கமுடியாமல் அழுதுவிட்டாள். ஏற்கனவே கோபமாயிருந்த ஜீவாவிற்கு அவளுடைய அழுகை இன்னும் எரிச்சலைத் தந்தது.
பளாரென்று அவள் கன்னத்தில் அறைந்தான்.

புது உலகம் எமை நோக்கி

வாசகர் குறிப்பு

அன்று தொடங்கியவன், பின்னர் தொட்ட தற்கெல்லாம் முரண்டு பிடித்து கை நீட்டி அடிக்கத் தொடங்கினான். அவள் ஏதாவது சொன்னால் 'வாயாடி' என்று ஏசினான். ஒருநாள் அயன் பொக்சாலும் அவளுக்கு சூடு போட்டான்.
மாலதிக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. எல்லாவற்றையும் பானு அக்கா விடம் சொல்லிக் கதறியழுதாள். பானு அக்கா தன்னாலியன்றவரை அவளை ஆறுதல் படுத்தினாள். தன்னை அப்பா அம்மாவிடம் திருப்பியனுப்பி வைக்கும்படி மாலதி கெஞ்சினாள். பானு அக்காவிற்கு மாலதியின் வீட்டு நிலைமைகள் தெரியும். மாலதி எல்லாவற்றையும் அவளுக்குச் சொல்லியிருந்தாள். அத்துடன் மாலதி

www.tamilarangam.net

திரும்பப் போவதால் என்ன பாதிப்புக்கள் ஏற்படும் என்பதையும் பானு அக்கா சிந்தித்துப் பார்த்தாள். மாலதியின் பிரச்சனை பற்றி தனது கணவருடனும் கலந்தாலோசித்தாள் பானு அக்கா. இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

'இஞ்ச இருந்து இருநூறு கிலோமீற்றர் தள்ளி என்ரை அக்கா இருக்கிறா. ஜீவாவுக்குத் தெரியாமல் நான் உம்மை அங்க கொண்டு போய் விடுறன். நீர் அங்க வேலையும் செய்யலாம்...' என்று தங்கள் திட்டத்தைத் தெரிவித்தாள் பானு அக்கா.

'மாலதி திடுக்கிட்டாள். பேந்து இவர் என்னைத் தேட மாட்டாரோ? பொலிசுக்குச் சொல்ல மாட்டாரோ?'
'இங்கத்தைய முறைப்படி அவர் இன்னும் றிஜிஸ்ரர் பண்ணயில்லை. அதால அவர் பொலிசுக்குப் போகேலாது. ஆனா உமக்கு இன்னும் ஒண்டும் இல்லைத்தானே?' என்று பானு அக்கா கேட்க, மாலதிக்குப் புரியவில்லை.
'என்ன?'
'நீங்க ரெண்டு பேரும் ஒண்டாய் படுக்கேல்லத்தானே?' என்று பானு விபரமாய் கேட்க, மாலதி புரிந்து 'இல்லை' என்றாள்.
'அப்ப சரி. நீர் உங்கட வீட்டுக்கு விபரமாக ஒரு கடிதம் போடும். நான் அக்காவுக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லுறன்'
பானு அவளைத் தைரியப்படுத்தி விட்டுப் போய்விட்டாள்.

மாலதிக்குப் பயம் போகவில்லை யாயினும் ஜீவாவிடமிருந்து இதுவரை அனுபவித்த சித்திரவதைகளால் இனியும் அவனுடன் வாழ முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டாள்.
அடுத்தவாரம் பானுவின் அக்கா மாலதியைக் கூட்டிச் செல்ல வந்துவிட்டாள்.
'வீட்ட ஒரு கடிதம் எழுதியிருக்கிறன். எழுதினது சரியோ எண்டு நீங்க பாத்திட்டு அனுப்பி விடுங்கோ' என்று தான் எழுதிய கடிதத்தை பானு அக்காவிடம் கொடுத்தாள் மாலதி. பானு அக்காவை விட்டுப் பிரியும் போது தனது கூடப் பிறந்த சகோதரியை விட்டுப் பிரிவது போல் மாலதி கத்தியே அழுது விட்டாள். பானு அக்கா அவளை தைரியப்படுத்தி அனுப்பினாள்.

மாலதி போனதும் அவள் தந்த கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.
"அன்பின் அப்பா, அம்மா, தம்பி, தங்கைமாருக்கு,
நான் நலம் என்பதற்கில்லை. உங்கள் நலம் எப்படி? இவ்வளவு நாளாக கடிதம் போடாததற்கு குறைநினைக்க வேண்டாம். உங்கள் அருமை மாப்பிள்ளை உங்களுக்கு கடிதம் போடக் கூடாது என்று கூறிவிட்டார். மேலும் இக் கடிதத்தை உங்களுக்கு எழுதுவதற்குக் காரணம், நான் அவனை விட்டு தனியே போய்விட்டேன். அப்பா உங்கள் மாணவன் குடிவெறி இல்லாதவன்; நல்ல பெடியன்; நீ அவனை முடித்தால் பின் தங்கைமாரைப் பார்ப்பாய் என்று முன்பின் தெரியாத ஒருவனுக்கு என்னைக் கட்டி வைத்தீர்கள். நீங்கள் நினைத்தது போல் இல்லை. குடிவெறி உள்ளவனைக்

www.tamilarangam.net

கட்டியிருந்தால் வெறி இருக்கும் வரைதான் சித்திரவதை. ஆனால் இவனோ எந்த நேரமும் என்னை சித்திரவதை செய்தான். உடம்பில் காயம் வருமளவுக்கு அடிப்பான். நான் வாய்காட்டியிருப்பேன் என்று நீங்கள் நினைக்கலாம். இலங்கை மாதிரியே இங்கையும் நான் சாப்பாட்டுக்குத் தவிர வேறு ஒன்றிற்கும் வாய் திறப்பதேயில்லை.

பட்டிக்காட்டைத் தன்னுடைய தலையில் கட்டிவிட்டார்களாம். சமைச்சாலும் குற்றஞ் சொல்லுவார்; வீடு கூட்டினாலும் குற்றஞ் சொல்லுவார். எந்த நேரமும் ஏச்சுத்தான். இனியும் என்னால அவனோட வாழ முடியாது. அதால என்னோட கூடப் பிறக்காத சகோதரி ஒருவரோடு போகிறேன். அப்பா இனிமேலாவது வெளிநாட்டு மாப்பிள்ளை என்று தங்கைமாருக்கு பேசி அனுப்ப வேண்டாம். ஏமாத்து வேலை செய்யாமல் வேறு வேலை பார்க்கச் சொல்லி புறோக்கரிட்ட சொல்லுங்கோ. சும்மா இரண்டு புத்தகத்தைப் பார்த்துவிட்டு இனி இல்லையெண்ட 'பொருத்தம்' என்று ஐயர் சொன்னாரே. இப்ப என்னுடைய வாழ்க்கையைப் போல சீரழிஞ்ச வாழ்க்கை வேறுயாருக்கும் அமையக் கூடாது. இனியாவது வெளிநாட்டு மாப்பிள்ளை என்று தயவுசெய்து விழுந்தடிக்க வேண்டாம். தங்கச்சிகளையாவது காப்பாற்றுங்கோ. நடந்தது நடந்து விட்டது. நீங்கள் யோசிக்க வேண்டாம். நான் இனிச் சந்தோசமாய் இருப்பேன் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது.
பின்பு உங்களுக்கு விலாசம் எழுதுகிறேன். இப்படிக்கு, மகள் மாலதி.

பானு அக்கா கடிதத்தை மடித்து உறைக்குள் வைத்து மூடினாள். தபாலில் சேர்ப்பதற்காக வெளியில் போகும் கணவரிடம் அதைக் கொடுத்து விட்டாள்.

புது உலகம் எமை நோக்கி

# கசப்பான பலாக்கனி

**-மல்லிகா-**
*ஜேர்மனி*

**கசப்பான பலாக்கனி**

இரவாகிக் கொண்டிருந்ததினால் இருட்டும் குளிரும் அதிகரித்துக் கொண்டிருந்தன. மழை பெய்து ஓய்ந்திருந்தாலும் பலா மரத்து இலைகளிருந்து வடிந்து வந்த மழை நீர் வீட்டுத் தகரக் கூரையில் வீழ்ந்து தெறிக்கும் டக் டக் ஒலியும், மேசைமீது வைக்கப்பட்டிருந்த கை விளக்கின் மங்கிய வெளிச்சம் காற்றி னால் கூடிக் குறைவதனாலும் அவர் களின் மனங்களிலிருந்த பயவுணர்வும் தனிமையும் வரவர அதிகரித்தன.
மேசையின் ஒரு மூலையில் இருந்து எதையோ எழுதிக் கொண்டிருந்த சியாமளா 'இந்த விளக்கும் நூந்திடப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகுது. இனி எழுத ஏலாது அக்கா. இந்த விளக்குக்கு கொஞ்சம் எண்ணை விடுங்கோவன்' என்றவாறு சற்றுத் தள்ளி அமர்ந்திருந்து தைத்துக் கொண்டிருந்த மல்காந்தியைக் கேட்டாள்.

'எண்ணை இல்லை தங்கச்சி; இனி காணும் நிப்பாட்டு. அதுதான் அம்மா உனக்கு நெடுகச் சொல்லுறவ, வீட்டு வேலைகளை வேளைக்கே முடிக்கச் சொல்லி. நானும் தைச்சு முடிச்சிட்டன்' என்றவாறு மல்காந்தி எழுந்தாள்.
கை விளக்கொன்றைக் கையில் பிடித்தவாறு, குசினிக் கதவை சாத்தியவாறு வீட்டிற்குள் வந்த எமிலி,
'இண்டைக்கெண்டால் விசயம் சரிவாற மாதிரி இல்லை. நாங்கள் கொஞ்சம் வெறுந் தேத்தண்ணி குடிச்சிட்டுப் படுப்பம்' என்றாள், பெருமூச்சொன்றை விட்டபடி!

'அம்மா இங்க பாருங்கோ! சின்னத் தங்கச்சி பசியில நித்திரையாய்ப் போயிட்டாள்' மல்காந்தி ஜீவனிக்கருகில் சென்றாள். எமிலியும் அருகில் சென்று,
'எழும்பு பிள்ளை எழுப்பு நான் தேத்தண்ணி வைக்கும் வரைக்கும்' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் 'ஜாஸ்' என்ற சத்தம் கேட்டது. 'எங்கே?' என்று கலவரப்பட்ட எமிலி கைவிளக்கை எடுத்துக் கொண்டு வெளியில் விரைந்தாள்.
ஒரு கையில் விளக்கும் மறுகையில் வெளவால்கள் தின்ற பலாப்பழம் ஒன்றையும் கொண்டு எமிலி வீட்டிற்குள் நுழைந்தாள்.
விளக்கின் எண்ணெய் முற்றாகத் தீர்ந்து போனதால் சியாமளா அடுத்த நாள் பள்ளிகூடத்திற்குத் தேவையான புத்தகங்களை அடுக்கி விட்டு, ஜீவனிக்கு அருகில் சென்று, 'தங்கச்சி எழும்பு! இண்டைக்கு நல்ல ஒரு பலாப்பழம் கிடைச்சிருக்கு. எழும்பு, நல்ல வாசம் எழும்பு!' என்றாள்.
ஜீவனி திடீரென்று எழுந்து கொண்டாள். அவளுக்கு பலாப்பழம் என்றால் பிரியம் அதிகம்.

'பொய்தானே' என்றவாறு மீண்டும் தூங்கலானாள் ஜீவனி.
'இல்லை, பொய்யில்லை. வா காட்டுகிறேன்' என்றவாறு சியாமளா அவளை குசினிக்கு அழைத்துச் சென்றாள்.
'உப்பிடி உதில இரு பிள்ளை! மூன்று பேரும் வாங்கோ! இந்த விளக்கும் நூந்திச் செண்டால் வீட்டில் ஒரு துளியும் எண்ணையில்லை'
எமிலியிடமிருந்து இன்னுமொரு பெருமூச்சு வெளிப்பட்டுப் போனது.
'முதல்ல சின்னத் தங்கச்சிக்கு குடுப்பம்' என்றவாறு பலாச்சுளை யொன்றை ஜீவனிக்குக் கொடுத்தாள். அதை அவசரமாகத் தின்று முடித்த அவள் பஞ்சு பலாப்பழத்தின் மீதான ஆவலும் மேலிட மீண்டும் கையை ஏந்தினாள். அவளுக்கு இன்னுமொரு சுளையைக் கொடுத்துவிட்டு மற்ற இருவருக்கும் கொடுத்தாள். 'சாப்பாட்டுக்கு வேற சாமான் இருக்கிற நாட்களில மத்தியானத்துக்குக் கூட அம்மா பலாப்பழம் தரமாட்டா வயித்துக்கு கூடாதெண்டு சொல்லி'. சியாமளா இப்படிச் சொன்னது சிறிது நேரமாக அங்கு நிலவிய மௌனத்தைக் கலைத்தது.

www.tamilarangam.net

மல்காந்தி அம்மாவைப் பார்த்தாள்.
'ஆ! ஏன் அம்மா அழுகிறா?'
தனது மூன்று குழந்தைகளின் வயிற்றுப் பசி மரத்திலிருந்து விழுந்த பலாப்பழத்தினால் அப்போதைக்கு தீர்ந்து போனதில் அவளுக்குச் சற்று ஆறுதலாகவிருந்தாலும் துயர் நிறைந்த கடந்த காலத்தையும் சூனியமாகத் தெரியும் எதிர்காலத்தையும் எண்ணியதால் அவளது சோகம் அதிகரித்து விழிகளிலிருந்து கண்ணீர்த் துளிகள் வெளியே வந்து விழுந்தன.

எமிலி எட்டுப் பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் கடைசிப் பிள்ளை. பாடசாலை ஆசிரியராக இருந்த அவளது மாமாவிற்கு குழந்தைகள் இல்லாததினால் எமிலி அதிக காலம் அவர்களுடனேயே வளர்ந்தாள். அக்காமார் மூவரும் வயதிற்கு வந்த பின் பள்ளிக்கூடத்திலிருந்து நிற்கவேண்டியதாயிற்று.

அந்த இள வயதிலேயே மூவருக்கும் கல்யாணம் செய்து வைத்ததில் எமிலிக்கு அவ்வளவு விருப்பமில்லை. மாமாவிடம் செல்லமாக வளர்ந்து வந்த எமிலி பள்ளிப் பாடங்களில் சிறந்து விளங்கியதுடன் ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்ற விருப்பமும் அவளுக்கிருந்தது. பின்னேரங்களில் கணிதமும், ஆங்கிலமும் படிப்பதற்காக டியூசனுக்கு செல்ல வேண்டியிருந்தது. டியூசன் முடித்துவிட்டு வரும்போது காலி பிரதான பஸ் நிலையத்திற்கு வந்துதான் அவளது வீட்டிற்கு வருவதற்கான பஸ்சைப் பிடிக்க வேண்டும்.
அவளுக்கு எட்வின் ஜயரத்தினாவுடன் பழக்கம் ஏற்பட்டது இந்த பஸ்நிலையத்தில் தான். அரச கந்தோர் ஒன்றில் லிகிதராக இருந்த எட்வினுக்கு எமிலி மேல் விருப்பமுண்டாயிற்று. இருவருக்குமிடையில் சந்திப்புக்கள் தொடர்ந்து கடிதப் பரிமாற்றங்கள் வரை உறவு வளர்ந்தது. ஒவ்வொரு கடிதத்திலும் எமிலியைப் பற்றி கவிதைகள் எழுதப்பட்டிருக்கும்.

ஆசிரியையாக வேண்டுமென்ற எமிலியின் இலட்சியம் கலைந்துபோனது. இறுதியில் எட்வினின் மாயவலையில் அவள் சிக்கினாள். தனது இலட்சியத்தை எண்ணிக் கொண்டாலும் எமிலியால் அவனை விட முடியவில்லை. எட்வின் அவளுக்கு பொய் வாக்குறுதிகள் கொடுத்தான்.
'எனக்கிருக்கிற ஒரே ஆசை நான் டீச்சராக வேண்டும் என்பதுதான். மாமாவிற்கு இது தெரிஞ்சா நான் இருந்தபாடில்லை. எங்கட அண்ணனும் சரியான சண்டியன் தெரியுந்தானே. இப்பிடியெல்லாம் எமிலி

---

புது உலகம் எமை நோக்கி

---

**'எமிலி நானும் ஒரு**
**படிச்சவன்.**
**படிப்பின்ர அருமை**
**எனக்குத் தெரியும்.**
**இருந்தாலும்**
**பொம்பிளையள் படிச்சு**
**என்னதான் செய்யிறது?**
**வேலை செய்யிற**
**பொம்பிளையளை யாரும்**
**மதிக்கிறதில்லை'**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொன்னபோது,
'பயப்பிடவேண்டாம் எமிலி நானும் ஒரு படிச்சவன். படிப்பின்ர அருமை எனக்குத் தெரியும். இருந்தாலும் பொம்பிளையள் படிச்சு என்னதான் செய்யிறது? வேலை செய்யிற பொம்பிளையளை யாரும் மதிக்கிறதில்லை' என்பான் எட்வின்.

சிலவேளைகளில் அவளது மனம் நொந்து போயிருக்கும். சமயங்களில்,
'ஆ உனக்கு படிக்கிறது விருப்பமெண்டால் நானே படிப்பிக்கிறன். கலியாணம் செய்த பிறகும் படிக்கலாம் தானே'
இப்படியான வார்த்தைகளால் எப்படியோ அவளை தன் வசப்படுத்திக் கொண்டான் எட்வின். எட்வின் எமிலியை விடவும் பல வருடங்கள் மூத்தவனாயினும் அவனுடைய 'தேகவாகு அவனை இளமையாகவே காட்டியது.

நீண்டகாலமாக இவர்களது உறவு பற்றி எதுவுமே அறிந்திராத எமிலியின் பெற்றோருக்கு தாமதமாக இது தெரியவரவே அவள் பலமுறை அவர்களிடம் அடி உதை வாங்க வேண்டியதாயிற்று. எமிலியின் பெற்றோரின் உந்துதலால் அவளை தன் வீட்டிலிருந்து வெளியேற்ற வேண்டியதாயிற்று மாமாவிற்கு. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட எட்வின் அவளை தான் தங்கியிருந்த விடுதிக்கு அழைத்துச் சென்றான். 'எமிலி எட்வினுடன் ஓடிவிட்டாள்!' என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. இதனால் எட்வினும் விடுதியை விடவேண்டியதாயிற்று. பின்னர் அவர்கள் நகரிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த ஊரில் வாடகை வீடொன்றில் கணவன் மனைவியாக வாழத் தொடங்கினர்.

சட்டபூர்வமாக தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு எமிலி அவனை தினமும் வற்புறுத்தினாலும் அவன் அதை பிற்போட்டுக் கொண்டு வந்தான். தனது தலைமைக் கந்தோருக்குப் போவதாகக் கூறி அடிக்கடி கொழும்புக்குப் போய் வந்தான். சிறிது காலத்திற்கு பின் எமிலி ஒரு குழந்தைக்குத் தாயானாள். எட்வின் கணிசமான தொகையைச் சம்பளமாக பெற்றுக் கொண்டபோதிலும் எமிலியிடம் சொற்பத்தையே கொடுத்து வந்தான்.
நாட்கள் செல்ல வீட்டுக் கஸ்டங்கள் அதிகரித்தன. அவர்களுக்கிடையில் சந்தோசம் குறைந்து உறவில் விரிசல்கள் ஆரம்பித்தன. எட்வின் வீட்டை விடவும் வெளியிலேயே அதிக நாட்களைக் கழித்தான். இப்போது எமிலிக்கு மூன்று குழந்தைகள். மூன்றாவது குழந்தையான ஜீவனியும் பெண்குழந்தையாகிப் போனதில் எமிலிக்கு பெரிய குறையாகவும் கவலையாகவும் இருந்தது. இறுதியில் அதெல்லாம் விதி என்று மனதை திடப்படுத்திக் கொண்டாள்.

எட்வினிடமிருந்து திடீரென்று ஒரு நாள் வந்த கடிதத்தில், தனக்கு பதவி உயர்வு கிடைத்து விட்டதென்றும், தான் இப்போது தலைமையலுவலகத்தில் வேலை செய்வதாகவும் , பிள்ளைகளை கவனமாக வளர்க்கும் படியும், தான் வெகுவிரைவில் அங்கு வருவதாகவும் எழுதியிருந்தான்.

www.tamilarangam.net

எனினும் அவன் கடிதத்தில் எழுதியபடி செய்யவில்லை. இடைக்கிடை வந்து அவர்களைச் சந்தித்துச் சென்றான். ஆடிக்கொருக்கால், ஆவணிக்கொருக்கால் என்ற கணக்கில் அவளுக்கு காசுக்கட்டளையில் பணம் அனுப்பி வைத்தான். எமிலி தன் கணவன் மீது எப்போதும் அக்கறையாயிருந்தாள். அவன் வந்திருக்கும் நேரங்களில் அவனது தேவைகளை நிறைவேற்றினாள். அவனில் ஏற்பட்ட குண மாற்றங்களும் குடும்பத்தை விட்டு அவன் விலகியிருப்பதும் அவளுக்கு கவலையை ஏற்படுத்தியிருந்தன.

இதற்கிடையில் பணம் பெறுவதற்காக தபால் நிலையம் சென்றபோது எட்வினின் விடுதியில் ஒன்றாக வசித்த சுனில் ஜயசிங்காவைச் சந்தித்தாள். அவனுடன் கதைத்தபோது எட்வின் ஏற்கனவே திருமணமானவன் என்றும், அவன் இரண்டு குழந்தைகளுக்கு தந்தையென்றும், கடைசிக் குழந்தை பிறந்தவுடன் அவனது மனைவி சன்னியினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமலிருக்கிறாள் என்பதையும் அவன் மூலம் அறிந்து கொண்டாள். அதிர்ச்சியடைந்தாள்.
அவள் எதிர்பார்த்திராத வைகளைப் பற்றி கேள்விப்பட்டு புதுமையுற்றாள்.
'ஏன் தம்பி, இதை நீர் எனக்கு முன்னமே சொல்லவில்லை' என்று சுனிலிடம் கேட்டதிற்கு, அவன் 'நான் நினைச்சன் உங்களுக்கு இது தெரியும் எண்டு. மற்றது உதுகள் எல்லாம் நோர்மல் விசயம் தானே' என்று சாதாரணமாகக் கூறிவிட்டான்.

இவ்வளவு பெரிய அநியாயத்தை நோர்மல் என்று கூறியது அவளுக்குப் புரியவில்லை அவள் யோசிக்கலானாள்.
சிலகாலங்கள் கழிந்தன. எட்வினுக்கு மாரடைப்பு வந்து சுகயீனம் உற்றான். அதன்பின்பு அவளையோ பிள்ளைகளையோ பார்ப்பதற்கு அவன் வரவில்லை. பணம் வருவதும் நின்று போனது.

கொழும்பில் வசிக்கும் நண்பர் ஒருவரின் அவசரக் கடிதத்திலிருந்து எட்வின் இறந்துபோன செய்தியை அவள் தெரிந்து கொண்டாள்.
அதன் பிறகு அத்தனை துயர்களையும் தாங்கிக் கொண்டு எட்வினின் விதையாக வாழத் தொடங்கினாள்
எட்வினின் ஓய்வூதியப் பணம் சட்ட பூர்வமாகத் திருமணம் செய்து கொண்ட முதல் மனைவிக்கே போய்ச் சேர்ந்தது. தனது மூன்று குழந்தைகளையும் வளர்க்க அவள் பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. பிள்ளைகளுக்காக அவள் எல்லா துன்பங்களையும் தாங்கிக் கொண்டாள்.

புது உலகம் எமை நோக்கி

**'நாளைக் கெண்டாலும்**
**பிள்ளைகளுக்கு கொஞ்சம்**
**சோறு காச்சிக் குடுக்க**
**வேணும்.**
**நாள் கணக்காய் பழைய**
**பாணும் பலாப்பழமுமாய்**
**ஒருமாதிரி சமாளிச்சிட்டம்'**

**மூன்று பிள்ளைகளும்**
**தூங்கிப் போனார்கள்.**

www.tamilarangam.net

தனது கவலைகளைப் பற்றியும் தான் படும் அவலங்களைப் பற்றியும் பிள்ளைகளுக்கு எதுவும் கூறாத போதிலும், இடைக்கிடையே ஆற்றாமையினால் தனது கதையும் கணவனின் இறப்புப் பற்றியும் அவளது வாயிலிருந்து வெளிப்படுவதுண்டு. மூத்த மகளான மல்காந்திக்கு தாயின் நிலைமை ஓரளவு புரிந்தது. தாய் மீது இருந்த இரக்கத்தினால் அவள் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து கொடுத்தாள். தையல் வேலை செய்வதிலும், பலகாரங்கள் சுட்டு விற்பதிலும் அவர்களது குடும்பம் நகர்ந்தது. எனினும் அவை அவர்களுக்கான ஸ்திரமான வருமானத்தை ஈட்டுவதில் உதவ வில்லை.

பலாப்பழச் சுளையொன்றை வாயில் வைத்தவாறு எமிலி மீண்டும் அழலானாள். தாயின் துயரத்தைத் திசைதிருப்ப முயன்ற சியாமளா,
'ஏன் அம்மா அழுகிறீங்க? இந்தப் பலாப்பழம் கசக்குதா' என்றாள் நகைச்சுவையாக.
பலாப்பழம் மாத்திரமில்லாமல் அவளுக்கு முழு வாழ்க்கையுமே கசப்பாகத்தான் இருந்தது.
பலாக் கொட்டைகளை எண்ணிக் கொண்டிருந்த ஜீவனி தூங்கிப் போயிருந்தாள். எமிலி அவளைத் தூக்கிச் சென்று பாயில் கிடத்தி விட்டாள்.

சியாமளாவின் பக்கம் திரும்பி ,
'நீங்கள் ரெண்டுபேரும் வீட்டுவேலை செய்திட்டீங்களா?' என்று கேட்டாள்.
குழந்தைகள் படித்து நல்ல எதிர்காலம் ஒன்று அவர்களுக்கு வரவேண்டும் என்பதே அவளது எதிர்பார்ப்பு.
'ஓம் அம்மா' என்றாள் சியாமளா.
அவளுக்கு நித்திரை வந்து விட்டது. கவலைகள் எமிலியை எளிதில் தூங்கவிட வில்லை. தாய் கவலைப்படுவதைக் கண்ட மல்காந்தி,
'இப்பிடிக் கவலைப்பட வேணாம் அம்மா. நாளைக்கு திங்கட்கிழமை தானே. தைச்சிருக்கிற உடுப்புகள குடுத்தா காசு வரும்தானே' என்றாள்.
'ஓம் பிள்ளை, அந்தக் கொஞ்சக் காசில என்னத்த செய்யிறது. நாளைக்கு பத்தாம் திகதி; வீட்டு மாத வாடகை கட்டவேணும். சைமன் ஐயா முந்தநாளும் வந்து பேசிவிட்டுப் போனவர். இந்த மாசம் வாடகை தராவிட்டால் வீட்டிலிருந்து எழுப்பப் போறதா சொன்னவர். கூப்பன் சாமான்களும் வாங்க வேணும். நாளைக் கெண்டாலும் பிள்ளைகளுக்கு கொஞ்சம் சோறு காச்சிக் குடுக்க வேணும். நாள் கணக்காய் பழைய பாணும் பலாப்பழமுமாய் ஒருமாதிரி சமாளிச்சிட்டம்'.
மூன்று பிள்ளைகளும் தூங்கிப் போனார்கள்.

எமிலி மீண்டும் யோசிக்கலானாள்.

தனது கடந்த காலத்தைப் பற்றி, தான் ஏமாந்தது பற்றி, எட்வினால் தகப்பனிடமிருந்தும் தமையன்மார்களிட மிருந்தும் அடிவாங்கியது பற்றி, எல்லாவற்றையும் விட தன் கல்வி பாதியில் நிறுத்தப்பட்டது பற்றி...

www.tamilarangam.net

தான் வாழ்ந்தது தனது விருப்பங்களுக்காகவல்ல அவனது காம திருப்திக்காக மட்டுமே. அவனது அலங்காரப் பண்டமாகவும் குழந்தை பெறும் இயந்திரமாகவும் மாத்திரமே...

அவளது மாமாவின் ஆசைப் படியே தொடர்ந்து கல்வி கற்றிருந்தால் அவள் யாரிலும் தங்கி நிற்காமல் வாழ்ந்திருக்க முடியும்.

இப்பொழுது அவளுக்கு கொட்டாவி வந்தது. பாயில் அங்கும் இங்கும் புரண்டு படுக்க முயன்றாள். நித்திரை வந்தால் கொஞ்ச நேரமாவது அவளது கவலைகளி லிருந்து ஓய்வுபெற முடியும்.
எனினும் மேலும் பல கவலைகள் வளர்ந்து கொண்டிருந்தன.
மூன்று பிள்ளைகளும் படித்து நல்ல வேலைகள் செய்து இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் ஒரு முடிவு கட்டுவார்களா? மூன்றும் பெண் குழந்தைகள்; என்னதான் படித்தாலும் சட்டபூர்வமற்ற திருமணத்தால் நாளை அவர்களது எதிர்காலத்திற்கு பங்கம் நேரிடுமோ? மல்காந்தியும் இப்ப பெரிய பிள்ளை அவளும் ஒருநாள் என்னைப் போல் பிரச்சினையில் மாட்டுப்படுவாளா?

எமிலிக்கு இப்போ மெல்லிதாக நித்திரை வந்தது.

வீட்டுக்கருகில் இருந்த துணி ஆலை சங்கொலியால் நித்திரை கலைந்தது.
நேரம் காலை ஐந்து மணியாக இருந்தது. அவள் கொட்டாவி விட்டபடி பாயைச் சுருட்டி வைத்தாள்.
'மல்காந்தி எழும்பு தங்கச்சிமாரையும் எழுப்பிவிடு!' என்றவாறு குசினிக்குள் சென்று இரண்டொரு ஈரமான விறகுகளுடன் அடுப்பைக் கொளுத்தப் போராடினாள். சில காய்ந்த ஓலைகளை வைத்த பின்பு அடுப்பு ஒருவாறு எரிய ஆரம்பித்தது.

வெறும் தேத்தண்ணி ஊற்றி பிள்ளை களுக்கும் கொடுத்து தானும் குடித்தாள். கஷ்டங்களுக்குப் பழகிப்போன அப் பிள்ளைகள் வெறும் தேத்தண்ணியைக் குடித்துவிட்டு பள்ளிக்கூடம் போகக் கிளம்பினார்கள்.
'றோட்டுக் கரையால போங்கோ! தங்கச்சி பத்திரம்' கூறிவிட்டு, மகள்மார் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த எமிலி சங்கக் கடையில் வரிசை நீளுவதற்கு முன் போவதற்கு அவசரமானாள்.



வாசகர் குறிப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிணற்றடிக்குச் சென்று முகம் கழுவி வந்து, உடுத்திருந்த சட்டைக்கு மேல் ஒரு சேலையைச் சுற்றிக் கொண்டாள். ஓலைப் பையொன்றை எடுத்து, தைத்து வைத்த உடுப்புக்களையும் கூப்பன் புத்தகங்கள் நான்கையும் எடுத்து வைத்தாள்.

வீட்டிலிருந்து புறப்படும் பொழுதே யாரோ 'பிள்ளை எமிலி' என்று கூப்பிடுவது கேட்டது. அது சைமனின் குரல்.
இவர் அறுபது வயதை நெருங்கிய இளைப்பாறிய சுங்க அதிகாரி. தார் றோட்டில் அமைந்திருந்த பெரிய வீடுகள் பலவற்றை பெரிய அளவிலான வாடகைக்குக் கொடுத்திருந்தார். பல வருடங்களுக்கு முன், தன் மனைவியின் இறப்புக்குப் பின் தனது இரு மகள்களுடன் பெரிய வீடொன்றில் வசித்து வருபவர்.
சைமனைக் கண்டதும் எமிலி கலவரமடைந்தாள்.

'இண்டைக்குப் பத்தாம் திகதி போல கிடக்கு. இண்டைக்கு என்னத்தைச் சொல்லி தப்பிறது' என்று எண்ணியவாறு கதவைத்திறந்து விட்டாள்.
'ஆ! ஐயா, என்ன இவ்வளவு வேளைக்கே வந்திட்டீங்க. நான் உடுப்புகளை அந்த கடைவைச்சிருக்கிற கமலாக்காவிடம் குடுத்து காசு வாங்கிக் கொண்டு வரத்தான் வெளிக்கிட்டனான். காசு கிடைத்தால் நான் பாதி வாடகை யெண்டாலும் கட்டுவம் எண்டுதான்...' என்று சொல்லி முடிப்பதற்குள் சைமன் சிரித்தபடி எமிலியைப் பார்த்தான்.

'நான் விடிய வெள்ளென வந்தது வீட்டு வாடகை கேக்கிறதுக்கு இல்லையடி. எனக்குத் தெரியும் தானே நீ புருசனும் இல்லாம படுகிற கஷ்டம். நான் இப்ப வரேக்க உன்ர மூன்று பெட்டையளும் வெள்ளைக் கொக்குகள் மாதிரி ஒழுங்கையால திரும்புறதைக் கண்டனான். நான் வந்தது உனக்கு ஒரு விசயத்தைச் சொல்ல. இங்க வா! நான் நியாயமானவன். உன்மீது இரக்கப்படுறன்...' என்று சொல்லியபடி அவளது கைகளைப் பிடித்தான்.
எமிலி திமிறினாள். கத்துவதற்கு முயற்சித்தாள்.
ஆனால் அந்தக் காமுகனிடமிருந்து விடுபட அவளால் முடியவில்லை!

www.tamilarangam.net



நாள் முழுவதும் குடும்பத்திற்கு உழைத்த களைப்பில் சில மணித்தியாலங்களுக்குக் கிடைக்கும் அந்த இரவு நேர ஓய்வை -அதுவும் கணவன் வீட்டில் இல்லாத நாட்களில்தான்- ஒரு பெரும் வரப்பிரசாதமாய்க் கருதிய தனலட்சுமி ஆளுக்கொரு கோணத்தில் உருண்டு கிடந்த குழந்தைகளிடையே இடம்பிடித்து சீலையை விரித்து 'அப்பனே' என்று சரிந்தாள்.

படுத்தவுடனே நித்திரை கொள்ளும் வழக்கம் அவளுக்கில்லை. ஒரு பதினைந்து நிமிடமாவது உருண்ட பின்புதான் கண்கள் ஓய்வெடுக்கும்.

அந்த பதினைந்து நிமிடம் தானும் விரயமாகத் தெரியாத அவள் மூளை கம்பியூட்டராய் அடுத்த நாளுக்கான வேலைத் திட்டங்களைப் பதிவு செய்தது.

நாளைக்கு செவ்வாய்க் கிழமை. ஐஞ்சரைக்கு எழும்பினால் தான் அலுவல் முடிச்சு பிள்ளைகள பள்ளிக்கு அனுப்பலாம். மூத்தவள் ஏதோ சோதனைக்கு -ஓஎல் சோதனைக்கு- பின்னேர வகுப்பு வைக்கிறாங்களாம் எண்டவள். தோசையை ஒரேதா மத்தியானத்துக்கும் சேர்த்துக் கட்டிக் குடுப்பம். பாவம் பெட்டை. பசிக்களை யோட வரும்.
ம்... ம்... கால் சரியா நோகுது. குழவிக் கல்ல கழுவி எடுக்கேக்க ஒரு நாளுமில்லாம அந்தச் சனியன் காலில விழுந்து துலைச்சிட்டுது. புதன்கிழமை சின்னவள கொண்டு ஆஸ்பத்திரிக்கு என்னெண்டு அம்மளவு தூரம் நடக்கிறது? இந்த மனிசன் நினைச்சா சைக்கிளில கொண்டு போய் விடலாம். இது எங்க வரப்போகுது.

புது உலகம் எமை நோக்கி

# மூளைக்குள் ஓர் சமையலறை

**-நந்தினி-**
*ஜேர்மனி*

'சைக்கிள் இல்லாட்டி நடந்துதானே போகவேணும். ஏதோ சீதனமாக் கொண்டு வந்தாப் போல பெரிய உரிமையா கேக் கிற' எண்டும். அதிட்டப் போய் கேக்கிறத விட நடந்தே போயிடலாம். என்ன செய்யி றது புதன்கிழமை கட்டாயம் ஊசி போட கொண்டு போகவேணும். இந்தக் காலோட அவ்வளவு தூரம் நடக்கேலாது. எதுக்கும் கேட்டுப் பாப்பம். போகேக்க எண்டாலும் சைக்கிளில கொண்டுபோய் விடச்சொல்லி வரேக்க ஒருமாதிரி நடந்து வந்திடலாம்....

சமையலறையில் ஏதோ உருட்டிக் கேட் டது. நோப்பட்ட காலை மறந்தவளாய் துள்ளி எழுந்தவள், வலி பொறுக்காமல் அப்படியே தரையில் குந்திவிட்டாள்.

'அய்யோ அம்மாளாச்சி வலி தாங்கேலாதே! இந்த நாசமான எலிச் சனியன்கள் மனிசர நிம்மதியாக் கிடக்கவும் விடுதுகளே'
அரற்றியபடி குசினிக்குள் சென்று மாப்பானையைப் பாத்துவிட்டு வந்தாள்.

அப்படித்தான் அன்றைக்கு ஒருநாள் மயில்வாகனம் -அதுதான் அவள் கணவன்- இரவு வீட்டில் இருந்தான். அவள் மினக்கெட்டு தோசைக்கு அரைத்து கரைத்து வைத்து விட்டு வந்து படுத்தாள். எலி குசினிக்குள் உருட்டும் சத்தம் கேட்டு எழுந்தாள். ஆனால் தனது இன்பத்தை இடையில் முறிக்க விரும்பாத அவளது கணவன் தன்னிடம் உடல்கைதியாக இருந்த அவளை எழும்பிப் போக விடவில்லை. அடுத்தநாள் காலையில் அவள் மாப்பானையைத் திறந்தபோது ஒரு பெரிய எலி மாவில் மூழ்கி இறந்து கிடப்பதைக் கண்டாள். பள்ளிக்குச் செல்ல பிள்ளைகள் பரபரத்தனர். கணவனிடம் பாண் வாங்கி வரும்படி தயங்கித் தயங்கி அவள் சொல்லி முடிப்பதற்குள் 'பளார்' என்று ஒரு அறை விழுந்தது.
'என்னடி பானைய ஒழுங்காக மூடி வைச்சிருந்தா ஏன் எலி விழப்போகுது'
தூசண வார்த்தைகள் தொடர்ந்தன.

கசப்பான நிகழ்வுகள் ஞாபகத்திற்கு வர, அவளது முகம் வெறுப்பால் சுளித்தது.

'எளிய சனியன்'
மீண்டும் வந்து படுத்துக் கொண்டாள். அருகில் படுத்திருந்த கடைசி மகன் காலைத் தூக்கி தாயின் மேல் போட்டுக் கொண்டான். அன்புடன் அவனது தலையை தனது மெலிந்த விரல்களால் வருடிக் கொடுத்து கொஞ்சினாள். தாயின் அரவணைப்பில் இருந்த சிறுவன் பாதுகாப்புணர்வினால் தூண்டப்பட்டவனாய் தாயை இறுக அணைத்துக் கொண்டான்.

முன்பு ஒருநாள் மூத்த மகள் குழந்தையாய் இருந்தபோது தகப்பனை அணைத்துக் கொண்டு படுத்திருந்தவள் மூத்திரம்பெய்து விட்டாள்.
'இந்தச் சனியனத் தூக்கி அங்கால கிடத்து' என்று திட்டியபடி குழந்தையை நெட்டித்தள்ளி விட்டான் மயில்வாகனம். அதற்குப் பிறகு மூத்திரம் பெய்து விடுவார்கள் என்று அவன் ஒரு பிள்ளையையும் பக்கத்தில் படுக்க விடுவதில்லை.
'பிள்ளைப் பாசம் இல்லாத சாதி!' வாய்க்குள் முணுமுணுத்தாள் தனம்.

செவ்வாய், வெள்ளி விரத நாட்கள் வீடு கழுவித்தான் உலைப் பானையை அடுப்பில் வைப்பாள். இல்லாவிட்டால் அன்றைய பொழுதே விடியாதது போன்ற ஏக்கம் தான் அவளுள் நிறைந்திருக்கும்.
'நாளைக்கு செவ்வாய்க் கிழமை விரதம். நான் இந்த நொண்டிக் காலோட வீட்டக் கழுவி அடுப்பு மெழுகி வைக்க, இந்த மனிசன் என்ன நரகலக் கொண்டு வந்து சமைக்கச் சொல்லுதோ. அம்மாளாச்சி தான் அதின்ர மனசுக்கு புத்தியைக் குடுக்க வேணும்'

www.tamilarangam.net

கடந்த விநாயகர் சதுர்த்தியன்று நடந்தது அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. அவள் வீடு கழுவி, பாத்திரம் தேய்த்து, அடுப்பு மெழுகி, முற்றம் கூட்டி, சாணி தெளித்து, சீயக்காய வைத்து முழுகிவிட்டு, ஆசாரமாய் சமையலுக்கு ஆயத்தமானாள். அந்த நேரம் பார்த்து மாட்டிறைச்சியுடன் வந்து சேர்ந்தான் மயில்வாகனம். அவளுக்கு அழுகையே வந்து விட்டது. அன்று ஒரு புனித நாள் என்று பலவாறு எடுத்துச் சொன்னாள். மிக உரக்கமாகக் கெஞ்சினாள்.
'எடியே விசரி விநாயகர் மாட்டிறைச்சியத்தான் நல்ல விருப்பமாய் எடுத்துச் சாப்பிடுவாராம். சதுத்தியண்டைக்கு தனக்கு கட்டாயம் மாட்டு சூப் வைச்சு படைக்கச் சொல்லி சொல்லியிருக்கிறார்' என்றபடி அவள் விரத நாட்களுக்கென்றே பாவிக்க வைத்திருக்கும் சட்டி ஒன்றில் போட்டு விட்டான். தனது புனிதமான விரதமே தீட்டுப்பட்டு விட்டதைக் கண்டு அவள் துடித்துப் போனாள். பிறகென்ன அவனது அடி உதைக்குப் பயந்து அழுதபடி சமைத்ததுதான்.

நாளைக்கு இந்த மனிசன் என்னத்தக் கொண்டுவரப் போகுதோ பின்னேரமா வந்துதெண்டா நல்லம்.

மத்தியானத்துக்கு என்ன சமையல் செய்யலாம். வெண்டிக்காய் பொரிச்ச குழம்பு. அது இந்த மனிசனுக்குப் பிடிக்காது. ஆரெண்டாலும் வெண்டிக்காயில குழம்பு வைப்பினமோ எண்டு கேக்கும். கத்தரிக்காயில குழம்பு வைச்சு, வெண்டிக்காய் வெள்ளைக்கறி. ஏதெண்டாலும் இலைக்கறி செய்யலாம். மனிசனுக்கு பொன்னாங் காணிக் கீரை பிடிக்காது. முளைக் கீரைதான் பிடிக்கும். பொன்னாங்காணியில அவிச்சு சம்பல் அரைச்சு எலுமிச்சம் புளியும் கொஞ்சம் விட்டா என்ன சோக்காயிரு க்கும். இந்த மனிசன் சாணி மாதிரி இருக்கெண்டு பேசும். முளைக்கீரையில காச் சுவம். அப்ப மூண்டு கறியும் அப்பளப் பொரியலும்... ரசம் வேண்டாம். நேற்றும் இண்டைக்கும் ரசம் வைச்சாச்சு நாளை க்கும் வைச்சா மனிசன் பேசும்.

புது உலகம் எமை நோக்கி

வாசகர் குறிப்பு

காலையில பிள்ளையள பள்ளிக்கூடத் துக்கு அனுப்பின கையோட பாத்திரங்கள தேச்சிட்டு வீட்டக் கழுவத் தொடங்கி னாத்தான் பதினொரு மணிக்கு சமைக்க வெளிக்கிடலாம்.
சீயக்காய், வெந்தயம் ஊறப்போடேல்ல. பறவாயில்ல, விடியப் போடலாம்.

அடுப்படிய ஒருக்கா உடைச்சு செய்ய லாம் எண்டா இந்தக் காலோட அதுக்கெ ல்லாம் மினக்கெட ஏலுாது இன்னுமொரு

www.tamilarangam.net

நாளைக்குத்தான் அடுப்பலுவல் பாக்கவேணும். இந்த அடுப்பில சோத்துப் பானைய வடிக்கேலாது. எத்தினை நாள் பானை வழுக்கி விழப்பாத்திருக்கு . ஏதோ அம்மாளாச்சி தான் காப்பாத்துறா.

சமைச்சு முடிச்ச கையோட மாவ அடுப்பில வைக்கணும். மாவும் இல்லை. காலம வெள்ளன பள்ளிக்குப் போறதுக்கு முதல்ல பெரிய பொடியன கடைக்கு அனுப்பி வாங்குவிக்கணும். அரிசி மாவும் கொஞ்சந்தான் கிடக்கு. இந்த மனிசனுக்கு கோதுமை மா சாப்பாடெண்டால் இறங்காது. அரிசி மாதான் வேணும். கோதுமை புட்டவிச்சு குழம்போட சாப்பிட நல்ல உருசையா இருக்கும். இந்த மனிசன் தின்னாதே.

மத்தியானச் சமையல முடிச்சிட்டு மாவையும் அவிய வைச்சிட்டு உங்க கிடக்கிற தலையணிகளப் பிரிச்சு உறையில பஞ்சு அடைக்க வேணும். தலையணியெல்லாம் ஊத்தையாக் கிடக்கு எண்டு மனிசன் நேத்தைக்குப் பேசிச்சுது. புதுத் தலையணியளக் கண்டா பிள்ளையள் நான் நீ எண்டு அடிபடுவினம். சின்னவனுக்கு சின்னதா ஒரு தலையணி தைக்கணும். ராசம்மாக்கான்ர பெட்டையிட்டக் குடுத்தா உறையளுக்கு வடிவா பூ தச்சித் தருவா; கேட்டுப்பாப்பம்.

சொன்னாப்போல நல்லநேரம் ஞாபகம் வந்தது. மனிசன்ர சேட்டில பட்டின் அறுந்திருக்குதாம். பாத்து தைச்சு வைக்கேல்லை எண்டு சத்தம் போட்டிச்சிது அதையும் ஒரே கையோட தைச்சிட வேணும்.

கந்தண்ணை வீட்டில பால் கறக்கவே ஆறு மணியாகுது. ஆறு மணிக்குப் பால் வாங்கி, பிள்ளையளுக்குத் தேத்தண்ணி ஊத்திக் குடுத்திட்டு, கோயிலுக்குப் போக எங்க நேரமிருக்கப் போகுது. கைவேலையள முடிச்சிட்டு ஐஞ்சு மணிக்கெல்லாம் தேத்தண்ணி போட்டாத்தான் வெளிக்கிட்டுக் கொண்டு கோயிலுக்குப் போய்வர நேரம் சரியா இருக்கும்.

'பாலக் காச்சி உறைக்கு வைக்கலாம். நாளண்டைக்கு தயிர்சாதம் செய்யலாம். தயிர்சாதம் சாப்பிட்டு எவ்வளவு நாளாகுது. பூமணியக்கான்ர பூசையண்டைக்கு சாப்பிட்டது. மனிசனுக்கு வேறயா சோறும் கறியும் காச்சிட்டு, நானும் பிள்ளையளும் தயிர்சாதம் செய்து சாப்பிடலாம்.
அன்றைக்கு ஒருநாள் செய்ய வெளிக்கிட்டு இந்த மனிசனிட்ட பேச்சு வாங்கினதுதான் மிச்சம். தயிர்சாதமெல்லாம் விசர் வேலையாம். ரெண்டு செலவாம்.

பெரிய பெட்டைக்கு பள்ளிக்கூட கவுண்... என்று எண்ணியவாறு நித்திரையில் ஆழ்ந்து விட்டாள் தனலக்சுமி.

ஒரு சமையலறை இயந்திரத்தின் மூளை அடுத்த நாளைக்கான வேலைத்திட்டத்தைப் பதிவுசெய்த களைப்பில் தானும் ஓய்வில் மூழ்கியது!

www.tamilarangam.net

**சுபைதா ராத்தாவின் பொழுது**

'என்னா வாசமா இருக்கி. வீடே கமகமக்கு. என்ன சுபைதா ராத்தா ஓங்கட வூட்டில என்ன விசேசம்?' எனக் கேட்டபடி உள்ளே வந்தாள் நிசாமா.

'பெரிசா உன்னும் விசேசமில்லப் புள்ள. எங்கட நிசாம் காக்காட மகன் சுஹைர் போன மாசம் கலியாணம் முடிச்சாந்தானே. அவனும் அவன்ட பொஞ்சாதியும் புது மாப்புள பொம்புளயா இங்க வாறாங்க. அதுதான் ஒரு சின்ன விருந்து குடுக்கலாம் எண்டு...'
நெற்றி வியர்வையை முந்தானையால் துடைத்தபடி பதில் சொன்னாள் சுபைதா.

'ம். ம்.. அதுதானே பாத்தன், என்னா சுபைதா ராத்தா வூட்டுல இரிந்து நல்ல வாசம் வருகுதெண்டு. என்ன ஐட்டம் எல்லாம் பண்ணுறீங்க?'
நாக்கை உறிஞ்சி வாசத்தை உள் இழுத்தபடி கேட்டாள் நிசாமா.

'கோழி புறியாணி செஞ்சி மாட்டிறச்சில பிஷ்டேக், கத்தரிக்கா களியா, கெழங்கு பெரட்டல், தக்காளி சம்பல், வெமன் கட்லீஸ் வட்டிலப்பமும் செஞ்சிருக்கன். நீ என்னா நின்னுகிட்டே இரிக்க. இந்தா இந்தப் புட்டுவத்தில குந்து. அன்னாசிப் பழத்தில ரிங்ஸ் செஞ்சிருக்கன். இரு! கொண்டு வாறன்'
வந்தவளை சுபைதா உபசரித்தாள்.

'நீங்க இருங்க ராத்தா நான் என்ன கோச்சிலயா வந்திருக்கன். பக்கத்து வேலிய ஒரு கம்பிய உசத்தினா இங்க நிப்பன். நீங்கதான் வேலைசெஞ்சு களைச்சுப் போனீங்க. முதல்ல குடியுங்க' என்றாள் நிசாமா.
சிரித்தபடி ரிங்ஸை கிளாசில் ஊற்றிக் குடுத்தபடி அடுப்பில் இருப்பவற்றைக் கவனிக்கலானாள்.
'இந்தாங்க ராத்தா நீங்க குடிக்காம இருக் கிறீங்களே' என்று ரிங்சை வார்த்து சுபைதா ராத்தாவுக்குக் கொடுத்தாள் நிசாமா.
'நான் இரவு படுக்கக்க மணி பன்னிரெண் ணரையாச்சி வட்டிலப்பத்துக்கு முட்டை யடிச்சி இங்க பாரு வெரல் எல்லாம் தோல் உரிஞ்சி காச்சி போச்சி. காலைய நாலு மணிக்கே எழும்பிட்டன். கொஞ்சம் லட்டுச் செய்தா பின்னேர தேத்தண்ணீக்கு குடுக்கலாம்.

புது உலகம் எமை நோக்கி

# சுபைதா ராத்தாவின் பொழுது

-நந்தினி-
நோர்வே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூக்கம் நிரம்பிய கண்களால் சிரித்தாள் சுபைதா.
'அல்லா! இது என்ன ராத்தா உங்கட கையில இப்பிடி தோலுரிஞ்சி போயிருக்கி. ஏன் ஹாயியாருட்ட சொல்லி ஒரு கிரைண்டர் வாங்கிறதானே. கிறைண்டரில போட்டா கொஞ்ச நேரத்தில முட்டையெல்லாம் நொரை தழும்பிக்கிட்டு வந்திருக்கும் வட்டிலப்பமும் நல்ல சோந்நா இரிக்கும். கையால அடிச்சா இப்பிடித்தான் விரலெல்லாம் தோலுரிஞ்சி போகும். தோள் மூட்டெல்லாம் வலிக்கும்' நிசாம் சொன்னாள்.
'அதையேன் கேக்கிற. ராத்திரி முதுகு தோள் எல்லாம் ஒரே வலி. கை முறிஞ்சு போன கணக்காக நானுந்தான் அவங்ககிட்ட ஒரு வருசமா சொல்லிக்கிட்டு வாறன். கிறைண்டர் வாங்கச் சொல்லி. பெறகு பாப்பம்.. பெறகு பாப்பம் எண்டு நாளக் கடத்திட்டே போறார்ரு. ம்.. தனி மனிசன் சம்பாரிச்சு எத்தினையத்தான் கவனிக்கிறது.

'சுலைமாட உம்மாட்ட ஆறு மாச சீட்டுக் கட்டி மூவாயிரம் ரூபா வந்திச்சி. அதில மவனுக்கு ஒரு சைக்கிள் வாங்கினம். படிக்கிற பொடியனுக்கு ரியூசனுக்கு அங்க இங்க போக சைக்கிள் ஒன்னு வேணுந்தானே. சம்சுதீன் ஹாயியாருக்கிட்ட போட்ட பத்தாயிரம் ரூவா சீட்டு எடுத்து தான் ஹாயியார் ஸ்கூட்டர் வாங்கினாரு'.

'சுபைதா' முன் விறாந்தையில் இருந்து நீண்டு ஒலித்தது கணவனின் குரல்.
'இந்தா வாரேன்' பதைபதைப்புடன் முந்தானையை இழுத்து முக்காடிட்டபடி விரைந்தாள் சுபைதா. போன வேகத்தில் திரும்பி வந்தவள் கேத்தலை அடுப்பில் வைத்து தேனீர் ஊற்றும் வேலையில் இறங்கினாள்.
'மஸ்தான் மொதலாளியும் ஆரோ ஒரு பொடியனும் வந்திரிக்காங்க. நீ இந்த அடுப்பில இரிக்கிற ஆணத்த கொஞ்சம் பாத்துக்க. நான் தேத்தண்ணிய ஊத்திக் குடுத்திட்டு ஓடியாறன்'
'சரி ராத்தா நீங்க தேத்தண்ணிய ஊத்துங்க. நான் கறியப் பாக்கிறன்' என்ற நிசாமா, அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த ஆணத்தை அகப்பையால் அள்ளி உள்ளங்கையில் சொட்டாய் ஊத்தி உப்புப் புளி பார்த்தாள். அவளது முகத்தில் திருப்தி தெரிந்தது.

'சுபைதா ராத்தா உண்மையில நம்மட கொலனியில எந்தப் பொம்பிளையும் ஒங்களப் போல சமைக்க மாட்டாங்க. ஒங்க கை பட்டாலே சோறு கறி கமகமக்கும். என்ட உம்மாவே சொல்லுவா. எங்கட வாப்பா கூட சுபைதா ராத்தாக்கிட்ட பெயித்து ஆக்குறத்துக்கு படிச்சிட்டு வான்னு உம்மாக்கு ஏசுவாரு' சொன்னாள் நிசாமா.
தனது சமையல் திறமை பற்றி ஊரே புகழ்வது பற்றி சுபைதா அறிவாள். நிசாமாவின் வார்த்தைகள் அவளை மேலும் பெருமை கொள்ளச் செய்தன. தலையை சற்றுப் பெருமிதத்துடன் உயர்த்தி சுபைதா சொன்னாள்,
'இப்ப என்ன சமைக்கிறன். வயசு போனதால ஓடியாடி வேலை செய்யக் கொள்ள ஏலுதில்ல. சில நேரத்தில கறிக்கு உப்புப் போட்டனா இல்லையா என்டது கூட ஞாபகம் இரிக்காது. கொமரா இரிக்கப்ப நோன்பு நாளில நாங்க நாலஞ்சி வீட்டு பொம்புளக ஒண்ணா இரிந்து ரொட்டி சுட்டு சீனிச்சம்பல் செய்து எத்தினை பலகாரம்

www.tamilarangam.net

செய்வம். நாதான் மெயின் குக். உண்ட சமையல தின்டிட்டுத்தான் கரிமாட காக்கா என்னபத்தி விசாரிச்சாராம். எங்கட வாப்பாவுக்குத்தான் அதெல்லாம் சரிபட்டு வராதே'
அவளது முகத்தில் வெட்கமும் பெருமிதமும் படிந்திருந்தது.

'சுபைதா!' மீண்டும் ஹோலிலிருந்து கணவன் குரல்.
'இந்தா வந்திட்டன்' நாக்கைக் கடித்து கைகளை உதறியபடி, கிளாஸ்களை கழுவி தேநீர் ஊற்றினாள். தட்டில் வைத்துக் கொண்டு போய் கொடுத்து விட்டு உடனே திரும்பி வந்து விட்டாள்.
அவள் முகம் சற்று வாடியிருந்தது.
'ஏன் ராத்தா?' ஏதோ விளங்கியவள் போல சற்று பதைபதைப்புடன் வினாவினாள்.
'தலைல மொக்காடு விழகி ஹாயியார் கண்டுட்டாரு. மொறச்ச மொறயில நடுங்கிப் போனன்' தளர்ந்த குரலில் சொன்னாள் சுபைதா.
'நெசந்தானே பொறத்தி ஆம்பளகளுக்கு எதிர்க்க முக்காட்ட ஒழுங்கா போடாட்டி வீட்டுக்கார ஆம்புளக கோவிப்பாங்கதானே'
'ரெண்டு கையிலயும் றேய புடிச்சிருந்ததால முக்காட்ட சரியா போட ஏலாம போயிருச்சி'.
தனக்குத்தானே சமாதானம் சொல்பவள்போல நிசாமாவுக்கு சொன்னாள் சுபைதா.

'நாங்க கொமரா இரிக்கப்ப பெறத்தி ஆம்புள எதிர்க்கவே போகமாட்டம். ஆரும் வந்தாலும் ஊட்டுக்குள்ள ஓடி வருவம். எங்கட உம்மா கூட முன்னால வரமாட்டாங்க. வாப்பா இல்லாட்டி காக்காமாருதான் போய் கதைப்பாங்க'
'ஒருக்கா யமாத் ரெண்டு பேரு வந்தாங்க. எங்கட சின்ன ராத்தா எதிர்க்க போயிருச்சி அவங்க ரெண்டு பேரும் அப்பிடியே திரும்பி கொஞ்ச தூரம் நடந்து போயி தென்னம்புள்ளைக்கு கீழ நின்னாங்க. எங்கட வாப்பா கிணத்தடியில குளிச்சிட்டு இரிந்தவரு. யமாத் மார திரும்பி போனத கண்டு குளிச்ச குறையில ஓடி வந்து அவள ஊட்டுக்க கூட்டி வந்தாரு. யமாத் துமாருக்கு எதிர்க்க போனத்துக்கால சின்னராத்தாவ குசினிக்குள்ள கூப்புட்டு உறுக்கினாரே ஒரு உறுக்கு!
சின்னராத்தா நடுங்கிப் போச்சி பாவம்.

நான் சின்னப்புள்ளயில மொக்காட்ட அரையும் கொறையுமா போட்டுகிட்டு கடைக்குப் போயிட்டு வந்தன். அப்பக் கடையில பொடியன்மாரோட நிண்ட

புது உலகம் எமை நோக்கி

**'சோறு கறி இரிக்குத்தானே புள்ள.**
**ஆம்புளயளுக்கு தாராளமா இரிந்தா காணும்.**
**நாங்க மிஞ்சிறத மீதிய வவுத்துக்கு பாத்துக்கலாம்'**

**99**

www.tamilarangam.net

சின்ன நானா என்னையக் கண்டாரு. ஊட்ட வந்து குட்டினாரே ஒரு குட்டு! நெனச்சா இப்பவும் உச்சஞ்தலைல வலிக்கும். அப்புடி அந்தக் காலத்துல ஊட்டுப் பொம்புளக பெறத்தி ஆம்புளயளுக்கு எதிர்க்க போறது புடிக்காது. ஏன் நம்மட நசீர் கூட சரீனா முக்காடு போடாம போறாள் எண்டு ஏசுவான். இந்தக் காலத்துப் புள்ள அவ. மொக்காட போட்டிட்டு போ எண்டு சொன்னா ஊட்டுல இரிந்து போட்டுட்டு பேந்து ரோட்டில ஏறினதும் எடுத்துருவா'.
தன்காலத்து சட்டதிட்டங்களை பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தாள் சுபைதா. வாசலில் கார் சத்தம் கேட்டது. சுபைதா பரபரத்தாள்.
'மாப்புள பொம்புள வந்திட்டாங்க' என்றபடி வாசல் பக்கம் விரைந்தாள்.
எதிர்பார்த்ததை விட இன்னும் நாலைந்து பேர் கூடுதலாக வந்திருந்தனர். விருந்தினர் களுக்கு உணவு பரிமாற நிசாமாவும் நின்று உதவினாள். சுபைதாவின் மகன் நசீரும் தனது இரு நண்பர்களைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டான்.

'சோறு கறி இரிக்குத்தானே புள்ள. ஆம்புளயளுக்கு தாராளமா இரிந்தா காணும். நாங்க மிஞ்சிறத மீதிய வவுத்துக்கு பாத்துக்கலாம்' என்றாள் சுபைதா.
தலையை ஆட்டி நிசாமாவும் அதை ஆமோதித்தாள்.

விருந்தினராய் வந்திருந்த புதுமணப் பெண்ணும், அவளோட வந்திருந்த பெண்களும் குசினிக்குள் வந்து பலகைக் கட்டைகளை எடுத்துப் போட்டு குந்திக் கொண்டனர். ஆண்கள் சாப்பிட்ட பின்பு தாங்கள் சாப்பிடுவதாக கூறிவிட்டு பரிமாறுவதில் அவர்களும் பங்குபற்றினர்.
ஆண்கள் சாப்பிட்டு முடித்தவுடன் விருந்தினப் பெண்களை சுபைதாவும் நிசாமாவும் உபசரித்தனர். தங்களோடு இருந்து சாப்பிடும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் அவர்கள் இருவரும் மறுத்து விட்டார்கள். உணவு போதாமல் போய்விடுமோ என்ற பயம்தான் காரணம்.
சமையல் முறைகளைக் கதைத்தபடியே சாப்பிட்டு முடித்தனர். சுபைதாவுக்கு நிம்மதியாக இருந்தது. விருந்தினர் யாவருக்கும் சாப்பாடு போதுமானதாக இருந்தது.

எப்படியும் சோறு வடிக்கத்தான் வேணும். நிசாமாவும் நானாவும் தானும் சாப்பிட புரியாணி சோறு காணாது; கறிகளும் கொஞ்சமாக இருந்தன.
அவசர அவசரமாக அரிசையைக் கிளைந்தாள் சுபைதா.
'கறியெல்லாம் கொஞ்சம் தான் இரிக்கி. எதுக்கும் கொஞ்சம் பருப்பு ஆக்குவம்' என்றபடி அரிசியை உலையில் போட்டாள்.

ரியூசனால் திரும்பி வந்த மகள் சரீனாவும் நிசாமாவும் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தனர்.
ஹாயியார் குசினிக்குள் வந்தாரு.
'என்னா இன்னும் வேல முடியல போல இரிக்கி. நிசாமா எப்ப வந்தா?' ஆச்சரியமாகக் கேட்டார்.

www.tamilarangam.net

'அந்தப் புள்ள காலைலே வந்திருச்சி. அது வந்தது எனக்கு எவ்வளவு பெரிய ஒதவியா போச்சி' என்றாள் சுபைதா.
'நல்லது புள்ள நிசாமா, இருந்து தின்டிட்டு போ. வாப்பா ஒன்னும் செல்லமாட்டாரு' என்றார் ஹாயியார்.
நிசாமா மரியாதை கலந்த வெட்கத்துடன் தலையைக் குனிந்தபடி சிரித்தாள். இதற்கிடையில் ஹாயியாரின் தம்பி மகனும் இன்னுமொரு உறவுக்கார இளைஞனும் நசீரைத் தேடி வந்தனர். அவர்களை வரவேற்ற ஹாயியார் நேரே குசினிக்கே அழைத்து வந்து விட்டார்.
'இந்தா ஜிப்பிரியும் நஸ்லானும் வந்திரிக்காங்க. புள்ளகளுக்கு சாப்பாடு போட்டுக்குடு' என்றார்.

'இல்ல பெரிய வாப்பா நாங்க ஊட்டுல சாப்பிட்டுத்தான் வந்தோம்' என்றான் ஜிப்ரி.
'அட இன்னிக்கி நம்மட ஊட்டுல புரியாணி ஸ்பெசல். சும்மா வெக்கப்படாம தின்னு' என அவன் முதுகில் தட்டிவிட்டு முன்னால் போய்விட்டார்.
சுபைதாவுக்கு தர்ம சங்கடமாயிற்று. இருந்த உணவுகளை அப்படியே அந்த இளைஞர்களுக்கு சிரித்த முகத்துடன் எடுத்துப் பரிமாறினாள்.

இளைஞர்கள் போன பின்பு தாயின் காதில் கடித்தாள் சரீனா.
'என்னா உம்மா, இன்னக்கி நம்மட வவுத்துக்கு கட்டா'
'சும்மா இரி புள்ள. வாற மனிசர கவனிக்காட்டி அல்லா கோவிப்பான். எனக்கு இந்த புள்ள நிசாமாவுக்கு ஒரு புடி புரியாணி குடுக்க ஏலாம போச்சேன்னுதான் வெசனமாயிருக்கி' என்றாள் சுபைதா.
உண்மையில் அவளது குரலில் வருத்தம் கலந்திருந்தது.

'அதுக்கென்ன ராத்தா, நான் என்ன உங்கட ஊட்டுல தின்னாத ஆளா. வாற மனுசர ஒழுங்கா கவனிக்காம பொம்பளக நமக்கு என்ன சாப்பாடு தேவைப்படுது' என்றாள் நிசாமா.
'அது சரி புள்ள நமக்கு இல்லாட்டியும் வாற ஆக்களுக்கு ஒழுங்கா சாப்பாடு குடுக்க வேணும். இல்லாட்டி வீட்டுக்கார பொம்புளகளுக்குத்தான் மதிப்பில்ல. வெளியில போய் நாலுபேர் நாலுவிதமா கதைப்பாங்க' என்று புத்திமதி சொல்வது போல் சொன்னாள் சுபைதா.

நேரம் மதியம் மூன்றைக் கடந்து விட்டது. நிசாமாவைப் போகவிடாமல் மறித்து தங்களுடன் சாப்பிடச் சொன்ன சுபைதா

---

புது உலகம் எமை நோக்கி

---

**'அது சரி புள்ள நமக்கு இல்லாட்டியும் வாற ஆக்களுக்கு ஒழுங்கா சாப்பாடு குடுக்க வேணும். இல்லாட்டி வீட்டுக்கார பொம்புளகளுக்குத்தான் மதிப்பில்ல. வெளியில போய் நாலுபேர் நாலுவிதமா கதைப்பாங்க'**

www.tamilarangam.net

முட்டை பொரிப்பதற்காக அவசர அவசரமாக வெங்காயம் கொச்சிக்காயை வெட்டினாள். தோலுரிந்து போயிருந்த விரல்கள் கொச்சிக்காய் பட்டதும் எரிவு ஏற்பட்டு கண்களில் நீர் கொப்பளித்துக் கொண்டு வந்தது.

'யாஹ் அல்லாஹ்! என்ர கை எரியுது. புள்ள சரீனா இதக் கொஞ்சம் வெட்டித்தா' என மகளிடம் கொடுத்தாள்.
முட்டை பொரிந்ததும் சரினாவும் நிசாமாவும் சாப்பிட்டனர்.
'சீ ஒரு கட்லட் கூட இல்லையா உம்மா? கடசில முட்டப் பொரியலும் பருப்புக் கறியும் வெள்ளச் சோறுந்தான்' என்று அலுத்துக் கொண்டாள் சரீனா. நிசாமா சிரித்தாள். நல்ல உணவு வகைகளில் எதுவும் மிஞ்சாதது அவளுக்கும் ஏமாற்றமாக இருந்தது. ஆனால் வேற்று வீட்டுப் பெண் அதை வெளிப்படுத்துவது அழகில்லை யாதலால் சிரிப்புடன் இருந்து விட்டாள்.
சுபைதா சோற்றை கோப்பையில் போட்டு வைத்துவிட்டு, தேநீருக்கு கேத்தலை அடுப்பில் வைத்து எரிப்பதும் கோப்பைகளைக் கழுவுவதுமாக இருந்தாள்.
'உம்மா வந்து சாப்பிடுங்களன்' தாயை அழைத்தாள் சரீனா.

'வாறன். வாறன்.. தேத்தண்ணி நேரம் வந்திடுச்சி. தண்ணிய அடுப்புல வெச்சி எரிச்சிப் போட்டு வாறன்' என்றபடி, அடுப்பை ஊதி எரித்துவிட்டு வந்து பலகைக் குத்தியை எடுத்து ஓரமாகப் போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கினாள் சுபைதா. இரண்டு வாய் கூட சாப்பிட்டு இருக்கமாட்டாள் ஹாயியார் வந்தார்.
'நேரமாச்சி. அவங்க வெளிக்கிடுறாங்க. இவ்வளவு நேரம் என்ன செஞ்சிங்க. தேத்தண்ணி குடிக்கிற நேரத்தில சோத்த திண்டுகிட்டு... சுறுசுறுப்பா ஒண்ணுஞ் செய்யத் தெரியாதா?' திட்டியபடி கிணற்றடிப் பக்கம் போனார்.
சுபைதா சோற்றுக் கோப்பையை அப்படியே வைத்துவிட்டு கையைக் கழுவி தேத்தண்ணி ஊற்றத் தொடங்கினாள்.

'உம்மா, சோத்த தின்னுட்டு ஊத்துங்களன்' என்றபடி சரீனாவும் நிசாமாவும் அவசர அவசரமாக சோற்றை உருட்டி விழுங்கினார்கள்.
'நேரம் போயிருச்சி. தின்னுக்கிட்டு இரிந்தா வந்தவங்க பொறப்பட்டுருவாங்க' என்று சுபைதா வேலையில் இறங்கினாள். நிசாமாவும் சரினாவும் அவதி அவதியாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு பலகாரங்களைத் தட்டில் வைத்து பரிமாற எடுத்துச் சென்றனர்.
'லட்டும் கேக்கும் வாழைப்பழமும் தானா? ஏன் உம்மா கொஞ்சம் பற்றிஸ்சும் செஞ்சிருக்கலாமே' என்றபடி குசினிக்குள் வந்தான் நசீர்.
'நான் ஒத்தக்கையால எத்தினைய செய்யிறது மவன்' அலுத்துக் கொண்டாள் சுபைதா.

'ஏன், சரீனா செய்யிறதுக்கென்னா. நல்லாத் தின்னிட்டு இருக்கத்தான் அவளுக்குத் தெரியுதா' தங்கச்சியை முறைத்தான் நசீர். லட்டுக்களை அழகாக தட்டில் அடுக்கிக் கொண்டிருந்த சரீனா தாயிடம் முறையிட்டாள்,

www.tamilarangam.net

‘உம்மா இவர சும்மா இரிக்கச் சொல்லு’
இவர்களுக்கிடையில் சண்டை மூண்டுவிடுமோ என்று பயந்த சுபைதா,
‘சரி. சரி.. நானாதானே சொல்லுறான். நீ போய் வந்தாக்களை கவனி’ என மகளை ஏவினாள்.

‘சரி கட்லட்ட எடுங்க, தின்னுவம்’ என்றபடி கதிரையை இழுத்துப் போட்டு குந்திக் கொண்டான் நசீர்.
‘ஏது மவன், எல்லாம் அப்பவே முடிஞ்சிரிச்சி’ மென்மை கலந்த குரலில் சொன்னாள் சுபைதா.
‘மிச்சம் சொச்சம் வைக்காம குசினிக்குள் இரிந்து எல்லாத்தையும் முழுங்கீடுங்க’ கோபமாய் கதிரையை உதைத்து விட்டுப் போனான் நசீர்.
நிசாமாவுக்கு என்னவோ போல் இருந்தது.
‘ஆம்புள புள்ள. குசினிக்குள்ள என்ன நடக்குது போவுது எண்டு அவனுக்கு எங்க வெளங்கப் போகுது’ சலித்துக் கொண்டாள் சுபைதா.

விருந்தினர்கள் போய்விட்டார்கள். நிசாமாவும் விடைபெற்றுக் கொண்டாள். அவளுக்கு கொஞ்சம் பலகாரங்களை கடதாசியில் வைத்து சுற்றிக் கொடுத்து அனுப்பினாள் சுபைதா.

இருளத் தொடங்கி விட்டது. ஹாயியார் மஹ்ரீம் தொழுகைக்காக பள்ளிக்குப் புறப்பட்டு விட்டார். மகன் நசீரும் நண்பர்களுடன் அரட்டையடிக்கப் போய்விட்டான். சரீனா தலைகீழாக இருந்த வீட்டை ஒதுக்கத் தொடங்கினாள். விறாந்தையில் ஒரு ஓரமாய் முடங்கி உட்கார்ந்த சுபைதா, ‘புள்ள நீ தொழுவலையா’ சோர்வுடன் கேட்டாள். முகத்தை முந்தானையால் துடைத்து கைகளால் விசிறிக் கொண்டாள்.
‘ஊட்டக் கூட்டீட்டு தொழுவுறன் உம்மா. நீங்க தொழுவலையா?’ தாயிடம் கேட்டாள்.
‘இல்ல புள்ள. உடம்பு அசதியா இரிக்கி. இஷாவுக்கு தொழுவுறன்.

கைகளை முறுக்கி நெளிவெடுத்து விட்டு அந்த இடத்திலேயே சரிந்து படுத்தாள் சுபைதா. படுத்தவுடன் அயர்ந்துபோனாள்.

இரண்டு மூன்று பிடி அள்ளியதோடு வைத்தபடியே இருந்த சாப்பாட்டுக் கோப்பையில் இலையான்கள் மொய்த்தன.

புது உலகம் எமை நோக்கி

வாசகர் குறிப்பு

www.tamilarangam.net

'பாவம் உம்மா வவுத்துக்கு தின்னக்கூட இல்ல'
தாய்க்காகப் பரிதாபப் பட்டபடி, சோத்துக் கோப்பையைக் கொட்டி பாத்திரங்களைக் கழுவி குசினியை ஒதுக்கத் தொடங்கினாள் சரினா.
தொழுகை முடிந்து திரும்பிய ஹாயியார் செருப்பைக் கழற்றியபடி உள்ளே வந்தார். 'என்னா பள்ளியில வாங்கு சொல்லுற சத்தம்கூடவா கேக்கல? தொழுவுற நேரத்தில என்ன படுக்க? உம்மாட பழக்கம்தானே புள்ளகளுக்கும் வரும். சரீனா புள்ள, தொழுவுற நினைப்பு வரலயா?'
'வாறன் வாப்பா, குசினியக் கூட்டிட்டு இரிக்கன்'. பயம் கலந்த பணிவுடன் குசினிக்குள் இருந்து குரல் வந்தது.
'ஒவ்வொண்ணுக்கும் ஒரு சாக்குப் போக்கு சொல்லிடுவீங்க'
தாயையும் மகளையும் பொதுமைப்படுத்தி குறைசொல்லி விட்டு, சேட்டைக் கழற்றி கதிரையில் கொழுவிய ஹாயியார் வாரப்பத்திரிகையுடன் விறாந்தைக்குப் போய்விட்டார்.

கணவரின் குரலால் திடுக்குற்ற சுபைதா பதறியடித்துக் கொண்டு எழுந்தாள். ஏழு மணிக்குப் பத்து நிமிடங்களே இருந்தன. இரவுச் சாப்பாடு செய்யவேண்டியது நினைவுக்கு வரவே, மெல்ல எழுந்து குசினிக்குள் சென்றாள்.

## கமலா காத்திருக்கிறாள்

பாதி ஜடமாக மனசுக்குள்ளே உருகித் தவித்தபடி, படுக்கையோடு படுக்கையாக சாய்ந்திருக்கும் தன் கணவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் இல்லை. வற்றிவிட்டதா அவள் இதயத்தைப் போல் கண்களும் மரத்துப்போய் விட்டனவா? எட்டு வருடங்களாக அவள் அனுபவிக்கும் வேதனையின் வடிகால்களாக இருந்த கண்ணீர், அழுகை எல்லாம் என்றோ தொலைந்து விட்டது. மிஞ்சியிருப்பது என்ன?
வாழ்க்கை அவளைப் பொறுத்தவரை பூச்சியம்தான்.

தன் முன்னால் இடுப்புக்குக் கீழே உணர்வுகளை இழந்து இயங்க முடியாத கையாலாகாத்தனத்தால் வெதும்பும் அவனையே பார்க்கிறாள்.

'பெரியவர்கள் விதி என்று சுலபமாகச் சொல்கிறார்கள். விதியை யார் நிர்ணயித்தது? கடவுள் என்றால், எனக்கு விதித்த விதி தூக்குக் கயிற்றைவிட கொடுமையானதே! ஆண்டவனுக்கு என்மேல் ஏன் இவ்வளவு குரோதம்? சாகும்வரை அழு என்று

www.tamilarangam.net

சபிக்க நான் செய்த தவறு என்ன?'
ஏதேதோ சிந்தனையில் உழன்றாள் கமலா.

பருத்தித்துறையை அடுத்து ஒரு சிறிய கிராமம். ஆஸ்பத்திரி, பாடசாலைகள், போக்குவரத்து வசதிகள் அனைத்தும் கொண்டது.
வசதியான குடும்பம். அவளின் இளமைக் கனவுகளும் வசதியாக செழிப்பாக வளர்ந்தது. தந்தை அவளின் மனதை படம் பிடித்தது போல் தேடிக் கொண்டு வந்தார் மணவாளனை. அவன்தான் முரளி. தன் ஆசைகளின் கனவுகளின் மொத்த உருவமாக முரளியைக் கண்டு மகிழ்ந்தாள் கமலா.
இருவரும் அனுபவித்த இன்பமெல்லாம் வெறும் ஒரு வருடம்தான் என்று யார் நினைத்தார்கள்.

அன்று வீடே அல்லோல கல்லோலப் பட்டது. கமலா-முரளியின் குழந்தை பிறந்து 31 நாள். வீடு நிறைந்த விருந்தாளிகள், உறவினர்கள். குழந்தை பிறந்ததிலிருந்து மனைவியை ரகசியமாக சந்தித்து மனம்விட்டுப் பேசவோ, தன் சந்தோசத்தைப் பகிர்ந்திடவோ சந்தர்ப்பம் கிடைக்காமல் எப்பவும் மாமி, அல்லது கமலாவின் தங்கைகள், தம்பிகள். பிரசவத்திலிருந்து சுதந்திரமாக அவளை நெருங்க முடியாத தாபம். இதே நிலையில் தான் கமலாவும் இருந்தாள். அம்மா மீது அவளுக்கு கோபம் கோபமாக வந்தது.
பெண்களுக்கு கல்யாணம் ஆகும் வரைதான் சிறை. குழந்தை பிறந்த பின்புமா? அப்படி என்ன நாவூறு என்று தாயையும் சேயையும் அடைத்து வைப்பது. மற்றவர்கள் இருக்கட்டும் கணவன் கூடவா?
பச்சை உடம்பு என்று சதா காவல் இருந்தாள் அம்மா.

புது உலகம் எமை நோக்கி

# கமலா காத்திருக்கிறாள்

**-கருணா-**

*நோர்வே*

கண்மூடி சிந்தனையில் இருந்தவளைக் கலைத்தது முரளியின் குரல்,
'நித்திரையா?'
மௌனித்தாள். கோபம்.
'கோபமா?'
'பின்ன என்ன! என்னமா மனுசியையும் பிள்ளையையும் எட்டிப் பார்த்து என்ன ஏது என்று விசாரிக்ககூட ஐயாவுக்கு நேரமில்லையா?'
'ஐயாவுக்கு நேரமும் இருக்கு; எப்பவும் உமக்குப் பக்கத்தில இருக்க ஆசையும் இருக்கு. நந்திபோல உம்மடை அம்மா எப்பவும் நடுவில நிண்டால் நான் என்ன செய்யிறது?'
சரி, இப்ப அம்மாவை எப்பிடி ஏமாத்தினியள்?

www.tamilarangam.net

'அதையேன் கேக்கிறீர் பக்கத்துக் கடையில நல்லெண்ணை இருக்குது; அது சரியில்லையாம். நான் இப்ப ரவுணில செல்லையா அண்ணை கடையில் எண்ணை வாங்கிக் கொண்டு வரவேணுமாம்...'
முரளி சொல்லிக் கொண்டிருக்கும்போதே கழுகுக்கு மூக்கில் வேர்த்தது போல் செருமிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் கமலாவின் அம்மா.
'என்ன தம்பி, நீங்கள் கடைக்குப் போட்டியளாக்கும் எண்டு நினைச்சன். நீங்கள் என்ன செய்யிறியள்?'
'கமலாட்ட சொல்லிட்டுப் போவமெண்டு...'
'சரிசரி, கெதியாப் போங்கோ! ஊர் இருக்கிற நிலையில எப்ப ஷெல் விழும்; எப்ப குண்டு வெடிக்கும் எண்டு சனங்கள் சரியா கடையத் திறக்கிறேல்ல. நீங்கள் போறதுக்குள்ள செல்லையா அண்ணை கடையைப் பூட்டப்போறார்'
திரும்பி நடக்கும் மாமியின் இடுப்புக்குப் பின்னால் நாக்கை நீட்டி, முகத்தை கோணலாக்கி அழகு காட்டிய அவரைப் பார்த்து கமலா வாய்விட்டுச் சிரித்தாள்.

இதுதான் அவள் கடைசிச் சிரிப்பு என்று அவளோ அவனோ அப்போது அறிந்திருக்க வில்லை. விதி எண்ணை ரூபத்தில் அவனை விரட்டியதை மாமியும் அறிந்திருக்க வில்லை.

கடையில் நல்லெண்ணை வாங்கிவர மோட்டார் சைக்கிளை நெருங்கியவன் பல குரல் கேட்டு கலவரத்தோடு திரும்புகையில் துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம். சிலீரென்று எண்ணைப் போத்தல் தரையில் சிதற, பார்வை மங்கலாக கமலாவின் நினைவுடனேயே மயங்கிச் சரிந்தான் முரளி.

யாருக்கோ குறிவைத்த குண்டு நிரந்தரமாக தான் குடியிருக்க முரளியின் முதுகுத்தண்டில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தது தான் விதியோ? உடலில் வேறு எங்காவது அவன் தாக்கப்பட்டிருந்தால் கூட பிழைத்து நடமாடியிருக்கக் கூடும்.
அழுது அழுது ஓய்ந்தாள் கமலா.
குண்டு அகற்றப்பட்டால் கணவனின் உயிர் பிரிவது நிச்சயம், எதுவும் செய்ய இயலாது என்று கை விரித்தனர் சத்திரசிகிச்சை நிபுணர்கள்.

மெல்லமெல்ல இடுப்புக்குக் கீழே உணர்வுகளை இழக்க ஆரம்பித்தான் அவன். படுக்கையிலேயே மலசலம் கழிப்பதை, அதை சுத்தம் செய்யும் மாமியையும் மனைவியையும் பார்த்து கண்ணீர் விட்டு அழுதான் அந்த ஆண்மகன்.
அன்பாக குழந்தையை மனைவியை அணைக்க கைகள் செயற்படுவதும் அந்த ஆண்டவனுக்கு பொறுக்கவில்லைப் போலும். முரளியின் வலது கையையும் ஜடமாக்கினார்.

உலகில் உள்ள சோகங்கள் எல்லாம், அந்த வீட்டில் குடியேறியது போல் எங்கும் இருள். அமைதி. மனங்களின் இறுக்கம்.

www.tamilarangam.net

அந்த சோகம் அண்டை அயலவரையும் தொற்றிக் கொண்டது உண்மை. மகளைக் கண்டபோதெல்லாம் கலங்கினார் தந்தை.
எந்தத் துன்பத்திற்கும், சோதனைகளுக்கும் ஓர் எல்லையுண்டு; ஒரு முடிவுண்டு. கமலாவைப் பொறுத்தவரை அது தொடர்கதையானது.

ஆண்டுகள் உருண்டோடின.
ஏழு வருடங்களை முழுமையாக விழுங்கியது சோகம்.

வானத்தை வெறித்தபடி கிணற்றடியில் உக்கார்ந்திருந்தவளின் தோளில் ஆதரவாக கைபட நிமிர்ந்து பார்த்தவள், தந்தை தன்னிடம் எதையோ சொல்லத் தயங்குவதை புரிந்து கொண்டாள்.
'என்னப்பா?'
'தம்பியின் நிலைக்குக் காரணமானவை நேற்று இஞ்ச வந்தவை பிள்ளை'
'தம்பி படுற கஷ்டம் பொறுக்க முடியேல்ல. அவரோட நீயும் படுற கஷ்டம் என்னால தாங்க முடியேல்லப் பிள்ளை' குரல் உடைந்து அழத் தொடங்கினார்.
'அவை சொல்லுகினம் இனி ஒண்டும் செய்ய ஏலாது. அவருக்கும் சித்திரவதை, உங்களுக்கும் கவலை. அதால...'
எப்பிடிச் சொல்வதென்று தயங்கி, பின் மௌனமானார்.
'சொல்லவந்தத சொல்லுங்கோ!'
'அதால... முடிச்சிட்டால் என்ன எண்டு...'

சொன்னது தந்தை தானா என்பதை நம்பமுடியாமல் அதிர்ச்சியுடன் அவரை ஏறிட்டாள். அவர் கூறியதை ஜீரணிக்க பல மணி நேரமானது கமலாவுக்கு.

'அப்பா இது நீங்கள் எனக்கு சீதனமாக் குடுத்த வீடு எண்ட உரிமையில தான் இருக்கிறன். எங்களை நீங்கள் பாரமா நினைச்சா சொல்லுங்கோ. இப்பவே இவரையும் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு போறன்'
'அழாத பிள்ளை! ஏதோ அவங்களும் உன்ரை நன்மைக்குத் தான்... சொல்லிப் போட்டன். ஒண்டையும் மனசில வையாத கடவுளில பாரத்தைப் போட்டிட்டு இருப்பம். வேற என்ன செய்யிறது?'
துண்டால் கண்களைத் துடைத்தபடி சென்ற தந்தையைப் பார்த்தாள். வயோதிபத்தோடு இந்த வேதனையும் சேர்ந்து அவர் மிகவும் கிழவராக தோன்றினார் அவளுக்கு.

**புது உலகம் எமை நோக்கி**

*வாசகர் குறிப்பு*

www.tamilarangam.net

உலகில் சாகவும் முடியாமல் வாழவும் முடியாமல் நோயினாலோ அல்லது வேறு எந்த சித்திரவதையாலோ கொல்ல சட்டத்தில் இடமுண்டு. இதற்கு கருணைக் கொலை என்று பெயர். அதற்காக அன்பான தன் கணவனை கொல்ல எந்தத் தமிழ் பெண்தான் முன்வருவாள். தமிழ்ப் பெண் என்ன, எந்தப் பெண்ணுமே உடன்பட மாட்டாள்.

யாரை நொந்து என்ன விதி. அவள் இன்பமான வாழ்வை ஒட்டுமொத்தமாக குத்தகைக்கு எடுத்த பின்னர் இனி மிச்சமாக இருப்பது தான் என்ன?

ஆனாலும் கமலா முற்றிலுமாக நம்பிக்கையை இழந்து விடவில்லை. அவள் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் நம்பிக்கைக் கீற்று மெலிதாக ஒளி வீசிக் கொண்டுதான் இருக்கிறது. வைத்தியர்கள் ஏமாற்றியபோதும், சதி கூட வந்து குழி தோண்டிய போதும் கடவுள் மேல் அவள் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கையின் பேரில் இன்னும் நடைப்பிணமாக நடமாடிக் கொண்டிருக்கிறாள்.

என்றாவது ஒருநாள் தன் கணவனின் கால்களும் கையும் உணர்வு பெறும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறாள், இந்தக் கமலா !

## ஒத்தைத் தண்டவாளமும்
## ஒரு கறுப்பு நீள முடியும்

நான் அடுத்த ரயிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன். இன்னும் வரக்காணம்,என்ர மேலில ஒட்டியிருக்கிற ரத்தப் பிசுபிசுப்பை மிதிச்சு எடுத்துக் கொண்டு போனால்தான் என்ர படபடப்பு கொஞ்சமாவது அடங்கும். அதை நினைச்சாலே ஈரக்குலை நடுங்கும். Bahnhof இல நிண்ட எல்லாரமே, அலறலோட வந்த கோரத்தைப் பார்த்ததும் வாயடைச்சுப் போய் நிண்டிட்டுதுகள். அவையின்ர வாள்நாளில இப்படியொரு கொடுரத்தைக் கண்டிருப்பினமோ என்னவோ! Bahnhof சுவர், தண்டவாளத்தடி எல்லாமே ஒரே ரத்த சிதறலும், துண்டுதுண்டா தெறிச்சுக் கிடக்கிற சதைத் துண்டுகளும், அலங்கோலமா முழிதள்ளியபடி எங்கயோ பார்த்துக் கொண்டு கிடக்கிற தலையும் எல்லாரையும் நிலைகுலையச் செய்தது. என்னையும் தான்!

நிண்ட சனத்தில கொங்சம் அழறதும், மயங்குறதும், தலைசுற்றி வாயடைச்சுப் போய் நிற்கிறதுமா இப்படியொரு சம்பவமே இந்த Bahnhof இல நடக்கேல்ல.

www.tamilarangam.net

இரும்புப் பிணைச்சலைக் கொண்டு சிலிப்பர் கட்டையோட இணைச்சு, மற்ற தண்டவாளத்தோட சேரவிடாம பூட்டி என்ர மேலில ரயில் எவ்வளவு காலமாக ஓடிக்கொண்டிருக்குது. இவ்வளவு காலத்தில இதைப்போலொரு கோரத்தை, அதுவும் சின்னப் புள்ளையையும் கொண்டு ரயிலுக்கு முன்னால பாய்ஞ்சதை எண்ணண்டு சொல்லுறது. என்ர மேலெல்லாம் தெறிச்சு பிசுபிசுண்டு ஒட்டிக்கொண்டிரக்கிற சூடான ரெத்தம், அதோட சூழாகிடக்கிற கறுப்பு தலைமுடியும் என்ர நெஞ்சை உறைய வைக்குது.
ஏன் வந்து விழுந்தாள் எனக்கு மேல.
என்ர வாழ்நாள் முழுதும் என்னை உறுத்திக் கொண்டிருக்கப் போகிறதே. அவள் தன்முடிவை தேடுவதற்கு நான் கிடக்கும் இடமா கிடைச்சுது.

அவள் விழுந்த ரயில் கொஞ்சம் மெதுவா இந்த Bahnhof ஐ கடந்திருக்கக் கூடாதா. அவர்களை முற்றா இப்படி இழந்திருக்க தேவையில்லாமல் போயிருக்கும். காயத்தோடையாவது தப்பியிருப்பினம். சிலவேளை பிள்ளையாவது தப்பியிருக்கும். அந்தச் சின்னக் குழந்தை என்ன குற்றம் செய்தது. அதுக்கேன் இவ்வளவு பெரிய தண்டனை.
என்ர மேல் விளிம்பெல்லாம் ரத்தம் காய்ஞ்சு பிசுபிசுத்து ஒட்டிக் கொண்டிருக்குது. நான் அடுத்த ரயிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன். இன்னும் வரக் காணேல்ல. என்ர மேலில கொட்டியிருக்கிற ரத்தத்தை எடுத்துக் கொண்டு போக இன்னும் காணேல்ல. இதெல்லாம் நடக்குமெண்டு யார் எதிர்பார்த்தார்கள்.

பாழாய்ப்போன 'சினோ' நிக்காம கொட்டிக் கொண்டிருக்கு. அது கூட என்னைக் கழுவிவிட முயற்சி செய்யேல்லை. ஒடுக்கமான, தேய்ஞ்ச, வழவழப்பான என்ர

புது உலகம் எமை நோக்கி

# ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீள முடியும்

**-சுருதி-**
*சுவிஸ்*

99

இரும்பு உடம்பின்ர தன்மையால எனக்கு மேல விழுகிற கொஞ்ச 'சினோ' கூட சிலிப்பர் கட்டையிலயும், கல்லிலயும் நழுவுது. கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிற 'சினோ' வையும் பக்கத்துத் தண்டவாளத்தால போற 'இன்ரசிற்றி' எடுத்துக் கொண்டு போகுது.

Bahnhof Strasse இல சினோவை வழிச்சு ஒதுக்குற 'வாகன்' சினோவை கரையில ஒதுக்கி மலை மாதிரி குவிச்சுக் கொண்டு போகுது. அய்ஞ்சு வருசத்துக்குப் பிறகு 'சினோ' கனக்க கொட்டிக் கொண்டிருக்கு. வயலுகள், வீட்டுக்கூரை, ரோட்டுகள், தண்டவாளங்கள்... எல்லா இடமுமே சினோ. ஒரே வெள்ளை மயம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தையள் 'சினோ பொம்மை' செய்து விளையாடிக் கொண்டிருக்குதுகள். நடக்க ஏலாம கிடந்த வயது போனதுகள் கூட சினோ கொட்டுறதைக் கண்டதும் தான் புது நாணமாக றோட்டில கைக்'கிளவுஸ்'உம் 'ம.ஃப்ளர்'உம் மாட்டிக் கொண்டு வீரநடை போட்டுக் கொண்டிருக்கீனம்.

இந்தமுறை 'அவுஸ்லாண்டரை' திட்டமாட்டான் சுவிஸ்காரன். ஏனெண்டா ஒவ்வொரு வருசமும் சினோ குறைவா கொட்டுறதுக்கும், இல்லாமல் போறதுக்கும் அவுஸ்லாண்டர் வாறது காரணமெண்டு சொல்லி தன்ர 'ஃபக்ரறி' புகையையும், வாகனங்களின்ர நெருக்கத்தையும், காடழிப்பையும் மறைக்கிறவனை என்னண்டு சொல்றது.

வழமைபோல இந்த Bahnhof 'லோக்கல் ரெயின்' மாதிரியே இயங்கிக் கொண்டிருந்தது. ரயிலில ஏறிப் போவதும் வருவதுமாக வழமையாக நான் காணுகிற சனங்கள். மாதாகோயிலை ஞாபகப்படுத்துற மாதிரி ஒவ்வொரு ரயில் வர்ற நேரமும் டாங்டாங் என்ற மணிச்சத்தம்.
முதல்ல இந்த Bahnhof ஐப் பற்றி கொஞ்சம் சொல்ல வேணும். அதுகும் இந்த விஞ்ஞான கொம்பியூட்டர் காலத்திலயும் எத்தனை புது வடிவில பழைய Bahnhof களை இடிச்சு கொம்பியூட்டர் மயமாக்கின பிறகும், இந்த Bahnhof பழைய உருவத்தோடயே பிடிச்சு வைச்ச மாதிரி கொஞ்சமும் மாற்றம் அசைவில்லாம நிற்குது. இத இடிச்சு புது வடிவில கட்ட இஞ்சை உள்ள மக்களிடம் வாக்கெடுப்புக்கு விட்டாலும் 'JA' வுக்கு இடமில்லை. இடிச்சுவிட மாட்டமெண்டீனம் பழமைபேணும் மக்கள். அதால நானும் திருத்தலும் மாத்தமும் இல்லாம இந்த இரும்பு பிணைச்சல்கள் இறுக்க, ரெயிலுகளுக்கடியில் மிதிபட்டு உலகம் முழுவதும் நீண்டு போய்க் கிடக்கிறன்.

என்ர மேலில சில்லை அழுத்தி ஓடிக்கொண்டிருக்கிற 'இன்ரசிற்றி' என்னை திரும்ப திரும்ப ரெயிலின் முன் விழுந்த அவளையும் குழந்தையையும் ஞாபகப்படுத்துது. ரெயிலால் சிதைபட்டு அவளும் குழந்தையும் கிடந்த கோலம் என்னால மறக்க முடியாமல் உறுத்திக் கொண்டே இருக்குது.
ஏன் விழுந்தாள் ரெயிலில்?
அவளை இப்படி ரெயிலில் விழப்பண்ணியது எது? குடும்ப உறவுகளா?அல்லது கணவனா? இப்படி அவள் மனதை சிதையப்பண்ணியது யார்? குழந்தையுடன் விழுமளவுக்கு அவளின்ர மனசில என்ன சோர்வு?

வழமையா ரெயிலில போறதுக்கு வாற சனம் மாதிரியே அவளும் குழந்தையும் வந்தார்கள். அவளின் நீண்ட கறுப்பு தலைமுடியும் கறுப்பு உருண்ட கண்களும் அவர்கள் நாட்டு பெண்களின் 'ஸ்பெசாலிட்டி'. அது என்னை திரும்பிப் பார்க்க வைத்தது. வந்தவள் என்னை குனிஞ்சு பார்க்கிறதும் ரயிலைப் பார்க்கிறதுமாக நின்றாள். பிறகு திரும்பி நடக்கிறதும் நிற்கிறதும் போறதும் வாறதுமாக இருந்தாள். கையில குழந்தையைப் பிடித்தபடி சோர்ந்த கண்களும், வாடிய முகமுமாக

www.tamilarangam.net

சோர்ந்தபடி நிண்டாள். இதுக்கிடயில ஏழெட்டு Regional Zug வந்து போய்விட்டுது. எனக்கே அவளை அப்போது விளங்கவில்லை. எத்தினை மணிநேரமா Bahnhof இல நிண்டு கொண்டிருக்கிறாள். கொஞ்சம் குழம்பிப்போய் நிக்கிற மாதிரி எனக்குப் பட்டது. அது என் நினைவோ தெரியாது. புருஷனோட சண்டை பிடிச்சுப் போட்டு வந்திருக்கிறாளோ. எங்கை போவதென்று தெரியாமல் குழம்புறாளோ.
சீ! இருக்காது ஆராவது விருந்தாளியை எதிர்பார்த்துக் கூட்டிக் கொண்டு போக நிற்கிறாளாக்கும். அதுகும் இவ்வளவு நேரமாவா. அவளிரின்ர நாட்டுப் பெடியனொருவன் விடிய வேலைக்குப் போறபோது அவளைக் கண்டு சிரிச்சுப் போட்டுப் போனவன். இப்ப நிண்டு அவளோட கதைச்சுப் போட்டுப் போனான்.

ஏன் இவ்வளவு நேரம் Bahnhof இல நிக்கிறாள் எண்டு யோசிச்சுக் கொண்டிருக் கேக்க 'இன்ரசிற்றியின்ர' அதிர்வு என்ர மண்டையைக் குழப்பியது.
ஆனா அவள் முடிவு எடுத்திட்டாள்.
கனவு கினவு கண்டேனா தெரியாது. என்ன சுத்தி பாத்தன்.
இது கனவில்லையெண்டு, என்ர மேலில தெறிச்சிருக்கிற சூடான ரத்தமும் அவளின்ர 'மப்ளரோட' உறைஞ்சு கிடக்கிற சதைத் துண்டுகளும் பிள்ளையிட தொப்பியும் சாட்சி சொன்னது.

இதென்ன கோர முடிவு? அதுவும் தானும் உயிரைவிட்டு...
என்ன அவலமான சாவு? ஏன்? அவளை சிதைத்தவர்கள் யார்? நோகடிச்சு இந்த முடிவெடுக்கப் பண்ணி வதைத்தது எந்த மிருகம்? உன் உணர்வுகளைக் கொத்தி சிதைத்து குழியில போட்டதும் கணவனா? குடும்ப உறவுகளா? சமூகமா? ஏன்? அவளை விரும்பிய பாதையில போக விடாமல் தடுத்தது அவளது கலாச்சாரமா? அல்லது பெண்களையே நாயிலும் கீழாக இரண்டாம் தர பிரஜையாக உணர்வுகள் அற்றவளாக புருஷனிலும் புள்ளையிலும் தங்கி வாழப்பண்ணி சேவகம் செய்யப் பண்ணும் மதமா?

ஏன் விழுந்தாள் கீழே?
யார் மிதித்து சிதைத்தது. அந்தக் குழந்தைதான் என்ன செய்தது?
தான் பட்ட கஸ்டமும் கவலையும் இந்தப் பூமியில் தன்ர குழந்தையும் படக் கூடாது என்று நினைத்தாளா? இந்த நாட்டுக்கு வந்து வேலை, வீடு, வீட்டுவேலை என்று உதவியும் ஒத்துழைப்பும் கைகோர்த்த வனிடம் இல்லையெண்டு துவண்டாயா? அல்லது கடன்சுமையா?

புது உலகம் எமை நோக்கி

**அவளை சிதைத்தவர்கள் யார்? நோகடிச்சு இந்த முடிவெடுக்கப் பண்ணி வதைத்தது எந்த மிருகம்? உன் உணர்வுகளைக் கொத்தி சிதைத்து குழியில போட்டதும் கணவனா? குடும்ப உறவுகளா? சமூகமா?**

www.tamilarangam.net

ஏன் விழுந்தாள் துவண்டு இந்த மண்ணில்?
அவளுக்கு இந்தக் குடும்ப வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ விருப்பமில்லாட்டா, இங்குதான் பிரிஞ்சு வாழும் பெண்கள் தனிச்சு வாழ உதவியளும் வழியும் இருக்கிறதே!
உறவை உதறி, பற்றுவதற்கு இடமில்லாமல் விழுந்தாயா என்மேல்? ஏன் கோழையாய் விழுந்தாய் கீழே?

என்னட்ட இருக்கிற ஒரு சிறு கேள்வி, பழமையாயும் மாத்தமுமில்லாம நிற்கும் இந்த Bahnhof ஐ இடிச்சு புதுக் கட்டிடமாய்க் கட்ட இந்த மக்கள் வாக்குப் போட மாட்டார்களா?

யாரோ அவள் விழுந்த இடத்துக்குப் பக்கதில மெழுகுதிரியும் கொழுத்தி பூவும் வைத்திருந்தார்கள். எனக்குமேல ஒட்டிக் கிடக்கும் மயிர்த் துணுக்கையும் காய்ந்து கிடக்கும் ரத்தத்தையும் சில்லுகளால் மிதித்து நசுக்கி எடுக்க காத்தையும் உந்திக் தள்ளிக்கொண்டு வரும் 'இன்ரசிற்றி'யின் அதிர்வால் மெழுகுதிரி அசைந்தாடி பூக்கள் சிதறின.

குறிப்பு.
இங்கு பேச்சு வழக்கில் நாம் பாவிக்கும் டொச்மொழிச் சொற்கள் சில பாவிக்கப்பட்டிருக்கின்றன.

அவை
Bahnhof - புகையிரதநிலையம்
இன்ரசிற்றி (Intercity) - கடுகதி புகையிரதம்
Bahnhof Strasse - புகையிரத நிலைய வீதி
வாகன் (wagen) - வாகனம்
அவுஸ்லாண்டர் (Ausländer)– வெளிநாட்டுக்காரர்
JA - ஆம்
Regonal Zug - உள்ளூர் (வேகம் குறைந்த) புகையிரதம்

www.tamilarangam.net

**ஒரு மானுடத்தின் குரல்**

முந்தி மாதிரி இப்பவும் நான் துள்ளித் திரிய வேணும் போல கிடக்கு. லோகன் அண்ணான்ர ஏசியா சைக்கிள்ள பாருக்கு கீழால காலப்போட்டு ஒழுங்கையெல்லாம் சுத்தி வர வேணும் போல இருக்கு. மாமரத்தில ஏற வேணும்; உயரமா ஊஞ்சல் கட்டி வேகமா ஆடவேணும் போல எல்லாம் இருக்கு.

அருந்ததி, மாலா, வாணி, சேந்தன், குமரன், கோமளா இவங்களை எல்லாம் கூப்பிட்டு முந்தி மாதிரி எட்டுக் கோடு, கப்பல் கோடு விளையாட வேணும் எண்டெல்லாம் ஆசையாக் கிடக்குது.
ஒருகாலமும் இல்லாத கட்டுப்பாடுகள அம்மாவும் ஆச்சியும் அடுக்கிக் கொண்டே போகினம். நான் முந்திப் போல கண்டபடி திரியக் கூடாதாம். பெடியளோட கதைக்கக் கூடாதாம். 'பொம்பிள சிரிச்சா போச்சு போயில விரிச்சா போச்சு' எண்டு சொல்லுகினம். முந்தி தாங்கள் எல்லாம் சரியான அடக்க ஒடுக்கமா இருந்தவையாம். அம்மாவும் ஆச்சியும் சொல்லுகினம், சிரிக்கக் கூடாதாம்.

கொஞ்சக் காலத்திற்கு முந்தி எவ்வளவு சுதந்திரமா திரிஞ்சனான். இப்ப வீட்டுக் குள்ளேயே அடைஞ்சு கிடந்து உடம்பில வெய்யில் படாம கடகத்தால மூடின புல்லுமாதிரி வெளிறிப்போனேன். அழுகிப்போன நொச்சிக் குழ மணக்கிறதப் போல வெளிச்சம் படாததால என்ர தேகம் மணக்கிற மணம் எனக்கே சகிக்கேலாம கிடக்கு அருவருப்பாயிருக்கு.

ஊரையெல்லாம் கூட்டி பண்டாரம் பரஞ்சோதியார் ரெண்டு பெரிய கிடாரம் வாடகைக்கு எடுத்து அவிச்சுக் கொட்டி, கோண்டாவில் 'சதா சவுண்ட் சேவிஸ் லவுட் ஸ்பீக்கர்' பிடிச்சு, குறுக்குப் பந்தல் போட்டு மணவற சிகரமெல்லாம் வாடகைக்குப் பிடிச்சுக் கட்டி, சிவப்புக் கலரில காஞ்சி புரம் எடுத்து நெத்திப்பட்டம், ஒட்டியாணம் மூக்குத்தி... இப்பிடி நிறைய நகையளால என்னையும் அலங்காரம் செய்து (நான் படிக்கிற காலத்தில பென்சிலுக்கே காசு தர எங்கட வீட்டுக்காரர் பஞ்சப் பட்டினம்) றீகல்காரனைக் கூப்பிட்டு ஜெனரேட்டர் வச்சு வீடியோப் படம் எடுத்து கொண்டாட்டம் நாலு நாள்.
ரெண்டு கிடாரத்தில நாலு நாளும் விருந்தவிச்சு ஊரும் உறவுகளும் சாப்பிட்டுப் போக, மிஞ்சிப் போன ஒரு தொகை



# ஒரு மானுடத்தின் குரல்

-ஆர்த்தி -
நோர்வே

சோறுகறி வடக்கு வளவில அப்பரும் மாமாவுமா வெட்டித் தாட்டினம். அத நினைக்க வயித்தப் பத்தி எரிஞ்சது.
வடக்கு வளவில வெட்டித்தாட்ட சோத்துக் குவியலோட என்ர சுதந்திரத்தையும் புதைச்சுப் போட்டுதெண்டது கன நாளைக்குப் பிறகுதான் எனக்கு விளங்கிச்சுது.

உழவு மாடொன்று சந்தைக்கு தயாரெண்டது போல, 'இனப்பெருக்கத்திற்கு நானும் தயாராகி விட்டனெண்டு' லவுட்ஸ் பீக்கரில ஊருக்கெல்லாம் அறிவித்தல் குடுத்தாச்சு. இனி ஆராவதொரு அறிமுகமில்லாதவன் வருவான்; என்னைப் பாத்துப் போட்டு தன்ரை முடிவைச் சொல்லுவான். என்ரை சம்மதத்த யாருமே கேட்க மாட்டினம். வந்தவன் சம்மதித்தால் என்ர ஆத்துமம், சரீரம் எல்லாத்தையுமே திரும்பவும் ஊரைக் கூட்டி லவுட் பீக்கர் பிடிச்சு குறுக்குப் பந்தல், மணவறை, ஐயர், தாலி, கிடாரம் கிடாரமா சோறுகறி... இப்பிடியொரு நீண்ட பந்தலுக்கு மத்தியில என்ர ஆசாபாசங்களையும் சேர்த்து தலை குனிஞ்சபடியே என்ன நான் தாரை வார்க்க வேணுமாம். என்ர அம்மாவும் என்ர ஆச்சியும், ஏன் இந்த ஊர்ச் சனங்கள் அநேகமானதுகளும் இப்பிடித்தான் நடந்தினம்; இப்பவும் நடக்கினம். நானும் இப்பிடித்தான் நடக்கவேணும் எண்டு எதிர்பார்க்கினம்.
மலிஞ்ச விலைக்குத் தட்டுப்படுற உள்ளூர் மாப்பிளயட்ட என்னை ஒப்படைக்கவேண்டும் அல்லது சமூக அந்தஸ்தை என்ர குடும்பம் எடுக்க வேணும் எண்டதுக்காக கொஞ்சம் கூடுதலான விலையில் வெளிநாட்டு மாப்பிளை தயாராகும். புறோக்கர் மூலம் என்ர போட்டோ ஏற்றுமதி, சாம்பிளா அனுப்புவினம். விலை ஒத்து வந்து வியாபாரம் ஓகே எண்டால் நானும் வெங்காய மூட்டையப் போல ஏற்றுமதியாவன்.

விட்ட குறை தொட்டகுறை தொடர்வது மாதிரி பிட்டுக் குழல், இடியப்ப உரல், இட்டிலி சட்டி, அரிதட்டு பிட்டுப்பானை... இப்பிடி நிறைய குசினிச் சாமானுகள் பொதியா என்னோட ஏற்றுமதியாகும். விறகடுப்பில இருந்து கரண்டடுப்புக்கு பதவி உயர்வு கிடைக்கும்.
அவரின்ர வாரிசப் பெருக்கிற முக்கிய உத்தியோகமும் கிடைக்கும். அதை செவ்வனே செய்தனெண்டால், நான் தாய். இல்லையெண்டால் 'மலட்டு நாய்'
சீ! என்ன ஜென்மமடி நாங்க?

பாரம்பரியம், சம்பிரதாயம், சடங்கு, அடக்கம், பத்தினி, பொறுமைப் பெட்டகம், இரக்கத்தின் இருப்பிடம், தியாகத்தின்ர உறைவிடம் இப்பிடி நிறைய பிரமிட் கல்லறையளக் கட்டி பெண்களையும் அவையின்ர உணர்வுகளையும் சமாதியாக்கிற இந்தச் சமுதாயத்த வெறுக்கிறேன். நான் வாழவேணும் நான் வாழப் போகிறேன். பொம்பிளை என்று அடக்கி பலவீனமா நினைச்சு அடக்கி ஒடுக்கிற இந்தச் சமுதாயத்துக்குள் இருந்து கொண்டே மானுடமா நான் வாழப் போகிறேன்.
நிச்சயமா ஒதுங்கி வாழமாட்டன். இந்த சமுதாயத்துக்குள்ள இருந்து கொண்டே எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுத்து வாழப்போறன்.
என்னப் புரிஞ்சு கொண்ட ஒருத்தனை சந்திக்கிற வரைக்கும் தனியாக நான்!

www.tamilarangam.net

**அத்துமீறல்கள்**

பஸ்சில் ஏறுகிறேன்.
கண்டக்டர் இடுப்பில் கைபோட்டு என்னை உள்ளே தள்ளுகிறான்.
நெரிசாலன பஸ்ஸில் கால்வைக்க இடம் கிடைத்தால் போதும் என்று நினைக்கும் எனக்கு இந்த அசிங்கம் பெரிதாகவா படுகிறது?
கண்டக்டரை மனதிற்குள் திட்டியபடி!

சில நேரம் எதுவும் இல்லை.
பஸ்சில் நுழைகிறேன். பின்னால் நிற்கும் இளைஞன் முதுகோடு உரசுகிறான். அவனை ஒருமுறை முறைத்துப் பார்த்து விட்டு சற்று முன்னால் நகர்ந்தால் முன்னால் நிற்கும் நடுத்தர மனிதனால் இடிக்கப்படுகிறேன்.
இப்படியே பஸ்சிற்குள் ஒரு மௌன போராட்டம்.

ஆஸ்பத்திரி அறையில் அமர்ந்திருக்கிறேன்.
பல் டாக்டர் முப்பத்தைந்தை தாண்டாத இளைஞன். என் பல்லைப் பார்ப்பதாய் முகத்தைத் தடவுகிறான். எனக்குப் புரிகிறது

கடைக்காரனிடம் காசு கொடுக்கும் போது, அவன் என் விரல்களைத் தொட்டபடி வாங்குகிறான். வாயை மூடிக் கொண்டு வருகிறேன். கடைக்காரனைப் பகைத்துக் கொள்ள முடியுமா? கேட்டால் மட்டும் என்ன சொல்லுவான்,
'என்ன நடந்தது இப்ப? காசு குடுக்கும் போது கைவிரல் பட்டு விட்டது; அவ்வளவு தானே. மிஞ்சிப்போனால் என்ன பெரிய சிறீதேவியா! தூ.. நீயும் உன்ர மூஞ்சியும்... ..த் தூ!' என்பான்.

புது உலகம் எமை நோக்கி

# அத்துமீறல்கள்

**-ராஜினி-**
*நோர்வே*

றோட்டால் போகிறேன்
ஒருவன் என்னையே உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரை பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனது பார்வையில் அசிங்கம் இருப்பது தெரிகிறது.

வகுப்பறையில் முன் வரிசையில் நாங்கள் நான்கு பெண்கள் அமர்ந்திருக்கிறோம். விஞ்ஞான ஆசிரியன் எங்களைப் பார்த்தபடி பெண்ணுடலைப் பற்றி ஆபாசமாக வர்ணிக்கிறான். ஆண் மாணவர்கள் பலத்த சத்தமாக சிரிக்கின்றனர்.
நாங்கள் கூனிக் குறுகி அமர்ந்திருக்கிறோம். அவனது வாயை அடைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதத்தில் நாலு வார்த்தை தானும் சொல்லாமல்...
ஆசிரியர் அவனைப் பகைத்துக் கொண்டு நான் எப்படிப் படிப்பது?
படித்தால்தானே பரீட்சையில் பாஸ் பண்ணி யூனிவெசிட்டி பட்டம், உத்தியோகம், திருமணம்...

என்மீது மிக மிக அக்கறை கொண்டிருப்பதாய் காட்டிக் கொள்ளும் நண்பனுடன் கதைத்துக் கொண்டிருக்கிறேன். எதேச்சையாகப் படுவது போல் இடிக்கிறான். அதைப் புரிந்து கொண்டு நானும் அவனுடன் சேர்ந்து நடிக்கிறேன், அவனை அவன் கண்ணியத்தை நம்புவதாய்.

வாடகை கொடுக்கும் போது வீட்டுக்காரன் என் தந்தையிடம் முறையிடுகிறான்.
'உங்கள் மகள் கூடுதலாக தண்ணீர் பாவிக்கிறாள்' என்று.
அவனுக்கு எப்பிடித் தெரியும், நான் கூடுதலாக தண்ணீர் பாவிப்பது?
மறைப்பு இல்லாத குழாயடியில் நின்று குளிப்பதை அவன் பார்க்கிறான். 'பார்க்காதே' என்று அவனுடன் சண்டை பிடிக்க முடியாது. வீட்டை விட்டுப் போகச் சொன்னால் வேறு வீடு பார்க்கும் வசதி எனது தந்தைக்கு இல்லை.
'பார்க்கிறானா' என்று பயந்தபடியே சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டே குளிக்க வேண்டும்.

பஸ் தரிப்பில் நிற்கிறேன்.
முன்னால் பிரமாண்டமான விளம்பரப் பலகை. நீச்சல் உடையில் பருத்த தொடைகளை காட்டியவாறு ஒரு பெண் ரயறின் மீது அமர்ந்திருக்கிறாள்.
அருகில் நின்றவன் விளம்பரப் பெண்ணை வெறித்துப் பார்த்து விட்டு என்னையும் பார்த்தான். எனக்கு சங்கடமாகியிருந்தது.
கட்டாயம் அரைகுறை ஆடையில் இளம் பெண் தான் விளம்பரத்திற்கு வர வேண்டுமா? ஏன் சிறு குழந்தை ஒன்று அல்லது வயோதிப மாது ஒரு ஆண் வரக் கூடாது? விளம்பரம் பண்டத்திற்கா அல்லது பிண்டத்திற்கா?

கோவிலைச் சுற்றிக் கும்பிட்டபடி வருகிறேன்.
பருத்த மார்புகளை முன்னால் தள்ளியபடி அம்மணமாய் பெண் தெய்வங்கள்.
பின்னால் சில ஆண்கள், கைகள் மாத்திரம் கும்பிட்டபடி இருக்க... அவற்றையே முறைத்துப் பார்த்தபடி தெய்வ தரிசனம் செய்து வந்தார்கள்.
பண்டைத் தமிழர் பெருமை கூறும் கலைச் சின்னங்களாம்!

கலை என்றால் ஏன் பெண்ணின் அங்கங்கள் மாத்திரம் உருப்பெருப்பித்து வடிவமைக் கப்படுகின்றன? அம்மணத்தில் தான் கலை இருக்கிறது என்றால் ஏன் ஒரு ஆண் தெய்வம் கூட உருப்பெருத்த ஆண் அங்கங்களுடன் அம்மணமாய் இல்லை?
பெண்ணின் நிர்வாணத்தில் தான் கலை இருக்கிறதா? அதைமாத்திரம் தான் கலைக் கண்ணால் பார்க்கமுடியும் என்றால் பார்ப்பவர் கண்களில் இருப்பது கலைப்பார்வையா?

www.tamilarangam.net

'பெண் என்பவள் ஒரு பாலியல் நுகர்வுப் பண்டம்'
'பெண் உடல் என்பது பாலியல் உணர்வுக்கான ஒரு குறியீடு மாத்திரமே'
இதுதான் சமூகத்தின் பெண்ணைப் பற்றிய கண்ணோட்டம்.

'பெண் என்பவள் ஆண்களின் இச்சை தீர்க்கும் பண்டம். ஆணின் பார்வைக்கும் பேச்சுக்கும் சிரிப்புக்கும் உணர்ச்சிக்கும் பலியாக வேண்டியவள் அவள். அதற்காக வேதான் பிறந்திருக்கிறாள்.
அது அப்படித்தான் இருக்கவேண்டும்'
இப்படித்தான் சமூகம் பெண்ணைப் பார்க்கிறது. இந்த சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண் என்பவள் ஆணிற்கான ஒரு பண்டமாகத்தான் கருதப்படுகிறாளேயன்றி தனக்கென ஆளுமையுடைய மனித ஜீவியாக அல்ல.

சமூகத்தில் ஆணுடன் கூட்டு வாழ்க்கை நடத்தும் பெண், தனது வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் தான் வாழ்வதற்காக மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலின் போதும் ஆணுக்கு ஏதோ ஒரு விதத்தில் தன்னை பலியாக்க வேண்டி வருகிறது. ஆண் தன்னைச் சுரண்டுவதை, தன்னை குறையாடுவதை கண்டும் காணாமல் சகித்துப் போக நேரிடுகிறது. உடலைக் காசுக்காக விற்பதை மாத்திரம் விபச்சாரம் என்றால், சமூக ரீதியான செயற்பாடுகளின் போது பெண் ஆணினால் உடல் ரீதியாகச் சுரண்டப்படுவதை, உடல் ரீதியாக அத்துமீறப்படுவதை மனதால் விரும்பாமல் அனுமதித்துச் செல்வது அதுவும் ஒரு விபச்சாரம்தான்!

இந்த சமூக அமைப்பில் பெண்ணானவள் ஒவ்வொரு கணமும் அத்துமீறப்படுகிறாள். ஆனால் சமூகமோ அதைக் கண்டும் காணாமல் இருந்து விடுகிறது.

**புது உலகம் எமை நோக்கி**

பெண்ணின் அவலம் என்பது இங்குதான், இதில்தான் புதைந்திருக்கிறது.
பெண்ணை பாலியல் நுகர்வுப் பண்டமாக ஆண் கருதுவது மாறாதவரை அதை சமூகம் எதிர்க்காதவரை பெண் இந்த அவலத்தை சமூக ரீதியாக சுமக்க நேர்கிறது.
ஆணுக்கு பலியாக நேர்கிற ஒவ்வொரு கணமும் ஆணுடன் விபச்சாரம் செய்ய நேரிடுகிறது. இந்த இலட்சணத்தில் சமூகம் கண்ணகியினதும், மாதவியினதும் கற்பைப் பரீட்சிப்பதில் காலத்தைப் போக்குகிறது.

*வாசகர் குறிப்பு*

நிலம் பார்த்து நடக்கும் பண்டைய தமிழ் பெண்ணைப் பற்றிய கேடு கெட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதையை கூறிக்கூறியே இன்றைய காலத்துப் பெண்ணை ஆணுக்குப் பலியாக்கப் பாாக்கிறது. யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் 'அப்பழுக்கற்ற ஒழுக்கமுடைய' ஒரு சமூகமாய் தன்னைக் கற்பனை செய்து கொள்வதில் திருப்தி அடைகிறது.

அது மாத்திரமல்ல அந்த கற்பனையில் சஞ்சரித்தபடி, ஏனைய சமூகங்களின் கலாச்சார, பழக்கவழக்கங்களுக்கு 'கண்ணாடி மாளிகையிலிருந்து' கல்லெறியவும் செய்கிறது.
என்றுதான் இந்தக் கண்ணாடி மாளிகை நொறுங்கப் போகிறதோ!
பாவம் கற்புடைய தமிழ்ச் சமூகம்!

**வடிகால்**

அத்தனை நேரமும் சிரிப்பலைகளின் அதிர்வில் நிரம்பி வழிந்து கொண்டிருந்த அந்த வரவேற்பறைக்குள், திடீரென்று வந்து கவிந்த மௌனத்தைத் தாங்க முடியாததுபோல எட்டிப் பார்த்து மூன்று முறை கூவிச்சென்றது, அந்தக் குக்கூக் கடிகாரத்துள் இருந்த சேவல்.

மதனால் கேட்கப்பட்ட கேள்வியின் கனம் தாங்காதவளாக சோபாவிற்குள் தலை புதைத்துக் கண்மூடியிருந்த மைதிலி திடுக்கிட்டெழுந்தாள். பதிலை எதிர்பார்த்துத் தன்னையே பார்த்தபடி உட்கார்ந்திருக்கும் மதனை எதிர்கொள்ளத் திராணியின்றி, 'ஐயய்யோ மூன்று மணியாச்சுதா? கண்ணை மூடியதில் நேரம் போனதே தெரியவில்லை. நீங்கள் வெளிக்கிடேலையா அருணைக் கூப்பிட?' என்றபடி எழுந்து பரபரப்புடன் தன் கைப்பையை எடுத்துக்கொண்டு புறப்படத் தயாரானாள்.
தான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறாது கதையைத் திசை திருப்பும் அவள் நிலைமை புரிந்திருந்தும், ஒரு முடிவுமின்றி நீண்டு செல்லும் தங்கள் உறவு சமூகத்தினாற் கொச்சைப்படுத்தப்பட்டு விடக்கூடாதே என்னும் ஆதங்கத்துடன், 'என்ன மைதிலி, எவ்வளவு காலமாகக் கேட்டுக்கொண்டே யிருக்கிறன். ஒரு பதிலும்

www.tamilarangam.net

சொல்லாமல் சமாளிக்கிறீர்? நீர் சமூகத்திற்கோ உம் குடும்பத்திற்கோ பயப்படுகிற ஆள் இல்லை. பிறகு எதைப் பற்றி உள்ளுக்குள்ளை குமையுறீர். எனக்கும் சொல்லுமன். ஏலுமானால் என்னால் அதுக்கு ஒரு தீர்வு சொல்லமுடியுமா என்று பாரக்கிறன்' அனுசரணையுடன் எந்தவித விகல்பமுமின்றி கேள்விகேட்கும் மதனைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. தன் எண்ண ஓட்டங்களை வெளிப்படை யாகச் சொன்னால் அவன் எத்தனை அதிர்வுக்குள்ளாவான் என்பது புரிய மௌனித்து நின்றாள் அவள்.

'அன்பனே, எனக்கு சமூகமும் எதிரியில்லை. குடும்பமும் எதிரியில்லை. என் மனமே என்னைத் துன்புறுத்துகின்றது. எனக்கு மீசையிலும் ஆசை கூழிலும் ஆசை. இது சாத்தியமா? ஆனாலும் எனக்கு இரண்டும் வேண்டும். வழிதான் தெரியவில்லை'

தன்னுள் ஓடும் முரணான எண்ணங்களை அவன் புரிந்துகொண்டு விடப்போகிறான் என்னும் பதட்டத்துடன்,

'எனக்கென்னவோ முடிவெடுக்க ஒருவித பயமாயிருக்குது. மதன் நடந்ததென்னவோ நடந்து முடிஞ்சுது. கெட்ட கனவு மாதிரி நினைச்சு எல்லாத்தையும் மறந்திட்டு ஒரு இளம்பெண்ணை ஊரிலிருந்து sponser பண்ணிக் கலியாணம் செய்யுங்கோ. நான் இப்பிடியே உங்கடை வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்ளுறன்...' தொடர்ந்தவளை மேலே பேசவிடாது தடுத்தான் மதன்.

'எனக்கு என்ன செய்தால் நல்லதென்று நீர் ஐடியா சொல்லித் தரத் தேவையில்லை. தேவையென்று நினைத்திருந்தால் அதை நான் எப்பவோ செய்திருப்பன்தானே. பொம்பிளையே தேவையில்லை என்று இருந்த என்னிடம் வலிய வந்து அன்பு காட்டிவிட்டு போகப் போறதாகச் சொல்லுறீர். தொடங்கும்போது பின்விளைவை யோசிக்கத் தெரியவில்லையா?'

தரிசாகக் கிடந்த தன் வாழ்வில் செடியாகப் படர்ந்தவள் ஏன் பட்டும் படாமலும் விலகி நிற்கின்றாள் என்பது புரியாதவனாகக் குழம்பி நின்றான்.

'சரி, சரி மூன்றே காலாச்சு. அருணை எடுக்கப்போற நேரமாச்சு. அருணுக்கு தூள் குறைவாப் போட்டு கறி எடுத்து வைச்சனீர்தானே?' என்றவன்,

'சரி, சரி கண்டபடி மனதை அலட்டிக் கொள்ளாமல் போய் றெஸ்ற் எடும். நாளைக்கு நான் உம்மை பிக் அப் பண்ண வாறன். வெளியாலை போய்ச் சாப்பிடுவம் என்ன?' என்றபடி கார்ச் சாவியை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாக வெளியேறினான்.



# வடிகால்

**-வசந்தி ராஜா-**

*கனடா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அருணுக்குரிய சாப்பாட்டை அவன் பிளேற்றில் போட்டு மூடி வைத்தவள், மற்ற உணவுப் பதார்த்தங்களை எடுத்து பிரிஜ் இற்குள் வைத்துவிட்டுப் புறப்பட்டாள். காரில் ஏறியபோது தாயார் இந்த வார குறோசரி செய்யவில்லை என்று கூறியது ஞாபகம் வர, அருகில் இருந்த மோல் ஒன்றின் முன்னால் காரை நிறுத்திவிட்டுச் சென்று பொருட்களை வாங்கி வந்தாள்.

காரை ஸ்ராட் பண்ணியபோது முன்னால் இருந்த ஒரு புத்தகக்கடை அவள் கண்ணிற் பட்டது. சட்டென்று தன் குழந்தைகள் சில கதைப் புத்தகங்கள் வாங்கித் தரும்படி ஒரு வாரமாக நச்சரிப்பது ஞாபகம் வர, இறங்கிச் சென்று அவர்கள் கேட்டிருந்த புத்தகங்களை வாங்கிக்கொண்டு வந்தாள். பின் சீட்டில் எட்டிப் புத்தகங்களைப் போட்டபோது நிவேதாவுக்காக வாங்கிய புத்தகத்தின் அட்டைப்படம் கண்ணிற் பட புன்சிரிப்புடன் அதை எடுத்துப் பார்த்தாள்.

பேபி சிற்றேர்ஸ் கிளப் எனும் வரிசையில் அக் கதைப் புத்தகம், ஆரம்ப வயசுச் சின்னப் பெண்களுக்கான பள்ளிப் பருவக் காதல் கதைகள் கொண்டது. அட்டையில் இளம் பையனும் பெண்ணும் காதல் பார்வை பார்த்துக்கொண்டு நின்றனர்.

பதினொரு வயது மகளின் முதிர்ச்சியை நினைத்து மனதுள் சிரித்துக்கொண்டாள். அந்த வயதில், ஊரில் தான் எட்டுக்கோடு விளையாடியதையும், தையல்பெட்டிக்குள் பட்டுத்துணி சேகரித்து, பாவைக்கு உடை தைத்துத் திரிந்ததையும், பொறுப்பில்லாத் தனத்துக்கு அம்மா அடிக்கடி பேசுவதையும் எண்ணிப் பார்த்தாள். இந்த நாட்டில் இளம் வயதிலேயே சிறுவர்கள் பொறுப்புணர்வுடனும் தாங்களே முடிவெடுக்கும் ஆற்றலுடனும் சுதந்திர மனப்பான்மையுடன் குட்டி மனிதர்களாக உருவாக்கப் படுகிறார்கள் என்று எண்ணி பெருமிதமடைந்தாள்.

குழந்தைகளை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடும் ஆர்வத்துடன் காரை வேகமாகச் செலுத்தியவளுக்கு, மதனுடனான சம்பாஷணை ஞாபகத்தில் வர வயிற்றில் அமிலம் சுரந்தது. வயதான தன் தாய் தந்தையருடனும் தன் இரு குழந்தைகளுடனும் மதனையும் அருணையும் தன் வீட்டில் வாழ்வதாகக் கற்பனை செய்து பார்க்கமுடியவில்லை அவளால்.

'அப்படியானால் எந்த நினைவுடன் மதனுடனான தொடர்பை ஏற்படுத்தினேன்?'

பின்விளைவுகளை எண்ணிப் பாராது, தான் எடுத்த முடிவின் தாற்பரியம் புரிந்து தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது அவளுக்கு. தன் ஆற்றாமை தந்த கோபம் தன்னை இரு பாலகர்களுடன் இவ்வுலகில் நிர்க்கதியாக விட்டுச்சென்ற கணவன்மீது திரும்பியது.

ஆமாம். அவளது இருபத்தைந்து வயதில் கையில் ஐந்து வயதுப் பெண்குழந்தை யையும் இரண்டு வயது ஆண் குழந்தையையும் கொடுத்துவிட்டு ஒரே நாளில் ஹாட் அற்றாக் என்று போய்ச் சேர்ந்துவிட்டான் அவள் கணவன். தான் இறக்கப் போவதை முன்கூட்டியே அறிந்தவன்போல நைஜீரியாவில் உழைத்த பணத்துடன் வந்து வசதியாய் வீடும், வங்கியில் ரொக்கமுமாக அவளைக் கனடாவில் ஸ்திரப்படுத்திவிட்டுப் போயிருந்தான்.

www.tamilarangam.net

கையில் குழந்தைகளுடன் ஸ்தம்பித்து நின்றவளைத் தாங்கிக் கொண்டனர் ஊரிலிருந்து வந்த பெற்றோர்.

முதல் ஒரு வருடம் விதியை நொந்து கொள்வதிலும், கைவிட்டுச் சென்ற கணவனை கோபிப்பதுமாக ஓடியது. அடுத்தடுத்த வருடங்களில் தன்னிரக்கம் அகன்று, வாழ்க்கை என்பது தொடரப்பட வேண்டுமென்பதாய் உணரப்பட, குழந்தைகளை வளர்ப்பதில் மனதை ஒருமுகப் படுத்திக்கொண்டு, வேலையும் ஒன்று தேடிக்கொண்டு அதற்கென ஒரு அர்த்தத்தை உருவாக்கிக் கொண்டாள்.

வேலையிடத்தில் நிறைய நண்பர்கள் உருவானார்கள். ஆண்களும் பெண்களுமாக, பல இனத்தினருடனும் பரிச்சயம் ஏற்பட்டது.
நெருங்கிப் பழகியதில் வாழ்க்கை பற்றிப் பலராலும் பலவித கருத்துக்களை அறிந்து கொண்டாள். கணவனைக் கருத்திற்கொண்டு அவள் வாழும் தபஸ் நிலையில் அர்த்தம் இல்லை என்றும் அவள் கணவனேகூட இந்த அவலத்திற்கு அனுமதிக்க மாட்டான் என்றும் புத்திக்குள் புகுத்தினர்.
அமுக்கி வைத்திருந்த உணர்வுகள் வெளியே வர முனையவே உணவு ருசித்தது. இசை இனிமையாகவிருந்தது. சினிமா, பத்திரிகை, கதை, கவிதை என ஈடுபாடு வர புலன்கள் புத்துணர்வு அடைந்தன.

இயற்கையின் இனிய கொடையான இளமை விழித்துக்கொள்ள இரவுகள் இம்சையாகின. ஹோர்மோன்கள் போட்ட கொட்டத்தில் பகலில் பண்பு கருதி பதுக்கப்பட்ட உணர்வுகள் இரவில் கனவுகளாகப் பரிணமித்து இரகசிய சிலிர்ப்பை ஏற்படுத்தின.

உலகில் தென்பட்ட ஆண்கள் எல்லாம் அழகாகத் தெரிந்தனர். ஆணின் அருகாமைக்கு மனது ஏங்கியது. சமூகத்தின் நிர்ப்பந்தங்கட்கு அஞ்சி தான் போடும் வேஷம், உள்ளே விகாரமாகிக் கிடக்கும் மனம், இரண்டிற்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம் தாளமுடியாமல் இதற்கு வடிகால் ஒன்று தேடிவிடுவது தான் உசிதம் என கண்டுகொண்டாள். அதன் விளைவு தான் மதனுடனான அவள் தொடர்பு.

போரில் ராணுவத்தின் துப்பாக்கிக்குத் தன் மனைவியைப் பறிகொடுத்துவிட்டுக் கையில் குழந்தையுடன் கனடாவில் வந்து வாழ்க்கையை அமைத்துக்கொண்ட மதன், பெண்துணையே வேண்டாம்

---

புது உலகம் எமை நோக்கி

---

**பருவத்தின் வாயிலில் படியெடுத்து வைக்கும் தனது அருமை மகள் சுதந்திரமாகப் பவனிவரும் அந்த அரணுக்குள் அந்நியப் பிரவேசம் அத்தனை அழகாகப் படவில்லை. கண்ட நேரத்திலெல்லாம் உள்ளாடைகளுடன் அங்குமிங்கும் ஓடித் திரியும் தன் செல்வமகள் அந்நியன்முன் தன் இயல்பை இழக்கவேண்டிவரும் என்பது உறைத்தது.**

**99**

www.tamilarangam.net

என்பதாய் தானும் தன் கவிதைகளுமே உலகம் என்றிருந்தான்.
பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருந்த 'ஒற்றைக் குயில்' எனும் அவன் கவிதையைப் படித்த மைதிலி, அதனுள்ளே ஊடாடியிருந்த சோகத்தை உணர்ந்து கொண்டாள். தன்னுள்ளே இருந்த அதே தனிமை உணர்வு இன்னொரு ஜீவனுக்குள்ளும் இருப்பதை வியந்து தன் அலைவரிசையுள்ள அந்த ஜீவனைச் சந்திக்க முயன்ற போது, மனைவியை இழந்த ஒரு ஆண்மகன்தான் அதுவென அறிந்து ஆச்சரிய மடைந்தாள். அட ஆண் கூடவா நம் சமுதாயத்தில் சஞ்சலத்தோடு இருக்கிறான் என்று அதிசயித்து அவனுடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டாள்.

நெருங்கிப் பழகியதில் அவன் தன் மனைவிமீது வைத்திருந்த அன்பின் பரிமாணத்தை யும் மகன்மீது வைத்திருந்த பாசத்தையும் கண்டு பிரமித்து உறவை நெருக்கிக் கொண்டாள். அவ்வுறவு காதலாகப் பரிணமித்து இன்று செழித்து வளர்ந்துள்ளது. வடிகால் கிடைத்ததில் மனதின் வக்கிரங்கள் வழிந்தோட, வாழ்க்கை வசந்தமாகிவிட்ட பூரிப்பில் மயங்கியிருந்தபோதுதான் வாழ்வின் அடுத்தபடிக்கான மதனின் ஆரோக்கிய மான எதிர்பார்ப்பு அவளை அதிரச் செய்தது.

தங்கள் உறவு சமூகத்தாற் கொச்சைப்படுத்தப்படாதிருக்க விரும்பினான் மதன். திருமணம் எனும் பந்தத்தால் தம் உறவு புனிதப்படுத்தப்படாவிட்டால் அது அவளது மகள் நிவேதாவின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடும் என்றான்.
அத்தோடு அவளோடு எப்போதும் அருகாமையிலிருக்க ஆசைப்பட்டான். அவள் குழந்தைகட்கு அப்பாவாயிருக்கப் பிரியப்பட்டான்.

இங்குதான் மைதிலி முரண்பட ஆரம்பித்தாள். ஹோர்மோன்களின் குழப்பத்தில் வடிகால் தேட முனைந்தவளுக்கு தான் போடும் முடிச்சு இன்னும் எத்தனை சிக்கல்களை உருவாக்கும் என்பதை உணரமுடியாமற் போயிற்று. ஒரு பக்கம் சிந்திக்க மதனின் ஆசை நியாயமாகவே பட்டது. ஆனால் பருவத்தின் வாயிலில் படியெடுத்து வைக்கும் தனது அருமை மகள் சுதந்திரமாகப் பவனிவரும் அந்த அரணுக்குள் அந்நியப் பிரவேசம் அத்தனை அழகாகப் படவில்லை.
கண்ட நேரத்திலெல்லாம் உள்ளாடைகளுடன் அங்குமிங்கும் ஓடித் திரியும் தன் செல்வமகள் அந்நியன்முன் தன் இயல்பை இழக்கவேண்டிவரும் என்பது உறைத்தது. தொலைக்காட்சி முன்னால் கால்மேல் கால்போட்டு கவலையின்றிக் கிடக்கும் மகள் கால் ஒதுக்கி உட்கார வேண்டிவரும் என்பது புரிந்தது. இரவில் அம்மாவுடன் உரசிப்படுக்கும் ஆசைமகன் அடுத்த அறைக்குள் அடைக்கலமாக வேண்டும் என்பது கசந்தது.

ஒன்றாய் வாழும் பட்சத்தில் குழந்தைகட்குள் ஏற்படும் பூசல்கள் தங்கள் உறவில் கூட விரிசலை உருவாக்கலாம் என்பதும் புரிய அந்த எண்ணத்தையே வெறுத்தாள். சமூகத்தின் எதிர்பார்ப்பு ஒரு புறக்காரணியே. அதன் விளைவிற்குப் பயந்து, அகங்களைக் காயப் படுத்திக்கொள்ள அவள் தயாராயில்லை.

www.tamilarangam.net

நாம் திருமணம் செய்து இணைந்தாலென்ன? தனித் தனியாக வாழ்ந்தாலென்ன? நாம் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் பட்சத்தில் இவர்கள் யார் நம்மை விமர்சிக்க? நிவேதாவின் திருமணத்தை நமது உறவு பாதிக்கும் என்பது எத்தனை மடைத்தனம். பாதிப்பு வருவதானால் நாம் இணைந்து வாழ்ந்தாலும் வரலாம்தானே. மனிதர்களெல்லாம் இப்போது மிகவும் மாறிவிட்டார்கள். அவர்கள் எங்கள் நிலையைப் புரிந்து கொள்வார்கள். குழந்தைகள் வளர்ந்து எங்கள் உறவைப் புரிந்துகொள்ளும் பக்குவம் வரும்வரை இளம் குருத்துக்களைக் காயப்படுத்த என்னால் முடியாது. மதன், வேண்டுமானால் மற்றைய நண்பர்கள்போல ஒரு நண்பனாக எங்கள் வீட்டிற்கு வந்து அம்மா, அப்பா, குழந்தைகளுடன் பழகட்டும். அருணை ஒரு சிநேகிதரின் குழந்தையாக என் குழந்தைகள் ஏற்றுக்கொள்ளட்டும். வெளிநாடுகளில் காணப்படும் இந்த ஸ்டெப் பாதர், ஹாப் பிறதர் உறவுகள் அவர்களுக்கு வேண்டவே வேண்டாம்.

தீர்மானமாக முடிவெடுத்ததில் மனது இலேசாயிற்று. மதனுக்கு இதை எப்படிப் புரிய வைப்பேன் என்ற குழப்பம் தீர்ந்து போயிற்று. புரிந்துணர்வு மிகுந்த அவன் என் சிந்தனையின் கோணத்தில் உள்ள தாற்பரியத்தைப் புரிந்துகொள்ளுவான். தாலிமட்டும்தானே கட்டாத குறை, இப்போதுள்ள நிலைமையில் நான் அவனுக்கு என்ன குறை வைத்தேன்..

அருணை என் குழந்தையாக அரவணைக்கவில்லையா? அருணுக்கும் நான் அப்பாவின் நண்பியாக இருப்பதுதான் நல்லது. குழந்தைகள் வளர்ந்து புரியும் வயதில் புரிந்து கொள்ளட்டும்.

இவ்வளவு காலமும் வெளிப்படையாகப் பேசும்படி மதன் கேட்டபோதெல்லாம், உள்ளுக்குள் குமைந்து குறுகிப் போயிருந்த தன் இயலாமைக்காக வெட்கப்பட்டாள்.

நாளை இரவு உணவிற்கு வெளியே செல்லும்போது மென்மையாகப் பேசிப் புரியவைக்க வேண்டும் என முடிவெடுத்ததில் இதயத்தின் இறுக்கம் அகன்றது. தனக்கு மிகவும் பிடித்தமான 'ஜீன்ஸ்' படப் பாடலான 'கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமில்லை. கண்ணோடு மணியானால் கண்ணை விட்டுப் பிரிவதில்லை' என்ற வரிகளை வாயுள் முணுமுணுத்தபடி,

தன் மற்றக் குழந்தைகளுக்கு இன்று என்ன குழம்பு வைக்கலாம்? என யோசித்தபடி காரை விரைவாக ஓட்டினாள். அவளின் மனதின் நிர்மலம் போலவே வானமும் முகிற்கூட்டங்களை அகற்றி விட்டு அப்பழுக்கற்றுக் காணப்பட்டது.

---

**புது உலகம் எமை நோக்கி**

---

*வாசகர் குறிப்பு*

99

www.tamilarangam.net



வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற நாள் இன்று.
இரண்டு நாட்களாக எனக்கு வழமையான நாளாந்த வேலைகளில் கவனம் செலுத்த முடியவில்லை. இன்னது என்று பிரித்தறிய முடியாத குமைச்சல். நான் திணறிக் கொண்டிருக்கிற நேரமாய்ப் பார்த்து, சிந்துவுக்கும் ஏதோ போல் இருக்கிறது. காய்ச்சல் இல்லை. பல்லும் வந்துவிட்டது. இனிவருவதற்கு ஒன்றும் இல்லை. நேற்று சிணுங்கியவள் இன்று அழத்தொடங்கிவிட்டாள்.

வசந்தனுக்கு இன்று லீவு போடச் சரிவராது. வாரத்தில் முதல் நாள் என்று சொல்லுவார். சாப்பாட்டு மேசையில் ஏதோ குழப்பம் போல. யாருடைய சாப்பாட்டுப் பெட்டி என்பதில் தொடங்கியிருக்கலாம் அல்லது யாருடன் யார் போவது என்பதில் கூட ஆரம்பித்திருக்கலாம். காலைத் தினப்பத்திரிகையில் மூழ்கியிருக்கும் வசந்தனும் அந்த மேசையில் தான் இருக்கிறார். பக்கத்துவீட்டு அனித்தாவுடன் சிந்து பற்றி கதைத்துக் கொண்டிருக்கும் எனக்கு சத்தம் இடையூறாக நான் நன்றி சொல்லி விடை பெறுகிறேன்.

என்ன விடயம் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் என்பதை அறிய ஆவல் ஏற்பட்ட போதிலும் கவனம் குலையாது பத்திரிகை படிக்கும் வசந்தனைப் பார்க்கிறேன். என்னுடைய பார்வை ஏதோ ஒரு விதத்தில் அவரை சென்றடைந்திருக்க வேண்டும். தலையுயர்த்திப் பார்த்த வசந்தன்,
“என்ன சாப்பிட்டாச்சே, கைவாய கழுவிப் போட்டு வெளிக்கிடுங்கோ”
“நான் அப்பாவோட”
“நீங்கதானே போனகிழமை முழுக்க போனனீங்க”
“ரெண்டு பேரும் பஸ்ஸில போங்கோ. எனக்கு வேலையிருக்கு”
சத்தம் குறைய நான் சிந்துவைப் பற்றிக் கூறுகிறேன்.
“டொக்டரிட்ட காட்டுமன், நான் 9க்கு நிக்க வேணும்” என அவசரப்பட்டார்.

சிணுங்கும் சிந்துவை கதிரையில் தூக்கி இருத்திவிட்டு பாண், பாணுக்கு பூசுவதை பொலித்தீனில் சுற்றி பிரிஷில் வைக்கிற போதும் மனசு மட்டும் முடிவு எடுக்கப்பட வேண்டிய விடயம் பற்றி சிலாகித்துக் கொள்கிறது.
அந்த மனிதனின் அறிக்கையின் முன் பக்கம் படமாகிறது.
“பெயர்: .........................
பிறந்த திகதியும் இடமும்: ......... அகதிமுகாம்.
தாயின் முழுப்பெயர்: தகவலாளருக்குத் தெரியாது.
தந்தையின் முழுப்பெயர்: தெரியாது.
கல்வி: முகாம் பாடசாலை.
லத்தீன் எழுத்துக்கள் அறிமுகமற்ற இவர் பல மொழிகளைப் பேசக் கூடியவர். 1994 இல் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

நான் தாய்-சேய் நலன் பேணும் மருத்துவருடன் தொடர்பு கொள்கிறேன். தொலைபேசிப் பிரிவில் பணிபுரியும் பெண் அறிகுறிகளை வினாவுகிறாள்.
“நீங்கள் ‘பரசெற்’ குடுத்துப் பாக்கிறீங்களா அல்லது கட்டாயம் டொக்டரை சந்திக்க விரும்புகிறீர்களா?”
சிந்துவை திரும்பிப் பார்த்துவிட்டு ‘பரசெற்’ கொடுப்பதாகக் கூறி தொடர்பைத் துண்டிக்கிறேன். உடனேயே வசந்தனின் தம்பிக்கு போன் பண்ணுகிறேன்.
“அண்ணி”
“சுகி! அண்ணி போனில” என்ற பின்னணியுடன் சுகி “ஹலோ” சொல்லுகிறாள்
“எப்பிடி போகுது”
“இண்டைக்குப் பறவாயில்லை”
“சிந்துக்கு உடம்பு சரியில்ல. உங்களிட்ட கொண்டு வந்து விடுவம் எண்டு...”
“அண்ணி நாங்கள் உங்க வரத்தான் இருக்கிறம்”
“எத்தினை மணியளவில”
“நீங்க எத்தினைக்கு இறங்கவேணும்?”
“நான் பத்துக்கு இறங்கினா காணும்”
“அண்ணை நிக்கிறாரே” மெல்லிய குரலில் சுகி
“இல்லை அவர் போட்டார். ஏதேன் அலுவலே?”
“சீ! அவர் இல்லாட்டி நல்லம். நாங்கள் வாறம்”
தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

நான் பரசெற்றை சிந்துவுக்குக் குடுப்பதற்குள் பல கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டி ஏற்பட்டது. பின்னேரம் சொக்கலற் கிடைக்கும்; சித்தாவும், சித்தப்பாவும் வருகினம் போன்றவை. இறுதியில் உதவிக்கு வருகின்றது. அவள் விரும்பி விளையாடும் குதிரையை இருவரும் சேர்ந்து தேடுகிறோம்.
நேரம் 8.30 ஆகிவிட்டது.

“பொலிசாரின் கருத்துப்படி அந்த மனிதன் ஒரு விடயத்தில் உண்மையைத் தெரிவிக்கவில்லை. அந்த உண்மையற்ற தகவலின் அடிப்படையில்தான் அவருடைய கேஸ் பதியப்பட்டு, எந்த சிறுபான்மை இனத்தவர் என அறியப்படாது நிராகரிப்பட்ட விண்ணப்பம். முறையீட்டு காலத்தில் இங்கு வசிக்கிறார்.”
வெள்ளை நிறமல்லாத குற்றம் புரிகின்ற எல்லா மனிதர்களுக்கும் குற்றம் புரிவதற்கான இயல்பு பரம்பரையலகு மூலம் கடத்தப்படுகின்றது என்பதில் அசைக்க



# சதுரங்கம்

-தயாநிதி-
*நோர்வே*

www.tamilarangam.net

முடியாத நம்பிக்கையுடைய, பளிங்கு நீல விழிகளையுடைய, வெளிர் நிற நீண்ட மனிதன் தனது முடிவிலும் உறுதியாக இருந்தான். சீருடை அணிந்த காரணத்தினாலோ என்னவோ! இதென்ன பலப்பரீட்சையா?
லோயர் ஒரு பக்கமும், சட்டத்தை நெறிப்படுத்துபவர்கள் இன்னொரு பக்கமும். அந்த வெளிநாட்டு மனிதன் உதவியின்றியவனாகக் காணப்பட்டான்.
அன்று, பூட்டிய கதவுக்குள் விசாரணைகள் நடைபெற்றன. எல்லாப் பதிவுகளும் எனது மேசைக்கு வந்தவைதான். என்னுடன் பணிபுரிவோரிடையே மாறுபட்ட கருத்துக்கள் அந்த மனிதனின் உடல்நிலை பற்றி ஏற்பட்டிருந்தது.

மொழியை சரளமாக பேச குறுகிய காலத்தில் கற்றுக் கொண்ட '.....' தனது உயிரியல் தாயை சந்தித்துள்ளார். தாய் 90 களில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் அமைப்பில் பொறுப்பு வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டவர். இவருடைய நண்பனைக் கைது செய்வதில் பலருக்கு ஈடுபாடு இருந்தது. மனிதாபிமானம் மக்களது உரிமைகளைப் பேணுகிறோம் என்று பெருமிதப்பட்டுக் கொள்பவர்கள் அயல் நாட்டவன் என்றதும் நாலு வரிகளைக் கொண்ட சட்டவிதிகளை நன்றாகப் பிடித்துக் கொள்வதுண்டு.

ஜெகனும் சுகியும் வாசலில் நிற்கிறார்கள். சுகியின் முகம் சரியில்லை. வாசலிலேயே சிந்து கதைக்கத் தொடங்கிவிடுகிறாள். நான் தோளைத் தொட்டு பார்வையால் வினாவுகிறேன். சுகி உடைந்து போய் ஓவென்று அழுகிறாள். ஜெகன் சிந்துவுடன் உள்ளே போகின்றான். நாங்கள் சுகமான உரையாடலைத் தொடர நேரம் எடுக்கிறது. சிந்து நித்திரையாகிவிடுகிறாள். வெறுமை படர்கிறது.
"என்ன பிரச்சனையெண்டு கேக்கலாமா? " இது நான். "சொல்லுமன்!"
"நேற்று அண்ணி கொஸ்பிட்டலில ஸ்கான் பண்ணி பார்த்தவை. அதோட வேற ரெஸ்ற்றும் எடுத்தவை..." தொடர முடியாமல் விம்மத் தொடங்கிய சுகியின் கையை இறுக அழுத்துகிறேன்.
"நான் அம்மாட்ட போகப்போறன்".
நான் ஜெகனைப் பார்க்கிறேன்.
"பிள்ளைக்கு டவுன் சின்ரோம் என்று டொக்டர் சொன்னவர்" என்று சொல்லிவிட்டு தலையைத் திருப்பிவிட்டார்.

எனது தலைக்குள் நான் வேலை தொடங்கு முன் பதியவைத்தவை வந்து போகின்றது. தொழிலுக்கான உடையில் அந்த நிறுவனத்தில் இருக்கும் போது உணர்ச்சிவசப்படாமல் நடுநிலைமையாக 'செய்தி'யின் நன்மை தீமைகளை எந்தவித ஒளிவுமறைவு இன்றிச் சொல்ல வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கும் முடிவில் எந்தவித பங்களிப்பையும் செய்யக்கூடாது. முடிவெடுக்கும் பொறுப்பை பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் விட்டு விடலாம். ஆனால் இங்கு மௌனமாக இருப்பது மேல் என்று எனக்குப் படுகிறது. நேரம் விரைகிறது. 9.40ஐத் தாண்டுகையில் நான் எதுவும் கூறாமல் இரண்டு மணிக்கு வருவதாகக் கூறி விடைபெறுகிறேன்.

www.tamilarangam.net

“கடமைகளை சரிவரச் செய்ய முயல்வது மனித இயல்பு. கட்டளைகளை நிறைவேற்றுவது கூட கடமைதான். தண்டனைகளை எதற்காக விதிக்கிறோம்? ஒழுங்கு விதிகளைப் பேணுவதற்காக.”
இந்த விதிகள் மூலம் என்ன எதிர்பார்க்கிறோம்? சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பை ஏற்படுத்தும் தண்டனைகள் சமூகத்திற்கு தேவையா? யார் குற்றவாளி, என்ன தண்டனை வழங்க வேண்டும் என்பதையும் முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கியது யார்?
எனது வாத்தியாரின் பாடநேரம் மனதில் நிழலாகிறது.

அலுவலக மேசையில் அடுக்கி வைக்கப்பட்ட கோப்புகளை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறேன். முதலாவது சிகிச்சைக்குப் பின்பு பெற்றுக்கொண்ட வாக்குமூலங்கள் அவை.
“என்னுடைய அப்பாவை நான் பார்த்ததில்லை”
“அம்மா எங்கே இருக்கிறார்?”
“தேவாலயம் ஒன்றில்”
“பொலிசாரிடம் உண்மையை மறைப்பது தண்டனைக்குரிய குற்றம் தெரியுமா?”
“உங்களுடைய குடும்பத்தில் இப்பிடியொரு நிலைமையிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?”
சம்பாசணையைத் தொடர முடியவில்லை என கையெழுத்திடப்பட்டுள்ளது. அரசியல் தஞ்சம் கோரிய விண்ணப்பமும், விண்ணப்பத்திற்கான முறையீடும் நிராகரிக்கப் பட்டுள்ளது.
லோயரின் முறையீட்டில், உயிரியல் தாய், மற்றும் வளர்ப்புத்தாய் இங்கு வசிப்ப தாலும் சொந்தநாடு இல்லாத நிலையில் இங்கு மனிதாபிமான ரீதியில் சிகிச்சைக் காலம் முடியும்வரை தற்காலிக வதிவிட அனுமதி கோரப்பட்டிருந்தது.

வெளியே வரும் நான், மிகவும் சந்தோசமாகக் கதைத்தபடி குறுக்கும் நெடுக்கும் நடக்கும் சம்பத்தை சந்திக்கிறேன். என்னைக் கண்டதும் தமிழில் ‘வணக்கம்’ சொல்லிவிட்டு நோர்வோஜிய மொழியில் கதைத்தபடி நடக்கத் தொடங்கிவிட்டான்.

முடிவெடுக்கப்படும் மனிதனின் அறையை எட்டிப் பார்க்கிறேன். நீல வெளிச்சத்தில் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்கிறான். எனது முடிவு பற்றியும் இலாப நட்டங்களை பட்டியல்படுத்துகிறேன். மனசு இலேசாகிறது.

புது உலகம் எமை நோக்கி

வாசகர் குறிப்பு

www.tamilarangam.net

கூட்டம் தொடங்கி விவாதம் சூடேறுகிறது. நிபுணர் தனது கருத்தில் உறுதியாக இருக்கிறார். நாங்கள் அவதானிகளாக இருக்கிறோம். இறுதியில் எம்மிடம் வருகிறது. கருத்து தெரிவிக்கப்படுகிறது. எம்மிடையே முரண்பாடுகள் இருந்தபோதிலும் என்னுடைய நோயாளி என்ற வகையில் எனது முடிவுக்காகப் பார்த்திருக்கின்றனர்.

"நபரின் தனித்தன்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக சுய கட்டுப்பாடுள்ள செயல்கள் சூழவுள்ளவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கின்றமையால் பிரயாணம் சிபாரிசு செய்யப்படவில்லை" எனக் கையெழுத்திடுகிறேன்.
நீலக்கண்கள் என்னை ஊடுருவிப் பார்ப்பதாக உணருகிறேன். கைகுலுக்கிவிட்டு வெளியேறுகிறேன்.
சுகந்தியை நினைக்க உடம்பு சிலிர்க்கிறது.

**அக்கரைப் பச்சை**

வந்தது தனிமை. அகதி வாழ்க்கை.
அவள் ஒரு கிழமையாக தனக்குள்ளேயே புலம்பி அழுதாள். தனது வயிற்றில் இருக்கும் கருவை என்ன செய்வது என்று தவித்தாள். எப்படி தனியாக தீபன் இல்லாமல் சமாளிப்பது என்று ஏங்கினாள். இரவு முழுவதும் தூக்கமில்லை. இல்லாவிட்டால் என்ன? மனதில் நம்பிக்கை சற்றும் குறையவில்லை. மனம் சொல்கிறது, ஏதாவது வரும் ஏதாவது நடக்கும் உலகத்தில். நம்பிக்கையிழக்கத் தேவையில்லை. நம்பிக்கையே வாழ்க்கை என்றுதானே எனது 2 வயதுக் குழந்தை யுடனும், வயிற்றில் 2மாதம் இன்னொரு குழந்தையுடனும் பயணம் செய்கிறேன். தீபன் என்னை சமாதானம் பண்ணும் போதெல்லாம் எப்படியும் நான் சுவிஸ் நாட்டைவிட்டு இரண்டு வருடத்தில் வந்துவிடுவேன் என்று உறுதிமொழி கூறினான்.

நனைந்த கண்ணிமைகளைத் துடைத்த ராகவி தனது மனதை சமாதானம் செய்து கொண்டாள்.

www.tamilarangam.net

விமானத்தில் இரண்டாவது தடவையாக இரண்டாவது ஏஜென்சி மூலமாக பயணம் செய்கிறாள் ராகவி. கறுப்பு கம்பளி, அதைக் போர்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது நன்றாகத்தனிருக்கிறது.
கனடா எயார்ப்போட்டில் இறங்கி அவளது விசாரணைகள் முடிந்த பின் நண்பர்களுடன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

நண்பர்கள் எவ்வளவோ உதவி செய்தாலும் ராகவிக்கு திருப்தி ஏற்படவில்லை. ராகவி ஓரிரு வாரங்களில் தனிமையானாள்.

அவளது திருமணம் சுவிஸில் வெகு சிறப்பாக நடந்தது. ராகவிக்கும் தீபனுக்கும் ஒரு அழகான பெண்குழந்தை பிறந்தது. அவளுக்கு வயசு 2. அவளின் எதிர்காலத்தை யோசித்துத்தான் தீபன் ராகவியையும் குழந்தையையும் கனடாவுக்கு அனுப்பினான். இக்கரைக்கு அக்கரை பச்சைதான் என்று அங்கு போனபின் தான் ராகவிக்கு புரிந்தது. கனடாவை விட சுவிஸிலிலேயே வாழ்ந்திருக்கலாம் என்று ராகவி தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொள்வாள்.
இரண்டாவது பிள்ளையும் பிறந்தது. பிள்ளைகளின் சுமையுடன் தன் கணவனின் வருகைக்காக கனடாவில் காத்திருந்தாள் ராகவி.

தீபன் தனது குடும்பத்திற்காக இரண்டு வேலை செய்து கடுமையாக உழைத்தான். பிள்ளைகள் அப்பாவின் முகத்தையே மறந்து விட்டன என்று ராகவியின் கடிதத்தின் மூலம் தீபன் கண்டு கொண்டான். என்ன செய்வது, அவனது குடும்பத்தை கனடா அனுப்புவதற்கு வாங்கிய கடனே இன்னும் அடைத்தபாடில்லை. கஸ்டப்பட்டு சேர்த்த காசை சீட்டில் போட்டதில் சீட்டு பிடித்தவன் காசு தராமல் சுற்றிவிட்டான். எப்படி உழைத்தாலும் முடிவதில்லையே என்று தீபன் சலித்துக் கொள்வான். அவனது அடிமனதில் ஏதோ ஒரு பயம்.
என்னதான் இருந்தாலும் குடும்பவாழ்க்கை என்பதை மனைவி, கணவன் இருவருமே பங்கிடுவது தான் நல்லது.

அவனது மனைவியான ராகவி வயசில் குறைந்தவள். அவளுக்கும் வாழவேண்டும் என்ற அபிலாசைகள் இருக்கத்தான் செய்யும் என்றும் தான் பிழைவிட்டு விட்டேனா என்றும் சிலவேளை தீபன் யோசிப்பதுண்டு.
இன்னும் இரண்டு வருடங்கள் தானே பல்லைக் கடித்துக் கொண்டு சமாளிப்பம் என்று கவலைகளை மறந்தான்.

புது உலகம் எமை நோக்கி

# அக்கரைப் பச்சை

**-ரஞ்சி-**
*சுவிஸ்*

”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராகவி ரெலிபோனில் கூறியது தீபனின் நித்திரைக்கு இடைஞ்சலாக இருந்தது. “என்னங்க, நீங்க கெதியாக கனடாவுக்கு வந்து சேருங்கோ. இங்கை தனியாக இருப்பது அவ்வளவு நல்லாயில்லை. பிள்ளைகளும் அப்பா எப்ப வருவார் என்று கேட்கினம். நான் எத்தனை நாளைக்குத் தான் ஒரே பதிலைச் சொல்வது. பிருதிவியும் வளர்ந்து விட்டாள். அடிக்கடி உங்களைப் பற்றித்தான் விசாரிப்பாள். உழைத்தது காணும் இருக்கிறதை வைச்சு சமாளிப்பம். இங்கு நீங்கள் வந்தால் நானும் ‘பாட் ரைம்மாக’ வேலைக்குப் போகலாம். பிள்ளைகளும் சந்தோசமாக இருப்பார்கள்” என்றாள்.

தீபனின் நினைவுகள் கடந்த காலத்தை நோக்கிச் சென்றன. ராகவியை காதலித்தது, மணம் முடித்தது, மூன்று வருடம் ஒன்றாக வாழ்ந்த வாழ்க்கை போன்றவைகள் வாழ்க்கையின் அபிலாஷைகளை கழுத்தை நெரித்துக் கொல்வதாகவே தீபன் நினைத்தான். எல்லாம் எதற்காக? ஒன்றும் இல்லை. என்னவெல்லாம் ஆசைகள் கனவுகள். எல்லாம் நிறம் மங்கி ராகவியை ஒரு சுமைதாங்கியாக்கிவிட்டேனோ என்று அவனது மண்டை குழம்பத் தொடங்கின.

மனநிம்மதிக்காக காரை எடுத்துக்கொண்டு வெளியில் போனவன் திரும்பி வரவேயில்லை.


ராகவிக்கு நண்பர்களிடமிருந்து ரெலிபோன் வந்தது. போனை எடுத்த ராகவிக்கு நம்பவே முடியவில்லை. அவளது இதயத்தில் விவரிக்க முடியாத வேதனையால் அவளது இதயம் சுக்கல்களாகச் சிதறின. ராகவியின் உள்ளத்தில் எழுந்த துக்கத்தை யும் அதன் துன்பத்தையும் நாவின் மொழிகளால் விவரிப்பது இயலாத காரியம். அது இதயம், இதயத்தினூடு தனது சொந்த பாஷையில் உணர்த்த வேண்டிய ஒரு ஆழமான துக்கம்.

ராகவி அழவேயில்லை. விறைத்துப் போயிருந்தாள். அவளது மனம் மரத்துப் போயிருந்தது...

வந்தது மீண்டும் தனிமை. அகதி வாழ்க்கை!

www.tamilarangam.net

www.tamilarangam.net



புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்